# மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம்

## மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டம்

இறுதி அறிக்கை
தொகுதி I

கட்டம்3 (பொத்துஹெர – கலகெதர)

தயாரிப்பு
வீதி அபிவிருத்தி அதிகார சபை
உயர் கல்வி மற்றும்  பெருந்தெருக்கள் அமைச்சு
இலங்கை அரசு
**201**8, **ஜூன்**

## முதல் எழுத்துக்கள் மற்றும் விளக்கங்கள்

| | |
|---|---|
| ADB | ஆசிய அபிவிருத்தி வங்கி |
| CBO | சமூகம் சார்ந்த அமைப்பு |
| CEA | மத்திய சுற்றாடல் அதிகார சபை |
| DFD | வனப் பாதுகாப்புத் திணைக்களம் |
| DOV | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் |
| DS | பிரதேச செயலாளர் |
| DSD | பிரதேச செயலகப் பிரிவு |
| EA | நிறைவேற்று முகவராண்மை |
| EIA | சூழல்சார் தாக்க மதிப்பீடு |
| EM | உரித்து பற்றிய கட்டமைப்பு |
| ESDD | சூழல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு |
| FGD | மையக்குழுகலந்துரையாடல் |
| GIS | புவிசார் தகவல் திட்டம் |
| GN | கிராம உத்தியோகத்தர் |
| GND | கிராம உத்தியோகத்தர் பிரிவு |
| GOSL | இலங்கை அரசு |
| GPS | உலகளாவிய நிலைப்படுத்தல் திட்டம் |
| GRC | குறை தீர்க்கும் குழு |
| GRM | குறை தீர்க்கும் பொறிமுறை |
| HRC | மனித உரிமைகள் ஆணைக்குழு |
| IRM | வருமான மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டம் |
| JICA | ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை |
| KIIs | முக்கிய தகவல்களை வழங்குபவர்களை நேர்காணல் |
| LAA | காணிச் சுவீகரிப்புச் சட்டம் |
| LAR | காணிச் சுவீகரிப்பு ஒழுங்கு விதி |
| LARB | காணிச் சுவீகரிப்பு இழப்பீட்டு மீளாய்வுச் சபை |
| LARC | காணிச் சுவீகரிப்பு மற்றும் மீளாய்வுக் குழு |
| LDO | காணி அபிவிருத்திக் கட்டளை |
| MoLLD | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு |
| MoHEH | உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு |
| NEA | தேசியசுற்றாடல்சட்டம் |
| CEP | வடக்கு அதிவேக வீதிக் கருத்திட்டம் |
| NGOs | அரச சார்பற்ற அமைப்புக்கள் |
| NIRP | சுய விருப்பற்ற மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை |
| NPSC | தேசியகருத்திட்ட நடத்துனர் குழு |
| NRMP | தேசியவீதிபாரியதிட்டம் |
| OPH | உத்தியோகபூர்வமான வறுமைக் கோடு |
| PAHH | கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட வீட்டுத் தலைமை |
| PAP | கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் |
| PD | கருத்திட்டப் பணிப்பாளர் |
| PIC | பொதுத்தகவல்நிலையம் |
| PMU | கருத்திட்ட முகாமைத்துவ அலகு |
| PPC | பாராளுமன்ற மனுக் குழு |
| PPs | ஆரம்பத் திட்டங்கள் |
| RC | மீள்குடியேற்ற அட்டை |
| RDA | வீதி அபிவிருத்தி அதிகார சபை |
| ROW | வீதி வழி |
| RAP | மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் |
| Ras | மீள்குடியேற்ற உதவிகள் |
| SIA | சமூகத் தாக்க மதிப்பீடு |
| SSO | சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் |
| STDP | தென் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் |
| TOR | குறிப்பு விதிகள் |
| UDA | நகர அபிவிருத்தி அதிகார சபை |

WB உலக வங்கி

## கலைச் சொற்கள்

**வர்த்தக உரிமையாளர்**: கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட பிரதேசத்தினுள், கருத்திட்டத்தின் கட்டுமாணப் பணிகளினால், செயற்பாடுகளுக்கு தடைவிளைவிக்கக்கூடிய, தமக்கு உரித்தான வர்த்தகமொன்றினை முன்னெடுத்துச் செல்லும் நபர் வர்த்தக உரிமையாளர் என அழைக்கப்படுகின்றார். இந்தநபர் ஒரு சட்ட உரிமையாளர், உறுதி ஆவண உரித்தினைக் கொண்டிராத கட்டிட உரிமையாளர் அல்லது குத்தகை அடிப்படையின் கீழ் ஏதேனும் சொத்தொன்றினைப் பாவிக்கும் ஒருவராக இருக்க முடியும் என்பதுடன், உரித்துதொடர்பான திட்டத்தின் பிரகாரம், உரிய மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுப் பொதிக்கு உரித்தினைக் கொண்டஒருவர்.

**இழப்பீடு** : யாதேனும் கருத்திட்டமொன்றின் கீழ் சொத்து, வளம் அல்லது வருமான மூலாதாரமொன்றினைச் சுவீகரிக்கும்போது அல்லது அதன் தாக்கத்திற்கு உட்பட்டுள்ள வேளையில் அதற்காக இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரித்தினைக் கொண்ட நபர் ஒருவருக்குப் பணவடிவில் அல்லது பொருள் வடிவில் மேற்கொள்ளப்படும் கொடுப்பனவு, மற்றும் அந்நபரின் சொத்தினைச் சுவீகரிப்பதற்கு முன்னர் இருந்த சமூகப் பொருளாதார சூழ்நிலையினை வழங்குவதற்குத் தேவைப்படும் நிதி.

**முடிவுறுத்தும் திகதி:**

உரித்துஉரிமைகொண்டவர்களுக்குநிவாரணஉரித்துக்கள்தொடர்பில்தகைமையினைப்பெற்றுக் கொள்ளுவதற்கானஇறுதித்தினமாவது,

காணிச்சுவீகரிப்புச்சட்டத்தின்2வதுபிரிவின்கீழ்கொடுக்கப்பட்டஅறிவிப்புத்தினமாவதுடன், உரித்துஆவணங்களைக்கொண்டிராதநபருக்குஅத்தகைமையினைப்பெற்றுக்கொள்ளுவதற்கா னஇறுதித்தினமாவது,

மீள்குடியேற்றத்தின்தாக்கத்தின்மீதானஆய்வுமுன்னெடுத்துள்ளதினமாகும்.

அதன்இறுதித்தினத்திற்குப்பின்னர்,அப்பிரதேசத்திற்குவந்துஉரிமைகோருவதற்கோ, இழப்பீட்டினைப்பெற்றுக்கொள்ளுவதற்கோஅல்லதுஎந்தவொருவகையிலும்மீள்குடியேற்றஉதவி யினைப்பெற்றுக்கொள்ளுவதற்கோஉரித்தற்றவர்ஆவர். அதேபோல, உரியசொத்துப்பட்டியல்தயாரிக்கப்பட்டுஇறுதித்தினத்திற்குஅல்லதுஅதுதொடர்பில்பரஸ்பரரீதி யில்உடன்பட்டமாற்றுத்தினமொன்றுஅல்லதுஅதன்பின்னர்அமைக்கப்பட்டநிலையானசொத்துக் கள் (கட்டியெழுப்பப்பட்டகட்டமைப்புக்கள், பயிர்கள், பழமரங்கள்மற்றும்தளபாடமரங்கள்) தொடர்பில்இழப்பீடுவழங்கப்படமாட்டாது.

**இடம்பெயர்ந்த நபர்கள்** : சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்ற செயற்பாட்டினூடாக, சுயவிருப்பின்றி காணியினைச் சுவீகரிப்பதன் காரணமாக அல்லது யாதேனும் காணிப் பயன்பாடு அல்லது அதற்குள் பிரவேசிப்பதற்கு சுயவிருப்பின்றி வரையறை செய்வதன் காரணத்தினால், பௌதிக ரீதியில் (மறுசீரமைப்பு, குடியிருப்பு நிலங்கள் அல்லது வீட்டை இழந்ததால்) இடம்பெயரும் மற்றும்/அல்லது பொருளாதார ரீதியில் (நிலம், சொத்து, சொத்துக்கான அணுகல், வருமான மூலாதாரங்கள் அல்லது வாழ்வாதார வழிகள் இழப்பின் காரணமாக) இடம்பெயரும் நபர்கள் எனப் பொருள் கொள்ளப்படும்.

**பொருளாதார இடம்பெயர்வு** : சுயவிருப்புக்கு விரோதமான காணிச் சுவீகரிப்பின் காரணமாக, நிலம்,சொத்துக்கள், சொத்துக்கான அணுகல், வருமான மூலாதாரங்கள் அல்லது வாழ்வாதார வழிகள் இழப்பு (ii)நிலப் பாவனையின் மீது அல்லது சட்டரீதியில் ஒதுக்கப்பட்ட பூங்காக்கள் அல்லது பாதுகாப்பான பிரதேசங்களினை அணுகுதல் மீது சுயவிருப்பின்றி வரையறைகளை விதித்தல்.

**தகைமை** : மீள்குடியேற்ற நிகழ்ச்சித்திட்டமொன்றின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான தகைமைகளை வழங்கும் நிபந்தனைத் தொடர். பாதிப்புக்குள்ளான குடியிருப்பு அல்லது வர்த்தக உடைமை உரிமையாளர்கள், வாடகை வீட்டில் குடியிருப்போர்,

விற்பனையாளர்கள், சொத்துக்களைப் பலாத்காரமாகச் சுவீகரித்தோர், புறம்போக்காளர்கள் (ஆக்கிரமிப்பாளர்கள்) போன்ற இன்னோரென்ன வெவ்வேறான தகைமைகளைக் கொண்ட குழுவுக்கு, குறிப்பிட்ட உரித்துக்களைத் தீர்மானிப்பதைக் கொண்ட அடிப்படையே இந்த நிபந்தனைகளாகும்.

**சொத்துக்களைப் பலாத்காரமாகச் சுவீகரித்தோர்** : அங்கீகரிக்கப்பட்ட கட்டுமாண வரையறைகள் அல்லது விவசாய நிலம் அல்லது தங்களுக்கு உரித்தான பிரத்தியேகச் சூழலுக்கு அப்பால் வெளிப்புற எல்லைகளை சட்டபூர்வமற்று நீடித்துள்ள அல்லது தங்களின் நிலத் துண்டுகள் அல்லது விவசாய நிலங்களில் தங்களுக்கு பொது பிரவேசிப்பினை சுவீகரித்துள்ள நபர்.

**உரித்து** : ஒவ்வொரு தகைமைத் தொகுதிக்கு உரித்தான இடம்பெயர்ந்த நபர்களுக்கு, அவர்களுக்கு உரித்தான தகைமைத் தொகுதி தொடர்பில் மீள்குடியேற்ற உரித்துக்களின் பிரகாரம், வழங்கப்படும் மொத்த இழப்பீட்டுப் பணம் மற்றும் ஏனைய உதவிகள். இழப்பின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டு, பொருளாதாரம் மற்றும் சமூகத்தினை அடிப்படையாகக் கொண்டு மீளமைத்தல் தொடர்பில் பின்பற்றப்படும் இழப்பீடு, வருமான மறுசீரமைப்பு, வேறு பிரதேசத்திற்கு வசிப்பதற்குச் செல்லுவதற்கான உதவி, பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பில் குறிப்பிட் வருமான மாதிரி மற்றும் மறுசீரமைப்பு போன்றவற்றினைக் கொண்ட அளவீட்டு வீச்சு இதற்குள் உள்ளடக்கப்படும்.

**ஆதரிக்கும் குடிகள்/சமுதாயம் (பழங்குடியினர்):** யாதேனும் கருத்திட்டமொன்றின் காரணமாக பௌதிக ரீதியில் இடம்பெயரும் மக்கள் மீளக்குடியேறிய பிரதேசத்தில் அல்லது அதனைச் சூழ வசிக்கும், அதன் மீள்குடியேற்றத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளான மக்கள்.மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டங்களின்போது, உருவாகக்கூடிய சமூக ஆபத்துக் காரணிகள் மற்றும் மோதல்களைக் குறைத்துக் கொள்ளுவதற்கு ஆதரிக்கும் குடிகள்/சமுதாயத்தின் (பழங்குடியினர்) தேவை மற்றும் அக்கறை தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்.

**சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம்:**இடம்பெயர்ந்த மக்களின் சுயவிருப்புக்கு விரோதமாக அல்லது மீள்குடியேற்றத்தினை நிராகரிப்பதற்கு அதிகாரமொன்று இல்லாமையின் காரணமாக தமது விருப்பினை வெளிப்படுத்துவததை அடிப்படையாகக் கொண்ட மீள்குடியேற்றம், சுயவிருப்பின்றி முன்னெடுக்கப்படும் மீள்குடியேற்றமாகும்.

**அமுலாக்கல் அட்டவணை–** கருத்திட்டச் செயற்பாடுகளுக்கான காலவரையறை.

**வருமான மறுசீரமைப்பு–** மீள்குடியேற்றத்திற்கு முன்னரான வருவாய் ஈட்டும் மட்டத்திற்கு அல்லது முடியுமாயின், அதற்கும் மேலான சிறந்த மட்டத்திற்கு தமது வருவாய் மட்டத்தினைச் சாத்தியமாக்குவதற்கு இடம்பெயர்ந்த நபர்களின் வாழ்வாதாரத்தினை மறுசீரமைத்தல்.

**காணி உரிமையாளர்கள்** : மரங்கள், பயிர் வளர்ப்புக்கள் அல்லது கட்டமைப்புக்களைக் கொண்ட அல்லது கட்டமைப்புக்களைக் கொண்டிராத, அரசின் பதிவுகளின் பிரகாரம், தெளிவான உரித்தினைக் கொண்ட நிலங்களின் உரிமையாளர்கள் இதில் பொருள்கோடப்பட்டுள்ளது. தற்போதுள்ள சட்டத்தினூடாக, ஏதேனும் விசேட வேளைகளில், இதன் உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்குத் தேவயைான சான்றுகளைக் கவனத்திற் கொள்ளாது, கருத்திட்டப் பிரதேசத்தினுள் காணப்படும் நிலம்/நிலங்கள் தொடர்பில் உரிமையாளர் ஒருவர் இழப்பீட்டினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரித்தினைப் பெறுவர். இவ்வாறான வேளைகளில், காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழு, பிரதேச அதிகார சபை மற்றும் சமுதாயத்தினை வினாவியதன் பிற்பாடு விசேட தீர்மானங்களினை எடுக்கும்.

**நிலம் மற்றும் கட்டமைப்புக்களில் வதிவிடத்தினைக் கொண்டிராத உரிமையாளர்கள்** :

வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வேறு பகுதியினருக்கு வழங்குவதன் காரணமாக நிலம் மற்றும் அதனுடன் தொடர்பான சொத்து தமக்கு இல்லாமை அல்லது இவ்வாறான நிலம் வேறு நபர்களினால் சுவீகரித்துக் கொள்ளப்பட்ட சட்டரீதியான நில உரிமையாளர்கள்.

**பௌதிக இடம்பெயர்வு:** சுயவிருப்புக்குவிரோதமானகாணிச்சுவீகரிப்பு, நிலப்பாவனைஅல்லதுஅதற்குள்பிரவேசிப்பதைசுயவிருப்பின்றிவரையறைசெய்தவன் காரணமாக மறுசீரமைத்தல், குடியிருப்பு நிலம் இழப்பு, அல்லது வீடு இழப்பு.

**கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்கள் (PAP)**: கட்டியெழுப்பப்பட்ட கட்டமைப்பு அல்லது நிலம் (குடியிருப்பு, விவசாயம், வர்த்தகம்) வருடாந்தம் அல்லது நீண்டகாலப் வற்றாத பயிர்கள் மற்றும் மரங்கள் அல்லது தற்காலிக உரித்து, பயன்கள் அல்லது பிற நன்மைகளை, மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்துடன் தொடர்பான செயற்பாடுகள் போன்ற அமுலாக்கம் காரணமாக, இழப்பின் பாதிப்புக்கு முகங்கொடுக்கும் யாரேனும் நபர் ஒருவர்.

**பாதுகாக்கப்பட்ட குடியிருப்பாளர்கள்** : சட்டரீதியிலான வர்த்தகம் அல்லது வதிவிடக் குடியிருப்புக்களில் வசித்துள்ள, அந்நிலத்தினை உரிமையாளர் விருப்பின் பேரில் அகற்றுவதற்கு அல்லது உரிய வீட்டு வாடகையினை அதிகரிக்க முடியாது என 1972ஆம் ஆண்டின் வீட்டு வாடகைச் சட்டத்தில் அல்லது அதற்கடுத்த திருத்தங்களினூடாக பாதுகாக்கப்பட்ட குடியிருப்பாளர்கள்.

**மறுசீரமைத்தல்** : வீடு, சொத்துக்கள், விளைத்திறான நிலம் மற்றும் பொது உட்கட்டமைப்பு வசதிகள் போன்றனவற்றினை வேறு தளத்தில் கட்டியெழுப்புதல்.

**புனர்வாழ்வு** : வருமானங்கள், வாழ்வாதார வழிவகைகள், வாழ்க்கை முறைமை மற்றும் சமூகத் திட்டத்தினை மீளமைத்தல்.

**மீளப்பெற்றுக் கொள்ளும் செலவு** :ஏதேனும் சொத்தொன்றினை சுவீகரித்துக் கொள்ளும் வேளையில் அச்சொத்தினை மீள வழங்குவதற்கு ஈடு செய்யப்பட வேண்டிய செலவு மீளப் பெற்றுக் கொள்ளும் செலவாகும். நியாயமான சந்தைவிலைப் பெறுமதி, கொடுக்கல் வாங்கல் செலவு, சேர்க்கப்பட்ட வட்டி, புதிய இடத்திற்குச் செல்லுவதற்கு மற்றும் மீளமைப்பதற்குமான செலவுகள், உரித்தாகக்கூடிய ஏனைய வேண்டிய கொடுப்பனவு அனைத்தும் இதற்குள் அடங்கும். மீளப் பெற்றுக் கொள்ளும் செலவுக்கு சொத்துக்கள் மற்றும் கட்டமைப்புக்களின் மீது ஏற்படும் தேய்மானம் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. செயலூக்கமான சந்தைச் சூழ்நிலை இல்லாதவேளையில், சகல கட்டிடப் பொருட்களை வழங்கும் செலவு, நிர்மாணப் பணிச் செலவு மற்றும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் மற்றும் மீளமைப்பதற்குமான ஏனைய வேண்டிய செலவு,மீளப் பெற்றுக் கொள்ளும் செலவுக்குச் சமமானதாக இருக்கும்.

**மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம்(RAP):**முதலீட்டுக் கருத்திட்டமொன்றினூடாக பாதிப்புக்குள்ளான நபர்கள் மற்றும் சமுதாயம் முகங்கொடுக்கும் மோசமான விளைவுகளைக் குறைத்தல், இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை முன்னெடுத்தல் மற்றும் அபிவிருத்திப் பயன்களை வழங்குவதற்கு துணைக் கருத்திட்ட அனுசரணையாளர் அல்லது ஏனைய பொறுப்பான மக்களினால் பின்பற்றப்படும் நடைமுறைகள் மற்றும் இடம்பெறும் செயற்பாடுகளினை விசேடமாக கொண்ட ஆவணமாகும்.

**மீள்குடியேற்ற உதவி** : கருத்திட்டத்தினூடாக பௌதிக ரீதியில் இடம்பெயர்ந்த நபர்களுக்கு உதவி வழங்குதல் எனக் கருத்துக் கொள்ளப்பட்டுள்ளது. போக்குவரத்து, உணவு, தங்குமிடங்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான நபர்களை மீளக்குடியேற்றுவதற்கிடையேயான காலப்பகுதியில் வழங்கப்படும் சமூக சேவைகளை இதற்குள் உள்ளடக்க முடியும். அதே போல பாதிப்புக்குள்ளான நபர்களினை மறுசீரமைக்கும் நடைமுறை தொடர்பில் பாதிக்கப்பட்டவர்ளுக்கென, நிதிசார்

கொடுப்பனவு, வசிப்பிடத்தினை மாறிச் செல்லுவதற்கான செலவு மற்றும் தவறிய வேலை நாட்களுக்கான செலவு போன்றன புதிய வதிவிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கு ஈடுசெய்யும் செலவினை பிரதியிடுவதை இதில் உதவுவதனூடாக உள்ளடக்க முடியும்.

**நிலம் மற்றும் கட்டமைப்புக்களின் வதிவிட உரிமையாளர்கள்** : தமது நிலம் மற்றும் கட்டமைப்புக்கள் தொடர்பில் தெளிவான உரித்து உறுதி ஆவணத்தினைக் கொண்டு, வதிவிட மற்றும் வர்த்தக நோக்கிற்கென அதில் வசிக்கும் உரிமையாளர்கள்.

**சமூகப் பொருளாதார ஆய்வு**: கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்கள் அல்லது குடிசன மதிப்பீடு தொடர்பிலான முழுமையான சரியான ஆய்வொன்றாகும். வருமானத்தினை உழைக்கும் செயற்பாடுகள் மற்றும் ஏனைய சமூகப் பொருளாதாரச் சுட்டி தொடர்பில் இவ் ஆய்வின்போது கவனஞ் செலுத்தப்படும். பொதுவாக, மீள்குடியேற்றத் திட்டம் ஆரம்ப வேளையில் இவ் ஆய்வு இடம்பெறும்.

**பங்குதாரர்கள்** : யாதேனும் உப கருத்திட்டத்தின் மீது தாக்கமொன்று ஏற்படும் இயலுமையினைக் கொண்ட, அவ்வாறான கருத்திட்டமொன்றின் மீது அக்கறையினைக் காட்டும் மற்றும் அவ்வாறான கருத்திட்டமொன்றினூடாக பாதிப்புக்குள்ளாகும் அல்லது பயன்களைப் பெறும் சாத்தியத்தினைக் கொண்ட வேண்டிய நபர்கள், குழுக்கள், அமைப்புக்கள் மற்றும் நிறுவனங்கள்.

**அத்துமீறிக் குடியிருப்போர்** : சட்டரீதியில் முறைசார் உரித்தினைக் கொண்டிராத மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் அனுமதிப் பத்திரத்தினைக் கொண்டிராத, அரச மற்றும் பிரத்தியேக நிலத்தில் வசிக்கும், அதில் நிர்மாணிப்புக் கட்டமைப்புக்களை கட்டியெழுப்பி, அவ்வாறான கட்டமைப்புக்களை குடியிருப்பு, விவசாயம் மற்றும் வர்த்தகப் பயன்பாட்டிற்கென பயன்படுத்தியுள்ள நபர் ஒருவரினையே இங்கு பொருள் கோடப்பட்டுள்ளது.

**வாடகைக் குடியிருப்பாளர்கள் மற்றும் குத்தகைக்காரர்கள்** : சட்டரீதியில் நிலம் வழங்கப்பட்டுள்ளவாறு, நிபந்தனைகளைக் கொண்ட பதிவு செய்யப்பட்ட ஆவணங்களினூடாக ஏதேனும் நிலம் அல்லது சொத்து அல்லது இவ்விரண்டினையும் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு வாடகை அல்லது குத்தகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொண்ட குடியிருப்பாளர்கள்.

**கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையிலுள்ள குழுக்கள்** : மீள்குடியேற்றத்தினைக் காரணமாகக் கொண்டு, ஆண் பெண் பாகுபாடு, இனம், வயது, உடல் உள பலவீனம், பொருளாதாரப் பிரதிகூலம் அல்லது சமூக நிலை போன்ற விடயங்களின் கீழ் மற்றவர்களை விட மோசமாக பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய நபர்கள், மீள்குடியேற்ற உதவியுடன் அபிவிருத்திப் பயன்களைக் கோருதல் அல்லது பெற்றுக் கொள்ளுவதற்கு குறைந்த இயலுமையினைக் கொண்டவரையே இங்கு பொருள் கோடப்பட்டுள்ளது. வருமானத்தினைப் பெருக்கும் இயலுமையுடன் சிறந்த உடல் ஆரோக்கியத்தினைக் கொண்ட ஆண் அங்கத்தவர்களினைக் கொண்டிராத பெண்களின் மூலம் முன்னெடுக்கப்பட்டு வரும் குடும்பங்கள், குடும்பமொன்றினை முன்னெடுத்துச் செல்லுவதற்குப் போதியளவு உழைப்பினைக் கொண்டிராத, மிகவும் முதுமையடைந்த, பலவீனமான நபர்கள் மற்றும் உடல், உளச் சவால்களுக்கு உட்பட்ட நபர்களினைக் கொண்ட குடும்பங்கள் மற்றும் மிகவும் வறுமை மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மட்டத்துடன் அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள குடும்பங்கனை இந்த வகையின் கீழ் விசேடமாகக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

**உள்ளடக்கம்**


| | பக்கம் |
|---|---|
| முதலெழுத்துக்கள் மற்றும் விளக்கங்கள் | ii |
| கலைச் சொற்கள் | iii |
| உள்ளடக்கம் | viii |
| நிறைவேற்றுப் பொழிப்பு | xi |
| 1. **கருத்திட்ட விபரம்** | 01 |
| 1.1 அறிமுகம் | 01 |
| 1.2 ஒட்டுமொத்தக்கருத்திட்டத்தின் விளக்கம் | 02 |
| 1.3 கருத்திட்டத்தின் விபரம்: 03 வதுபடிநிலை | 03 |
| 1.4 மீள்குடியேற்றத் திட்டத்தின் நோக்கம்(RAP) | 06 |
| 1.5 RAPதயாரிப்பு முறை | 07 |
| 1.6சமூகப் பாதுகாப்புத் தேவைப்பாடுகளின் பரிமாணங்கள் | 12 |
| **2. சட்டம் மற்றும் கொள்கை வடிவமைப்பு** | 14 |
| 2.1 சட்ட வரைவு | 14 |
| 2.2 கொள்கை வரைவு | 24 |
| 2.3சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான வழிகாட்டுதல்கள். | 28 |

2.4.கருத்திட்டம் தொடர்பான கொள்கைகளின் முக்கிய கோட்பாடுகள் 28

**3. காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றத்தின் நோக்கம்** 32

3.1 அறிமுகம் 32

3.2நிலங்களின் மீது ஏற்படும் பாதிப்பு 32

3.3 பிரத்தியேகநிலம் மற்றும் கட்டமைப்புக்களின் மீது ஏற்படும் பாதிப்பு 40

3.4 அரச சொத்துக்கள், பொதுச் சொத்துக்கள் மற்றும் கட்டமைப்புக்களின் மீது ஏற்படும் பாதிப்பு 44

4. **சமூகப் பொருளாதார தகவல் மற்றும் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் விபரம்** 46

4.1 பிராந்திய, மாவட்ட மற்றும் பிரதேச சமூகப் பொருளாதார நிலபரம் தொடர்பிலானகண்ணோட்டம் 46

4.2 கருத்திட்டத்தினால்பாதிக்கப்பட்டபிரதேசத்தின்சமூகபொருளாதார நிலபரங்கள் 48

4.3கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் சமூக பொருளாதார நிலபரங்கள் **:**குடும்பத் தலைவர்கள் 53

4.4கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் சமூகப் பொருளாதார நிலபரங்கள் **:** குடும்ப அங்கத்தவர்கள் 57

4.5 கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையில் வாழும் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள் 62

4.6பிரேரிக்கப்பட்ட கருத்திட்டப் பாதிப்புத் தொடர்பில் PAPsஇன் கருத்துக்கள் 64

**5.கருத்திட்டம் தொடர்பிலான உரித்துத் திட்டம், உதவி மற்றும் பயன்கள்** 70

5.1 அறிமுகம் 70

5.2 கருத்திட்டத்துடன் தொடர்பான உரித்துத் திட்டம் 71

5.3 உரித்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான இறுதித் தினம் 114

5.4 கருத்திட்ட உதவி மற்றும் பயன்கள் 114

6.**வீடு மற்றும் குடியிருப்புக்களை இடமாற்றுதல்** 116

6.1 அறிமுகம் 116

6.2 மீள்குடியேற்றம் தொடர்பிலான சமூக மற்றும் கலாசார பரிமாணங்கள் 116

6.3 மீள்குடியேற்றம் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் முக்கிய தேவைகள் 121

6.4 சிறுவர் கல்வி தொடர்பிலான பிரச்சினைகள் 122

6.5 சாத்தியமான மீள்குடியேற்ற தளங்கள் 122

6.6 ஆதரிக்கும் குடிகள் மற்றும் சமூகத்தினை ஒன்றிணைத்தல் 123

**7. வருமான மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு** 125

7.1 PAPsஇன் வருமானம் மற்றும் வாழ்வாதார இழப்பு 125

7.2 கருத்திட்டத்தின் கீழ் இடம்பெறும் வருமான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்திற்கான மூலோபாயங்கள் 125
7.3 குடியிருப்புக் குடும்பங்களைப் புனர்வாழ்வளித்தல் 129
7.4 விவசாயிகளைப் புனர்வாழ்வளித்தல் 130
7.5 கைத்தொழில் மற்றும் வர்த்தகர்களைப் புனர்வாழ்வளித்தல் 131

**8.மீள்குடியேற்றம் தொடர்பில் நிதியினை ஒதுக்கும் மற்றும் நிதியினை வழங்கும் திட்டம்** 132

8.1 அறிமுகம் 132
8.2 மீள்குடியேற்றம் தொடர்பில் நிதியினை ஒதுக்கும் வேளையில் பயன்படுத்தப்பட்ட விகிதங்கள் 132
8.3 மீள்குடியேற்றத் திட்டத்திற்கான மொத்தச் செலவு மதிப்பீடு 135

9. **குறை தீர்க்கும் பொறிமுறை (GRM)** 138

9.1 குறை தீர்க்கும் பொறிமுறையின் தேவைப்பாடு 138
9.2 கருத்திட்டத்திற்காக பிரேரரிக்கப்பட்ட குறைதீர்க்கும் பொறிமுறை 139
9.3 குறைதீர்க்கும் பொறிமுறைமற்றும் அக்குழு செயற்படும் முறை 142
9.4 குறை தீர்க்கும் பொறிமுறை மற்றும் குறை தீர்க்கும் குழுவின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடுசெய்தல் 144
9.5குறை தீர்த்தல் தொடர்பில் உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் பின்பற்றப்படும் ஏனைய மாற்றுவழிகள் 145

10**. கருத்துக்களைக் கேட்டறிதல், பங்குகொள்ளல் மற்றும் தகவலினை வெளியிடுதல்** 147

10.1பொதுமக்களின் கருத்துக்களை அறியும் முன்னெடுப்பு மற்றும் அதன் மட்டங்கள் 147
10.2 தகவலினை வெளியிடுதல் மற்றும் பரப்புதல் 150
10.3 பொது தகவல் நிலையங்கள் 153
10.4HIV/AIDSமற்றும் ஏனைய சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் தொடர்பிலான விழிப்புணர்வு 153

11.**நிறுவனம்சார் ஏற்பாடுகள்** 156

11.1 வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகு 156
11.2கருத்திட்டம் தொடர்பிலான ஏனைய பங்குதாரர்கள் மற்றும் மீள்குடியேற்றத்தின் மீது அவர்களின் பங்களிப்பு 159
11.3 மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தினைஅங்கீகரிக்கும் முன்னெடுப்பு 163

12.**அமுற்படுத்தும் காலவரையறை** 166

12.1 கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களை அடையாளங் காணுதல், காணிச் சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு 166

12.2மீள்குடியேற்றம்: சுயமாக இடம்பெயர்தல் மற்றும்வீதி அபிவிருத்தி அதிகார சபையினால்வழங்கப்பட்டு வரும்மீள்குடியேற்றத் தளங்கள் 167

12.3 கருத்திட்டம் மூலம் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் தொடர்பிலான தகவல் நிலையம் 170

13.**கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுதல்** 171

13.1அறிமுகம் 171

13.2கண்காணிப்பு முன்னெடுப்பு: உள்வாரி மற்றும் வெளிவாரி 174

[IIவது தொகுதியின் பின்னிணைப்புக்களை பார்க்கவும்]**

பின்னிணைப்பு I: இலங்கையில் பிரேரிக்கப்பட்ட அதிவேக வலையமைப்பு

பின்னிணைப்பு II: 3 வது கட்டம் தொடர்பிலானGNDsபட்டியல்

பின்னிணைப்பு III: A: சமூக பொருளாதார மற்றும் சொத்துக்களைச் சரிபார்க்கும் ஆய்வுக்கான வினாக்கொத்து

B:எண் குறியீடுகளின் பட்டியல்

பின்னிணைப்பு IV: RDA தகவல் சிற்றேடு

பின்னிணைப்பு V: கோரிக்கைக் கடிதம்

பின்னிணைப்பு VI: A: அரச மற்றும் பொதுச் சொத்தினை அடையாளங் காணும் வினாக் கொத்து

B: எண் குறியீடுகளின் பட்டியல்

பின்னிணைப்புVII:மையப்படுத்தப்பட்ட குழுக் கலந்துரையாடலுக்கான வழிகாட்டல்

பின்னிணைப்பு VIII: முக்கிய தகவலாளரை நேர்காணலுக்கான வழிகாட்டல்கள்

பின்னிணைப்பு IX: 3வது கட்டக் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் குடும்ப அலகு தொடர்பான பட்டியல்

பின்னிணைப்பு X: அரச சொத்துக்களின் பட்டியல்

பின்னிணைப்பு XI: 3வது கட்டம் தொடர்பிலான பொதுச் சொத்துக்களின் பட்டியல்

பின்னிணைப்புXII: RDA கருத்திட்டத்தின்GRC மீதானMOHEHசுற்றுநிரூபம்

பின்னிணைப்புXIII: 3வது கட்டம் தொடர்பில் நடாத்தப்பட்டFGDsஇன் பட்டியல்

பின்னிணைப்பு XIV: 3வது கட்டம் தொடர்பில் நடாத்தப்பட்ட பிரதான தகவல்களை வழங்குபவர்களின் பட்டியல்(KIIs)

பின்னிணைப்பு XV: பொதுமக்கள் தகவல்களைக் கேட்டறியும் முன்னெடுப்புடன் தொடர்புடைய புகைப்படங்களின் பட்டியல்

# நிறைவேற்றுப் பொழிப்பு

மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் (RAP)சகல அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பிலும் பாரிய பங்காற்றுகின்றது. அது, கருத்திட்டச் செயற்பாடுகளை அமுற்படுத்துவதன் காரணமாக மக்களை இடம்பெயருமாறு வேண்டுகின்றது. நிர்மாணச் செயற்பாட்டினை ஆரம்பிக்கும் முன்னர் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டட மக்களை மீள்குடியேற்றுவது முக்கியமாகவுள்ளது. மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டமானது, கருத்திட்டத்தினை வெற்றிகரமாக அமுற்படுத்துதல் தொடர்பில் எதிர்க்கணியத் தாக்கத்தினைக் கொண்டுள்ள மீள்குடியேற்ற முன்னெடுப்பு, முரண்பாடு மற்றும் விதண்டாவாதத்தினைமுகாமை செய்வதில் முக்கியமானதொரு சாதனமாக விளங்குகின்றுது. இது, கருத்திட்டத்தில் பாதிக்கப்பட்ட மக்கள் மற்றும் சமுதாயங்களை ஈடுபடுத்துவதிலும் ஒரு முக்கிய சாதனமாக உள்ளது.

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டம் (CEP)இலங்கையின் போக்குவரத்து வலையமைப்பு மேம்பாட்டுத் தரப்படுத்தல் மூலோபாயங்களின் அரசின் ஒரு பகுதியாக பிரேரிக்கப்பட்டுள்ளது. நீண்டகாலக் கட்டம் இரண்டினைக் கொண்ட மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டம் இறுதியில் அதனூடாக கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தினைத் தொடர்புபடுத்தும் என்பதுடன், தற்போதுள்ள அதிவேக வீதி வலையமைப்பு கடவத்தையினைத் தொடர்புபடுத்துவதனூடாக இதன் பணி ஆரம்பமாகும். அதன் பின்னர் 1 வது கட்டத்திற்கான 4 படிநிலைகளினுள், தம்புள்ள மற்றும் கண்டி வரையான வீதி நிர்மாணிக்கப்படுவதுடன் பின்னர் 2 வது கட்டத்தினுள் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை வரையான வீதியின் நிர்மாணப் பணி இடம்பெறும். 1 வது கட்டத்திற்கான 1வது படிநிலை கடவத்தையிலிருந்து மீரிகம வரையும், 2வது படிநிலை மீரிகமவிலிருந்து குருனாகல் வரையும், 3 வது படிநிலை பொத்துகெரவிலிருந்து கலகெதர -கண்டி வரையும், 4 வது படிநிலை குருனாகலிலிருந்து தம்புள்ள வரையும் என்றவாறு நிர்மாணிக்கப்படும். அதற்கு மேலாக 2 வது கட்டத்தின் கீழ் அம்பேபுஸ்ஸவிலிருந்து மீரிகம வரையான வீதி நிர்மாணிக்கப்படும்.

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின்(CEP),1வது கட்டத்தின்3வது படிநிலைக்காகவே, இந்த மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் (RAP)காணப்படுகின்றது. இலங்கை அரசினால்(GOSL)அங்கீகரிக்கப்பட்ட சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை, வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சமூகப் பாதுகாப்பு வழிகாட்டிக் கோவைக்கிணங்கவும் அதே போல இந்நாட்டின் வேறு நியதிசட்ட விதிகளுக்கமைவாகவும் இது தயாரிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் (RAP),மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின்(CEP)1 வது கட்டத்தின் 3 வது படிநிலையுடன் தொடர்பானதாகும். இலங்கை அரசினால் (GOSL)அங்கீகரிக்கப்பட்டுள்ள சுயவிருப்பற்ற மீள்குடியேற்றத் தேசியக் கொள்கை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு வழிகாட்டி விதிக் கோவைக்கிணங்கவும் மற்றும் இந்நாட்டின் ஏனைய நியதிச்சட்ட விதிமுறைகளுக்கமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் (RAP) 13 முக்கியதொனிப்பொருள்களின் கீழ், மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின்(CEP) 3வது படிநிலை தொடர்பான மீள்குடியேற்ற முன்னெடுப்பின் சகல சாத்தியமான அம்சங்களையும் இனங்காண்கின்றது. கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களினை (PAPs)முன்னணியாகக் கொண்டு பாரதூரமான விளைவுகளை வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளைச் சுட்டிக் காட்டுவதுடன், விசேடமாக தற்போதுள்ள சமூக – பொருளாதார நிலபரம் மற்றும் சாத்தியமான கருத்திட்ட விளைவினை

உள்ளடக்கியுள்ளது. கருத்திட்டத்துடன் இணைந்த காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்பின் காரணமாகக் கொண்டே பிரதானமாக இந்த இனங்காணப்பட்ட விளைவு காணப்படுகின்றது.

இக்கற்கை முன்னெடுப்பானது, பண்புசார் தரவினைச் சேகரிப்பதற்கான ஒரு வினாக்கொத்து ஆய்வு, உலகளாவிய நிலைப்படுத்தல் திட்டம் (GPS),புள்ளியிடுதல் மற்றும் மையக்குழு கலந்துரையாடல்கள் (FGDs)மற்றும் தரமான தரவு சேகரிப்புக்கான முக்கிய தகவலினை நேர்காணல்களை (KIIs)உள்ளடக்கியுள்ளது.

**நிறைவேற்றுப் பொழிப்பின் அட்டவணை இலக்கம்01–உரிய மாவட்டங்கள், உரிமையாளர்களின் தொகை மற்றும் காணி விஸ்தீரணத்தின் பிரகாரம் பாதிக்கப்பட்ட காணிகளின் வகை**

| மாவட்டம் | காணியின் வகை | | | | | | | | | | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வதிவிடம் | | | வர்த்தகம்/வணிகம் | | | தரிசு நிலம் | | | விவசாயம் | | | | | |
| | PAPs எண்ணிக்கை | பேர்ச் | % | PAPs எண்ணிக்கை | பேர்ச் | % | PAPs எண்ணிக்கை | பேர்ச் | % | PAPs எண்ணிக்கை | பேர்ச் | % | PAPs எண்ணிக்கை | பேர்ச் | % |
| குருனாகல் | 220 | 6,812.4 | 31.9 | 10 | 348.5 | 42.2 | 112 | 3,378.9 | 48 | 914 | 32,454.1 | 43 | 1,256 | 42,993.97 | 40.8 |
| கேகாலை | 274 | 9,272.2 | 43.4 | 8 | 145.9 | 17.7 | 118 | 2,481.6 | 35 | 787 | 25,108.1 | 33 | 1,187 | 37,007.7 | 35.1 |
| கண்டி | 130 | 5,271.9 | 24.7 | 7 | 330.9 | 40.1 | 38 | 1,186.9 | 17 | 397 | 18,606.5 | 24 | 572 | 25,396.21 | 24.1 |
| மொத்தம் | 624 | 21,356.5 | 100.0 | 25 | 825.3 | 100.0 | 268 | 7,047.4 | 100 | 2098 | 76,168.7 | 100 | 3,015 | 105,397.9 | 100.0 |

மூலாதாரம் : CEP/3 வது படிநிலை/ புள்ளிவிபரத் தரவு

கற்கை ஆய்வினூடாக வெளிக்கொணரப்பட்டவாறு, பிரேரிக்கப்பட்ட அதிவேக வீதி தொடர்பில் நேர்க்கணிய விளைவுகளைக் கொண்டு பொதுமக்கள் பொதுவாக நேர்காணலுக்கு உட்படுத்தப்பட்டனர். கரையோரப் பிரதேசங்களில் வர்த்தக நிலையங்களைக் கொண்ட நாட்டின் மத்தியில் செயலூக்கமான பொருளாதார மையங்களைத் தொடர்புபடுத்தி நுண்ணிய மட்டத்தில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பாரியளவில் இந்த அதிவேக வீதி அதிகளவில் பங்களிப்பு நல்கும் என அவர்கள் அழுத்திக் கூறினர். மேலும், பயணிகள், பிரத்தியேக மற்றும் வர்த்தகம்சார் வாகன உரிமையாளர்கள், துரித பொருளாதார வளர்ச்சி, சுற்றுலா மற்றும் கைத்தொழில் மேம்பாடு மற்றும் உள்ளூர் ஆரம்ப உற்பத்திகளுக்கு பெறுமதி சேர்த்தல் போன்றவாறு பிரயாணத்தின் வினைத்திறன் நிச்சயமாக மேம்படுத்தப்படும் என்றும் மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அட்டவணை 01 இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு, கற்கை ஆய்வில் இனங்காணப்பட்டவாறு மக்களின் பாதிக்கப்பட்ட பிரதான வகைகளாக, வீதியோரங்களில் வசிக்கும் வதிவிடங்கள் (624), விவசாயக் காணி உரிமையாளர்கள் (2,098) மற்றும் வர்த்தக முயற்சிகள் (25) உள்ளன. இத்தொகுதிகளில் பெரும்பான்மையினர் நிரந்தரமாக பாதிக்கப்படுவர் என்பதுடன் அவர்களை புதிய அமைவிடங்களில் மீளமர்த்தும் தேவைப்பாடும் காணப்படும். அதன் விளைவாக அங்கு அவர்களின் தற்போதைய சமூகப் பொருளாதார மற்றும் கலாசாரத் தேவைகள் அனைத்தையும் பூர்த்தி செய்து கொள்ள முடியும். மேலும் அங்குள்ள கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்கள் (PAPs)மோசமான வகையில் பாதிகப்பட்ட மாட்டார்கள். ஆனால் நிர்மாணச் செயற்பாட்டின்போது, தற்காலிக இடம்பெயர்வின் காரணமாக ஒரு குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மீளமர்த்தும் தேவையுள்ளது. இவர்கள் குறுகிய கால வாழ்வாதாரங்களை இழக்க நேரிடும். ஆதலால், இக்கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்கள் அனைவரும், ஒரு புதிய வாழ்க்கையினை ஆரம்பிக்கும் பொருட்டு, அவர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்ட நியாயபூர்வமான இழப்பீட்டினை எதிர்பார்ப்பர். எனினும் கருத்திட்டத்தின மூலம் பாதிக்கப்பட்ட பலர் தங்களின் அயலவர்களுடன் அவர்களின் இருப்பிடங்களிலேயே வசிப்பதற்கு விரும்புகின்றனர். தரவுச்சேகரிப்பு முன்னெடுப்பின்போது, மீளக்குடியமர்த்துவதற்கான அவ்வாறான காணிகளின் விபரங்களை அவர்கள் கொடுத்துள்ளனர்.

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டம் தொடர்பில் வீதியோரத்திலுள்ள பெரும்பான்மையான மக்கள் சரியானவாறு இன்னமும் விழிப்புணர்வூட்டப்படவில்லை எனவும் இதன் விளைவாக மக்களுக்கிடையே நம்பிக்கையின்மையினைத் தோற்றுவித்துள்ளது எனவும் மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத் தயாரிப்பின்போது உட்படுத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இனங்காணப்பட்டுள்ளன. குறிப்பாக காணிச் சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டு முன்னெடுப்புத் தொடர்பில் பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் அங்கே தேவையாகவுள்ளன.

வர்த்தக முயற்சியாண்மைகள் (27) மற்றும் அவற்றின் உத்தியோகத்தர்கள் (84) மீள்குடியேற்ற காலப்பகுதியின்போது அவர்களின் தொழிற் பாதுகாப்பு மற்றும் வருமானத்தின் மீது அக்கறை காட்டுகின்றனர். அவர்கள் மேலும், வாடிக்கையாளர்கள் மற்றும் தொழில் சூழலினை இழப்பதன் காரணமாக விசேடமாக இழப்பிலிருந்து அவர்கள் மீளும் வரைக்கும் வாழ்வதற்கு நியாயபூர்வமான இழப்பீடொன்றினை எதிர்பார்க்கிறார்கள். நிறைவேற்றுப் பொழிப்பின் அட்டவணை இலக்கம் 02 இன் ஊடாக 03 வது படிநிலையுடன் தொடர்பான மீள்குடியேற்றத் தேவைப்பாடுகள் தொடர்பிலான முழுமையான படத்தினைக் காட்டி நிற்கின்றது.

**நிறைவேற்றுப் பொழிப்பின் அட்டவணை இலக்கம் 02 : மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரங்கள் தொடர்பிலான பாதிப்பு**

| கட்டமைப்பின் வகை | பகுதியளவில் பாதிக்கப் படுதல் | முழுமையாக பாதிக்கப்படுதல் ஆனால் மீதமான காணியில் மீளக் குடியேற்ற முடியும். | முழுமையாகப் பாதிகப்படுதல் மற்றும் வேறு இடத்தில் அமர்த்தப்படுவதற்குத் தேவையாதல் |
|---|---|---|---|
| குடியிருப்பு வீடுகள் | 42 | 384 | 181 |
| வாடகை வீடுகள் | 02 | 07 | 05 |
| வர்த்தகம்/வணிகம் | 03 | 35 | 03 |
| இணைக்கப்பட்ட வீட்டுக்கடை | 1 | 03 | 04 |
| கழஞ்சியங்கள் | 4 | 06 | 03 |
| குடிசை | 29 | 05 | 149 |
| கைவிடப்பட்ட/உபயோகமற்ற | - | - | 16 |
| பிற | 32 | 53 | 63 |
| மொத்தம் | 113 | 493 | 424 |

மூலாதாரம் :**CEP/**3 வது படிநிலை**/RAP/**புள்ளிவிபரத் தரவு

மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தின் கீழ், கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ள கருத்திட்டத்தில் இந்த 3 வது படிநிலையின் கீழ் பாதிக்கப்படும் மொத்தக் காணிப் பிரதேசம் 107,975 பேர்ச்சாகும் (ஏக்கர் 674.8). தெங்குப் பயிரினை நோக்கி பாரிய பாதிப்பு ஏற்படும். இதன் மூலம் **25,3**51 மரங்கள் பாதிக்கப்படும். இரண்டாவதாக அதிகளவில் பாதிக்கப்படும் பயிராக வயல் நிலங்கள் 28,962 பேர்ச் (ஏக்கர் 162) காணப்படுகின்றன. முழு நேர மற்றும் பகுதி நேர விவசாயிகள், தங்களின் இயல்பு வாழ்க்கை மீளத் திரும்பும் வரைக்கும் குறிப்பிட்ட காலப்பகுதிக்கு மாற்றுக் காணிகள் மற்றும் வாழ்வாதார மீளமைப்பு உதவி தங்களுக்கு வழங்குதல் வேண்டும் என அவர்கள் அழுத்தமாகக் கூறியுள்ளனர். எவ்வாறாயினும், அவர்கள் இழக்கும் வயல் நிலங்களுக்கு எந்தவித மாற்றுநிலங்களும் ஈடாக மாட்டாது என அவர்கள் திடமாக நம்புகின்றனர்.

இக்கருத்திட்டத்தினால் 463 அரச சொத்துக்கள் பாதிக்கப்படுகின்றன. மேலும், 35 பொது சமூக வசதிகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் (அவையாவன, சனசமூக நிலையங்கள், பொதுக்

கிணறுகள், இடுகாடுகள், வீதிகள் மற்றும் நீர் வசதிகள்) போன்றன கருத்திட்டத்தினால் பாதிக்கப்படும் ஏனைய கருத்திட்டமாகும். இவை மக்களினை அதிகளவில் பாதிக்கும். அரசு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையானது இவ்வசதிகளை மீளமைத்துக் கொடுப்பதில் அதிக கவனஞ் செலுத்த வேண்டியுள்ளது. மீளமைப்பதன் விளைவாக தங்களின் சமூக, சமய, கலாசார தொடர்புகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்லுதலில் ஏற்படும் பாதிப்புத் தொடர்பில் குடியிருப்பாளர்கள் கவலைகொள்கின்றனர். உரிய விடயங்களைக் கவனத்திற் கொண்டு இழப்பீடு வழங்கும் செயற்பாடு தொடர்பில் தயாரிக்கப்பட்ட வழிகாட்டி நெறியில் உரித்து தொடர்பான கட்டமைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட சொத்துக்களுக்கான ஒரு முக்கிய தீர்வாக இழப்பீட்டு முன்னெடுப்பு தொடர்பில் மக்கள் ஆர்வமாகவுள்ளனர் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஏற்கனவே நிறைவு செய்யப்பட்ட ஏனைய இரண்டு அதிவேக வீதிக் கருத்திட்டங்களில் (வடக்கு அதிவேக வீதி மற்றும் கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதி) அவர்களின் சொத்துக்களுக்கான உயர் பெறுமதியினை எதிர்பார்க்கும் போக்கொன்று காணப்படுவது அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வனைத்து உண்மைகளையும் மற்றும் சமுதாயத்திலிருந்து சேகரிக்கப்பட்ட கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு, சொத்தின் வெவ்வேறான வகைக்காக இழப்பீட்டு முன்னெடுப்பு வடிவமைக்கப்படுகின்றது. அது அத்தியாயம் 5 இன் கீழ் கலந்துரையாடப்படுகின்றது. உரிமை பற்றிய கட்டமைப்பானது, இழப்பீட்டு முன்னெடுப்புக்காக மேம்படுத்தப்பட்ட குறிப்பிட்ட உண்மைக் காரணிகளைக் கவனத்திற் கொண்டு முடிவான சகல வழிகாட்டல்களையும் உள்ளடக்குகின்றது. ஆகவே, இழப்பீடு மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளானவை, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வடக்கு அதிவேக வீதிக் கருத்திட்டம் உள்ளடக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனம்14/0833/533/008,2014 பெப்ரவரி 18 ஆந் திகதியன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதுடன் (அத்தியாயம் 460) காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 63 (2) (இ) பிரிவின் கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் வழங்கப்பட்ட (1864/54 என்ற இலக்க –2014 மே 30, வெள்ளிக்கிழமை) அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல், இலங்கைக் காணிச் சுவீகரிப்புச் சட்டத்திற்கிணங்க, இனங்காணப்பட்டு திட்டமிடப்பட்டு அமுற்படுத்தப்படும்.

அதற்கு நிகராக, கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் தற்போதையமுழுச் சொத்துக்களுக்குமான பெறுமதியினை மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் (RAP) மதிப்பீடு செய்துள்ளது. இழப்பீட்டு முன்னெடுப்பின் கீழ் கவனத்திற் கொள்ளக்கூடிய நேரடி மற்றும் மறைமுக எதிர்க்கணிய தாக்கங்களும் அதனூடாக ஈடு செய்யப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் 3 வது படிநிலையின் கீழ், காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற நோக்கங்களுக்காகச் செலவிடப்படும் மொத்தச் செலவு ரூபா. 12.64 மில்லியனாகும் என்பதுடன் அது அமெரிக்க டொலர் **(US $ 81.5 million)** 81.5 மில்லியனுக்குச் சமமானதாக உள்ளது. (இலங்கை நாணய மாற்று விகிதத்தில் US $ 1 - இலங்கை ரூபா. 155 ஆகும்)

இக் கற்கை ஆய்வுகளின்போது, இழப்பீட்டு நிதி/நிதியத்தினை முகாமை செய்தல் தொடர்பில் மேலும் கலந்துரையாடப்பட்டுள்ளதுடன் உரித்தாகும் நிதிகளின் பாதுகாப்புத் தொடர்பிலும் மற்றும் நிதிகளினைத் தவறுதலாகக் கையாளும் சாத்தியம் தொடர்பிலும் பெண்கள் பாரிய கவலைகளைக் கொண்டிருந்தனர். எனினும், இது தொடர்பில்கணவன் மற்றும் மனைவி இருவரின் இணைந்த கணக்குகள் அல்லது இருவரும் விழிப்புணர்வூட்டப்பட்டு உடன்பட்ட ஒத்த கணக்கில் நிதிகளை விடுவிப்பதற்கு சில சுட்டிக்காட்டல்கள் முன்வைக்கப்பட்டன. எவ்வாறாயினும், அங்கிருக்கும் சில காணிகளுக்கு பல உரிமையாளர்கள் பங்கு கோரக்கூடும் எனவே இதுவும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும். விசேடமாக நிலையற்ற தனியார் நிதி நிறுவனங்களிடமிருந்து உற்பத்தித்திறனற்ற முதலீடுகளிலிருந்து நிதிகளைப் பாதுகாப்பதற்கு பல விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்களை அறிமுகஞ் செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அவர்களின் மனக்குறைகளினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் அவை தொடர்பில் விரைவில் நடவடிகை எடுப்பதற்கென பொறிமுறையொன்றினைத் தயாரிக்குமாறு சமுதாயத்தினால் கோரப்பட்டது. எனினும் விசேடமாக நிர்மாணிப்புக் காலப்பகுதியில் நீண்டதூரம் பயணத்தினை மேற்கொள்ளுவது கடினமான விடயம் என்பதால்,உள்ளூர் நிறுவனத்தினூடாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நேரடித் தலையீட்டுடன் முன்னெடுக்கப்படுமாயின் அதன் மீது அவர்கள் ஆர்வத்தினைக் காட்டியுள்ளனர்.

மேலும், கருத்திட்டச் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும் மற்றும் மதிப்பீடு செய்வதற்குமென விளைத்திறனான கண்காணிப்புப் பொறிமுறையொன்று வடிவமைக்கப்படுதல் வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கருத்திட்ட முன்னேற்ற மீளாய்வு, சரியான நேரத்தினுள் மாற்று நடவடிக்கையினை எடுத்தல் மற்றும் விளைத்திறன் மற்றும் வினைத்திறான சேவைகளை வழங்குவதற்கான தீர்மானத்தினை எடுப்பதிலும்இத்தகவல்கள் பயனுள்ளதாக அமையும்.

# அத்தியாயம் I : கருத்திட்டம் தொடர்பிலான விபரம்

## 1.1 அறிமுகம்

மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் (RAP),மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் (CEP) 1 வது கட்டத்தின் 3 வது படிநிலையுடன் தொடர்பானதாகும். இலங்கை அரசினால் (GOSL)அங்கீகரிக்கப்பட்டுள்ள சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றத் தேசியக் கொள்கை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் சூழல் மற்றும் சமூகப் பாதுகாப்பு வழிகாட்டி விதிக் கோவைக்கிணங்கவும் மற்றும் இந்நாட்டின் ஏனைய நியதிச்சட்ட விதிமுறைகளுக்கமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய அரசின் அபிவிருத்திக் கொள்கைகளின் இலக்குகளை எட்டும்முகமாக, அதிவேக வீதிகள் வலையமைப்பொன்று இனங்காணப்பட்டு அவற்றில் சில நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவற்றினுள், கொழும்பு – கட்டுநாயக்க அதிவேக வீதி [E03], வெளிச்சுற்றுவட்ட வீதி[E02] (கடவத்தை வரும் வரை)மற்றும் கொழும்பு – மாத்தறை அதிவேக வீதி [E01] ஏற்கனவே செயற்பாட்டிலுள்ளன**.** இப்பிரேரிக்கப்பட்ட அதிவேக வீதி, தற்போதைய அரசினால் மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டமென (CEP)பெயரிடப்பட்டுள்ளது. அது கடவத்தயிலிருந்து கண்டி (கலகெதர) வரையும், பொத்துகெரவிலிருந்து கண்டி வரையுமென நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், வடக்கு அதிவேக வீதி (தம்புள்ள – யாழ்ப்பாணம்) மற்றும் தம்புள்ள –திருகோணமலை கிழக்கு அதிவேக வீதி, எதிர்கால அதிவேக வீதிகளாகத் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்படவுள்ளன. இந் நாட்டின் மாகாணங்களுக்கிடையேயானஇணைப்புத் தொடர்பில்ஒரு புதிய அத்தியாயத்திற்கு முன்னோடியாக அமையும். 1 வது பின்னிணைப்பினூடாக, இலங்கையிலுள்ள அதிவேக வீதி வலையமைப்பு மற்றும பிரேரிக்கப்பட்ட அதிவேக வீதி வலையமைப்புத் தொடர்பான தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

மேலும், அவ்வேளை பெருந் தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சின் கீழும் மற்றும் தற்போது உயர்கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் (MOHEH) கீழ் உள்ள வீதி அபிவிருத்தி அதிகார சபை **(**RDA**)**2017 ஆம் ஆண்டில் தேசிய பாரிய வீதித் திட்டத்தினை 2007 – 2017 (NRMP) வெளியிட்டுள்ளது. பொருளாதார வளர்ச்சிப் பிராந்தியங்களைத் தொடர்புபடுத்தி அதிவேக வீதி வலையமைப்பொன்றினை நிர்மாணிக்கும் தேவைப்பாடு தேசிய பாரியத் திட்டத்தினூாக (NRMP)சுட்டிக்காட்டப்பட்டுள்ளதுடன், இப்பிரேரிக்கப்பட்ட அதிவேக வீதி வலையமைப்பினைக் கட்டியெழுப்புதல் தொடர்பிலான இணைப்பு வீதிகளும் அதனூடாக அடையாளங் காணப்பட்டுள்ளன. நாட்டின் பிரதான சனத்தொகை மற்றும் அபிவிருத்தி நிலையங்களை ஒன்றிணைத்து நிர்மாணிக்கப்படும் (உயர்ந்த தரத்துடனும் மற்றும் வரையறுக்கப்பட்ட அணுகுமுறையுடனானதுமான) அதிவேக வீதி வலையமைப்பு, நாட்டின் பொருளாதார ரீதியில், பலவீனமான ஏனைய பிராந்தியங்களின் உற்பத்திகள், சுற்றுலா, மீன்பிடி மற்றும் விவசாயக் கைத்தொழிலினை வலுவூட்டுவதன் மூலம் அப்பிராந்தியங்களின் வளர்ச்சிக்கு வித்திடுவதாக அமையும். (சாத்திய வள அறிக்கை 1 தொகுதி. 20 பி.)

இலங்கை அரசின்(GoSL)அபிவிருத்திக் கொள்கையின் அதிவேக வீதி தொடர்பில் கிடைக்கும் முன்னுரிமைகளினூடாக இந்நாட்டின் பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசாரத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்தும். அதன் பிரகாரம் MOHEHஆனது,CEPஐ செயற்படுத்துவதற்குத் தீர்மானித்துள்ளது. மேலும், பொத்துகெர – தம்புள்ள அதிவேக வீதியினை நிர்மாணித்தலினை கருத்திட்டமொன்றாக மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்திற்குள் **(**CEP**)**கொண்டுவருவதற்குத் தீர்மானித்துள்ளது**.**

## 1.2 ஒட்டுமொத்தக் கருத்திட்டத்தின் விளக்கம்

CEP இன் பிரேரிக்கப்பட்ட திட்டம், DSDஇன் மத்தியில் அமையப் பெற்ற கம்பகா மாவட்டத்தில், மகர பிரதேச செயலகத்தின்(DSD), (248 சீ, புவக்வெட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவு), கடவத்தையில் ஆரம்பமாகின்றது. CEP, வெளிச்சுற்றுவட்ட அதிவேக வீதியினை (OCH)கடவத்தையில் இணைக்கின்றது. அதே நேரம்(OCH)முழுமையாகப் பூர்த்தி செய்யப்பட்டு CEP, இந்நாட்டில் செயற்படும் சகல அதிவேக வீதிகளை இணைக்கின்றது. கொழும்பிலிருந்து, அது 16 கி,மீ. ஆகும் என்பதுடன், கடவத்தையில் கொழும்பு – கண்டி அதிவேக வீதியுடன் (A01) தொடர்புபடுகின்றது.

பிரேரிக்கப்பட்ட அதிவேக வீதியின் 1 வது படிநிலை, கம்பகா மாவட்டமூடாக, மகர, கம்பகா, அத்தனகல, மினுவங்கொட மற்றும் மீரிகம (DSDs) பிரதேச செயலகங்களைக் கடந்து செல்லுகின்றது. அம்பேபுஸ்ஸ இணைப்பு வீதி, பொத்தல ஊடாக மீரிகமவிலிருந்து (மாற்றுத் திட்ட முறைமை) அம்பேபுஸ்ஸவினை நோக்கி ஆரம்பமாவதுடன், அது, அம்பேபுஸ்ஸ – குருனாகல் – திருகோணமலை வீதியுடன் (A06)முடிவடைகின்றது. அது பிரதானமாக மீரிகம DSDக்கு செல்லுகின்றதுடன், வரக்காப்பொல DSDஇன் மங்கெதரGNDஉடன் முடிவடைகின்றது. 2வது படிநிலை, மீரிகம DSD இன் ககுறுகும்புர GNDஇல் இருந்து ஆரம்பித்து, குருனாகல் DSDஇன் தெலியகொன்ன GNDஇல் கட்டுகஸ்தொட்ட – குருனாகல் – புத்தளம் அதிவேக வீதி (A 10)ஊடாக குருனாகல் நகரத்தினை இணைத்து குருனாகல் மாவட்டத்தினூடாகத் தொடர்புபடுத்தப்படுகின்றது.2 வது படிநிலை, கம்பகா மாவட்டத்தின் மீரிகம DSDஊடாகவும் மற்றும் குருனாகல் மாவட்டத்தின் அலவ்வ, நாரம்மல, வீரப்புகெதர, பொல்ககவெல மற்றும் குருனாகல் பிரதேச செயலகங்களினூடாகவும்(DSDs)பயணிக்கின்றது.

0கருத்திட்டத்தின் 3 வது படிநிலை, பொல்ககவெல DSD இன் கிரிபத்வெல்ல GND இல் இருந்து ஆரம்பித்து, தம்பேன (கலகெதர) DSD இன் கத்தாபிட்டிய GND உடன் முடிவடைகின்றது. மீண்டும், கருத்திட்டத்தின் 4 வது படிநிலை, குருனாகல் DSD இன் தெலியகொன்ன GND இல் ஆரம்பித்து, அது, மல்லவபிட்டிய, இப்பாகமுவ, மாவத்தகம, ரிதிகம, மெல்சிறிபுர, கலவெல DSDs ஐ ஊடறுத்துச் செல்லுகின்றதுடன், தம்புள்ள DSD(கடவை A06) இன் மிரிஸ்கொனிய சந்தியில் முடிவடைகின்றது. பல விபரங்கள், கீழேயுள்ள அட்டவணை 01 மற்றும் வரைபடம் 01இல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம்01 : மத்தியஅதிவேகவீதிக்கருத்திட்டத்தின் (CEP)படிநிலைகள்மற்றும்ஒவ்வொருபிரிவின்நீளம்**

| தொ.இல. | படிநிலை | இருந்து | வரை | நீளம் கி.மீ. |
|---|---|---|---|---|
| 1 | படிநிலை1 | கடவத்தை | மீரிகம | 37.9 |
| 2 | படிநிலை 2A | மீரிகம | அம்பேபுஸ்ஸ | 09.8 |
| 3 | படிநிலை 2 | மீரிகம | குருனாகல் | 39.2 |
| 4 | படிநிலை 3 | பொத்துகெர | கலகெதர | 32.9 |
| 5 | படிநிலை 4 | குருனாகல் | தம்புள்ள | 61.1 |
| | மொத்தம் | | | 180.9 |

மூலாதாரம் :RDAமற்றும் SMECசர்வதேச நிறுவனம், கருத்திட்ட விபரங்கள்

### 1.3கருத்திட்டத்தின் விபரம் : 3 வது படிநிலை

மேலே எடுத்துக் காட்டப்பட்டவாறு, 3 வது படிநிலை, பொத்துகெரவிலிருந்து, கண்டி மாவட்டத்தின் கலகெதர வரை முன்நோக்கிப் பயணிக்கின்றது.பொத்துகெர என்பது, குருனாகல் மற்றும் பொலககவெலவுக்கிடையே அமையப் பெற்ற ஒரு சிறிய நகரமாகும். வட மேல் மாகாணத்தின் மாகாண நகரமான குருனாகல் மாவட்டத்தில் அது அமைந்துள்ளதுடன் அது ஒரு மாவட்டமாகவும் உள்ளது. கண்டி நகரம், இலங்கையிலுள்ள வரலாற்று நகரங்களில் ஒன்றாக விளங்குகின்றதுடன் அது நாட்டின் இறுதி இராச்சியமுமாகும். UNESCOஉலக மரபுத் தளத்தில் கண்டி, சர்வதேச ரீதியில் உயர்வாகப் போற்றப்பட்டுள்ளது. தெற்காசியாவில் அமையப் பெற்ற பல புத்த விகாரைகளில் ஒன்று கண்டியில் காணப்படுவதே அதற்குக் காரணமாகும். கண்டி நகரம்


இலங்கையின் மத்திய மாகாணத்தில் அமைந்துள்ளது. அது, நகர அபிவிருத்தி அதிகார சபையினால் இனங்காணப்பட்டவாறு ஒரு முக்கியமான பிராந்திய நகரமாகவும் விளங்குகின்றது. எனவே. அதிவேக வீதி, ஏனைய பிராந்திய நகரங்களுடன் இணைப்பினை ஏற்படுத்தும் என்பதுடன் இப்பிராந்தியத்தின் விவசாயத் துறைக்குக் கணிசமான பங்களிப்பினை வழங்கும். மேலே குறிப்பிட்டவாறு, அதிவேக வீதி, மூன்று DSDsமற்றும்44 GNDsஐக் கடந்து செல்லுகின்றது.பின்னிணைப்பு **II** இல் மேலதிக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

கலகெதரவில் (32.9கி.மீ.) வந்து முடிவடையும் சாலையோரம் அவ்வளவாக சனத்தொகையினைக் கொண்டிருக்கவில்லை. விசேடமாக இந்த சிறுபிரதேசம், நகரமயப்படுத்தப்பட்டு வர்த்தகம்சார் செயற்பாட்டிற்கு என உள்ளது. இந் நிலப் பிரதேசத்தினைத் தவிர்த்து, ஏனைய பிரதேசங்களிலுள்ள பல நிலங்கள் வேளாண்மைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.மலைப்பிரதேச நிலங்கள் வயல் நிலங்களுக்கென, உயரத்தில் அமைந்துள்ளது. பிரேரிக்கப்பட்ட வீதி ஊடறுக்கும் சில பிரதேசங்கள், குன்றுகளையும் மற்றும் இயற்கை வாழ்விடங்களையும் கொண்டு விளங்குகின்றது.

கருத்திட்டத்தின் 3 வது படிநிலையில் கன்னொறுவ வரை மேலும் விரிவுபடுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பில் இறுதித் தீர்மானம் இன்னும் எடுக்கப்படவில்லை. எவ்வாறாயினும், அதனை, கண்டி வெளிச்சுற்று வட்ட வீதியுடன் இணைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், சாலையோரத்தினைக் கடக்கும் வீதி, அட்டவணை 02 இல் பட்டியற்படுத்தப்பட்ட பின்வரும் அம்சங்களைக் கொண்டுள்ளது. அங்கு, சூழல்சார் மற்றும் சமூகத் தாக்கங்களைத் தவிர்ப்பதற்னெ பிரேரிக்கப்பட்ட பல பாலங்கள் மற்றும் கடவைகள் காணப்படுகின்றன. இயற்கை நீர் நிலைகளின் காரணமாக பல வடிகால் மதகுகள் மிகவும் உயர்ந்ததாகக் காணப்படுகின்றது.

**படம் 01 : பிரேரிக்கப்பட்ட CEPமற்றும் அதன் படிநிலைகள்**




**மூலாதாரம் :** SMEC **சர்வதேச நிறுவனம்,** 3 **வது படிநிலை: உள்ளூர் திட்டம்**

**அட்டவணை இலக்கம்**02:**குறிப்பிட்ட கருத்திட்டத்தின் விபரங்கள்**

| **தொ.இல.** | **திட்ட விபரம்** | | **எண்ணிக்கை/விபரம்** |
|---|---|---|---|
| 1 | திட்டத்தின் நீளம் (கி.மீ.) | | 32.9 |
| 2 | வரிசையின் அகலம் (மீ) அண்ணளவாக (Width of ROW (m) Approximately) | | 120 |
| 3 | ஒழுங்கைகளின் எண்ணிக்கை | ஆரம்பம்(நிர்மாணத்தின் முதலாவது சுற்று) | 4 |
| | | முடிவு(எதிர்காலத்தில் சாத்தியமான அதிகூடிய ஒழுங்கைகள்) | 6 |
| 4 | மாற்றிடங்களின் எண்ணிக்கை | திட்டம் | 1 |
| | | சேவை | 3 |

| தொ.இல. | திட்ட விபரம் | எண்ணிக்கை/விபரம் |
|---|---|---|
| 5 | பாலம் மற்றும் மதகுகளின் எண்ணிக்கை | 59 |
| 6 | கீழ்க்கடவைகளின் எண்ணிக்கை | 17 |
| 7 | மேம்பாலங்களின் எண்ணிக்கை | 16 |
| 8 | பெட்டி வடிகால்கள், மதகுகள் | 54 |

**மூலாதாரம்**: SMEC **சர்வதேச நிறுவனம், சாத்தியவள அறிக்கை. 3வது படிநிலை**

உரிய நகரங்களை ஒன்றிணைத்து வீதி நிர்மாணிக்கப்படும் முறை பின்வரும் அட்டவணை இலக்கம் 03 இன் ஊடாக மேலும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம் 03: பிரேரிக்கப்பட்ட கடக்கும் சந்திகள் (மாறு சந்திகள்) – நிர்மாணிக்கப்படும் அமைவிடங்கள் மற்றும் ஏனைய தகவல்கள்**

| மாற்று வீதிகள் நிர்மாணிக்கப்படும்இடம் | சங்கிலித் தொடர் | மிகவும் அருகிலுள்ள நகரத்திலிருந்து தூரம் | மாறும் வகை |
|---|---|---|---|
| பொத்துகெர | 00+000 | 5.2 km | திட்டம் |
| பொல்ககவெல | 05+150 | 6.7 km | சேவை |
| ரம்புக்கன | 13+900 | 4.1 km | சேவை |
| கலகெதர | 31+800 | 0.4 km | சேவை |

மூலாதாரம் :SMECசர்வதேச நிறுவனம், சாத்தியவள அறிக்கை. 3வது படிநிலை.

மேலும், இரண்டு பிரதேசத்தின் நகரங்களை ஒன்றிணைத்து 03 உள்ளக பரிமாற்று வீதிகள், பிரேரிக்கப்பட்ட வீதியில் நிர்மாணிக்கப்படும். (பொல்ககவெல, இரம்புக்கன மற்றும் கலகெதர). நிர்மாணிக்கப்படும் உள்ளக மாற்று வீதிகள் மற்றும் அவை நிர்மாணிக்கப்படும் இடங்கள் தொடர்பான மேலதிக தகவல்களை வரைபட இலக்கம்01 இல் காட்டப்பட்டுள்ளது. பிரத்தியேக நிலங்களினூடாக வீதி பயணிக்கும் பல இடங்கள் குன்றுகளாவதுடன், கீழ் நிலங்களினூடாகவே பயணிக்கின்றது. ஆதலால், கருத்திட்டத்தினால் பாதிப்புக்கு உள்ளாகும் சில வயல்கள் காணப்படுகின்றன. மேலும், இறப்பர் செய்கைகள் மற்றும் வீட்டுத் தோட்டங்களும் இக்கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும்.

### 1.4மீள்குடியேற்றத் திட்டத்தின் நோக்கங்கள்(RAP)

பிரேரிக்கப்பட்ட CEP, மூன்றாவது படிநிலையினூடாக ஏற்படும்மோசமான பாதிப்புக்களைத் தகர்த்தெறிவதற்கு உதவியினை வழங்கும் செயற்பாட்டினைத் தயாரித்தல் **RAP** இன் பிரதான நோக்கமாவதுடன், அது அடிப்படையில் நிலச் சுவீகரிப்புச் செயற்பாட்டுடன் தொடர்புடையதாகும். அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உரித்துக்களைச் சரியானவாறும் நேர காலத்திற்கு வழங்குவதனூடாகவும் மற்றும் வாழ்வாதாரத்தினை மீட்டெடுக்கும் வாய்ப்புக்களை அடையாளங் காண்பதற்கு உதவுவதனூடாகவும் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு (PAPs)தங்களின் மூலம் மீளவும் கட்டியெழுப்பும் இயலுமையினை மேம்படுத்துவதற்கு மீள்குடியேற்றத் திட்டத்தினூடாக(RAP)எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

அடிப்படைச் சாத்திய வள ஆய்வுத் தகவல்கள் மற்றும் அளவைத் திணைக்களத்தின் மூலம் அடையாளங் காணப்பட்ட சாலையோர எல்லைகளை அடிப்படையாகக் கொண்டு சீரமைக்கப்பட்ட வரைபடத்தினைப் பயன்படுத்தி மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தின் முதலாவது வரைவு 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. நிலச் சுவீகரிப்பு நடைமுறை, முன் வரைபடங்கள், அடிப்படைத் திட்டங்கள், கிராமங்கள் தொடர்பில் இறுதித் திட்டங்களைத் தயாரித்தல் ஆரம்பித்ததன் பின்னர் நிலத் தொகுதிகள் மற்றும் அது தொடர்பில் மிகவும் சரியான தகவல்களுடன் இந்த மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன், மிகவும் சரியான தகவல்களை பிரதிபலிக்கக்கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளது.

சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான சகல அடிப்படைக் கோட்பாடுகளையும் கவனத்திற் கொண்டு, RAP**s**வாழ்க்கையினை புனர்வாழ்வளித்தல்/மேம்படுத்தல் மற்றும் மோசமான விளைவுகளைக் கட்டுப்படுத்துவதற்கு RDAஇன் உத்தியோகபூர்வ கடப்பாட்டினைக் கொண்டு மீள்குடியேற்றத்திற்கான ஒரு சட்டவரைவாக அல்லது ஒரு வழிகாட்டியாக இந்த இறுதி RAPதயாரிக்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் எதிர்மறைத் தாக்கத்தினைத் தணிப்பதற்கென இங்கு செய்யப்பட்ட ஏற்பாடுகள், இனங்காணப்பட்ட விளைவுக்கு மாத்திரம் வரையறை செய்யப்படவில்லை. ஒரு சட்ட வரைவு அல்லது வழிகாட்டியாக, இது, இந்தக் காணிச் சுவீகரிப்பினால் எழும் ஏதாவது எதிர்மறை விளைவின் வெளிப்பாடு அல்லது கருத்திட்ட வடிவங்களின் மாற்றங்களின் காரணமாக யாதேனும் புதிய காணிச் சுவீகரிப்பிலிருந்து எழுகின்ற எதிர்மறை விளைவுகளின் ஏதேனும் எதிர்கால சம்பவத்துடன் தொடர்புபடுவதற்கு எதிர்கால நடவடிக்கைகளுக்கான வழிகாட்டிலினை இது வழங்குகின்றது. மேலும் சம்பவங்கள் இங்கே கலந்துரையாடப்பட்டன.

உண்மையான எல்லைகள் தொடர்பில் (மத்தி, இடது மற்றும் வலது பக்க எல்லைகள்) பிரித்துக் காட்டப்படுகின்ற புள்ளிகளை அமைத்ததன் பின்னர், PAPsஇன் உண்மையான தொகை மற்றும் காணி, சொத்துக்களின் அளவு அடையாளங் காணப்படும். PAPs,உயர் திட்டங்கள், ஆரம்பத் திட்டங்கள் மற்றும் இறுதியான கிராமத் திட்டங்கள் தொடர்பிலான தகவல் நாளதுவரைப்படுத்தப்படும் நேரத்தில் அவைEAவினால் தயாரிக்கப்படும். 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட RAPஇன் முதலாவது வரைவில் அடையாளங் காணப்பட்டு பட்டியற்படுத்தப்பட்ட ROWவில் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத காணி உரிமையாளர்களை வரிசைப்படுத்துவதற்கு அது உதவியுள்ளது. எனவே, 2017, நவம்பர் 30 ஆந் திகதி முடிவாக்கப்பட்ட கருத்திட்ட தகவலினை அடிப்படையாகக் கொண்டு இந்த இறுதி RAPதயாரிக்கப்படும்.

### 1.5**RAPதயாரிப்பு முறை**

இரண்டாந்தர மற்றும் ஆரம்பத் தரவினைப் பயன்படுத்தி பல்நோக்கு அணுகுமுறைத் தரவு சேகரிப்பினூடாக இந்த RAP, தயாரிக்கப்பட்டுள்ளது. அந்தந்தப் பிரிவுகளிலுள்ள நகர சபைகள், பிரதேச பொறியியலாளர் அலுவலகங்கள், பிரதேச செயலக அலுவலகங்கள், பிரதேச சபைகள், அரச வைத்தியசாலைகள் மற்றும் சனத்தொகை மற்றும் புள்ளிவிபர அரச திணைக்களத்திலிருந்து சேகரிக்கப்பட்ட இரண்டாந்தத் தரத் தரவினை அது உள்ளடக்குகின்றது. பண்பான மற்றும் தரமான தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி பல்வேறான பங்குதாரர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட ஆரம்பத தரவினையும் அது உள்ளடக்குகின்றது. EAவினால் பணிக்காக வழங்கப்பட்ட TORவினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவு இரண்டும் சேகரிக்கப்பட்டுள்ளன.

தரவுச் சேகரிப்பின் திட்டமிடற் பணிக்கு சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களததின் சூழல்சார் மற்றும் சமூகப் பாதுகாப்புக் கையேடு, RDAபிரதானமாக அடிப்படையாகக் கொள்ளப்பட்டது. வினாக் கொத்துக்கள் (சமூகப் பொருளாதாரம், சொத்துக்களினை ஒப்புரவு செய்யும் ஆய்வு வினாக்கொத்து, பாதிக்கப்பட்ட பொதுச் சொத்துக்கள், அரச அலுவலகங்கள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பிலான வினாக் கொத்து) ESDDகையேடு மற்றும் அவர்களின் அங்கீகாரத்துடன் மேம்படுத்தப்பட்டுள்ளன. ஆய்வு உதவியாளர்கள், அவர்களின் கல்விசார் பின்னணி மற்றும் நேர்முகப் பரீட்சையினூடாக மிகவும் கவனத்துடன் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். குழுத் தலைவர்கள், ஆய்வு உதவியாளர்களிடமிருந்து அதாவது அவர்களுள் அதீததிறமைகளைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து (சிறந்த தலைமைத்துவப் பண்புகள் மற்றும் ஆற்றலினைக் கட்டியெழுப்புதல்) தெரிவு செய்யப்பட்டுள்ளனர். களத்துறை ஒருங்கிணைப்பாளர், சமூகவியலில் முதுகலைப்பட்டம் பெற்ற ஒருவராவர். அவர்கள் அனைவரும், ஆரம்பத்தில் ஒரு நாள் நிறுவனம்சார் பயிற்சிக்கும் மற்றும் இரண்டு நாள் வெளிக்களப் பயிற்சிக்குமென உட்படுத்தப்பட்டுள்ளனர். பயிற்சியின் பின்னர், தொடர்ச்சியான கண்காணிப்பு முன்னெடுப்புடன் அவர்கள் தரவுச் சேகரிப்புச் செயற்பாடுகளில்

ஈடுபடுத்தப்பட்டனர். மேலும் அவர்களுக்கு, குறிப்பிட்ட தொழில்நுட்ப விடயங்கள் தொடர்பில் இடைக்கால பயிற்சியொன்றும் வழங்கப்பட்டுள்ளது.

முதலாவது வரைவுக்கான தரவுச் சேகரிப்பு, 2014 ஏப்ரல் 21 – மே 16 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் நடாத்தப்பட்டது. தரவுச் சேகரிப்புக்கு முன்னர் குறிப்பிட்ட உத்தியோகத்தர்களான மாவட்டச் செயலாளர், விவசாய மாவட்ட ஆணையாளர், DS, விவசாய பிரதேச உத்தியோகத்தர், GN.மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களுடன் ஆலோசிக்கப்பட்டுள்ளதுடன் கிராமிய அல்லது GNDமட்டங்களில் அவர்களின் நேரடி தொடர்பு கோரப்பட்டன. சில அறிவுசார்ந்த கிராமவாசிகள், வெளிக்களக் குழுவுக்கு உதவும் பொருட்டு ஆர்வத்துடன் தாமாகவே முன்வந்துள்ளனர். அனைத்துக் குழு அங்கத்தவர்களுக்கும் தேவையான தொழில்நுட்ப தகவல்களான, சாலையோரத்துடனான பிரதேச வரைபடங்கள், வீதியின் மத்திய கோட்டுடனான விபரமான திட்டங்கள், பரிமாற்ற வரைவுகள் போன்றன வழங்கப்பட்டன. மேலும், சகல உலகளாவிய நிலைப்படுத்தல் திட்டம் (GPS), தனியார் பயன்பாடு, பொதுப்பயன்பாடு அல்லது அரச பயன்பாடு என வருகின்ற ஒவ்வொரு நிலப் பரப்புக்கள் தொடர்பிலுமான தகவல்ககளைச் சேகரித்துள்ளன. 3-5 மீற்றர் சரியான மட்டத்தில் வைத்து GPSஉபகரணம் உபயோகிக்கப்பட்டது.

பல்வேறு வகையான பங்குதாரர்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குவார் என்பதால் அவர்களின் ஆலோசனை மிகவும் முக்கியமாகவுள்ளது. மேலும் அவர்களின் திறமையிலுள்ள பரிந்துரைகள், கருத்திட்டப் பணிகளை வெற்றிகரமாகக் கொண்டு செல்லுவதற்கு பேருதவியாக அமையும். அது, குறிப்பிட்ட முறைமையினைச் சுவீகரித்து பல்வேறான பங்குதாரர்கள் தொடர்பில் (ஆரம்ப மற்றும் இரண்டாந்தர) கவனஞ் செலுத்துகின்றது. முறைமையின் கீழ் வருகின்ற தொழில்நுட்பங்கள், அறிவியலோடும் மற்றும் முறைமையாகவுமுள்ளது.PAPsஇடமிருந்து சேகரிக்கப்பட்ட சகல தகவல்களும் கருத்திட்டப் பணிகள் பூர்த்தியாகும் வரை பதிவு செய்யப்பட்டு பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. இந்த ஒட்டுமொத்த முயற்சியிலும் பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பங்களைப் பின்வருமாறு பட்டியற்படுத்த முடியும்.

### 1.5.1 அதிவேக வீதி நடைபாதை மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பிலான அவதானிப்பு.

புலனாய்வுக் குழு, ஒரு சமூகவியலாளர் (ஆலோசகர்), ஒரு வெளிக்கள ஒருங்கிணைப்பாளர், இரண்டு குழுத் தலைவர்கள் முப்பது (30) ஆராய்ச்சி உதவியாளர்களைக் கொண்டுள்ளது. குழுவானது, கருத்திட்டத்துடன் தொடர்பான பல்வேறான பிரச்சினைகள் தொடர்பில் ஆரம்ப புலனாய்வினை மேற்கொண்டுள்ளது. தேசிய வீதி வலையமைப்புக்கான இணைப்புக்களை (பரிமாற்றங்கள்) இனங்காணுதல், நிலப்பகுதி அம்சங்கள், PAPsஇன் குடியேற்றங்களின் தன்மை மற்றும் வாழ்வாதார முறைகள், அவர்களின் சொத்துக்கள், சாத்தியமான ஏனைய உட்கட்டமைப்பு மேம்பாடுகள், மீள்குடியேற்றப் பிரச்சினைகள், பாதிக்கப்படாத நபர்கள் தொடர்பில் நேரடி மற்றும் மறைமுகத் தாக்கம் போன்ற விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 குடும்பத் தலைவர்கள்/காணி உரிமையாளர்களின் சமூக – பொருளாதார மற்றும் சொத்துக்களை ஒப்புரவு செய்யும் ஆய்வு.

முதலாவது வரைவினைத் தயாரித்தபோது, வீதி செல்லும் நடைபாதையில் வசித்து. கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரிப்பதற்கு உயர் தொழில்நுட்பம் உறுதிப்படுத்திய வினாக்கொத்து பயன்படுத்தப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு III Aமற்றும் B ஐ பார்க்கவும்). மத்திய கோட்டினை அமைத்தல் ஆய்வு இடம்பெற்று வேளையில் முன்னெடுக்கப்பட்டது. வீதி செல்லும் நடைபாதையில் பல்வேறான இடங்களை இனங்காண்பதற்கு தொழில்நுட்பத் தகவல்கள் பயன்படுத்தப்பட்டன. (1: 10000மற்றும்1: 2000

செயற்கைக் கோள் புகைப் படங்கள்). தரவுச் சேகரிப்பு முழுவதும் சகல கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள ஒருங்கிணைப்பாளர்கள், ஆலோசகரின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் செயற்பட்டுள்ளதுடன், தரவினைச் சேகரிக்கும் குழு மற்றும் ஆலோசகர் வீதி செல்லும் நடை பாதை முழுவதையும் நடந்து சென்று பார்த்துள்ளனர்.

வீதி நடைபாதை மற்றும் ROW தொடர்பில் போதிய தகவல் இன்மையின் காரணத்தினால் பல பதிலளித்தவர்கள், மிகவும் சிக்கலான புரிந்துணர்வுகளை வைத்திருந்தனர். பதிலளித்தவர்கள் அனைவருக்கும் கருத்திட்ட விளக்கம் வழங்கப்பட்டது(RDAயினால் மேம்படுத்தப்பட்ட சிற்றேடு மற்றும் RAPஇன் விபரங்களுடனான ஆலோசகரின் வேண்டுகோள் கடிதம்). மேலதிக விபரங்களுக்கு பின்னிணைப்பு IV மற்றும் V ஐ பார்க்கவும். மேலும், செயற்கைக் கோள் படங்கள், பதிலளித்தவர்களினால் கோரப்பட்டபோது காட்டப்பட்டன.

தற்போதைய வரைவுக்காகப் பயன்படுத்தப்பட்ட முறை, முதலாவது வரைவின் தயாரிப்புக்காகத் தரவினைச் சேகரிப்பதற்கு பயன்படுத்திய முறையை பிரதானமாக தழுவியதாகக் காணப்பட்டது. ஆரம்ப ஆய்வில் அடையாளங் காணப்பட்ட PAPsபட்டியல், உயர் திட்டங்கள் மற்றும் பாதிகப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத PAPs(கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத நபர்கள்)எனஅடையாளங் காணப்பட்டு வகைப்படுத்தப்பட்டு காணப்பட்ட PAPsஉடன் சரிபார்க்கப்பட்டது. 120 மீற்றர் நடைபாதையில் முனனெடுக்கப்பட்ட ஆய்வினூடாக 2014 ஆம் ஆண்டில்அடையாளங் காணப்பட்ட கருத்திட்டத்தினால்பாதிக்கப்படாத தொகுதியினர்,PAPs(கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின்)தரவுத் தளத்திலிருந்து நீக்கப்பட்டனர். மீண்டும், மீதமான PAPs, கருத்திட்ட அலுவலகத்தில் காணப்பட்ட அவர்களின் பிரத்தியேகக் கோவையுடன் மேலும் சரிபார்க்கப்பட்டனர். இப்பிரத்தியேகக் கோவைகளுள், அவர்களினைத் தொடர்புகொள்ளக்கூடிய விபரங்கள் மற்றும் ஏனைய தகவல்கள் காணப்பட்டன. எனவே ஆய்வுக்குழு, அநேக நேரங்களில் அவர்களைத் தொலைபேசியினூடாக தொடர்பு கொள்ளுவதற்கு அவர்களின் தகவல்களைப் பயன்படுத்தினர். அவர்களைத் தொடர்பு கொள்ளுவதற்கு கடினமாக இருந்தவேளையில், தந்திரோபாயமான முறையில் அயலவர்கள் மூலம் இலக்கிடப்பட்ட PAPsக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. இறுதியில் உயர் திட்டத்தில் பட்டியலிடப்பட்டிருந்த சகல PAPs ஐ அறிந்து கொள்ளுவதற்கு ஆய்வுக் குழுவுக்கு இயலுமாகவிருந்தது. மேலும், ஆராய்ச்சிக் குழு உறுப்பினர்கள்,குழுத் தலைவர் மற்றும் ஆலோசகர்கள், PAPsஇன் பிரத்தியேகக் கோவைகளில் ஒன்றுதிரட்டப்பட்ட தகவலினை மேலும் சரிபார்ப்பதற்கு, சில மாதிரி GNDs க்கு விஜயம் செய்தனர். இப்பிரத்தியேகக் கோவைகள், மீள்குடியேற்ற உதவியாளர்களினால் உருவாக்கப்பட்டுள்ளன. PAPsஇன் முழுப்பட்டியலும் ஒரு முறை அடையாளங்காணப்பட்டதோடு, காணிச் சுவீகரிப்பு நடைமுறைகள் மற்றும் பிரச்சினையினைத் தீர்த்தல் தொடர்பில் முழுமையான அனுபவத்தினைக் கொண்ட கருத்திட்ட ஆலோசகர்களுடன், இனங்காணப்பட்ட சில விடயங்கள் தொடர்பில் ஆராய்ச்சிக் குழுவினால் கலந்துரையாடப்பட்டன. பிரதேச நிர்வாகதத்தில் நீண்டகாலம் சேவையாற்றிய முன்னைநாள் இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்களே இந்த ஆலோசகர்களாக உள்ளனர்.

அடையாளங் காணப்பட்ட பிரச்சினைக்கிடையே, ROWஎல்லைகள் அல்லது உள்ளூர் வீதிகள் மற்றும் ஏனைய எல்லைகளென ஒரு PAP க்கு பல காணித்துண்டுகள் காணப்பட்டமை ஒரு முக்கிய பிரச்சினையாகவுள்ளது. மேலும், காணியின் வகை மற்றும் பெறுமதிகளினைக் கொண்டு அளவையாளர்களின் அளவைகளின் பிரகாரம் சில காணிகள் துண்டாக்கப்பட்டுள்ளன. எனவே, ஒரு PAP,முன் திட்டங்களில் குறிப்பிட்டவாறு பல காணித் துண்டுகளை வைத்திருக்க முடியும். ஆய்வுக் குழுவின் தரவுச் சரிபார்ப்புக்கு எதிராக இப் பிரச்சினை ஒரு குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தது.

எனினும், காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்புக் கருத்திட்டம், உயர் நிலையினை எட்டி மிகவும் முன்னேற்றகரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்குள்ள பல காணித்துண்டுகளின் உரிமையாளர்களினை இன்னும் சரிவர அடையாளங் காண முடியவில்லை. மேலும் அதனை

அவதானித்தபோது, சில காணித்துண்டுகள் தனியார் உரிமையாளருக்கு சொந்தமாகவுள்ளது என்பதை உய்த்தறிய முடியும். அங்கு45காணித் துண்டுகளிருந்தும் ஒரு உரிமையாளரும் இன்னமும் உரிமை கோராததால், தனியார் காணியின் கீழ் சரியான தகவலினை நிலைநாட்டுவதற்கு அங்குள்ள 24காணித் துண்டுகள் இன்னமும் முயற்சிக்கின்றன. அரச மற்றும் பொதுக் காணியின் கீழ், 463 காணித் துண்டுகள் உள்ளன என்பதுடன் 35 காணித் துண்டுகள் முறையே அடையாளங் காணப்பட்டுள்ளன. மேலும், ROW வரைபடத் திட்டப் பிரச்சினைகளின் காரணமாக சுவீகரிப்புத் தொடர்பில் தீர்மானிக்கப்படுவதற்குள்ள34 காணித்துண்டுகள் அங்கே காணப்படுகின்றன. அங்கு மொத்தமாக ஆய்வின் கீழ் 3,015 காணித் துண்டுககள் அடையாளங் காணப்பட்டுள்ளன.

### 1.5.3 பாதிக்கப்பட்ட பொதுவான சொத்துக்கள், அரச அலுவலகங்கள் மற்றும் பயன்பாடுகள் தொடர்பான ஆய்வு :

அதிவேக வீதி, குறிப்பிட்ட அரச காணிகள் மற்றும் கட்டமைப்புக்களை ஊடறுத்துச் செல்லுகின்றது. அங்கே சில சமுதாயத்திற்கு உரித்தான காணி மற்றும் கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன, விசேடமாக, இச்சொத்துக்கள் சமுதாய அமைப்புக்களினால் மேம்படுத்தப்படுகின்றன. ஒப்பீட்டளவில், அரச நிறுவனங்களின் எண்ணிக்கை. காணிகள் மற்றும் சொத்துக்களை, தனியார் சொத்துக்களுடன் ஒப்பிடும்போது குறைவாகவே காணப்படுகின்றன. இந்நோக்கத்திற்கென ஒரு தனியான வினாக்கொத்து தயாரிக்கப்பட்டுள்ளது. மேலதிக விபரங்களுக்கு பின்னிணைப்பு VI Aமற்றும்B ஐ நோக்கவும். மேலே விபரிக்கப்பட்ட முன் திட்டங்களினூடாக (Advance Traces) இக்காணித் துண்டுகள் மேலும் சரிபார்க்கப்பட்டுள்ளன.

### 1.5.4 மையக்குழு கலந்துரையாடல் :

ஒரு மையக் குழு கலந்துரையாடலானது (FGD), வரையறுக்கப்பட்ட பகுதியில், கலந்துரையாடலில் பங்குபற்றும் குழுப் பங்களிப்பாளர்களின் கருத்துக்கள். உளப்பாங்குகள், உணர்வுகள் மற்றும் கருத்து ஆய்வு போன்ற நோக்குகளைக் கொண்டு கவனமாகத் திட்டமிடப்பட்டுள்ளதொன்றாகும்(மேலதிக விபரங்களுக்கு பின்னிணைப்பு VIIஐ நோக்கவும்).மையக் குழுக்கள் ஒரு சீரான சமுதாயத்திலிருந்து அதாவது பெண்களைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள், ட்றக் சாரதிகள், பேரூந்துச் சாரதிகள், வறுமையான சேரிப்புறத்தில் வசிப்போர், ஊதியம் பெறும் ஊழியர்கள், வீதியோர விற்பனையாளர்கள், நானாவித வியாபாரிகள், இளைஞர்கள், மாணவர்கள், விவசாயிகள், பெண்கள் (இல்லத்தரசிகள்), அரசியல்வாதிகள் (பாராளுமன்ற, மாகாண மற்றும் உள்ளூராட்சி அதிகார சபைகள்), கிராம உத்தியோகத்தர்கள்மற்றும் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் போன்றோர்களிலிருந்து தெரிவு செய்ய முடியும். FGD (மையக் குழுக் கலந்துரையாடல்) ஐ நடாத்துவதற்கு முன்னர், ஆய்வுக் குழு, பங்குபற்றுபவர்களின் தனித்துவமான பரிசோதனை அட்டவணையினைவடிவமைத்தது. FGD இல் பங்குகொள்பவர்களின் எண்ணிக்கை, தொடர்புபட்ட குழுவிலிருந்து 6-12 அங்கத்தவர்களுக்கிடையே இருந்தது. மேலும் பல தடைவைகளில் ஆலோசகரினால் வீதி தொடர்பிலான கோட்டினைத் திட்டமிடுதல் மற்றும் உண்மையான காட்சிகளைப் பயன்படுத்துவதன் மூலம் கட்புல நுட்பங்களைப் பயன்படுத்துதல் மீது கவனஞ் செலுத்தப்பட்டது. இதன் பிரகாரம்ஒட்டுமொத்தத்தில் 44 FGDs (மையக்குழுக் கூட்டங்கள்) நடாத்தப்பட்டன.

FGD ஐ நடாத்தும் ஆலோசகர், கருத்திட்டத்தின் நேர்மறை மற்றும் எதிர்மறையான தாக்கங்களை இனங்காண்பதற்கு அதிக கவனஞ் செலுத்தியுள்ளார். இவ்வனைத்து உண்மைக் காரணிகளும் குறிப்பெடுக்கப்பட்டதன் பின்னர் இவ்வறிக்கைகள் EAஇன் கருத்திட்டப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்படும். சகல கலந்துரையாடல்களும் சொந்த மொழியிலேயே நடாத்தப்பட்டன (சிங்களம்). பங்குபற்றியவர்களை அடிப்படையாகக் கொண்டு (உதாரணமாக வர்த்தகர்,

நிறுவனத் தலைவர்கள், பாரியளவிலான வணிக உரிமையாளர்கள் போன்றோர்) சில நேரங்களில் ஆங்கில மொழியும் பயன்படுத்தப்பட்டது.

### 1.5.5முக்கிய தகவலாளரினை நேர்காணல்கள் மற்றும் பங்குதாரரினைப் பகுப்பாய்வு செய்தல்

முக்கிய தகவலாளர்கள் முக்கியமாக உள்ளனர். அதிலும் பெரும்பாலானவர்கள் மக்களாக உள்ளதுடன் அவர்கள் பல்வேறான அரச மற்றும் பிரத்தியேக நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.ஏனையவர்களாக, குடிசார் சமுதாயத் தலைவர்கள்/பிரதிநிதிகள் அவை, பௌத்த தேரர்கள், கிறிஸ்தவ தந்தை, CBOதலைவர்கள்/அங்கத்தவர்கள் விளங்குகின்றனர். தொடர்புட்ட நபர், ஒரு பிரதேசம் அல்லது நிர்வாகப் பிரிவுக்கான பொறுப்பினை வழமையாக வகிக்கின்றார். உதாரணமாக, பிரதேச செயலாளர், இவ்விபரிப்புக்குள் இணைக்கப்பட்டிருக்கின்றார், நபராகவுள்ள அவன்/அவள் பிரதேச செயலகப் பிரிவுகளின் சகல நிர்வாக விடயங்களுக்கும் பொறுப்பாகவுள்ளார் என்பதுடன்,RDAசார்பில் காணிச் சுவீகரிப்பினையும் கையாளுகின்றார்.DSஉடனான ஆழமான கலந்துரையாடல்கள், சமூகப் பாதிப்புக்கள் தொடர்பான பல்வேறான பிரச்சினைகளை ஆராய்வதற்கு உதவியுள்ளது. FGDநிகழ்வாக, ஒவ்வொரு முக்கிய தகவலுக்கும் unique checklist பயன்படுத்தப்படுகிறது. (மேலதிக தகவல்களுக்கு பின்னிணைப்பு VIIIநோக்கவும்).ஒட்டுமொத்த முக்கிய தகவலாளர்களாக, DS, நகர சபைMayorமற்றும் தலைவர், பிரதேச சபையின் தலைவர், பொலிஸ் நிலையங்கள் மற்றும் போக்குவரத்துப் பிரிவுகளின் தலைவர்கள், பாடசாலை அதிபர்கள். கைத்தொழில் அமைப்புக்களின் உரிமையாளர்கள், காணிக் கந்தோர் உத்தியோகத்தர்கள்,வைத்தியசாலையின் MOH/அத்தியட்சகர்கள், சமயத் தலைவர்கள்,CBOs/NGOsதலைவர்கள் மற்றும் விவசாய உத்தியோகத்தர் உள்ளனர், கலந்துரையாடல்களின் சாரம்சம், EAஇன் கருத்திட்டப் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. பிரதான தகவல்களை வழங்குவோர் 20 பேர்களுடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது.

### 1.5.6சட்டம் மற்றும் கொள்கை வரைவினை மீளாய்வு செய்தல்.

### 1.6 சமூகப் பாதுகாப்புத் தேவைப்பாடுகளின் பரிமாணங்கள்

மேலே எடுத்துக் காட்டப்பட்டவாறு, திட்டமிடப்பட்ட கருத்திட்ட அமுற்படுத்தலின் காரணமாக மக்கள் மற்றும் சமுதாயத்திற்கு ஏற்படக்கூடிய மிகவும் மோசமான பாதிப்புக்களைத் தடுத்தல் அல்லது குறைத்தல் RAPஇன் (மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தின்) பிரதான நோக்கமாகும். அவ்வாறு இல்லையாயின், நாட்டின் சட்டம் மற்றும் கொள்கைத் திட்டத்துடன் சகல அடையாளங் காணப்பட்ட மற்றும் எதிர்பாராத சம்பவங்களை கருத்திட்டத்தின் EA கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். எனினும், இச் செயற்பாடுகளைத் திட்டமிடுவது, EAக்கு சுலபமான பணியல்ல. அது மேலும் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் முக்கியத்துவத்தின் மீது தங்கியுள்ளது. பொதுவாக இவ்வனைத்துச் செயற்பாடுகளாக, சமூகப் பொருளாதாரம் மற்றும் கலாசாரம் காணப்படுகின்றது. அபிவிருத்தியின் சமூகப் பரிமாணங்களில் RAPமுக்கிமாகவுள்ளது. எனவே RAPஇல் கருதப்பட்டுள்ள அவ்வாறான பரிமாணங்களை பின்வருமாறு பட்டியற்படுத்த முடியும். அவை,

1. நில வகை
2. தனியார், அரச மற்றும் பொதுவான காணித் துண்டுகளின் GPSதகவல்
3. சொத்து உரிமையாளரின் அல்லது பயன்பாட்டாளரின் பொதுவான தகவல் (பெயர், முகவரி, கிராமம், GND, DSD, மாவட்டம், தேசிய அடையாள அட்டை இலக்கம், இனம் போன்றன)

4. குடும்பத் தகவல்
5. வியாபாரத் தகவல் (குடியிருப்பாளர், ஏதேனும் வியாபாரச் செயற்பாட்டில் தொடர்புபட்டிருப்பின்)
6. காணி உரித்து விபரங்கள்
7. பயிர்கள் மற்றும் வேளாண்மை தொடர்பான தகவல்கள்
8. பாதிக்கப்பட்ட சொத்துக்களின் வகைகள் மற்றும் விபரங்கள்
9. காணி உரித்துடன் தொடர்புபட்ட சட்டம்சார் அல்லது தனிப்பட்ட பிரச்சினைகள்
10. காணி உரிமையாளர் மற்றும் குடும்பத்தின் தற்போதைய வருமானம் மற்றும் செலவின வகைகள்
11. வங்கிக் கணக்கு மற்றும் எடுக்கப்பட்ட கடன் வசதிகள்
12. பாதிக்கப்பட்ட வீடு மற்றும் கட்டிடத்திற்கான மீள்குடியேற்ற மாற்றீடுகள்
13. சமூக வலையமைப்புத் தகவல்
14. சூழல் தொடர்பில் PAP'sஇன் அபிப்பிராயம் மற்றும் கருத்திட்டத்தின் சமூத் தாக்கம் (நேரடி மற்றும் மறைமுகம்)
15. காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பில் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கொள்கைகளை PAP'sபுரிந்து கொள்ளுதல் ;மற்றும்
16. பாதிக்கப்பட்டகாணிதொடர்பிலானமாதிரிவரைபடம்

## அத்தியாயம்II:சட்டம் மற்றும் கொள்கை வடிவமைப்பு

இந்த அத்தியாயமானது, இக்கருத்திட்டத்துடன் தொடர்பான காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றத்திற்கான சட்டம் மற்றும் ஒழுங்கு முறைக் கட்டமைப்பினைக் கலந்துரையாடுகின்றது. இவை பின்தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டிய முன்னெடுப்புக்கள் மற்றும் நடைமுறைகளைத் திட்டமிடுகின்றது.

### 2.1.சட்ட வரைவு

#### 2.1.1காணி (நிலச்) சுவீகரிப்புச் சட்டம்

பரந்தளவில் நோக்கின் இலங்கையில் இரண்டு வகையான நிலங்கள் காணப்படுகின்றன ; அவை, தனியார் நிலம் மற்றும் அரச நிலமாகும். நில உரித்து தொடர்பில் பாரம்பரியத் திட்டத்தின் பிரகாரம், பிரத்தியேக நிலங்களின் உரித்து தீர்மானிக்கப்படுவதுடன், காணி உரித்தினை ஒப்படைத்தல் தொடர்பில் பிரச்சினைகள் மற்றும் மோதல்கள் எற்படும் வேளையில் தற்போதுள்ள சட்ட முறைகள் அப்பாரம்பரிய சட்ட முறையின் கீழ் விதிக்கப்படும். பிறர் உடைமையாக்குதல், அபிவிருத்தி உரிமைகளை மாற்றுதல் தொடர்பிலான முக்கிய சட்டங்கள் (பிரதானமாக, அரச நிலக் கட்டளைச் சட்டம், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம், அரச நிலம் விற்பனை தொடர்பிலான சட்டம், மானியங்கள் சட்டம், விவசாயம் அபிவிருத்திச் சட்டம் மற்றும் காணிச் சுவீகரிப்புச் சட்டம்) ஊடாக அரச நிலம் நிர்வகிக்கப்படும்.தனியார் மற்றும் அரச இவ்விரு நிலம் தொடர்பான உரித்தில் பல வகைகள் உள்ளன. இது இக்கருத்திட்டத்துடன் தொடர்பான இழப்பீட்டுக்கான அடிப்படைத் தகைமையினை வழங்குகின்றது. (மேலதிக விபரங்களுக்கு அட்டவணை 52 :உரித்து பற்றிய கட்டமைப்பினை பார்க்கவும்.)

#### 2.1.21950 ஆம் ஆண்டின் காணிச் சுவீகரிப்புச் சட்டம் (LAA),தொடர்ந்து அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்கள் மற்றும் தொகுக்கப்பட்ட விதிமுறைகள்.

1950 ஆம் ஆண்டின் காணிச் சுவீகரிப்புச் சட்டம் (LAA), பல முக்கிய சட்ட ஏற்பாட்டினைக் கொண்டுள்ளது. இச்சட்ட ஏற்பாடானது, காணிகள் சுவீகரிப்புக்கான ஏற்பாடுகளை முன்னெடுக்கின்றது. இது, காணிகள், கட்டமைப்புக்கள் மற்றும் பயிர்களுக்கான சந்தை விகிதங்களிலான இழப்பீடுக் கொடுப்பனவினை வழங்குகின்றது. 1950 ஆம் ஆண்டின் காணிச் சுவீகரிப்புக் சட்டம்(LAA),பிரதானமாக நிலம் தொடர்பில் ஆங்கில வாசக சட்டங்களை மாதிரியாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதுடன் 1919ஆம் ஆண்டின்காணிச் சுவீகரிப்புக் கட்டளைச் சட்டம், 1946 ஆம் ஆண்டின் காணிச் சுவீகரிப்புத் தொடர்பிலான அதிகாரத்தினை வழங்கும் நடைமுறைச் சட்டம் மற்றும்1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கக் காணிச் சுவீகரிப்புச் சட்டம் என்ற சட்டங்களுடன் வெளியிடப்பட்டது.

LAAஇன்று பல திருத்தங்களை முன்னெடுத்துள்ளதுடன், இறுதியான பதிப்பாக 1986 ஆம் ஆண்டின் பதிப்பு விளங்குகின்றது. 2008 ஆம் ஆண்டில் LAAஒழுங்கு விதிகளுக்கு திருத்தங்கள் செய்யப்பட்டு “புனரமைப்புச் செலவு” உடன் தொடர்புபட்டதாக மீள்குடியேற்றத் திட்டம் தொடர்பில் குறிப்பிடத்தக்க தாக்கத்தினைக் கொண்டு, 2009 ஆம் ஆண்டின் ஜனவரி 20 ஆந் திகதி, செவ்வாய்கிழமை, 1585/7என்ற வர்த்தமானி அறிவித்தலினூடாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1585/7என்ற இலக்க மற்றும் 20.01.2009 என்ற இலக்க வர்த்தமானி அறிவித்தல், முதலாவதாக காணிச் சுவீகரிப்புப் பெறுமதியினை மதிப்பீடு செய்யும் ஒரே வகையான திட்டத்தினை உருவாக்குவதற்கு எடுக்கப்பட்ட முயற்சியொன்றாவதுடன், காணிச் சுவீகரிப்புச் சட்டத்துடன் அமுற்படுத்தப்பட்ட கொடைக் கொடுப்பனவு பொதி என்று ஒவ்வொரு நிறுவனத்தினாலும் விசேடமாகப் பின்பற்றப்பட்ட நிவாரணம் வழங்கும் பொதியொன்று அதனூடாக புத்தாக்கஞ் செய்யப்பட்டுள்ளது. இரண்டாவதாக, காணிச் சுவீகரிப்புச் சட்டத்தினூடாக நடைமுறைப்படுத்தப்பட்ட நடைமுறையின் கீழ் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாத பணியொன்று நிறைவேற்றப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டவாறு, இவ் ஒழுங்கு விதி அதன் 63(2)(ஈ) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அப் பிரிவில் குறிப்பிடப்படும் சந்தை விலையினை மதிப்பீடு செய்வதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட காணிச் சுவீகரிப்புச் சட்டத்தில் விசேடமாகக் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பதாகும். 2008 ஆம் ஆண்டு ஒழுங்கு விதிகளின் பிரகாரம், சொத்துப் பாதிப்புக்களை மதிப்பீடு செய்தல் பிரதானமாக பின்வரும் விடயங்களின் காரணமாக இடம்பெற்றுள்ளது.

1. நிலத் துண்டுகளை ஆரம்ப நிலத்திலிருந்து பிரித்து ஒதுக்கியதன் பின்னர் மதிப்பீடு செய்தல், வீதி அபிவிருத்தி நோக்கங்களுக்கென நிலத்தினை சுவீகரிக்கும்போது ஒருநிலத்திலிருந்துதேவையாகும் நிலப்பரப்பளவு மிகவும் வரையறுக்கப்பட்டுள்ளதால், அப்பரப்பினை வேறான நிலப் பரப்பொன்றாக எடுப்பதற்கு அது மிகவும் சிறிய பகுதியொன்றாவதால் பயனுள்ள செயற்பாட்டிற்குப் பொருத்தமற்ற காரணத்தினால் அதன் சந்தைப் பெறுமதி குறையும்.
2. கட்டமைப்புக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யும்போது, மறுசீரமைப்புச் செலவினைக் கவனத்திற் கொள்ளாது தேய்மான அடிப்படையின் கீழ் மதிப்பீடு செய்தல்.
3. உரித்தாளிகளுக்கு இடம்பெறும் வன்முறை மற்றும் மீறல்களைக் கவனத்திற் கொள்ளாது மதிப்பீட்டினை முன்னெடுத்தல்.

LAAநடைமுறைகளின் வரிசையான ஒழுங்கு பின்வரும் அட்டவணையில் பட்டியற்படுத்தப்பட்டுள்ளது.

**அட்டவணை 4 : காணிச் சுவீகரிப்புக்கான நடைமுறைகள்**

| செயற்பாடு | பொறுப்பான முகவர் |
|---|---|
| காணிச் சுவீகரிப்புப் பிரேரணையினை தயாரித்துச் சமர்ப்பித்தல் | கருத்திட்டச் செயற்பாட்டில் ஈடுபடும்/அமுற்படுத்தப்படும் நிறுவனம் |
| ஆய்வுக்கான கட்டளையினை வழங்குதல் (LAA S. 2) | காணிமற்றும்காணிஅபிவிருத்திஅமைச்சு |
| அறிவித்தல்களைத் தயாரித்துப் பதிவு செய்தல் (S. 2) | பிரதேச செயலாளர் |
| முன் திட்டத்தினைத் தயாரித்தல் | அளவைத் திணைக்களம் |
| காணியினைச் சுவீகரிப்பதற்கான கட்டளையினை வழங்குதல் (S. 4) | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு |
| பிரிவு 04 அறிவித்தல்களைப் பதிவு செய்து வெளியிடுதல் (S. 4) | பிரதேச செயலாளர், அரச அச்சகம். |
| ஆட்சேபணை விசாரணைகள் | கருத்திட்டச் செயற்பாட்டில் ஈடுபடும்/அமுற்படுத்தப்படும் நிறுவனம் |
| வர்த்தமானிஅறிவித்தல் (S. 5) | பிரதேச செயலாளர், அரச அச்சகத் திணைக்களம். |
| ஆரம்பத் திட்டத்தினைத் தயாரித்தல்<br>Preparation of preliminary plan | அளவைத் திணைக்களம் |
| வர்த்தமானிஅறிவித்தல் (S. 7) | பிரதேசசெயலாளர் |
| விசாரணைகள்(S. 9) | பிரதேசசெயலாளர் |
| தீர்மானம்(S. 10-1) | பிரதேசசெயலாளர் |
| பெறுமதி | விலை மதிப்பீட்டுத் திணைக்களம் |
| வழங்குதல் (S. 17) | பிரதேசசெயலாளர் |

| | |
|---|---|
| இழப்பீட்டுக்கொடுப்பனவு | பிரதேசசெயலாளர் |
| கட்டளை(S. 38a) | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, அரச அச்சகக் கூட்டுத்தாபனம். |
| ஏற்பாடு (S. 38a) | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு, அரச அச்சகக் கூட்டுத்தாபனம். |
| உரிமையினை ஒப்படைத்தல் | பிரதேச செயலாளர், கருத்திட்டச் செயற்பாட்டில் ஈடுபடும்/அமுற்படுத்தப்படும் நிறுவனம். |
| காணியினைப் பதிவு செய்தல் | பிரதேச செயலாளர், கருத்திட்டச் செயற்பாட்டில் ஈடுபடும்/அமுற்படுத்தப்படும் நிறுவனம். |

Source: Social Assessment and Involuntary Resettlement Compliance Manual, Road Development Authority of the Ministry of Highways and Road Development, 2009

### 2.1.3 காணிச் சுவீகரிப்பு, மீள் குடியேற்றக் குழுவின் முன்னெடுப்பு (பிரதேச மட்டம்) மற்றும் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றப்பதில் வழங்கும் குழுவின் முன்னெடுப்பு. (அமைச்சரவை இழப்பீட்டு மேன்முறையீட்டுச் சபை)

காணிச் சுவீகரிப்புக் சட்டத்திற்கு, 1585/7 என்ற இலக்க மற்றும் 2009.01.20ஆந்திகதிய ஒழுங்குவிதி, 2008 மறுசீரமைப்பு வர்த்தமானி அறிவித்தலினை அறிமுகஞ் செய்ததோடு, காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழுவின் விடயத்துறையினை, புதிய மறுசீரமைப்பினூடாக உள்ளடக்க முடியும் என்பதால் இக்குழுவின் மீளாய்வு முன்னெடுப்பினை நிறுத்துதல் வேண்டும். மேலும், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்ட காணிகளின் இழப்பீட்டுப் பெறுமதிகளைத் தீர்மானிப்பதற்கு பல்வேறான நிறுவனங்களினால் பாவிக்கப்பட்ட காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழு முன்னெடுப்பு மற்றும் அதற்குச் சமமான செயற்பாட்டுப் பாவனையினை நிறுத்துவதற்கு காணி அமைச்சினால் தெளிவான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன், காணிப் பெறுமதிகளை மதிப்பிடும் ஒரே திட்டமாக முன்னெடுப்பதற்கு அமைச்சு அதனூடாக எதிர்பார்க்கின்றது. காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழு, அவ்வேளை அமுற்படுத்தப்பட்ட பெருந் தெருக்கள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சினால் அமுற்படுத்தப்பட்ட சலுகைக் கொடுப்பனவு பொதி ஆரம்பிக்கப்பட்டது. பாதிக்கப்பட்ட நபர்கள் பிரதேச மட்டத்தில் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றக் குழு முன்னெடுப்பின் தீர்மானம் தொடர்பில்திருப்தியற்றிருப்பின், அவர்களின் பங்களிப்புடன் சமுதாய மட்டத்திலும் மற்றும் பிரதேச மட்டத்திலும் விடயங்களை விசாரணை செய்யும் முன்னெடுப்பினூடாக, கீழ் மட்ட நிலங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்தச் சலுகைக் கொடுப்பனவுப் பொதி பயன்படுத்தப்பட்டது.

### 2.1.4காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் (1935)

இந்த ஒழுங்கு முறைச் சட்டம் மற்றும் பின்னர் அதற்கு முன்னெடுக்கப்பட்ட திருத்தங்களுக்கமைய, அரச நிலங்களில் வசிப்பவர்களுக்கு அந்த ஆக்கிரமிப்பினை சட்டரீதியாக்குவதற்கு பிரதேச செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்க முடியும். பின்னர் சுவீகரிக்கும் உத்தியோகத்தர் (பிரதேச செயலாளர்) அது தொடர்பில் புலனாய்வொன்றினை முன்னெடுத்து, இந் நிலத்தினை ஒதுக்குதல் அல்லது அரசின் விசேட தேவைப்பாட்டிற்கு அவசியமில்லையாயின், ஆரம்பத்தில் ஒரு வருட காலப்பகுதிக்கு அனுமதிப் பத்திரமொன்று வழங்கப்படும். பின்னர், இந் நபருக்கு நீண்ட காலம் வரி அடிப்படையின் கீழ் நிலம் வழங்கப்படும் என்பதுடன், இவ் வரி அனுமதி சட்டரீதியான உறுதிப் பத்திரத்திற்கு சமம் என்பதுடன், அத்தகைய சொத்துக்களிலிருந்து அவர்களை அகற்றுவதற்கு உரிமையில்லை என்பதாகும். இவ் உறுதி உரித்துக்கள் சுவர்ண பூமி மற்றும் ஜய பூமி என்ற பெயர்களில் அழைக்கப்படுகின்றன.

அரசின் நிலங்களை அத்துமீறி ஆக்கிரமித்துள்ளோர்களை இரண்டு வகையாக வகைப்படுத்த முடியும். (1). மத்திய தர வருமானத்தினைக் கொண்டோர் – ஏனைய விவசாய நிலத்தினைக் கொண்ட வீட்டு அலகுகள். (2). கீழ் மட்ட வருமானத்தினைக் கொண்டோர் – நிலத்தினைக் கொண்டிராத குடும்ப அலகுகள், அரசின் நிலங்கள் வேறான தேவைகருதி ஒதுக்கப்படாதிருப்பின், அரசின் நிலத்தினைப் பகிந்தளிக்கும்போது நிலத்தினைக் கொண்டிராத குடும்ப அலகுகளுக்கு விசேட கவனஞ் செலுத்தப்படும்.

### 2.1.51981 ஆம் ஆண்டின் 73ஆம் இலக்க வீதி அபிவிருத்தி அதிகார சபை

(1981)வீதி அபிவிருத்தி அதிசார சபைச் சட்டத்தினூடாக, வீதி அபிவிருத்தி அதிகார சபையினை நிறுவுவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமுள்ள அதிகாரம், செயற்படுகள், கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் விசேடமாகக் காட்டப்பட்டுள்ளன. சட்டத்தின் இரண்டாவது பகுதியினூடாக வீதி அபிவிருத்தி தொடர்பிலான பிரதேசங்களை அறிவிப்பதற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், வீதி அபிவிருத்தி என்னும் சட்டத்தில் பாவிக்கப்பட்ட கருத்தினூடாக புதிய வீதிகளை நிர்மாணித்தல் அல்லது பராமரித்தல் அல்லது காணப்படும் வீதிகளை மேம்படுத்துதல் (அபிவிருத்தி என்பதற்குள் அகலமாக்குதல், மட்டமாக்குதல், நடைபாதைகளை உருவாக்குதல், தூசுகளைக் குறைப்பதற்கு உடனடித் தீர்வுகளை எடுத்தல் அல்லது பொதுவான திருத்தப் பணிகளுக்கு மேலான வேண்டிய பணியொன்று) எனப் பொருள் கொள்ளப்படும்.

ஏனைய விடயங்களுள், ஒன்றிணைந்த வீதிகளைத் திட்டமிடுதல், மேம்படுத்துதல், இவ்வாறான திட்டங்களை அரசின் அங்கீகாரத்திற்காகச் சமர்ப்பித்தல், அங்கீகாரத்தின் பின்னர் வீதி அபிவிருத்தித் திட்டங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளை அடுற்படுத்துதல் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கான பொறுப்புக்கள் மற்றும் கடமைகளாகும்.

சட்டத்தின் 8வது பிரிவின் கீழ், விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களால் பிரதேச, தேசிய வீதித் தேவைப்பாடுகள் மற்றும் வீதி அபிவிருத்தி முகாமை மற்றும் நிர்வாகம் தொடர்பில் தகுந்த செயற்பாடுகளைக் கவனத்திற்கு கொண்டு, வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்படும் (தேவை மற்றும் பௌதிக எல்லைகள் காட்டப்படும்) கட்டளை அல்லது அறிவித்தல் பின்னர் வீதி அபிவிருத்திப் பிரதேசமொன்றாக பிரகடனஞ் செய்யப்படும்.

சட்டத்தின் 22வது பிரவு, பொது நோக்கங்களைக் கவனத்திற் கொண்டு வீதி அபிவிருத்திப் பணிக்கு காணியினைச் சுவீகரித்துக் கொள்ளுதல் தொடர்பானது என்பதுடன், பிரகடனஞ் செய்யப்பட்ட வீதி அபிவிருத்தி வலயத்திற்கு உரித்தான அசையாத அல்லது அசையும் சொத்துக்கு, காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் [பிரவு22 (2)]பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிதியினைச் செலுத்தி, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சுவீகரித்துக் கொள்ளுதல் மற்றும் வீதி அதிகார சபைக்கு ஒப்படைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளன. ஆதலால், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 2 வது பிரிவின் கீழான அறிவித்தலினை வெளியீடு செய்யப்பட்டதன் பின்னர். காணி அல்லது ஏனைய சொத்துக்களைச் சுவீகரித்துக் கொள்வதாயின் அவ்வாறு செய்வதற்கு பின்பற்றவேண்டிய செயல் நடைமுறைகள் அச்சட்டத்தில் காட்டப்பட்டுள்ளது.

### 2.1.5 1947ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க அரச நிலக் கட்டளைச் சட்டம்

இது 1947ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க அரச நிலக் கட்டளைச் சட்டம் என அறியப்பட்டுள்ளது. வழங்கப்பட வேண்டிய நில மானியங்கள் மற்றும் அம் மானியங்களுக்கென அறவீடு செய்யப்பட வேண்டிய வாடகை, சட்டத்தின் (ஆ) பிரிவினூடாகக் காட்டப்பட்டுள்ளது. 22 வது பிரிவில் குறிப்பிட்டவாறு, இம்மானியங்கள் இடம்பெற வேண்டியது 50 வருடம் வரையான காலப்குதிக்கு

என்பதுடன், சட்டத்தில் காட்டப்பட்டுள்ள குறிப்பிட்ட படிவத்தினைப் பூர்த்தி செய்து, மானியத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு ஒப்பமிட வேண்டிய அதிகாரத்தினைக் கொண்ட உத்தியோகத்தரினால் ஒப்பமிடப்படுதல் வேண்டும். அரசின் நிலமொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு எதிர்பார்த்துள்ள நபராயின் உரிய பிரதேச அரசாங்க அதிபருக்கு மேன்முறையீட்டினைச் செய்தல் வேண்டும். பிரதேசத்திற்குரிய காணி ஆணையாளர் அல்லது அரச அதிபரினால் தீர்மானிக்கப்படும் வரிப்பணம் அந்நபரினால் செலுத்தப்படுதல் வேண்டும். விசேடமான சூழ்நிலைகளில், புகையிரதப் பொது முகாமையாளர் மற்றும் கொழும்புத் துறைமுகத்தின் தவிசாளர் போன்ற உத்தியோகத்தர்களுக்கு, தமது விடயப் பரப்பிற்குள் வரும் நிலங்களினை வாடகைக்கு விடுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் இச்சட்டத்தினூடாக வழங்கப்பட்டுள்ளது.

### 2.1.71871ஆம் ஆண்டின்22ஆம் இலக்கத் தடுப்புக் கட்டளைச் சட்டம்

பிரத்தியேக நிலத்திற்குள் அத்துமீறி பிரவேசித்து அதில் பத்து வருடங்களுக்கு அதிகமான காலம் வசித்துள்ள நபர்களுக்கு இக் கட்டளைச் சட்டத்தின் 3 மற்றும் 13 வது பிரிவின் கீழ் நீதிமன்றினூடாக அந்நிலம் தொடர்பில் புலம்பெயர்ந்த உரிமைகளைப் பெறுவதற்கு வேண்டுகோளினை விடுக்க முடியும்.

விசேட நோக்கங்களுக்கான சொத்துக்களைக் கட்டாயமாகக் கொள்வனவு செய்வதற்கு வாய்ப்பினை வழங்குவதற்கு ஏற்ற வகையிலும் மற்றும் சந்தைப் பெறுமதியின் பிரகாரம் இழப்பீடு வழங்கும் தேவைப்பாட்டினைத் தவிர்த்தல் மற்றும் அதன் கீழுள்ள ஏதேனும் விசேட வரையறைகள், நிபந்தனைகள் மற்றும் பெறுமதி தீர்மானிக்கப்படும் விசேட சூழ்நிலைகளில் விதிக்கக்கூடியவாறு தயாரிக்கப்பட்ட சட்டங்கள், ஒழுங்கு விதியில் காட்டப்பட்டுள்ளன. சட்ட அதிகாரத்தின் கீழ், இழப்பீடு செலுத்துதல், அரசினால் சொத்துக்களைக் கட்டாயமாக சுவீகரித்துக் கொள்ளும்பேது அல்லது அரசுக்கு ஒப்படைக்கும் போது அச்சட்டங்கள் விதிக்கப்படும்.

- 1978ஆம் ஆண்டின் 41ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டம்
- 1979ஆம் ஆண்டின் 17ஆம் இலக்கத் தேசிய வீடமைப்பு அதிகார சபைச் சட்டம்
- 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க கொழும்பு பெரும்பாகம் பொருளாதார ஆணைக்குழுச் சட்டம்
- 1946ஆம் ஆண்டின் நகர மற்றும் நாடு திட்டமிடற் கட்டளைச் சட்டம்

- 1972ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க காணிச் சீர்திருத்தச் சட்டம் –1972ஆம் ஆண்டின் 26ஆம் இலக்க காணிச் சீர்திருத்த ஆணைக்குழுச் சட்டம்
- 1968ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க கொழும்பு மாவட்ட (தாழ் நிலப் பிரதேசங்கள்) மீட்பு மற்றும் அபிவிருத்திச் சபைச் சட்டம்.
- 1972ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க வாடகைச் சட்டம் மற்றும் அதற்குச் செய்யப்பட்ட 1980ஆம் ஆண்டின் 55ஆம் இலக்க மற்றும் 2002ஆம் ஆண்டின் 26ஆம் இலக்கத் திருத்தங்கள்.
- 1972ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கச் சட்டம்,
- 1973ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க வீட்டு வசதி சட்டங்களுக்கான உச்சவரம்பு
- 1973ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க வீட்டு உரிமையாளர் சட்டம்
- 1968ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க சுற்றுலா அபிவிருத்திச் சட்டம்
- கடலோரப் பாதுகாப்புச் சட்டம்
- 1979ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க விவசாய சேவைகள் சட்டம்
- 1956ஆம் ஆண்டின் 45ஆம் இலக்க மற்றும் 1973 ஆம் ஆண்டின் 37 ஆம் இலக்க வீதிகள் மற்றும் வீடமைப்புச் சட்டங்கள்

- 1979ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபைச் சட்டம்

ஆதலால், அத்துமீறிக் குடியிருப்போர்களுக்கு காணி உரித்துக்களைக் கோருவதற்கு இக்கட்டளைச் சட்டம் முக்கியமானதாகும் (நிலத்திற்கு முன்னெடுக்கப்பட்ட மேம்பாடுகளுக்கு மாத்திரம்). பொதுவாக, பெரும்பாலான அபிவிருத்திக் கருத்திட்டங்களில் பல அத்துமீறிக் குடியிருப்போர்களை அடையாளங் காண முடியும் என்பதுடன், இக்கருத்திட்டத்திலும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கை இருப்பார்கள் என ஊகிக்கப்படுகின்றது.

### 2.1.8 1931ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க பௌத்த மத இடங்களின் சொத்துக்கள்சட்டம் (விஹாரை மற்றும் தேவாலகம் சட்டம்)

இது தொடர்பிலான மூலச்சட்டம் பிரித்தானியரினால் 1886ஆம் ஆண்டில் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதுடன் அது 1931ஆம் ஆண்டில் திருத்தஞ் செய்யப்பட்டுள்ளது. நிர்வாகிகளினால் அர்ப்பணிப்பு உறுதி அல்லது கடந்தகால முடியாட்சிகளின் பிரகாரம் மானியங்களினூடாக விஹாரைகள் மற்றும் தேவாலயங்களுக்கு வழங்கப்பட்ட காணிகள் தொடர்பிலேயே இச்சட்டம் உள்ளது. உதாரணமாக, 19ஆம் இலக்க விஹாரை மற்றும் தேவாலகம் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம், அச்சட்டத்தின் கீழ் வரும் பௌத்த மத இடங்களுக்கு உரித்தான சொத்துக்களை முகாமை செய்யும் அதிகாரம் அச்சட்டத்தின் பிரகாரம் நியமிக்கப்பட்ட அறங்காவலர் சபையொன்றுக்கு ஒப்படைக்கப்படும். இந்த பௌத்த மத இடங்களின் சொத்துக்களில் பெரும்பாலானவை மேம்படுத்தப்படவில்லை என்பதுடன், பல இடங்கள் குறைவான பாதிப்புக்கு உள்ளான காடுகளாக விளங்குகின்றன. அவை அறங்காவலர் சபைகளின் முகாமையின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன. பிற ஏற்பாடுகளுக்கு மேலாக, பொதுச் செயற்பாடுகளுக்கென இவ்வாறான நிலங்களைச் சுவீகரித்துக் கொள்ளும் வேளையில், அதற்கான இழப்பீடுகள் இழப்பீடுகளை வழங்குவதற்கு விஹாரைகள் மற்றும் தேவாலயங்களின் அறங்காவலர்ளுக்குள்ள உரிமை தொடர்பிலான ஏற்பாடுகள் இச்சட்டத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

### 2.1.9 வனக்காப்புக் கட்டளைச் சட்டம்

வனங்களாகப் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ள காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றது. இக்காணிகளை நீண்டகாலம் குத்தகை அடிப்படையின் கீழ் விடுவிப்பதற்கு இத்திணைக்களம் அதிகாரத்தினைக் கொண்டிருக்கவில்லை என்பதுடன் வருடந்தோறும் புதுப்பிக்க வேண்டிய அனுமதிப் பத்திரங்களினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டே விடுவிக்க முடியும். எவ்வாறாயினும் பாதுகாப்பு வலயத்தினுள் அமையப் பெற்ற நிலங்கள் மற்றும் உயர் பாதுக்காப்பினுள் அமையப் பெற்ற நிலங்களை வேறு செயற்பாடுகளுக்கு விடுவிப்பதற்கு வன ஜீவராசிகள் திணைக்களம் அதிகாரத்தினைக் கொண்டிருக்கவில்லை. நிறைவேற்று நிறுவனங்கள்/கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் கோரிக்கைவிடுக்கும் பட்சத்தில், தேசிய சுற்றாடல் சட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டுள்ள கருத்திட்டம் தொடர்பிலான நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர், பொதுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நிலங்கள் வனஜீவ ராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் விடுவிக்கப்படுதல் வேண்டும். 10 கிலோ மீற்றருக்கு மேலான நீளத்தினைக் கொண்ட வீதியொன்றினை நிர்மாணித்தல் அல்லது ஒரு ஹெக்டயருக்கு அதிகமான நிலத்தினைக் காடற்ற செயற்பாடுகளுக்கு மாற்றுதல் பரிந்துரை செய்யப்பட்ட கருத்திட்டமொன்றாக அறியப்படுகின்றது. பாதுகாப்பான காடொன்றுக்கு ஒரு கிலோ மீற்றர் தூரம் உள்ளே அபிவிருத்திப் பணியொன்று இடம்பெறுமாயின், கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அதன் பிரகாரம் மத்திய அதிவேக வீதிகள் பல, வனக் காப்பகத்தினூடாக பயணஞ் செய்கின்றமையினால், இக் கட்டளைச் சட்டத்தின் விதிகளுக்கு கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்.

### 2.1.10 1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சுற்றாடல் சட்டம்

மத்திய அதிவேக வீதிகள் கருத்திட்டத்தின் மொத்தச் செயற்பாடும்,1980 ஆம் ஆண்டின் 47ஆம் இலக்கத் தேசிய சுற்றாடல் சட்டத்தினைத் தழுவியதாக உள்ளது. சட்டம் தொடர்பில் இடம்பெற்றுள்ள 1988ஆம் ஆண்டின் 56ஆம் இலக்கத் திருத்தங்களினூடாக சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பில் சில ஏற்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. தேசிய சுற்றாடல் சட்ட ஏற்பாடுளின் கீழ் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

858/14 என்ற இலக்க 23.02.1995ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலினூடாக சுற்றாடல் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் தேசிய சுற்றாடல் சட்டத்தின் விதிகளின் பிரகாரம், அங்கீகாரம் பெறப்பட வேண்டிய கருத்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் பிரகடனஞ் செய்யப்பட்டுள்ளன. அது தொடர்பான பட்டியலின் 12 வது விடயம் “அவசர சூழ்நிலைகளைக் காரணமாகக் கொண்டு இடம்பெற வேண்டிய மீள்குடியேற்றத்தினை விட, 100 குடும்பங்களுக்கு அதிகமான தொகுதி சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம்” எனக் காட்டப்பட்டுள்ளது. இதன் பிரகாரம், மத்திய அதிவேக வீதிகள் கருத்திட்டமும் தேசிய சுற்றாடல் சட்டத்துடன் தொடர்பான விதிகளின் கீழ் வருதால், இக் கருத்திட்டத்தின் ஒவ்வொரு படிநிலை தொடர்பிலும் சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் தயாரித்தல் அவசியமாகும்.

### 2.1.11 **வறுமை நிவாரணக் கட்டளைச் சட்டம்**

1939ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வறுமை நிவாரணக் கட்டளைச் சட்டம் முதலில் கொழும்பு, கண்டி மற்றும் காலி போன்ற மாநகர சபைகள் தொடர்பில் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளதுடன், 1974ஆம் ஆண்டுசமூக சேவைகள் ஆணைக்குழுவினூடாக இச்சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. வறிய மக்களின் சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் இந்நாட்டில் விதிக்கப்பட்டுள்ள அநேகமான சட்ட ஏற்பாடுகள் இச்சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளன. உதாரணமாக, ஜனசவிய மற்றும் சமுர்த்தி (தற்போது அமுற்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டம்) போன்ற வறுமையினை ஒழிக்கும் நிகழ்ச்சித் திட்டங்கள் இந்தக் கட்டளைச் சட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளன. வறிய சமுதாயமாக இனங்காணப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துதல் இந்நிகழ்ச்சித் திட்டங்களின் நோக்கமாகும்.

### 2.1.12**பிள்ளைகள் மற்றும் பெண்களின் பாதுகாப்புக்காகத் தயாரிக்கப்பட்டுள்ள கட்டளைச் சட்டங்கள்.**

பிள்ளைகள் மற்றும் இளையோர்களை சேவையில் ஈடுபடுத்துதல் தொடர்பிலுள்ள சட்ட ஏற்பாடுகள் மிகவும் சிக்கலான நிலைமையினைக் கொண்டுள்ளதுடன், பல கட்டளைச் சட்டங்களினூடாக இது தொடர்பில் கவனஞ் செலுத்தப்படுகின்றது. இக்கட்டளைச் சட்டங்கள் அல்லது சட்டங்களின் நோக்கமாவது, பிள்ளைகளைப் பாதுகாத்தல், அவர்களின் கல்விக்கான அமைதியான சூழலொன்றினை உருவாக்குதல் மற்றும் ஓய்வினை வழங்குவதாகும்.

இலங்கை அரசினால் 1983ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டுள்ள பெண்கள் சாசனமும் மேற்குறிப்பிட்ட நோக்கங்களையே பிரதிபலிப்பனவாகவுள்ளன. அதற்கு மேலாக, 1995 மற்றும்

1998 ஆண்டுகளில் தண்டனைச் சட்டக் கோவைக்கு இடம்பெற்ற மறுசீரமைப்பினூடாகவும், பாலியல் வன்முறை, துஷ்பிரயோகம் மற்றும் பெண்களினைக் கடத்தி விற்றல் போன்ற விடயங்கள் தெளிவாக விளக்கம் வழங்கப்பட்டுள்ளதுடன் இத்தவறுகளுக்கான தண்டனைகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. மேலும் 2005 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க உள்ளூர் வன்முறையினைத் தடுக்கும் சட்டத்தினூடாகவும் பிள்ளைகள் மற்றும் பெண்கள் பாலியல் வன்முறைக்கு, துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துதல், அவர்களைக் கடத்தி விற்பனை செய்வதைத் தடுப்பதற்காக அவர்களுக்கு சட்டக் காப்பு வழங்கப்பட்டுள்ளது. பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தினூடாக பாதிப்புக்குள்ளான நபர்களின் வாழ்வாதாரத்தின் மீது நேரடித் தாக்கம் ஏற்படும் என்பதுடன், சொத்து உரித்துக்கு ஏற்படும் பாதிப்பு, மறுவாழ்வு மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாட்டினூடாக அவர்கள் சில மாறுபாட்டிற்கு உட்படுத்தப்படுவர். ஆதலால், பிள்ளைகள் மற்றும் பெண்களுக்கு இக்கருத்திட்டத்துடன் தொடர்பான செயற்பாடுகளின் காரணமாக ஏதேனும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கு நேரிடின் மேற்குறிப்பிட்ட சட்டங்கள் மற்றும் சாசனங்கள் அவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்காக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் காரணமாக, அவர்கள் உட்படுத்தப்படும் கவனத்திற்குக் கொள்ளப்பட வேண்டிய நிலையின் காரணமாக இப்பிள்ளைகள் மற்றும் பெண்கள் யாதேனும் பிரச்சினையொன்றுக்கு முகங்கொடுக்கும் குழுவொன்றாக கவனத்திற்குக் கொள்ளப்படுவர்.

### 2.1.13**தொழிலாளர் சட்டம்**

இலங்கையின் தொழிலாளர் சட்டம் அது தொடர்பிலான கட்டளைச் சட்டங்கள் 25 உள்ளன என்பதுடன், அவ்வனைத்தும் தொழிலாளர் திணைக்களத்தின் ஆணையாளரினால் நடைமுறைப்படுத்தப்படும். அவற்றினுள் பின்வரும் கட்டளைகள்/சட்டங்கள் மிகவும் முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

1) 1941ஆம் ஆண்டின் 21ஆம் இலக்கச் சம்பளச் சபைக் கட்டளைச் சட்டம்
2) 1934ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டம்
3) 1935ஆம் ஆண்டின் 14ஆம் இலக்க தொழிற் சங்கக் கட்டளைச் சட்டம்.
4) 1954ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க கடைகள் கட்டளைச் சட்டம்
5) 1865ஆம் ஆண்டின் 11ஆம் இலக்க சேவை ஒப்பந்தக் கட்டளைச் சட்டம்
6) 1983ஆம் ஆண்டின் 12ஆம் இலக்க பணிக்கொடைகள் சட்டம்
7) 1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளையோர்கள் மற்றும் பிள்ளைகள் தொழில் சட்டம்
8) 1998ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டம்
9) 1980ஆம் ஆண்டின் 46ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டம்
10) 1958ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டம்

1956ஆம் ஆண்டின் 47ஆம் இலக்க பெண்கள், இளையோர் மற்றும் சிறுவர்களைதொழிலில் ஈடுபடுத்தும் சட்டம் மற்றும்1998ஆம் ஆண்டின் 50ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைச் சட்டத்தினூடாக விதிக்கப்பட்டுள்ளவாறு சிறுவர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்படுவது தடை செய்யப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தித் துறையுடன் தொடர்பான எந்தவொரு உதவிக் கருத்திட்டத்திலும் இந்நிபந்தனைகளைப் பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு தொழிலாளரும் 10 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இச்சட்டங்களினூடாக பெண்களின் உரிமைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், பெண்கள் சமமாக நடாத்தப்படுதல் வேண்டும் எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆதலால், இக்கருத்திட்டத்துடன் தொடர்பான சகல ஒப்பந்த உடன்படிக்கைகளில் இத் தேசிய சட்ட விதிகள் பின்பற்றப்படுதல் வேண்டும் என்பது தெளிவாவதுடன், பின்வரும் வகையில் வாசகமொன்றினை ஒவ்வொரு ஒப்பந்தம் மற்றும் உப ஒப்பந்த ஆவணங்களில் உள்ளடக்குதல் கட்டாயமானதாகும்.

"ஒப்பந்தக்காரர் மற்றும் உப ஒப்பந்தக்காரர்கள், பெண்கள் தொடர்பில் அனைத்து தொழில் வாய்ப்புக்களையும் வழங்குதல் வேண்டும் என்பதுடன், கட்டுமாணப் பணிகளைச் செயற்படுத்துதல் தொடர்பில் அவர்களுக்குப் பொருத்தமான பணிகள் அடையாளங் காணப்படுதல் வேண்டும். பெண்கள் உத்தியோகத்தர் குழாம் மற்றும் தொழிலாளர், சம வேதனம் மற்றும் சம பணி தொடர்பில் சம சம்பளம் என்ற நிபந்தனையின் கீழ் கடமையில் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். ஊழியர் தொகுதியினுள் பெண்கள் பங்களிப்பினை வலுவூட்டக்கூடியவாறு ஒப்பந்தக்காரர்கள் பொருத்தமான பணிச் சூழலொன்றினை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும் என்பதுடன் தகுதியான சகல வசதிகளையும் வழங்குதல் வேண்டும்".

வீதி நிர்மாணத்துடன் தொடர்பான சகல உதவிக் கருத்திட்டங்களும், இலங்கையில் காணப்படும் தொழிலாளர் சட்டம் தொடர்பில் கவனத்தினைச்செலுத்தி, தமது நிர்மாணத்துடன் தொடர்பான பணிகளுக்கு பெண்கள் மற்றும் ஆண்கள் போன்ற இரு பகுதியினரையும் பங்குபற்றச் செய்வதற்கு ஊக்கப்படுத்துகின்றது.

### 2.1.14 வயல் நிலச் சட்டம்

ஒரு குறிப்பிட்ட காணிச் சுவீகரிப்பின்போது குத்தகைக்கார விவசாயி என்ற பெயரினால் அழைக்கப்படும், நிலத்தினைப் பாவிக்கும் விசேட குறிப்பிட்ட குழு அடையாளங் காணப்பட்டுள்ளது. ஏதேனும் நில உரிமையாளரின் நிலத்தில் பயிரிடுவதற்காக கூட்டிணைந்த விவசாயி என்ற வகையில் தமது ஊழியப் படையினை வழங்கும் விவசாயிகள் இதன் மூலம் அறியப்படுகின்றது. வாடகைக்குப் பதிவு செய்தல், வசத்தினைப் பாதுகாத்தல், பயிர் வளர்ப்பிலிருந்து குத்தகை வழங்கும் அளவினை வரையறை செய்வதற்கும், விசேடமாக இந் நடவடிக்கைகளை அமுற்படுத்துவதற்குத் தேவையான நிறுவனங்களை அமைப்பதற்கும், 1959 ஆம் ஆண்டில் இலங்கை அரசினால் குத்தகை விவசாயிச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன் பின்னர், விவசாயச் சட்டம் தொடர்பில் முக்கிய மறுசீரமைப்பாக, 1979 ஆம் ஆண்டில் இலங்கை அரசினால் விவசாய சேவைச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரகாரம், சகல நிலங்கள், அதாவது வயல் நிலங்கள், விவசாய நிலங்கள், குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள நிலங்களையும் உள்ளடக்கி, அந்தந்த பிரதேசத்திற்கு உரித்தான விவசாய நிலையங்களில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். அச்சட்டத்தின் பிரகாரம், வயல் நிலங்கள் தொடர்பில் மேலும் ஒரு புதிய சட்டமொன்று இயற்றப்பட்டதுடன், அதன் பிரகாரம் வயல் நிலமொன்றில் நெற் செய்கையினைத் தவிர்த்து, ஏனைய வேண்டிய செயற்பாட்டிற்குப் பாவிக்கப்படின், உரிய நபர் அல்லது நிறுவனம் அது தொடர்பில் விவசாய சேவைகள் திணைக்களத்தின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

### 2.2கொள்கைவரைவு

காணிச் சுவீகரிப்புச் சட்டத்தினூடாக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பது, நிலங்கள், கட்டிடங்கள் மற்றும் பயிர்ச் செய்கைகளுக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவுக்கு மாத்திரமாவதுடன், காணிச் சுவீகரிப்பின் காரணமாக உரிய நபர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களைக் கட்டுப்படுத்துவதற்காகஅல்லது தடுப்பதற்காக மீள்குடியேற்ற அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்குவதற்கான தேவையான ஏற்பாடுகள் அதில் உள்ளடக்கப்படவில்லை. மேலும் ஒப்புரிமை ஆவணத்தினைக் கொண்டிராத நபர்கள் மற்றும் இந்நிலத்தினூடாக தங்கியிருக்கும் ஏனைய நபர்களுக்கு காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் நிவாரணங்கள் திட்டமிடப்படவில்லை.

காணிச் சுவீகரிப்பின் காரணமாக நபர்களுக்கு ஏற்படும் பாதிப்புக்களை தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்குத் தேவையான மாற்று நடவடிக்கைகளைக் கண்டுபிடித்தல் போன்ற மீள்குடியேற்றத்திற்கான அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை வழங்கும்போது, காணிச்

சுவீகரிப்புச் சட்டத்தில் தற்போதுள்ள வரையறைகளுக்குத் தீர்வாக 2001.05.24 ஆந் திகதி இலங்கை அரசினால், சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை (அமைச்சரவை ஊடாக) நிறைவேற்றப்பட்டுள்ளது. மீள்குடியேற்றச் செயற்பாட்டில், ஏதேனும் கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளான நபர்களிடமிருந்து விடயங்களை வினவுதல் மற்றும் அவர்களின் செயற் பங்களிப்பினைப் பெற்றுக் கொள்ளும் தேவைப்பாடு இத்தேசியக் கொள்கையினூடாக வெளிக்கொரணப்படுகின்றது. கருத்திட்ட அமுலாக்கல் நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்டு வரும் மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டங்களை மீளாய்வு செய்தல் மற்றும் அங்கீகரிக்கும் செயற்பாடு, மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இந்த மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் பொதுமக்கள் அறிந்துகொள்ளுதல் வேண்டும்.

### 2.2.1சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென அரசினால் நிலங்கள் சுவீகரிக்கப்படுவதன் காரணமாக பொதுமக்களுக்கு ஏற்படும் பாதகமான சமூக மற்றும் பொருளாதாரப் பாதிப்புக்களுக்குத் தீர்வுகளை வழங்குவதற்கென சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை அரசினால் நிறைவேற்றப்பட்டுள்ளது. சுயவிருப்புக்கு விரோதமான காணிகளைச் சுவீகரிப்பதனைக் காரணமாகக் கொண்டு இடம்பெயர்ந்த மக்கள் முகங்கொடுக்கும் இன்னல்களின் காரணமாக சமூக அமைதியின்மை, கவலைகள், பிரச்சினைகள் மற்றும் தடைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இடம்பெயர்ந்த மக்களின் நிலங்கள் மற்றும் வாழ்வாதார இழப்பின் காரணமாக வறுமை நிலைக்குத் தள்ளப்படுதல், உணவுப் பாதுகாப்பு பிளவடைதல், பொதுச் சொத்து மற்றும் பொதுச் சேவைகளை அணுகுவதில் தடையேற்படுதல், ஆதரிக்கும் குடிகளுடன் பிரச்சினைகள் உருவாகுதல், தற்போதுள்ள சமூக அமைப்புக்களுடன் உள்ள தொடர்புகள் பிளவடைதல் போன்ற துக்ககரமான சம்பவங்களுள், முக்கியமானவையாகும். இடம்பெயரும் நபர்களின் மீள்குடியேற்றத் தேவைப்பாடுகளின் மீது எந்தவொரு கவனிப்பினையும் காட்டாது இடம்பெறும் அபிவிருத்திச் செயற்பாடுகளின் காரணமாக அபிவிருத்தி மீது பொதுமக்கள் விருப்பு மற்றும் நம்பிக்கை உடையும். இந்நிலைமை, அபிவிருத்தி மீது. பொதுமக்களின் எதிர்ப்பு அதிகளவில் அதிகரிப்பதற்கு வாய்ப்பாக அமையும் என்பதுடன், அபிவிருத்திச் செயற்பாடுகளில் அதனூடாக எதிர்மறையான விளைவுகளை ஏற்படுத்தும்.

காணிச் சுவீகரிப்புச் சட்டம் போன்ற அரசியலமைப்பினை விதித்தல், இவ்வாறான ஏனைய ஏற்பாடுகள் மற்றும் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களினூடாக விதிக்கப்பட்ட ஒழுங்கு விதிகள் முன்வைக்கப்பட்டிருப்பது, காணிகள், கட்டிடங்கள் மற்றும் பயிர்ச் செய்கைகளின் சட்டரீதியான உரிமையாளர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவினை வழங்குவதற்காகவாகும். பிரச்சினைக்குரிய நிலங்களில் பல வருடங்களாக அதில் குடியிருப்போர்கள் மற்றும் அந்நிலங்களுக்காக உரித்து உறுதி ஆணவங்களைக் கொண்டிராத நபர்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இச்சட்ட விதிகளில் உள்ளடக்கப்படவில்லை. சுய விருப்புக்கு விரோதமாகக் காணிகளைச் சுவீகரிப்பதன் காரணமாக இந்நபர்களுக்கு ஏற்படும் விளைவுகளை, முற்றிலும் மாறுபட்ட விதத்தில் தீர்க்கப்பட வேண்டும். அதற்கு மேலாக இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பில் ஒதுக்கீடுகளை வழங்குதல் தவிர, இடம்பெயர்ந்த மக்களின் வாழ்க்கைகளில் ஏற்படும் தலைவிதி தொடர்பில் வேறு எவ்வித பொறுப்பினையும் கருத்திட்ட அமுலாக்கல் நிறுவனங்கள் கொண்டிருக்கவில்லை. உரித்துஉறுதி ஆவணங்களைக் கொண்டுள்ளவர்கள் தொடர்பில் செயற்பட்டாலும் இழப்பீட்டுக் கொடுப்பனவினை வழங்குவதால் மாத்திரம் அவர்களின் வாழ்க்கையினை மிகவும் சிறப்பான நிலைக்குக் கொண்டுவர முடியாது. ஆகக்குறைந்த வகையில், அவர்களில் பெரும்பாலானோருக்கு கருத்திட்டத்தினை அமுலாக்குவதற்கு முன்னர் காணப்பட்ட நிலைக்கு புதிய வாழ்க்கையினை மறுசீரமைப்பதற்கு அல்லது அதற்கு மேலான நிலைக்கு மேம்படுத்துவதற்குப் பல்வேறான உதவி அவசியமாகும். உரித்து உறுதி ஆவணங்களற்ற நபர்களுக்கு வாழுவதற்காக ஒரு வீடு, தொழில் மற்றும் சமூகப் பொருளாதாரத்தினை அடிப்படையாகக் கொண்ட வேறு விடயங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு இன்னும் கூடுதலான ஆதரவு தேவையாகும்.

காணிச் சுவீகரிப்புடன் தொடர்பான கஸ்டங்கள், சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கையினூடாக கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளதுடன், கருத்திட்டத்தில் இடம்பெறும் சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றத்தினைக் குறைப்பதற்கு சகல முயற்சிகளையும் எடுத்தல் மற்றும் அவ்வாறு செய்வதற்கு முடியாது போயின், பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு தங்கள் வாழ்வாதாரத்தினை மீளவும் நிலைநிறுத்துவதற்கு உதவுதல் அதன் நோக்கமாகும் (கொள்கைப் பிரகடன வெளிப்பாடு). சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை, மீள்குடியேற்றத்தினைக் காரணமாகக் கொண்டு ஏற்படும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பில் தீர்வாக மீள்குடியேற்றத் திட்டமொன்றினை அமுற்படுத்துவதற்கு விதிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் அதனூடாக (அ). பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு ஏற்படும் பாதகமான பாதிப்புக்களைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கு கருத்திட்ட மாற்றீடுகளை ஆய்வு செய்தல், (ஆ). நிலம் தொடர்பில் உரித்து உறுதி ஆவணங்களைக் கொண்டிராத நபர்களுக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவுகளை வழங்குதல், (இ). மீள்குடியேற்ற மாற்றுவழிகள் தொடர்பில் இடம்பெயரந்த நபர்களிடமிருந்தும் மற்றும் மீள்குடியேற்றத் தளங்களிலுள்ள ஆதரிக்கும் குடிகளிலிருந்து (பழங்குடியினர்) விடயங்களை வினவுதல், (ஈ). இடம்பெயர்ந்த நபர்கள்மற்றும் மீள்குடியேற்றத் தளங்களிலுள்ள ஆதரிக்கும் குடிகளை வெற்றிகரமாக சமூக மற்றும் பொருளாதார ரீதியில் இணைப்பதற்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்தல் மற்றும் (உ). இடம்பெயர்ந்த நபர்களைச் சமூக மற்றும் பொருளாதார ரீதியில் முழுமையாக புனர்வாழ்வளித்தல் போன்ற மீள்குடியேற்றம் மற்றும் இணைக்கப்பட்ட பிரதான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்தல் நோக்கமாகக் கொள்ளப்பட்டுள்ளது.

உரிய சகல அரச பிரதிநிதிகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனங்கள் (உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி) மற்றும் ஏனைய பங்குதாரர்கள் போன்ற அதிகாரிகளின் பங்குபற்றுதலுடன் ஏகமனதாக எடுக்கப்பட்ட செயற்பாட்டினூடாக சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை வடிவமைக்கப்பட்டுள்ளது. அரசினால் நியமிக்கப்பட்டுள்ள செயற்பாட்டுக் குழுவினால் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் கொள்கைகள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளதுடன், அதன் பிரகாரம், சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை 2001.03.05ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 2001.03.24ஆந் திகதிய அமைச்சரவை அங்கீகாரத்தினூடாக இது தேசியக் கொள்கையொன்றாக இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கையின் நோக்கங்களாவது** :

- கருத்திட்டத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் நபர்களை விளைத்திறன் மற்றும் சுயவலுவுடன் எழச்செய்யக்கூடியவாறு மறுசீரமைப்பதற்கு வசதிகளை வழங்குவதனூடாக, சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றத்தினூடாக ஏற்படும் பாதகமான பாதிப்புக்களைத் தடுத்தல், குறைத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல். மேலும், கருத்திட்டங்களின் காரணமாக, பாதிப்புக்குள்ளாகும் தொகுதியினருக்கு, அக்கருத்திட்டத்தினை சிறப்பாக முன்னெடுப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குவதற்கு இக்கொள்கையினூடாக பின்வரும் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றன.
- கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்ளுக்கு முழுமையாகவும் மற்றும் விரைவிலும் இழப்பீடு வழங்கப்படுதாகவும் மற்றும் அவர்கள் திருப்திகரமாக மீள்குடியேற்றப்பட்டுள்ளனர் என்பதை உறுதிப்படுத்துதல்.
- இடம்பெயர்ந்த நபர்களின் வாழ்வாதாரம் மறுசீரமைப்புச் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர்களின் வாழ்வாதாரம் மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

- அரசின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென கட்டாயமாகக் காணிகளைச் சுவீகரிப்பதன்விளைவாக உரிய மக்கள் வறுமை நிலைக்குத் தள்ளப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துதல்.
- கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு நிலங்களைச் சுவீகரிப்பதன் காரணமாக ஏற்படும் உள, கலாசார மற்றும் சமூக அழுத்தங்கள் மற்றும் ஏனைய நெருக்கீடுகளைக் கட்டுப்படுத்துவதற்கு உதவுதல்.
- இலகுவில் அணுகக்கூடிய மற்றும் விரைவில் பதில் வழங்கக்கூடிய மனக்குறைகளைத் தீர்க்கும் செயற்பாடுகள் தொடர்பில் கருத்திட்டங்களினூடாக பாதிக்கப்பட்ட நபர்களை விழிப்புணர்வூட்டுதல் ;மற்றும்
- கருத்திட்டத்தினை அமுலாக்கும் நிறுவனம் மற்றும் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் போன்ற இரு பகுதியினரும் பரஸ்பர ரீதியில் இனங்காணப்பட்ட காலவரையறையின் பிரகாரம் அமுற்படுத்தப்படும் ஆலோசனைசார், வெளிப்படையான மற்றும் நம்பகரமான முறையில் சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றச் செயற்பாட்டினை உருவாக்குதல்.

அபிவிருத்திச் செயற்பாடுகளுக்காகச் சகல நிலங்களையும் சுவீகரித்துக் கொள்ளுதல் தொடர்பில் சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை காணப்படுவதுடன், 20 குடும்பங்களை விட அதிகமான குடும்பங்களை மீளக் குடியேற்றும் வேளையில் மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுதல் வேண்டும் (கொள்கைப் பிரகடன வெளியீடு). 20 குடும்பங்களை விடக் குறைவான குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகும் வேளையில் மிகவும் குறைந்த விபரங்களுடன் மீள்குடியேற்றச் செய்றபாட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டும் என இக்கொள்கைப் பிரகடனத்தினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. நிதி மூலாதாரம் எவையாகவிருப்பினும், ஒவ்வொரு கருத்திட்டத்திற்கும் சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை உரித்தாகும். விபரங்களுக்கு **:** மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கான வழிகாட்டுதல்கள், 2003, காணி அமைச்சு, ஈ பின்னிணைப்பு **;** சுய விருப்புக்கு விரோதமான தொடர்பிலான தேசியக் கொள்கையினை அமுற்படுத்துவதற்கான முன்னெடுப்புக் கையேடு, 2003, காணி அமைச்சு ; உ பின்னிணைப்பு ; பங்கேற்பு மீள்குடியேற்ற முன்னெடுப்புத் தொடர்பிலான வழிகாட்டுதல்கள், 2003, காணி அமைச்சு.

## 2.3சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான வழிகாட்டுதல்கள்.

துரித மகாவலி அபிவிருத்திக் கருத்திட்டத்தினை அமுற்படுத்துவதற்கென சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான எண்ணக்கரு இலங்கையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கடந்த இரண்டு தசாப்தங்களாக உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற அபிவிருத்தி நிறுவனங்களின் தலையீட்டின் கீழ் இவ் எண்ணக்கரு முறைசார் வகையில் விரிவுபடுத்தப்பட்டுள்ளதுடன், இப்பிரச்சினைக்கு முன்வைக்கப்பட்ட அவதானத்தினைக் காரணமாகக் கொண்டு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான சமூகப் பாதுகாப்புக்கள் துறை மீது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஒரு நேர்மறையான தாக்கம் உருவாகியுள்ளது.

இக்கருத்திட்டம் தொடர்பில் உதவி நிறுவனமொன்று இற்றை வரையில் இனங்காணப்படவில்லை என்பதால், இவ்வாறான நிறுவனம்சார் கொள்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்கு இன்னமும் காலங் கனியவில்லை. எவ்வாறாயினும், பல வெளிவாரி உதவி நிறுவனங்கள் சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான உலக வங்கியின் செயற்பாட்டுக் கொள்கை (4.12)மீள்குடியேற்றத்தினைத் திட்டமிடுதல் தொடர்பிலான அடிப்படை வழிகாட்டல் நெறியொன்றாக ஏற்றுக் கொண்டுள்ளது. உதாரணமாக, ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு ஏஜன்சியின மீள்குடியேற்றம் தொடர்பிலான வழிகாட்டல் நெறி (JICA guidelines for Confirmation of Environmental and Social Considerations, April 2010)OP 4.12என்ற உலக

வங்கிப் பாதுகாப்புக் கொள்கையில் காட்டப்பட்ட அடிப்படைக் கூறுகளைக் கருத்திற் கொள்ளுவதற்குப் பரிந்துரைத்துள்ளது. சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தனிப் பிரச்சினைகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கும்போது, கடன் வழங்கும் நிறுவனங்கள் OP 4.12 என்ற உலக வங்கிக் கொள்கையின் கூறுகளைப் பின்பற்றுமாறு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு ஏஜன்சி கேட்டுக் கொண்டுள்ளது.

### 2.4.**கருத்திட்டத்துடன் தொடர்பான கொள்கைகளின் முக்கிய கோட்பாடுகள்**

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் 1 மற்றும் 2 வது படிநிலைகளின் நிர்மாணிப்பினை முன்னெடுக்கும்போது, காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றத்திற்கான வழிகாட்டல்களாக பின்வரும் அடிப்படைக் கொள்கைசார் கோட்பாடுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன

#### 2.4.1**விலகிச் செல்லுவதற்கான செலவு**

விலகிச் செல்லும் செலவு என்பது சுவீகரிப்பின் காரணமாக இல்லாமற் போகும் நிலங்களுக்குப் பதிலான சமமான நிலம், அவை அமைந்துள்ள இடம் மற்றும் சமமான இடத்தில் அமையப் பெற்ற நிலம் மற்றும் இழக்கப்படும் கட்டிடத்தின் தரைப் பரப்பு மற்றும் சமமான தரைப்பரப்பினைக் கொண்ட கட்டிடமொன்றினை வழங்குவற்குத் தேவையான இழப்பீட்டுத் தொகை எனப் பொருள் கொள்ளப்படும்.

#### **2.4.2கட்டமைப்புக்களின் இழப்பு**

சகல கட்டிடங்களினதும் வயதினைக் கவனத்திற் கொள்ளாது கொடுப்பனவுச் செலவு வழங்கப்படும். கட்டிடங்களிலிருந்து மீட்கக்கூடிய பொருட்களை தம்மிடம் வைத்துக் கொள்ளுவதற்கு கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். கருத்திட்டம் அமுற்படுத்துவதற்கு முன்னர் அனுபவித்த வாழ்க்கைத் தரத்திற்கும் மேலான உயர் வாழ்க்கைத் தரமொன்றினை எட்டச் செய்வதற்கு கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு உதவி வழங்கும் எண்ணக்கருவினை அமுற்படுத்துவதற்காக, மண்வீடு அல்லது ஒரு தென்னந்தோப்பில் வாழ்ந்த நபர்களுக்கு வீடொன்று இல்லாமற்போகும்போது வழங்கப்படும் நிதி இழப்பீடு மற்றும் பொதுவான இழப்பீடொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரித்துக் கிடைக்கும் என்பதுடன், அது அவர்களுக்கு கிடைக்கவுள்ள ஏனைய இழப்பீடுகளுக்கு மேலதிகமாகவே கிடைக்கும்.

#### 2.4.3**பிரத்தியேக நிலம் தற்காலிகமாக இழக்கப்படுதல்.**

கட்டுமாணப் பணிகளின்போது, நிரப்புதல் மற்றும் அணைக்கட்டுக்களுக்குத் தேவையான பொருட்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு பிரத்தியேக உரித்தினைக் கொண்ட காணி தற்காலிகப் பாவனைக்கு அவசியமாகும். இவ்வாறான தேவைப்பாடு எழுமாயின், கருத்திட்ட முகாமைத்துவ அலகின் உடன்பாட்டுடன், ஒப்பந்தக்காரருக்கு அந்த நிலத்தின் உரிமையாளருடன் தற்காலிகப் பாவனை தொடர்பில் உடன்படிக்கையொன்று முன்னெடுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதில் பின்வரும் விடயங்கள் விசேடமாகக் காட்டப்படுதல் வேண்டும் : (1)பாவிக்கப்படும் காலம் (2)பரஸ்பர ரீதியில் உடன்பட்ட நிபந்தனைகள் மற்றும் கொடுப்பனவு அளவுகள் (3)தற்காலிகமாகப் பாவிக்கப்படும் காலப்பகுதியினுள் இடம்பெறும் பொருட் பாதிப்புக்களுக்கான கட்டணங்கள் (4)சொத்துக்களுக்கு நேரிடும் ஏனைய பாதிப்புக்கள் மற்றும் சேதங்களுக்கான கட்டணங்கள் (5)சேத இழப்பீட்டுக் கட்டணங்கள் செலுத்தப்படும் தவணைகள் (6)புனர்வாழ்வு மற்றும் மறுவாழ்வு நடவடிக்கைகள் (7)தற்காலிகமான பாவனைக் காலம் நிறைவு பெற்று காணியினை முன்பிருந்த நிலைக்கு மீளமைப்பதற்கு அல்லது அந்நிலைக்கு மேலாக மேம்படுத்தி உடன்படிக்கையின் பிரகாரம், உரிமையாளருக்கு மீளவும் வழங்குதல் தொடர்பானது.

### 2.4.4 சுவீகரித்துக் கொள்ளப்பட்ட சொத்துக்களுக்கான கட்டணங்களைத் தீர்மானித்தல்.

சுவீகரித்துக் கொள்ளப்பட்ட சொத்துக்கள் தொடர்பில், தற்போது நிலவும் சந்தைப் பெறுமதிகளை அடிப்படையாகக் கொண்டு, அச்சொத்துக்களின் மாற்றுச் செலவினைப் பிரதிபலிக்கக்கூடியவாறு கட்டணங்கள் கணிப்பீடு செய்யப்படும். சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை சுய விருப்பின்றி மீள்குடியேற்றுதல் உலக வங்கிக் கொள்கைக்கமைய, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு இல்லாமற்போகும் சொத்துக்களை மீளச் சுவீகரித்துக் கொள்ளுவதற்கு போதுமான இழப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படுதல் வேண்டும். கருத்திட்டத்தின் கீழ் உரிய கட்டணங்களைத் தீர்மானிக்கும்போது இக்கொள்கை வழிகாட்டல்கள்கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

### 2.4.5 கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையில் வாழும் வீட்டு அலகுகளின் விசேட தேவைகள்.

குடிசன மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளினூடாக கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையில் வாழும் வீட்டு அலகுகள் அடையாளங் காணப்பட்டுள்ளன. பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்ப அலகுகள், மிகவும் முதுமையடைந்த குடும்பங்கள், வேறுபட்ட இயலுமைகளைக் கொண்ட நபர்கள், வறுமைக் கோட்டிற்குக் (தேசிய) கீழ் வாழும் நபர்கள் மற்றும் உரித்து உறுதியினைக் கொண்டிராத நபர்கள் இத்தொகுதிக்குள் உள்ளடக்கப்படுவர். அவர்களுக்கு இல்லாமற்போகும் வேறு விடயங்களுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுக் கொடுப்பனவுகளுக்கு மேலாக, குடும்ப அலகொன்றுக்கு ரூபா 15,000/-என்றவாறு விசேட கொடுப்பனவொன்றினை வழங்குவதற்கு இத்தொகுதி உரித்தினைக் கொண்டுள்ளது. அவர்களின் வீடுகளை மீள நிர்மாணிக்கும்போது கருத்திட்ட முகாமைத்துவ அலகு அதற்கு உதவும்.

### 2.4.6 கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையில் வாழும் குழுக்களுக்கான விசேட ஏற்பாடுகள்.

மீள்குடியேற்ற விளைவுகள் கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையில் வாழும் குழுக்களினை, மற்றவர்களினை விட மிகவும் தீவிரமான வகையில் தாக்குவதன் விளைவாக, கருத்திட்ட முகாமைத்துவ அலகு அவர்களை மீளக் குடியேற்றுவதற்கு விசேட திட்டத்தினைத் தயாரிக்கும். சமுதாய அமைப்பாளர்கள், கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையில் வாழுகின்ற இனங்காணப்பட்ட குழுவுடன் மீள்குடியேற்றத்திற்கு முன்னர் கலந்துரையாடி, அவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் விருப்புக்களை இனங்கண்டு அவர்களுக்கு உதவும். கருத்திட்ட முகாமைத்துவ அலகின் உதவியுடன், கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையில் வாழும் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட இந்நபர்களின் திறன்களை மேம்படுத்துவதற்கு, அவர்களுக்குப் பொருத்தமான சந்தர்ப்பங்களை அடையாளங் காண்பதற்கு மற்றும் இத் தொகுதியினரின் சமூகப் பொருளாதார நிலை மேம்பாட்டின் மீது காணப்படும் தடைகளை மீளாய்வு செய்வதற்கான இயலுமை இச்சமுதாய அமைப்பாளர்களுக்கு உள்ளன. கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டிய நிலையில் வாழும் சிறு குழுக்கள், அக்குழுக்களுக்கு உதவுதல் மற்றும் அவர்களின் தேவைகள் தொடர்பில் தலையிடும் பிரதேச செயலக மட்டங்களின் நிறுவனங்களுடன் தொடர்புபடுவதுடன், அவர்களுக்கு உரித்தான கவனிப்புக்களின் வகை மற்றும் அம்மட்டங்களைக் கவனத்திற்குக் கொண்டு அதன் பணி நிறைவேற்றப்படும்.

### 2.4.7 குத்தகை விவசாயிகளுக்குக் கிடைக்கும் உரித்துக்கள் (வயல் நிலங்கள் சட்டத்தின் கீழ்)

அறுவடைக்கு என உத்தேசிக்கப்பட்ட பகுதியினை உரிமையாளர்களுக்குச் செலுத்தி பயிர் வளர்த்தல் தொடர்பில் உள்ள குத்தகை விவசாய உரித்து, 1958ஆம் ஆண்டின் வயல் நிலச் சட்டத்தினூடாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. குத்தகை விவசாயம், நிரந்தர உரிமையாக வயல் நிலச் சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வயல் நிலச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், சுவீகரிக்கப்பட்ட சொத்துக்களுக்குக் கிடைக்கப் பெறும் இழப்பீடுகளின் பகுதியொன்று குத்தகை விவசாயிக்கு ஒதுக்கப்படும்.

### 2.4.8 அரச கூட்டுத்தாபனங்களுக்கு உரித்தான காணி

அரச கூட்டுத்தாபனங்களுடன் குத்தகை உடன்படிக்கைகளைச் செய்யும் நபர்களுக்கு இக்குத்தகை உடன்படிக்ககைகளுக்கு மீதமான காலத்திற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வருமானம் இல்லாமற் போகுமாயின், அந்த மீதமான காலப்பகுதிக்கான வருமானத்தினை இழப்பீடாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரிமையுள்ளது.

### 2.4.9தேசிய வறுமைக் கோடு

கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்கள் பல்வேறு சமூக அடுக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் குறைந்த அடுக்கினர், பொருளாதாரம், சமூகம் மற்றும் கலாசார ரீதியில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஆபத்தான சூழ்நிலையில் வாழ்கின்றனர். எனினும், வறுமையினைத் தீர்மானிப்பதற்கு அரசினால் பாவிக்கப்படும் சுட்டியாவது, தேசிய (உத்தியோகபூர்வ) வறுமைக் கோடாவதுடன், பல பரிமாணக் கணக்கீடுகள் மூலம் குடிசன மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் இது தீர்மானிக்கப்படுகின்றது. பொதுவாக பொதுமக்களின் வாழ்வாதாரம் தொடர்பில் சமூக – பொருளாதாரப் பகுப்பாய்வுக்குரிய விடய ஆரம்பப் பகுப்பாய்வினை முன்னெடுக்கும்போது, இக்காட்டி (சுட்டி) உபயோகிக்கப்படும். ஆதலால் மீள்குடியேற்றம் தொடர்பிலான திட்டங்களை முன்னெடுக்கும்போது, விசேடமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையில் வாழும் குழுக்கள் தொடர்பில் எடுக்கப்பட்ட பல்வேறான தேவைகளுக்காக இச்சுட்டியினைப் பயன்படுத்த முடியும். அதன் பிரகாரம், இது, தேசிய/உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டுக் கருத்திட்டத்தின் கீழ் மீள்குடியேற்றத்தினைத் திட்டமிடும்போது பயன்படுத்தக்கூடிய சுட்டியொன்றாகும்.

# அத்தியாயம்III: காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றத்தின் நோக்கம்

### 3.1அறிமுகம்

அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலை, பொல்ககவெல பிரதேச செயலகப் பிரிவின் **(DSD)**கிரிபத்வெல கிராம உத்தியோகத்தர் தொகுதியில்**(**GND) (லிகினியாகல குன்று அருகாமையில்) ஆரம்பிக்கப்பட்டு, கலகெதர பம்பரக்கொட்டுவA 010வீதிதொடர்புபடும் தும்பன பிரதேச செயலகப் பிரிவின் கட்டபிட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் (305)

முடிவடைகின்றது. மொத்த நீளம் 32.9 கி.மீ. ஆவதுடன், இது பிரதானமாக தெங்கு, வயல் மற்றும் இறப்பர் பயிர் நிலங்களினூடாக பயணிக்கின்றது.

### 3.2நிலங்களின் மீது ஏற்படும் பாதிப்புக்கள்.

கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட மொத்த நிலத்துண்டுகளின் எண்ணிக்கை 3,513 ஆகும். அதனுள் பிரத்தியேக உரிமையாளர்களுக்கு உரித்தான நிலத் துண்டுகளின் எண்ணிக்கை 3,015 ஆகும். இந்தப் பிரத்தியேக நில உரிமையாளர்களுள் 1,747 நிலத் துண்டங்கள் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களுடையது. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்கு உள்ளாகும் பிரத்தியேகப் பிரிவுக்கு உரித்தான மொத்த நிலப் பரப்பு105,397.9 பேர்ச்சாகும். அதற்கு மேலாக அரசுக்கு உரித்தான நிலத் துண்டுகள் 463 கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாவதுடன், அந்நிலத்தின் மொத்தப் பரப்பளவு 6,466 பேர்ச்சாகும். மேலும் பொதுச் சொத்தாக இனங்காணப்பட்ட காணித் துண்டுகள் 35 ஆவதுடன், இது 1,873 பேர்ச்சாகும். அதன் பிரகாரம் கருத்திட்டத்தின் 3 வது படிநிலையினூடாக பாதிப்புக்குள்ளாகும் மொத்த நிலப் பரப்பினளவு 113,736.9 ஆகும் (710.9 ஏக்கர்). பிரத்தியேக நில உரிமையாளர்களின் பட்டியல் முதன்மையான விபரங்களுடன் பின்னிணைப்பு IXஊடாக காட்டப்பட்டுள்ளது. அரசின் நிலப் பட்டியல் மற்றும் பொது நிலப் பட்டியல் பின்னிணைப்புX மற்றும்XIஇன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

#### 3.2.1பிரத்தியேகக் காணிகள் மற்றும் பாவனை மீது ஏற்படும் பாதிப்புக்கள்.

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலைக்கு உரித்தான நிலச் சுவீகரிப்பினூடாக ஏற்படும் பாதிப்புக்கள் அதிகளவில் ஏற்படுவது பிரத்தியேக நிலத் துண்டுகளின் மீதாகும் (105,397.9 பேர்ச்). அது சுவீகரிக்கப்படவுள்ள மொத்த நிலத் துண்டுகளின் 92 %ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. மீதமான 8% அரச மற்றும் பொது நிலத் துண்டுகளாகும். அட்டவணை இலக்கம் 5 இன் ஊடாக காட்டப்பட்டவாறு பிரத்தியேக நிலங்கள் பிரதானமாக 04பாரிய வகைகளுக்குள் வகைப்படுத்தப்படும். அவ்வட்டவணையின் பிரகாரம் அதில் 70% விவசாய நிலமாவதுடன், 21 % குடியிருப்பு இடமாகும். ஆகக்குறைந்த சதவீதத்தினைக் கொண்ட நிலங்களாக வியாபார மற்றும் வர்த்தக நிலங்கள் காணப்படுகின்றன. 09 % வரையில் தரிசு நிலங்கள் காணப்படுவதுடன், இதற்குக் காரணம், இப்பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கீழ் மட்டத்திற் காணப்படும் நிலப் பாவனையாகும்.

**அட்டவணை இலக்கம்05:பிரத்தியேகக் காணித் துண்டங்கள் வகைக்கமைய (பேர்ச்)**

| நிலங்களின் வகை | துண்டங்களின் எண்ணிக்கை | % | மொத்தப் பிரதேசம் | பாதிக்கப்பட்ட பிரதேசம் |
|---|---|---|---|---|
| குடியிருப்பு | 624 | 20.7 | 65,285.3 | 21,356.5 |
| வர்த்தகம்/வியாபாரம் | 25 | 0.8 | 2,025.6 | 825.3 |
| தரிசு நிலம் | 268 | 8.9 | 18,042.4 | 7,047.4 |
| விவசாயம் | 2,098 | 69.6 | 205,515.2 | 76,168.7 |
| மொத்தம் | 3,015 | 100.0 | 290,868.6 | 105,397.9 |

மூலாதாரம்: CEP/ 3 வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு.

இப்பாதிப்புக்குள்ளான பிரத்தியேக நிலங்களில் அநேகமானவை கிராம பிரதேசங்களிலேயே அமைந்துள்ளன. இரண்டாவது அதிகரிப்பு அரை நகர்ப்புற பிரதேசங்களாவதுடன், அப்பிரதேசங்கள் சிறிய நகர பிரதேசங்களான பொல்ககவெல மற்றும் கலகெத நகரங்களுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது.இந்த அரை நகர்ப்புற பிரதேசங்கள் இரண்டு பிராந்திய நகர

நிலையங்களுடன் தொடர்பினைக் கொண்டுள்ளது, அவை, குருனாகல் மற்றும் கண்டி நகரமாகும். விபரங்கள் அட்டவணை இலக்கம் 06 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம்06:பாதிப்புக்குள்ளான பிரத்தியேக நிலத் துண்டங்களின் அமைவிடம்**

| நிலத்தின் வகை | எண்ணிக்கை | | | மொத்தம் |
|---|---|---|---|---|
| | நகரம் | அரை-நகர்ப்புறம் | கிராமம் | |
| குடியிருப்பு | 1 | 240 | 383 | 624 |
| வர்த்தகம்/வியாபாரம் | 0 | 10 | 15 | 25 |
| தரிசு நிலம் | 3 | 218 | 47 | 268 |
| விவசாயம் | 3 | 1,141 | 954 | 2,098 |
| மொத்தம் | 7 | 1,609 | 1,399 | 3,015 |

மூலாதாரம்: CEP/ 3 வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு.

கருத்திட்டத்தின் 3 வது படிநிலையுடன் 03 மாவட்டங்கள் தொடர்புபட்டுள்ளதுடன், அதில் அதிகளவிலான நிலப்பகுதிகளைக் (41%) கொண்டுள்ள மாவட்டமாக விளங்குவது குருனாகல் மாவட்டமாகும். மீதி நிலங்களுள் 35%கேகாலை மாவட்டத்திற்கும்,24%கண்டி மாவட்டத்திற்கும் உரித்தாகின்றது. குருனாகல் மாவட்டத்தினுடாக 02 பிரதேச செயலகப் பிரிவுகளினூடாக வீதிப் பயணிக்கின்றது (பொல்ககவெல மற்றும் மாவத்தகம), கேகாலை மாவட்டத்தின் 01 பிரதேச செயலகப் பிரிவினையும் (ரம்புக்கன), கண்டி மாவட்டத்தின் 01 பிரதேச செயலகப் பிரிவினையும் (கலகெதர) கடந்து வீதி பயணிக்கின்றது.

**அட்டவணை07:பாதிப்புக்குள்ளான பிரத்தியேக நிலத் துண்டங்கள் (பேர்ச்) மாவட்ட மட்டங்களில் பகிர்ந்தளிக்கப்படும் முறைமை.**

| மாவட்டம் | குடியிருப்பு | வர்த்தகம்/வியாபாரம் | தரிசு நிலங்கள் | விவசாயம் | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| குருனாகல் | 6,812.4 | 348.5 | 3,378.9 | 32,454.1 | 42,993.97 | 40.8 |
| கேகாலை | 9,272.2 | 145.9 | 2,481.6 | 25,108.1 | 3,7007.7 | 35.1 |
| கண்டி | 5,271.9 | 330.9 | 1,186.9 | 18,606.5 | 25,396.21 | 24.1 |
| மொத்தம் | 21,356.5 | 825.3 | 7,047.4 | 76,168.7 | 10,5397.9 | 100.0 |

மூலாதாரம்: CEP/ 3 வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

மேலே காட்டப்பட்டவாறு, கருத்திட்டத்தின் 3 வது படிநிலை 03 மாவட்டங்களினுள் அமையப் பெற்ற **0**4 பிரதேச செயலகங்களுடன் தொடர்பானதாகும். பாதிப்புக்குள்ளான நில வகைகளின் பிரகாரம் ஒரு பிரதேச செயலகப் பிரிவுக்கு உரித்தான நிலத்தினளவு (பேர்ச்) அட்டவணை இலக்கம் 08 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது. இவ் அட்டவணையின் பிரகாரம் பாதிப்புக்குள்ளாகும் அதிகளவு நிலம் (35%) காணப்படுவது கேகாலை மாவட்டத்தின் ரம்புக்கனவாகும். 24% மான இரண்டாவதாக அதிகளவான நிலம் காணப்படுவது தும்பனே பிரதேச செயலகப் பிரிவாகும். குருனாகல் மாவட்டத்தில் பாதிப்புக்குள்ளாகும் அதிகளவு நிலம் (21%) காணப்படுவது பொல்ககவெல பிரதேச செயலகப் பிரிவாவதுடன், அதில் இரண்டாவது அதிகரிப்பு (20%) காணப்படுவது மாவத்தகமவாகும். விபரங்கள் அட்டவணை இலக்கம் 08 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை08 :பாதிப்புக்குள்ளான பிரத்தியேக நிலத் துண்டங்கள் (பேர்ச்) பிரதேச செயலக மட்டங்களில் (DSD) பகிர்ந்தளிக்கப்படும் முறைமை.**

| பிரதேச செயலகப் பிரிவு | வதிவிடம் | வர்த்தகம்/வியாபாரம் | தரிசு நிலங்கள் | விவசாயம் | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| பொல்ககவெல | 3,339.8 | 331.4 | 2,997.3 | 15,822.3 | 22,493.2 | 21.3 |
| ரம்புக்கன | 9,272.2 | 145.9 | 2,481.6 | 25,108.1 | 37,007.7 | 35.1 |
| மாவத்தகம | 3,472.6 | 17.1 | 379.2 | 16,631.8 | 20,500.7 | 19.5 |
| தும்பன | 5,271.9 | 330.9 | 1,186.9 | 18,606.5 | 25,396.2 | 24.1 |
| மொத்தம் | 21,356.5 | 825.3 | 7,045.0 | 76,168.7 | 105,397.9 | 100.0 |

மூலாதாரம்: CEP/ 3 வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

பாதிப்புக்குள்ளாகும் இந்நிலங்களின் உரித்து வகை இனங்காணப்பட்டுள்ளது. பொதுவாக, தரவுகளைச் சேகரிக்கும் செயற்பாட்டில் இந்த நிலங்கள் கொண்டுள்ள வகை மிகவும் முக்கியமாவதுடன், அதனை இனங்காண்பது மிகவும் சிக்கலாகும். கருத்திட்டத்தின் 3 வது படிநிலைக்கான பாதிப்புக்குள்ளானவர்களின் நிலங்கள் கொண்டுள்ள வகை அட்டவணை இலக்கம் 09 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது. அட்டவணைக்கமைய உரிமையுடன் பயன்படுத்தப்படும் நிலப் பரப்பளவு அதிகரிக்கும் அளவு (87%) ஆகவுள்ளது. மேலும், பகிரப்பட்ட, அடைவு வைக்கப்பட்ட, குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட மற்றும் கூலிக்கு வழங்கப்பட்ட போன்ற ஏனைய வகைகளும் காணப்படுகின்றன.இவ்வகைகளுள், பகிரப்பட்ட மற்றும் குத்தகையினை அடிப்படையாகக் கொண்ட உரிமையாளர்களின் தொகை அதிகளவிற் காணப்படுகின்றது. விசேடமாக, பிரேரிக்கப்பட்ட அதிவேக வீதியில் விகாரை மற்றும் தேவாலய நிலங்களுமுள்ளன. அறிக்கையில் வேறு பிரிவுகளில் காட்டப்பட்டவாறு இந்நிலங்கள் கொண்டுள்ள வகை மிகவும் சிக்கலான இயல்பினைக் கொண்டுள்ள விடயமொன்றாகும். அட்டவணையில் வேறான தொகுதியின் கீழுள்ள நிலப்பரப்புக்களினூடாக இச்சிக்கல் பிரதிபலிக்கின்றது. அதற்கு நிகராக சில வேறு தொகுதிகளின் நிலப்பரப்பளவும் வரையறையினைத் தாண்டியுள்ளது.

**அட்டவணை09:நிலம் கொண்டுள்ள இயல்பு மற்றும் பாதிப்புக்குள்ளான நிலப் பரப்பளவு**

| நிலம் கொண்டுள்ள இயல்பு | பரப்பளவு (பேர்ச்) | |
|---|---|---|
| | மொத்தம் | பாதிப்புக்குள்ளான பரப்பு |
| உரித்தினைக் கொண்ட மற்றும் பாவனையிலுள்ள | 263,439.0 | 91,503.8 |
| பங்குக்குப் பெறப்பட்ட | 22,908.5 | 10,688.2 |
| பங்குக்கு வழங்கப்பட்ட | 478.0 | 472.2 |
| அடைமானத்திற்கு வழங்கப்பட்ட | 941.5 | 912.8 |
| அடைமானத்திற்கு எடுக்கப்பட்ட | 60.0 | 0.5 |
| குத்தகைக்கு எடுக்கப்பட்ட | 1,064.5 | 840.9 |
| குத்தகைக்கு வழங்கப்பட்ட | 0.0 | 0.0 |
| வாடகைக்கு எடுக்கப்பட்ட | 358.2 | 348.3 |
| வாடகைக்கு வழங்கப்பட்ட | 16.2 | 16.2 |
| பிற | 1,602.7 | 615.0 |
| நிலம் கொண்டுள்ள இயல்பின் மொத்தம் (பேர்ச்) | 290,868.6 | 105,397.9 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

நில உரித்து என்பது இலங்கையின் கிராமிய பிரதேசத்தின் நபர்களின் சமூக அந்தஸ்தினை நிரூபிப்பதாக உள்ளது. தங்களுக்கு உரித்தான நிலம் பயிரிடப்பட்டிருந்தாலும் சரி பயிரிடப்படாதிருந்தாலும் சரி, நில உரித்து உரிய வட்டாரத்தின் சமூக அந்தஸ்தினையே பிரதிபலிக்கின்றது. ஆதால் அநேகமானோர் நிலத்தினை இயல்பினைக் கதைக்காது தமது

உரித்தினையே முன்னெடுத்துச் செல்லுகின்றனர். 10 வது அட்டவணையினூடாக எடுத்துக் காட்டப்பட்டவாறு அவர்களுள் அநேகமானோர் உரித்தினைக் கொண்ட உறுதியினைக் கொண்டுள்ளனர். அதன் நிலப்பரப்பளவு 1,358 ஏக்கராகும். இந்த மொத்த நிலப்பரப்புக்களில் 511 ஏக்கர் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும். அண்மையில் புலனாய்வு செய்தபோது, பல நிலங்கள் பெற்றோர்களின் நிர்வாகத்தின் கீழ் காணப்படுவது தெரிய வந்துள்ளது. இப் பெற்றோர்களுடன் கூட்டுக் குடும்பங்களாக வாழும் பிள்ளைகளுக்கிடையே இழப்பீட்டு நிதியினை வழங்குதல் மற்றும் மீள்குடியேற்ற செயற்பாட்டில் எவையேனும் பிரச்சினைகள் உருவாகின்றன. அதே போல குடும்ப அங்கத்தவர்களுக்கிடையே பங்கிடப்பட்ட நிலமே அதிகளவில் காணப்படுகின்றது. ஏனைய நிலத் தொகுதிகளான ஜயபூமி/சுவர்ணபூமி மற்றும் உரிமம் பெற்ற நிலங்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அளவுகளில் காணப்படுகின்றன.

**அட்டவணை10:உரித்தின் தன்மையின் பிரகாரம் நிலங்களின் வகை மற்றும் அவற்றின் பரப்பு**

| உரித்தின் வகை | பரப்பு(பேர்ச்) | | பாதிக்கப்பட்டுள்ள | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | % | மொத்தம் | % |
| தனி உரித்து உறுதி | 217,271.2 | 74.7 | 81,743.7 | 77.6 |
| நன்கொடை/கட்டுப்பாட்டின் கீழ் | 3,163.2 | 1.1 | 1,004.7 | 1.0 |
| துண்டாடப்படாத பங்கு | 60,218.7 | 20.7 | 17,022.6 | 16.2 |
| ஜயபூமி/சுவர்ணபூமி | 1,750.9 | 0.6 | 1,008.7 | 1.0 |
| அனுமதி வழங்கப்பட்டது | 886.5 | 0.3 | 538.1 | 0.5 |
| அனுமதி நிலுவையிலுள்ளது | 1,669.6 | 0.6 | 760.9 | 0.7 |
| குத்தகை உறுதி | 2,227.7 | 0.8 | 1,554.7 | 1.5 |
| வாடகை | 183.9 | 0.1 | 155.4 | 0.1 |
| உறுதியோ அல்லது அனுமதியோ இல்லை | 2,805.2 | 1.0 | 1,333.6 | 1.3 |
| பிற | 691.6 | 0.2 | 275.4 | 0.3 |
| மொத்தமான உரித்தின் வகை (பேர்ச்) | 290,868.6 | 100.0 | 105,397.9 | 100.0 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

மொத்த நிலத் துண்டங்களினுள், உரிமையாளர்கள் தமது உரித்தினை உறுதிப்படுத்துவதற்கு சட்ட உறுதியினைக் கொண்ட நிலத் துண்டங்கள் 2,783 உள்ளது. உரித்தின் தன்மையின் பிரகாரம் இரண்டாவது அதிக நிலமாக விளங்குவது, விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட விவசாய நிலமாகும் (137.)மேலும், 41 ஆக்கிரமிப்பு நிலங்கள் மற்றும் 29 அத்துமீறி குடியேறிய நிலங்களும் உள்ளன. இலக்கம் 11 அட்டவணையினூடாக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இல.11:உரித்துத் தொடர்பிலான சட்ட இயல்பின் கீழ் நில வகைகள்**

| நிலத்தின் தன்மை | வகை | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|
| | சட்ட உறுதி | உறுதி ஆவணமற்ற எனினும் உரித்தினைக் கோருபவர் | குடியிருப்பாளர் | அத்துமீறிய | குத்தகை | வாடகை | |
| வதிவிடம் | 586 | 11 | 18 | 4 | 2 | 3 | 624 |
| வர்த்தகம்/வியாபாரம் | 25 | 0 | 0 | 0 | 0 | 0 | 25 |
| தரிசு நிலங்கள் | 246 | 4 | 15 | 2 | 1 | | 268 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| விவசாயம் | 1,926 | 26 | 104 | 23 | 9 | 10 | 2,098 |
| மொத்தம் | 2,783 | 41 | 137 | 29 | 12 | 13 | 3,015 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

பெரும்பான்மையினர் தமது உரித்து தொடர்பில் பிரச்சினையினைக் கொண்டிராத நில உரிமையாளர்களாவர். எனினும் சிறு தொகுதியினர், உரித்து தொடர்பில் பல்வேறான பிரச்சினைகளினைக் கொண்டுள்ளனர். அட்டவணை இலக்கம் 12 இன் பிரகாரம் நீதிமன்றில் இது தொடர்பில் ஏற்கனவே 38 சட்ட வழக்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் நில உரித்து தொடர்பில் சில குடும்பத்தின் பிரத்தியேக விடயங்களும் காணப்படுகின்றன.

**அட்டவணை12:நிலம் தொடர்பில் இனங்காணப்பட்ட பிரச்சினைகளின் நிலபரம்**

| நிலத்தின் வகை | பிரச்சினைகளின் தன்மை | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | சட்ட விசாரணையுடன் | % | குடும்ப மோதலுடன் | % | பிரத்தியேக மோதலுடன் | % |
| பிரத்தியேக உறுதி | 20 | 52.6 | 5 | 35.7 | 4 | 30.8 |
| பிரிக்கப்படாத பங்கு நிலம் | 18 | 47.4 | 9 | 64.3 | 9 | 69.2 |
| மொத்தம் | 38 | 100.0 | 14 | 100.0 | 13 | 100.0 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

நிலச் சுவீகரிப்பு முன்னெடுப்பினூடாக இந்நிலங்களின் பயிர் வளர்ப்பு பாதிக்கப்படும். பாதிப்புக்குள்ளாகும் நிலத் துண்டங்களைக் கவனத்திற் கொண்டு, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்கு உள்ளாகுபவர்களின் வாழ்வாதாரங்களின் மீது நேரடித் தாக்கம் ஏற்படும் என்பதுடன் பிரதேச மற்றும் தேசிய பொருளாதாரத்தில் மறைமுகத் தாக்கத்தினை விளைவிக்கும். விசேடமாக, ரம்புக்கன, மாவத்தகம மற்றும் தும்பனே பிரதேச செயலகங்களில் கராம்பு மற்றும் சாதிக்காய் போன்ற வாசனைத் திரவியங்கள் பயிரிடப்படுவது ஏராளமாகக் காணப்படுகின்றது. வற்றாத பயிர்களின் கீழ் இவை வகைப்படுத்தப்படுகின்றன. அட்டவணை இலக்கம் 12 இன் ஊடாக நிலத் துண்டங்களின் எண்ணிக்கை மற்றும் நிலப் பரப்பு காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஒவ்வொரு பயிர் வகைக்கும் பயன்படுத்தப்பட்ட நிலத் துண்டங்கள், பல்வேறான பயிர்ச் செய்கைத் திட்டங்களின் காரணமாக ஆற்றலினை இழந்துள்ளன. இது பல வீட்டுத் தோட்டங்களில் பொதுவாகக் காணப்படுகின்றது

**அட்டவணை13: பயிரிடப்பட்டுள்ள பயிர்கள், பாதிக்கப்பட்ட நிலத் துண்டங்கள் மற்றும் நிலப்பரப்பளவு**

| பயிர் | பாதிக்கப்பட்ட நிலத்துண்டங்கள் | மொத்த நிலப்பரப்பளவு (பேர்ச்) | பாதிக்கப்பட்ட நிலப்பரப்பளவு |
|---|---|---|---|
| வீட்டுத் தோட்டம் (பூக்கன்றுகள்) | 3,512 | 5,280.65 | 2,028.11 |
| நெல் (கி.கி.) | 796,467 | 67,330.01 | 30,698.94 |
| தேயிலை (புதர்கள்) | 3,008 | 1,313.97 | 1,099.54 |
| இறப்பர் (மரங்கள்) | 6,707 | 30,232.97 | 8,545.5 |
| இலவங்கப்பட்டை (கறுவா) (புதர்கள்) | 1,108 | 655.65 | 551.46 |
| வாழை (புதர்கள்) | 9,197 | 30,611.64 | 67,743.99 |
| தெங்கு/செவ்விளனி (மரங்கள்) | 25,351 | 207,498.84 | 68,546.61 |
| மா (மரங்கள்) | 725 | 27,542.95 | 10,550.12 |
| ஈரப்பலா (மரங்கள்) | 238 | 13,207.66 | 4,968.97 |
| பலா (மரங்கள்) | 2,223 | 95,310.83 | 26,706.63 |
| தேசி/எலுமிச்சை(மரங்கள்) | 111 | 2,668.35 | 1,187.8 |
| தோடை (மரங்கள்) | 55 | 3,293.54 | 1,511.66 |

| | | | |
|---|---|---|---|
| விறகு (மரங்கள்) | 493 | 2,068.49 | 921.41 |
| தளபாட செய்யும் மரம் (மரங்கள்) | 12,092 | 160,289.28 | 78,576.65 |
| பிற 1 (வற்றாத பயிர்கள்) | 26,474 | 126,723.9 | 42,153.29 |
| பிற 2 (பழங்கள் - பிற) | 6,632 | 52,124.15 | 25,264.89 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசனமதிப்பீடு

அதிகப்படியான தாக்கம் தெங்குச் செய்கைக்கே ஏற்படும் என்பதோடு வீதி செல்லும் பாதையின் கரையோரத்திலுள்ள 25,351 தென்னை மரங்கள் பாதிக்கப்படும். 2,223 வரையான பலா மரங்கள் பாதிக்கப்படும். இத் தொகை கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய அதிகூடிய தொகை என்பதால் அதனூடாக இக்கிராமங்களின் உணவுப் பாதுகாப்பின் மீது எதிர்மறைத் தாக்கத்தினை விளைவிக்கும். 12,092 மரத் தளபாட மரங்கள் பாதிக்கப்படும். பாதிப்புக்குள்ளாகும் அடுத்த உயர்பயிர் தொகுதியாகவிருப்பது நெற் செய்கை என்பதுடன் ஒவ்வொரு பருவத்திற்கும் 796,467 கி.கி. என்றவாறு இழக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

நிலம், பயிர் மற்றும் வேளாண்மையின் மீது ஏற்படும் பாதிப்புக்கு மேலாக கருத்திட்டத்தின் காரணமாக லலான் இறப்பர் உற்பத்தி கைத்தொழிலுக்கு உயர் பாதிப்பொன்று ஏற்படும். அதற்கு உரித்தான 2,192 பேர்ச் பாதிப்புக்கு உட்படும் என்பதுடன், ஏனைய மரங்களுக்கு மேலாக அந்தக் கம்பனிக்கு 805 இறப்பர் மரங்கள் இல்லாது போகும். கருத்திட்டத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் சில வர்த்தக நிறுவனங்களும் காணப்படுவதுடன், வர்த்தகர்கள் மற்றும் தொழிலாளர்கள் விளைத்திறனான உற்பத்திச் செயற்பாட்டில் செயலூக்கமாக ஈடுபட்டுள்ளனர். அட்டவணை இலக்கம் 14 இன் ஊடாக வர்த்தககச் செயற்பாடுகள் வகைப்படுத்தப்பட்டுக் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம்14:கருத்திட்டத்தினூடாக பாதிக்கப்படும் வர்த்தக நிறுவனங்கள்**

| வர்த்தக வகை | வர்த்தகங்களின் எண்ணிக்கை |
|---|---|
| சில்லறைக் கடை (அத்தியாவசியப் பொருட்கள்) | 5 |
| சிறு கடை (சேவைகள்) | 4 |
| களஞ்சியம் | 1 |
| சிற்றுண்டிச்சாலை/விடுதி/மதுபானக் கடை | 2 |
| தேநீர்க் கடை | 1 |
| சிறியளவிலான கைத்தொழில் | 8 |
| பாரியளவிலான கைத்தொழில் | 2 |
| பிற | 4 |
| **மொத்தம்** | 27 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

வர்த்தக உரிமையாளரினை உள்ளடக்கி 84 ஊழியர்கள் உள்ளனர். அவர்களுள் 66 ஆண் ஊழியர்களும் மற்றும் 18 பெண் ஊழியர்களும் உள்ளனர். அவர்களுள் பெரும்பான்மையினார் (80.9%) ரூபா. 1000,000/- வரையில் சிறந்த மாதாந்த சம்பளம் பெறுபவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களுள் பெரும்பான்மையினர் (90.5) கருத்திட்டத்தின் காரணத்தினால் தங்கள் வியாபாரத் தளங்களை இழக்க வேண்டிய நிலையிலுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் கருத்திட்டத்தின் காரணத்தினால் சொந்தத் தொழில் மற்றும் பயனான வருமான வழிவகை இல்லாமற் போகும் எனத் தோன்றுகின்றது.

### 3.2.2அரச நிலம், பொது நிலம் மற்றும் அவற்றின் பாவனைக்கு ஏற்படும் பாதிப்பு

**அட்டவணை இலக்கம்15:கருத்திட்டத்தினூடாகப் பாதிப்புக்குள்ளாகும் அரச மற்றும் பொதுச் சொத்துக்கள்**

| விபரம் | | காணித் துண்டுகளின் எண்ணிக்கை | பேர்ச் |
|---|---|---|---|
| வீதிகள் | வீதி அபிவிருத்தி அதிகார சபை | 2 | 138.4 |
| | மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை | 12 | 214.1 |
| | பிரதேச சபை | 104 | 2,236.8 |
| | நடைபாதை | 23 | 53.02 |
| | அறியப்படாத | 86 | 975.48 |
| | பாலம் | 18 | 179.9 |
| நீர் வழிகள் | அரசு | 144 | 1,919.1 |
| | அறியப்படாத | 43 | 477.28 |
| பிற | இலங்கை புகையிரதத் திணைக்களம் (SLRD) | 1 | 1.06 |
| | நீர்நிலைகள் | 11 | 26.7 |
| | கைவிடப்பட்ட நிலம் | 1 | 33.1 |
| | சதுப்பு நிலம் | 15 | 179.8 |
| | தோட்டப்புறம் | 3 | 31.27 |
| **மொத்தம்** | | 463 | 6,465.8 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

பாதிப்புக்குள்ளாகும் ஒவ்வொரு அரசின் சொத்து தொடர்பான விபரங்கள் பின்னிணைப்பு **X**இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

அரச சொத்துக்களுக்கு மேலாக, சமுதாயத்திற்கு உரித்தான பொதுச் சொத்துக்களும் காணப்படுகின்றன. அட்டவணை இலக்கம் 16 இன் ஊடாக இப் பொதுச் சொத்துக்கள் காட்டப்பட்டுள்ளன. அநேகமான பொதுச் சொத்துக்கள் பகுதியளவில் பாதிக்கப்படும் என்பதுடன், அது சமுதாயத்தின் மீது கடுமையான பாதிப்பொன்றினை ஏற்படுத்த மாட்டாது.இச் சொத்துக்களுக்கான மொத்த நிலப் பரப்பு 11.7 ஏக்கராகும்.

**அட்டவணை இலக்கம்16:கருத்திட்டத்தினூடாகப் பாதிப்புக்குள்ளாகும் அரச மற்றும் பொதுச் சொத்துக்கள் தொடர்பான மேலதிக தகவல்கள்.**

| விபரம் | துண்டுகளின் எண்ணிக்கை | பேர்ச் |
|---|---|---|
| தொலைபேசி | 1 | 0.04 |
| பொதுக் கிணறு | 4 | 6.71 |
| பாடசாலைகள் | 4 | 309.33 |
| ஆலயங்கள் | 8 | 307.53 |
| தேவாலயங்கள் | 5 | 104.94 |
| காடு | 3 | 437.43 |
| சனசமூக நிலையம் | 5 | 31.65 |
| இடுகாடு | 4 | 631.45 |

| | | |
|---|---:|---:|
| விளையாட்டு மைதானம் | 1 | 43.08 |
| மொத்தம் | 35 | 1,872.16 |

மூலாதாரம்**:** CEP/3வது படிநிலை**/**RAP/குடிசன மதிப்பீடு

பாதிப்புக்குள்ளாகும் ஒவ்வொரு சொத்து தொடர்பான விபரங்கள் பின்னிணைப்பு **XI**இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

### 3.3 பிரத்தியேக நிலம் மற்றும் கட்டமைப்புக்கள் மீது ஏற்படும் பாதிப்பு

பாதிப்புக்குள்ளாகும் அநேக நிலங்களில், சமூக மற்றும் கலாசார தேவைகளுக்கென கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகுபவர்களினால் நிர்மாணிக்கப்பட்ட பல்வேறான கட்டமைப்புக்கள் காணப்படுகின்றன. அட்டவணை இலக்கம் 18 இன் ஊடாகக் காட்டப்பட்டவாறு, இதன் கீழ் இனங்காணப்பட்டுள்ள 1,030 கட்டிடங்கள் உள்ளன என்பதுடன், இதில் 607 வீடுகளாகும். பாதிப்புக்குள்ளாகும் பல்வேறான கட்டிடத் தொகுதிகளுக்கிடையே அதிகூடிய எண்ணிக்கை இதுவாகும். இரண்டாவது அதிக தொகுதியாக குடிசைகாணப்படுவதுடன் அதன் எண்ணிக்கை 183 ஆகும். அதனுடன் பிரத்தியேக நிலத்தில் நடைபாதையோரமாக அமைந்துள்ள விற்பனை/வர்த்தகக் கடைகள் 49ம் உள்ளன. அதற்கு மேலாக கருத்திட்டத்தினூடாக பாதிப்புக்குள்ளாகும் 14 வாடகை வீடுகளும் காணப்படுகின்றன.தரைக்கு சீமெந்து இடப்பட்டு, சுவர் செங்கல் அல்லது சீமெந்துக்கல் பயன்படுத்தப்பட்டு கட்டப்பட்ட ஒடு அல்லது அஸ்பெஸ்ரோஸ் கூரை பயன்படுத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட 674 கட்டிடங்களும் உள்ளன. அதனுள் வாடகை வீட்டினை உள்ளடக்கி 490 குடியிருப்பு வீடுகளும் உள்ளன. பின்வரும் அட்டவணை இலக்கம் 17 இன் ஊடாக மேலதிக விபரங்களை அறிய முடியும்**.**

**அட்டவணை இலக்கம்17:கட்டமைப்புக்கள் மற்றும் நிர்மாணிப்புக்களின் வகை**

| தரை/சுவர்/கூரைக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் வகை | கட்டமைப்புக்களின் வகை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குடியிருப்பு வீடு | வாடகை வீடு | வர்த்தக/வியாபாரம் | குடியிருப்பு/வர்த்தகம் | களஞ்சியம் | குடிசை | கைவிடப்பட்ட நிலம் | பிற | மொத்தம் |
| சாதாரண வைக்கோல் குடிசை | 10 | 0 | 8 | 1 | 0 | 26 | 1 | 3 | 49 |
| மண்/செங்கல்/கூரை – ஒடு | 10 | 2 | 3 | 0 | 0 | 3 | 0 | 2 | 20 |
| சீமெந்து/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/கூரை –ஒடு/அஸ்பெஸ்ரோஸ் | 483 | 7 | 19 | 7 | 9 | 69 | 10 | 69 | 673 |
| சீமெந்து/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/ GI தகரக் கூரை | 43 | 1 | 4 | 0 | 3 | 78 | 3 | 16 | 148 |
| சீமெந்து/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/சீமெந்துக் கூரை | 14 | 4 | 2 | 0 | 0 | 0 | 1 | 20 | 41 |
| ஒடு./செங்கல் அல்லது சீமெந்துக் கல்/கூரை –ஒடு/ அஸ்பெஸ்ரோஸ் | 29 | 0 | 0 | 0 | 1 | 1 | 0 | 4 | 35 |
| ஒடு/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/செங்கல் கூரை | 8 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 4 | 12 |
| பிற | 10 | 0 | 5 | 0 | 0 | 6 | 1 | 30 | 52 |
| மொத்தம் | 607 | 14 | 41 | 8 | 13 | 183 | 16 | 148 | 1,030 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

இழப்பீடு வழங்குதல் மற்றும் மீள்குடியேற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் கட்டிடத்தின் பருமன் மிகவும் முக்கியமாகும். பாதிப்புக்குள்ளாகும் பெரும்பான்மையான கட்டிடங்களின்

தொகை (485) என்பதுடன் அதன் வர்க்க அடி 500 க்கும் குறைவானதாகும். இவற்றினுள் 119குடியிருப்பு வீடுகளாகும். இரண்டாவதாக அதிகளவில் காணப்படும் கட்டிடத்தின் (271)சதுர அடி1001 -2000 என்பதற்கிடையிலாகும். இவற்றினுள் பெரும்பான்மையானவை குடியிருப்பு வீடுகளாகும் (245). மூன்றாவதாக அதிகளவில் காணப்படும் கட்டிடத்தின்(191)சதுர அடி501 – 1000 த்திற்கு இடையிலாகும் என்பதுடன், (191) கட்டிடங்களினுள் 164 குடியிருப்பு வீடுகளாகும். மேலும் 2001 – 3000சதுர அடிக்கு இடையே 57 வீடுகளும் உள்ளன. கைவிடப்பட்ட/பாவிக்கப்படாதிருக்கும் தொகுதிக்குக் கீழ் 16 கட்டிடங்களும் உள்ளன என்பதுடன், அவற்றில் பெரும்பான்மையானவை மிகவும் சிறியவையாகும். ஏனைய தொகுதியின் கீழ், சுவர்கள், கிணறுகள், கேற் போன்றவை காணப்படுகின்றன. அட்டவணை இலக்கம் 18 இன் ஊடாக விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம்18:கட்டமைப்புக்களின் வகை மற்றும் பருமன்**

| கட்டிடத்தின் பருமன் (சதுர அடி) | கட்டமைப்புக்களின் வகை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குடியிருப்பு வீடு | வாடகை வீடு | வர்த்தக/வியாபாரம் | வதிவிடம் மற்றும் வர்த்தகம் | களஞ்சியம் | குடிசை | கைவிடப்பட்ட/பாவனையிலற்ற | பிற | மொத்தம் |
| 500ஐ விடக் குறைவு | 119 | 4 | 31 | 6 | 13 | 171 | 7 | 134 | 485 |
| 501 – 1000 | 164 | 3 | 4 | 2 | 0 | 5 | 5 | 8 | 191 |
| 1001 – 2000 | 245 | 7 | 5 | 0 | 0 | 6 | 4 | 4 | 271 |
| 2001 – 3000 | 57 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 1 | 59 |
| 3001 – 4000 | 16 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 16 |
| 4001 – 5000 | 5 | 0 | 0 | 0 | 0 | 1 | 0 | 0 | 6 |
| 5001 – 10,000 | 0 | 0 | | | | | | | |
| 10,000மற்றும் அதற்கு மேல் | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 1 | 2 |
| மொத்தம் | 607 | 14 | 41 | 8 | 13 | 183 | 16 | 148 | 1,030 |

மூலாதாரம்: CEP/3 வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

இக்கட்டிடங்களில் காணப்படும் வசதிகள் அட்டவணை இலக்கம் 19 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது. தொலைபேசி வசதிகள் திருப்திகரமான மட்டத்தில் காணப்படுகின்றது. மேலும் இதற்குள்கையடக்கத் தொலைபேசி வசதிகளும் உள்ளடங்குகின்றன. அட்டவணையின் பிரகாரம் 9.2 % மான வீடுகளுக்கு மின்வசதிகள் இல்லாதுள்ளது. சமூக தாக்க மதிப்பீடு வெளிக்கொண்டுவந்த விடயங்களுக்கு மாறாக இவ்வசதிகள் திருப்திகரமான மட்டத்திற் காணப்படுகின்றன. விசேடமாக பாதிப்புக்குள்ளாகும் இவ்வீடுகளின் நீர் விநியோகம் திருப்திகரமான மட்டத்தில் காணப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம் 19 பாதிப்புக்குள்ளாகும் கட்டமைப்புக்களிலுள்ள வசதிகள்**

| வசதிகள் | உள்ளது/இல்லை | பாவனை வகை |
|---|---|---|

| | | குடியிருப்பு வீடு | வாடகை வீடு | கடை | இணைக்கப்பட்ட வீடு கடை | களஞ்சியம் | குடிசை | கைவிடப்பட்ட/பாவனையிலற்ற | பிற | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| மின்சாரம் | ஆம் | 556 | 14 | 29 | 1 | 3 | 16 | 6 | 40 | 665 |
| | இல்லை | 51 | 0 | 12 | 7 | 10 | 167 | 10 | 108 | 365 |
| தொலைபேசி | ஆம் | 226 | 8 | 7 | 0 | 0 | 2 | 0 | 3 | 246 |
| | இல்லை | 381 | 6 | 34 | 8 | 13 | 181 | 16 | 145 | 784 |
| குழாய் நீர் | ஆம் | 294 | 8 | 15 | 0 | 2 | 6 | 1 | 24 | 350 |
| | இல்லை | 311 | 7 | 27 | 8 | 11 | 177 | 15 | 124 | 680 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

நிர்மாணிப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட பொருட்களின் பிரகாரம், பாதிப்புக்குள்ளான கட்டிடங்கள் பல்வேறான அமைப்புக்களில் காணப்படுகின்றன. ஆதலால் செலவு மதிப்பீடு பாதிப்புக்குள்ளாகும் சதுர அடியின் பிரகாரம் இடம்பெறவுள்ளது. அட்டவணை இலக்கம் 20 இன் ஊடாக பாதிப்புக்குள்ளான மொத்தக் கட்டிடங்களின் எண்ணிக்கை காட்டப்பட்டுள்ளது. மேற்காட்டப்பட்டவாறு அதிகளவில் பாதிப்புக்கு உள்ளாகியிருப்பது குடியிருப்பு வீடுகளாகும் என்பதுடன், அதனுடைய சதுர அடியும் அதிகமாகும். பெரும்பாலான கட்டிடங்கள் அமைக்கப்பட்டிருப்பது, தரைக்கு சீமெந்து இட்டு, சுவர் செங்கல் மற்றும் சீமெந்துக் கல் பயன்படுத்தி சீமெந்து பூசப்பட்டு, ஓடு அல்லது அஸ்பெஸ்ரோஸ் கூரை போடப்பட்டாகும்.

**அட்டவணை இலக்கம் 20 : பாதிப்புக்குள்ளாகும் கட்டிடத்தின் வகை மற்றும் சதுர அடியின் அளவு**

| தரை/சுவர்/கூரைக்குப் பயன்படுத்தப்பட்ட மூலப் பொருட்களின் வகை | கட்டமைப்பின் வகை | | | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குடியிருப்பு வீடு | வாடகை வீடு | வியாபாரம்/வர்த்தகம் | குடியிருப்பு மற்றும் வியாபாரம் | களஞ்சியம் | குடிசை | கைவிடப்பட்ட/பாவனையற்ற | பிற | |
| சாதாரண வைக்கோல் குடிசை | 8,174 | 0 | 6,111 | 80 | 0 | 7,946 | 600 | 738 | 23,649 |
| மண்/செங்கல்/கூரை – ஓடு | 10,341 | 580 | 1,664 | 0 | 0 | 624 | 0 | 1,500 | 14,709 |
| சீமெந்து/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/கூரை – ஓடு/அஸ்பெஸ்ரோஸ் | 609,029 | 5,913 | 8,642 | 1,864 | 2,625 | 17,248 | 8,953 | 26,403 | 680,677 |
| சீமெந்து/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/ GI தகரக் கூரை | 31,569 | 80 | 1,440 | 0 | 456 | 12,686 | 1,104 | 2,739 | 50,074 |
| சீமெந்து/செங்கல் அல்லது சீமெந்துக் கல் அல்லது செங்கல் கூரை | 14,192 | 4,920 | 1,672 | 0 | 0 | 0 | 675 | 1,177 | 22,636 |
| ஓடு/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/கூரை - ஓடு அல்லது அஸ்பெஸ்ரோஸ் | 33,173 | 0 | 0 | 0 | 312 | 120 | 0 | 108 | 33,713 |

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஓடு/செங்கல் அல்லது சீமெந்துக் கல்/செங்கல் கூரை | 19,150 | 0 | 0 | 0 | 0 | 0 | 0 | 172 | 19,322 |
| பிற | 3,612 | 0 | 522 | 0 | 0 | 692 | 1,302 | 7,012 | 13,140 |
| மொத்தம் | 729,240 | 11,493 | 20,051 | 1,944 | 3,393 | 39,316 | 12,634 | 39,849 | 857,920 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

மாற்றுச் செலவு, அது தொடர்பில் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களின் (PAPs)கருத்தினை அடிப்படையாகக் கொண்டு இனங்காணப்பட்டுள்ளது.அவர்களுள் பெரும்பாலானவர்கள், மாற்றுச் செலவு தொடர்பில் தெளிவான கருத்தினைக் கொண்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் தங்களின் கட்டிடம் தொடர்பில் ஒப்பீட்டளவில் குறைந்த மதிப்பீடு அவர்களினால் முன்வைக்கப்பட்டது. குடியிருப்பு இல்லங்களுக்கு உரித்துடையவர்களுள், பெரும்பாலானோர் (160) தங்களின் குடியிருப்புக் கட்டிடத்தினை மீளமைப்பதற்கு ரூபா. 5 – 10 மில்லியன் தேவையென நம்புகின்றனர். மிகுதிப் பேர் மீளமைப்பு மதிப்பீடாக அதனை விடக் குறைவான தொகையினை முன்வைத்திருந்தனர். இது தொடர்பில் மேலதிக விபரங்கள் அட்டவணை இலக்கம் 21 இன் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது

**அட்டவணை இலக்கம்21: PAPsஆல் அவர்களின் கட்டிடங்களுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட மாற்றுச் செலவு**

| மாற்றுச் செலவு | பாவனையின் தன்மை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | குடியிருப்பு வீடு | வாடகை வீடு | கடை | இணைந்த கடை வீடு | கழிப்பறை | குடிசை | கைவிடப்பட்ட பயன்பாடற்ற | பிற | மொத்தம் |
| 50,000ஐ விடக் குறைவு | 23 | 1 | 3 | 4 | 2 | 96 | 0 | 49 | 178 |
| 50,001 – 100,000 | 23 | 2 | 4 | 2 | 2 | 31 | 0 | 44 | 108 |
| 100,001 – 200,000 | 14 | 0 | 0 | 1 | 4 | 20 | 0 | 22 | 61 |
| 200,001 – 500,000 | 31 | 1 | 8 | 1 | 3 | 22 | 5 | 14 | 85 |
| 500,001 – 1,000,000 | 80 | 0 | 8 | 0 | 2 | 9 | 7 | 10 | 116 |
| 1,000,001 – 2,000,000 | 91 | 5 | 11 | 0 | 0 | 2 | 0 | 5 | 114 |
| 2,000,001 – 3,000,000 | 36 | 0 | 1 | 0 | 0 | 0 | 1 | 2 | 40 |
| 3,000,001 – 4,000,000 | 32 | 0 | 1 | 0 | 0 | 1 | 0 | 0 | 34 |
| 4,000,001 – 5,000,000 | 61 | 0 | 2 | 0 | 0 | 0 | 1 | 0 | 64 |
| 5,000,001 – 10,000,000 | 160 | 3 | 1 | 0 | 0 | 2 | 2 | 0 | 168 |
| 10,000,001 – 20,000,000 | 35 | 0 | 1 | 0 | 0 | 0 | 0 | 2 | 38 |
| 20,000,001 மற்றும் அதற்கு மேல் | 21 | 3 | 1 | 0 | 0 | 0 | 0 | 0 | 25 |
| மொத்தம் | 607 | 15 | 41 | 8 | 13 | 183 | 16 | 148 | 1,031 |

மூலாதாரம்: CEP/3வது படிநிலை/RAP/குடிசன மதிப்பீடு

### 3.4அரசின் சொத்துக்கள், பொதுச் சொத்துக்கள் மற்றும் கட்டமைப்புக்களின் மீது ஏற்படும் பாதிப்பு

அரசின், பொதுச் சொத்துக்கள் மற்றும் கட்டமைப்புக்களுக்கான மாற்றுச் செலவினை மதிப்பீடு செய்தல் சிக்கலானதும் கடினமானதுமான பணியொன்றாகும். அது உயர் தொழில்நுட்பம்சார்ந்த

விடயமொன்று என்பதுடன், அது தொடர்பில் அளவைக் கணக்கெடுப்பு மற்றும் பொறியியல் விடயத்தில் நிபுணத்துவம் பெற்றவர்கள் அவசியமாகும். காடுகள், கால்வாய்கள், நீரோடைகள் போன்ற கட்டிடமொன்று அற்ற அரச மற்றும் பொதுச் சொத்துக்கள் காணப்படுகின்றன. மேலும், புனித மரங்கள், மதச் சிலைகள், இடுகாடுகள் போன்ற சொத்துக்கள் தொடர்பில் மாற்றுச் செலவினை மதிப்பீடு செய்தல் கடினமான விடயமொன்றாகும். ஆதலால் அரச மற்றும் பொதுச் சொத்துக்களுக்கான மாற்றுச் செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்படவில்லை. விபரங்களுக்கு 15 மற்றும் 16அட்டவணைகளைப் பார்க்கவும்.

## அத்தியாயம்IV:சமூகப் பொருளாதார தகவல் மற்றும் கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின்(PAPs)விபரம்

### 4.1பிராந்திய, மாவட்ட மற்றும் பிரதேச சமூக பொருளாதார நிலபரம் தொடர்பிலான கண்ணோட்டம்

இலங்கை உயர் மனித அபிவிருத்தி மட்டமொன்றினைக் கொண்ட நாடொன்றாகும் (மனித அபிவிருத்தி அறிக்கை, 2013, UNDP). இந்நாட்டின் பெரும்பான்மை மக்கள், ஏதோவொரு மட்டத்திலான உயர் பொருளாதார நிலை மற்றும் வாழ்வாதாரமொன்றுக்கு உரித்துடைய மக்களெனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இந்நிலை, பிரதேசத்தின் பிரதேசத்திற்கும் மற்றும் இலக்கிடப்பட்ட குழு வாழும் அமைவிடத்திற்கமைய மாறுபடும்.

வீதி நிர்மாணிக்கப்படும் பிரதேசத்தினுள் அரை நகர்ப்புற குடியேற்றப் பிரதேசங்கள் மூன்று காணப்படுகின்றன. அவை, பொல்ககவெல, ரம்புக்கன மற்றும் கலகெதரவாகும். மத்திய அதி வேக வீதிக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலையின் கீழ், பொல்ககவெல, ரம்புக்கன மற்றும் கலகெதர போன்ற இடங்களுக்கிடையே பரிமாற்றங்களை (மாற்று வழிகள்) அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஆதலால் இந்த அரை நகர்ப்புற நிலையங்களின் மூலம் அதிக பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியும். இந் நகர்ப்புற நிலையங்கள் தெங்கு, இறப்பர் மற்றும் வாசனைத் திரவியங்கள் போன்ற வர்த்தக விவசாயப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, அடிப்படையிலேயே விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அரை நகர்ப்புற பிரதேசமாகும். பிரதேசத்தில் வாழ்பவர்களின் வாழ்வாதார முறைகள், இந்த விவசாயப் பொருட்களின் உற்பத்தியினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இந்த அரை நகர்ப்புற நிலையங்கள் நெல் மற்றும் மரக்கறிகளைப் பயிரிடுவதற்கு அநேக வேளைகளில் மழை நீரையே நம்பியுள்ளன.

ஆதலால், இச்சகல குடியேற்றங்களும் நீண்ட பாரம்பரிய சமூகப் பொருளாதார பாரம்பரியங்களினால் வளப்படுத்தப்பட்டு தங்களின் விவசாய நடைமுறைகளுக்கிணங்க வாழ்கின்றனர். எவ்வாறாயினும், அம்மக்கள் வர்த்தகச் செயற்பாட்டில் ஈடுபடுவதில் அதிக போக்கொன்று காணப்படுகின்றது. வீதி பயணிக்கும் நடைபாதையோரத்தில் சகல கிராம உத்தியோகததர் தொகுதிகளில் அமையப் பெற்ற கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் கட்டமைப்புக்கள் அட்டவணை இலக்கம் 22 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம்22:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் சகல கிராம உத்தியோகத்தர் தொகுதிகளிலும் (GNDs) அமையப் பெற்ற கட்டமைப்புகள்.**

| மாவட்டம்/ பிரதேச செயலாளர் | கட்டிட அலகுகளின் எண்ணிக்கை | மொத்த சதவீதம் | வீட்டு அலகுகள் | கூடிவாழும் குடியிருப்புக்கள் | வீடல்லாத அலகுகள் |
|---|---|---|---|---|---|
| இலங்கை | 6,769,131 | 100.0 | 5,773,678 | 69,805 | 925,648 |
| **குருனாகல்** | 567,317 | 8.4 | 482,584 | 2,970 | 81,763 |
| பொல்ககவெல | 21,161 | 3.7 | 1 8,166 | 171 | 2,824 |
| மாவத்தகம | 22,023 | 3.9 | 1 8,443 | 147 | 3,433 |
| **கேகாலை** | 277,371 | 4.1 | 240,611 | 1,229 | 35,531 |
| ரம்புக்கன | 27,696 | 10 | 23,863 | 115 | 3,718 |
| **கண்டி** | 440,973 | 6.5 | 378,296 | 2,846 | 59,831 |
| தும்பனே | 12,526 | 2.8 | 1 0,719 | 60 | 1,747 |
| குறிப்பு : ஆய்வு இடம்பெற்ற காலப்பகுதியில் வசித்திருந்த வீட்டு அலகுகள் மாத்திரமே இங்கு அறிக்கையிடப்பட்டுள்ளது. | | | | | |
| மூலாதாரம் : இலங்கை குடிசன மற்றும் வீடமைப்புத் தொகை மதிப்பீடு 2011 ( 5% மாதிரியினை அடிப்படையாகக் கொண்ட தற்காலிகத் தரவு) | | | | | |

மேலும் இலங்கை பல்லின மக்களினைக் கொண்ட நாடு என்பதுடன், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் இரண்டு மாவட்டங்கள் மற்றும் பிரதேச செயலகப் பிரிவுகள் பல்லின பின்னணியினைக் கொண்டு விளங்குகின்றது. பெரும்பான்மையான மக்களினைக் கொண்ட சமூகம் சிங்களவர் என்பதுடன் இஸ்லாமியர் இரண்டாவதாகக் கூடிய சனத்தொகையினைக் கொண்ட இனமாகும். ஏனைய இன மக்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மட்டத்தில் இப்பிரதேச செயலகப் பிரிவுகளில் வாழ்கின்றனர். அட்டவணை இலக்கம் 23 இன் ஊடாக மேலதிக விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

உத்தியோகபூர்வ வறுமை நிலையினை ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து, குருனாகல் மாவட்டத்தில் 2002 ஆம் ஆண்டில் அது ரூபா. 1,352 ஆகவிருந்தது. 2016 நவம்பர் மாதமளவில் அது ரூபா. 4,089 ஆக அதிகரித்துள்ளது. கேகாலை மாவட்டத்தில் அது 2002 ஆம் ஆண்டில் ரூபா. 1,437 ஆகவிருந்தது என்பதுடன் 2016 நவம்பர் ஆம் ஆண்டளவில் ரூபா. 4,128 வரை அதிகரித்துள்ளது. கண்டி மாவட்டத்தில் உத்தியோகபூர்வ வறுமை நிலை 2002 ஆம் ஆண்டில் ரூபா. 1,451 ஆகவிருந்ததுடன் 2016 நவம்பர் மாதமளவில் அது ரூபா.4,082 ஆக அதிகரித்துள்ளது. (குடிசன மற்றும் புள்ளி விபரத் திணைக்களம், 2016)

**அட்டவணை இலக்கம்23:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான பிரதேசத்தின் இனவாரியான மக்கள் தொகை**

| மாவட்டம் | நபர்களின் எண்ணிக்கை | இனத் தொகுதி | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | சிங்களவர் | இலங்கைத் தமிழர் | இந்தியத் தமிழர் | இலங்கை முஸ்லிம் | பறங்கியர் | மலே | இலங்கைச் செட்டி | பாரத | பிற |
| இலங்கை | 20,263,723 | 15,173,820 | 2,270,924 | 842,323 | 1,869,820 | 37,061 | 40,189 | 6,075 | 1,688 | 21,823 |
| கேகாலை | 836,603 | 715,723 | 20,250 | 41,468 | 57,952 | 577 | 168 | 37 | 4 | 424 |
| ரம்புக்கன | 82,373 | 78,542 | 850 | 178 | 2,646 | 14 | 6 | 7 | 1 | 129 |
| குருனாகல் | 1,610,299 | 1,471,339 | 18,763 | 3,582 | 113,560 | 711 | 1,083 | 92 | 28 | 1,141 |
| பொல்ககவெல | 64,917 | 57,194 | 873 | 973 | 5,726 | 20 | 105 | 7 | 3 | 16 |
| மாவத்தகம | 65,555 | 54,177 | 3,530 | 211 | 7,532 | 63 | 18 | 0 | 0 | 24 |
| கண்டி | 1,369,899 | 1,018,323 | 71,640 | 83,234 | 191,159 | 2,201 | 2,062 | 115 | **23** | **1,142** |
| தும்பனே | 37,356 | 34,451 | 254 | 28 | 2,557 | 24 | 38 | 1 | 0 | 3 |
| மூலாதாரம் : குடிசன மற்றும் வீடமைப்புத் தொகை மதிப்பீடு, இலங்கை, 2012 | | | | | | | | | | |

இந்த மூன்று மாவட்டங்களும் விவசாயத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளதுடன், நெற் செய்கையினை முதன்மைச் செயற்பாடாகக் கொண்டுள்ளன. 2013 ஆம் ஆண்டில் கண்டி மாவட்டத்தில் 8.459 ஹெக்டயர் நெல் பயிரிடப்பட்டுள்ளதுடன், 24,633 மெ. தொ. அறுவடை யால பருவத்தில் பெறப்பட்டுள்ளது. கேகாலை மாவட்டம் நெற் செய்கை தொடர்பில் பாரிய நீர்ப்பாசன வதிகளைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும், 2013 ஆம் ஆண்டு யால பருவத்தில் 3,163 ஹெக்டயர் பயிரிடப்பட்டுள்ளதுடன் 12,150 மெ. தொ. அறுவடை பெறப்பட்டுள்ளது. எனினும் குருநாகல் மாவட்டத்தில் இப்பருவத்தில் மிகவும் அதிகளவு நெற் பயிர்ச் செய்கை இடம்பெற்றுள்ளது. அதன் பிரகாரம் இம்மாவட்டத்தில் 52,461 ஹெக்டயர் பயிரிடப்பட்டுள்ளதுடன், 189,281 மெ. தொ. கிடைக்கப் பெற்றது. அதன் பிரகாரம் இலங்கையில் உணவு உற்பத்திக்கு குருனாகல் மாவட்டம் பாரிய பங்களிப்பினை வழங்குகின்றது. (குடிசன மற்றும் புள்ளி விபரத் திணைக்களம், நெல் அறுவடை தொடர்பிலான தரவு, யால பருவம் 2013, 2014). பிரேரிக்கப்பட்ட கருத்திடடம் இரண்டு மாவட்டங்களினதும் நெற் செய்கையில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளதுடன் இனிவருங் காலங்களில் நெற்செய்கை முன்னெடுக்கப்படும் நிலத்தின் மீதும் பாதிப்பினை ஏற்படுத்தும்.

**4.2கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தின் சமூகப் பொருளாதார நிலபரங்கள்**

கருத்திட்டத்தின் 3 வது படிநிலை தொடர்பில் பரீட்சிக்கப்பட்டுள்ள வீதி பயணிக்கும் நடைபாதைக்கு 44 கிராம உத்தியோகத்தர் தொகுதிகள் உரித்தாவதுடன், 2012 ஆம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் பிரகாரம் 32,069 சனத்தொகை உள்ளடக்கப்பட்டுள்ளது. இப்புள்ளிசார் தரவுக்கமைய 15,052 ஆண்களும், 17,017 பெண்களும் உள்ளடங்குகின்றனர். அதன் பிரகாரம் பெண்களின் தொகை ஆண்களின் தொகையினை விட சற்று அதிகமாகும். ஆண் பெண் பால் பகுப்பு மற்றும் அவர்களின் வயது தொகுதி ஒப்பீடு செய்யப்பட்டுள்ளது. விபரங்கள், அட்டவணை இலக்கம் 24 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம்24:ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும்(GNDs)உள்ள சனத்தொகை**

| மாவட்டம் | பி.செ.பி. | கி.உ.பி | நபர்களின் மொத்த எண்ணிக்கை | பால் | | வயது | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆண் | பெண் | 15 வயதினை விடக் குறைவு | 15 - 59வயது | 60 வயதுக்கு மேல் |
| குருணாகல் | பொல்ககவெல | கந்துகல | 1,234 | 599 | 635 | 311 | 771 | 152 |
| | | லிகினிகிரிய | 507 | 231 | 276 | 123 | 300 | 84 |
| | | மெதகலுகமுவ | 422 | 203 | 219 | 80 | 271 | 71 |
| | | வலகமுல்ல | 681 | 332 | 349 | 141 | 420 | 120 |
| | | தெவட்டகெதர | 279 | 137 | 142 | 70 | 168 | 41 |
| | | பரபவில | 1,380 | 660 | 720 | 354 | 851 | 175 |
| | | தொம்பகொட | 425 | 205 | 220 | 95 | 249 | 81 |
| | | அம்பலன்வத்தை | 416 | 190 | 226 | 100 | 251 | 65 |
| | | அரம்பேபொல | 682 | 302 | 380 | 139 | 437 | 106 |
| | | | | | | | | |
| | மாவத்தகம | கந்தகேன | 404 | 193 | 211 | 98 | 237 | 69 |
| | | துணுக்கவத்த | 861 | 411 | 450 | 192 | 557 | 112 |
| | | கலுகமுவ | 938 | 436 | 502 | 249 | 563 | 126 |
| | | வட்டறெக்க | 1,315 | 633 | 682 | 274 | 842 | 199 |
| | | கட்டுகெம்பலகெதர | 526 | 251 | 275 | 117 | 347 | 62 |
| | | மலன்தெனிய | 1,107 | 523 | 584 | 248 | 702 | 157 |
| | | ககபத்வல | 1,144 | 565 | 579 | 260 | 734 | 150 |
| | | | | | | | | |
| கேகாலை | ரம்புக்கன | தொம்பேமடகிழக்கு | 518 | 239 | 279 | 111 | 310 | 97 |
| | | தம்புள்ள | 463 | 219 | 244 | 100 | 280 | 83 |
| | | நட்டம்புர | 732 | 330 | 402 | 214 | 396 | 122 |
| | | தலவல்பொல | 569 | 266 | 303 | 134 | 353 | 82 |
| | | ஹேவாதிவல | 892 | 452 | 440 | 209 | 533 | 150 |
| | | கொட்டவல்ல | 1,221 | 557 | 664 | 343 | 700 | 178 |
| | | வெலிகமுவ | 811 | 354 | 457 | 204 | 486 | 121 |
| | | பரப்பே தெற்கு | 980 | 429 | 551 | 293 | 559 | 128 |
| | | கனுகொல்ல | 868 | 409 | 459 | 236 | 496 | 136 |
| | | தொம்பேமடமேற்கு | 434 | 191 | 243 | 96 | 172 | 166 |
| | | பரப்பே வடக்கு | 640 | 311 | 329 | 152 | 390 | 98 |
| | | குடகம வடக்கு | 627 | 286 | 341 | 128 | 370 | 129 |
| | | உடன்விட்ட | 565 | 280 | 285 | 123 | 347 | 95 |
| | | | | | | | | |
| கண்டி | கலகெதர | கன்னதெனிய | 510 | 237 | 273 | 114 | 313 | 83 |
| | | கங்கொடபிட்டிய | 458 | 216 | 242 | 93 | 294 | 71 |
| | | புப்பிலிய | 351 | 161 | 190 | 71 | 228 | 52 |
| | | பரந்தர | 653 | 308 | 345 | 178 | 398 | 77 |
| | | நியங்கொட | 889 | 412 | 477 | 208 | 527 | 154 |
| | | பளுகொபிவத்த | 773 | 363 | 410 | 206 | 461 | 106 |
| | | குனடக | 883 | 403 | 480 | 229 | 531 | 123 |
| | | மடகொட பகல | 556 | 252 | 304 | 136 | 321 | 99 |
| | | கலகெதர மேற்கு | 1,027 | 495 | 532 | 258 | 629 | 140 |
| | | நிகத்தென்ன | 441 | 232 | 209 | 106 | 279 | 56 |
| | | அன்டுனுகம பல்கமும்புர | 694 | 325 | 369 | 188 | 417 | 89 |
| | | கன்டேகும்புர | 653 | 295 | 358 | 167 | 392 | 94 |
| | | கலகெதர மடிக தெற்கு | 1,160 | 520 | 640 | 352 | 688 | 120 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கலுவன | 619 | 290 | 329 | 151 | 386 | 82 |
| | | ஹட்டபிட்டிய | 761 | 349 | 412 | 180 | 458 | 123 |

மூலாதாரம்: குடிசன மற்றும் வீடமைப்புத் தொகை மதிப்பீடு, இலங்கை 2012

### 4.2.1பிரதேசத்திற் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகள்

கருத்திட்டம் அமுற்படுத்தப்படும் மொத்தப் பிரதேசத்திலும் நேர்க்கணிய மாற்றமொன்று அதிவேக வீதியினூடாக ஏற்படும் என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும், இற்றை வரையில் பிரதேசத்திற் காணப்படும் உட்கட்டமைப்பு வசதிகளின் நிலபரம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படவில்லை. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் பிரதேசத்திற் காணப்படும் வீதி வசதிகள் தொடர்பில் அட்டவணை இலக்கம் 25 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.313 பதிலளித்தவர்களுக்கிடையே, ஒருவர் மாத்திரமே தமது வீட்டிற்கு பிரவேசிப்பு வசதியொன்றில்லை என வெளிப்படுத்தியிருந்தார். மிகுதி அனைவருக்கும் தமது வீட்டிற்குப் பிரவேசிப்பதற்கு, குறைந்தத பட்சம் சிறு வாகனம் செல்லுவதற்கு போதிய இடவசதியுள்ளது. இது இந்த மூன்று மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பில் திருப்தியடைக்கூடிய விடயமாகும்.

**அட்டவணை இலக்கம்25:உட்கட்டமைப்பு வசதிகள் – பிரவேசிப்பு வழிகள்**

| வகை | பாதிக்கப்பட்ட வர்களின்( PAPs) எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| வீதியில்லை | 1 | 0.3 |
| நடைபாதை (அகலம் 5 அடியினை விடக் குறைவு) | 63 | 20.1 |
| கிறேவ் வீதி (Gravel Road) | 93 | 29.7 |
| மாற்றியமைக்கப்பட்ட வீதி | 82 | 26.2 |
| தார் வீதி | 60 | 19.2 |
| காப்பட் வீதி | 6 | 1.9 |
| பொது வீதி | 8 | 2.6 |
| மொத்தம் | 313 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/SIA Data

மேலும், பிரவேசிப்பு வீதிகள் தொடர்பில் பதிலளிப்பவர்களிடமிருந்து கருத்துக்கள் கேட்டறியப்பட்டதுடன், பெரும்பாலானோர் தமது பிரதேசத்தில் தரமான பிரவேசிப்பு வலையமைப்புக் காணப்படுவதாக வெளிப்படுத்தியிருந்தனர். எவ்வாறாயினும், ஆய்வின் மூலம் வெளிக்கொணரப்பட்ட விடயங்களின் மூலம் இப்பிரதேசத்திற்கு அதிவேகவீதியொன்று அவசியமானதாகத் தெரியவில்லை. விபரங்களுக்கு அட்டவணை இலக்கம் 26 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை இலக்கம்26:உட்கட்டமைப்பு வசதிகள் – தரமான பிரவேசிப்பு வழிகள்**

| வகை | பாதிக்கப்பட்டவர்களின்( PAPs) எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| மிகவும் நன்று | 13 | 4.2 |
| நன்று | 133 | 42.5 |
| சாதாரணம் | 104 | 33.2 |
| கூடாது | 54 | 17.3 |
| மிகவும் கூடாது | 9 | 2.9 |
| மொத்தம் | 313 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/SIA Data

நீர் என்பது மனிதனின் அடிப்படைத் தேவைகளிலொன்றாகும். இதில் குடிநீர் மூலாதாரத்தில் மிகவும் முக்கியமாகும். மேற்குறிப்பிட்ட அட்டணை இலக்கம் 10 இன் ஊடாக காட்டப்பட்டவாறு,

பெரும்பான்மையினர் (84%) பாதுகாப்பான கிணற்று நீரினைக் கொண்டுள்ளனர் என்பதுடன், இக்கிணறுகள் அவர்களின் வசிப்பிடங்களிலேயே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அதற்கு மேலாக இப்பிரதேச வாசிகளுக்கு நீரினை வழங்குவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினூடாக முக்கியமான சேவையும் வழங்கப்பட்டு வருகின்றது. விபரங்களுக்கு அட்டவணை இலக்கம் 27 ஐப் பார்க்கவும்

**அட்டவணை இலக்கம்27:உட்கட்டமைப்பு வசதிகள் நீர் மூலாதாரம்**

| வகை | பாதிக்கப்பட்டவர்களின் ( PAPs) எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSD) | 37 | 11.8 |
| கிணற்று நீர் | 264 | 84.3 |
| குழாக்கிணறு | 7 | 2.2 |
| பொதுக் கிணறு | 4 | 1.3 |
| நீர்நிலை | 1 | 0.3 |
| மொத்தம் | 313 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/SIA Data

ஆய்வு முன்னெடுக்கப்பட்ட பிரதேசத்திலுள்ள பெரும்பானமையான மக்கள் (94%) சமைப்பதற்கு தாங்கள், விறகினைப் பாவிப்பதாகக் குறிப்பிட்டிருந்தனர். இரண்டாவதாக அதிகூடளவில் பாவிக்கப்படுவது எரிபொருளான(3.8%) சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய எரிவாயு (L PGas)ஆகும். அட்டவணை இலக்கம் 28 இன் ஊடாக மேலதிக தகவல்களைக் காண முடியும். விசேடமாக பாதிப்புக்குள்ளாகும் கிராம உத்தியோகத்தர் தொகுதிகளில் அமைந்துள்ள வீடுகளில் (98%) மின்சார வசதிளைக் கொண்டுள்ளதுடன் இது அபிவிருத்தி தொடர்பிலான நேர்க்கணியமான அம்சமாகும். எவ்வாறாயினும் தேசிய மின்சாரத் திட்டத்தின் மூலம் பெறப்படும் மின்சாரத்தினை சமைக்கும் நோகத்திற்காக பாவிக்கும் போக்கொன்று அவர்களுக்கிடையே காணப்படவில்லை.

**அட்டணை இலக்கம்28:உட்கட்மைப்பு வசதிகள் – எரிபொருள் மூலாதாரம் (சமைக்கும் நோக்கத்திற்கு)**

| வகை | பாதிக்கப்பட்டவர்களின் ( PAPs) எண்ணிக்கை | சதவீதம் |
|---|---|---|
| LP எரிவாயு | 12 | 3.8 |
| உயிர் வாயு | 4 | 1.3 |
| விறகு | 295 | 94.2 |
| மின்சாரம் | 2 | 0.6 |
| மொத்தம் | 313 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/SIA Data

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் பெரும்பாலானோர் அரசினால் வழங்கப்படும் சுகாதார சேவைகளின் கீழ் நம்பிக்கையினைக் கொண்டிருப்பதுடன், பல தசாப்தங்களுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சமூக நலன்புரி பிரேரணைத் திட்டத்தின் பயனாளிகளுக்கு உரித்தனையும் வழங்குகின்றது. இந்நாட்டின் சமூக நலன்புரி பிரேணைத் திட்டத்தின் அங்கங்களுக்கிடையே பிரதான இடமொன்று சுகாதார பிரிவுக்கு உரித்தாகின்றது. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் பிரதேசத்தின் நிலபரம் அட்டவணை இலக்கம் 29 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது. அட்டவணையூடாக காட்டப்பட்டவாறு கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் பிரதேசங்களில் வாழும் நபர்களின் பாவனைக்காக, பிரதான நகர மற்றும் அரை நகர்ப்புற நிலையங்களில் அங்கீகரிக்கப்பட்ட சுகாதார சேவைகள் காணப்படுகின்றன.

**அட்டணை இலக்கம்29:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் பிரதேசங்களில் காணப்படும் சுகாதார சேவைகள்**

| தொ.இல. | சுகாதார சேவையின் வகை | அதிர்வெண் | சதவீதம் |
|---|---|---|---|
| 1 | பெரிகம வைத்தியசாலை | 6 | 1.92 |
| 2 | கலகெதர வைத்தியசாலை | 43 | 13.74 |
| 3 | ஹெதனிய வைத்தியசாலை | 1 | 0.32 |
| 4 | குருனாகல் வைத்தியசாலை | 96 | 30.67 |
| 5 | மாவத்தகம வைத்தியசாலை | 37 | 11.82 |
| 6 | பேராதனை வைத்தியசாலை | 1 | 0.32 |
| 7 | பொல்ககவல வைத்தியசாலை | 9 | 2.88 |
| 8 | பொத்துகெர வைத்தியசாலை | 6 | 1.92 |
| 9 | ரம்புக்கன வைத்தியசாலை | 93 | 29.71 |
| 10 | தலன்பிட்டிய வைத்தியசாலை | 1 | 0.32 |
| 11 | தம்புத்தேகம வைத்தியசாலை | 3 | 0.96 |
| 12 | தித்தபஜ்யல வைத்தியசாலை | 4 | 1.28 |
| 13 | வதாகட வைத்தியசாலை | 1 | 0.32 |
| 14 | வட்டறேக - வைத்தியசாலை | 1 | 0.32 |
| 15 | கண்டி பொது வைத்தியசாலை | 1 | 0.32 |
| 16 | நாரஹென்பிட்டிய படையினர் வைத்தியசாலை | 1 | 0.32 |
| 17 | கண்டி சுவ செவன | 1 | 0.32 |
| 18 | நாவின்ன சனல் நிலையம் | 1 | 0.32 |
| 19 | வலிகல்ல டிஸ்பென்சரி | 1 | 0.32 |
| 20 | புலுகொல்ல டிஸ்பென்சரி | 1 | 0.32 |
| 21 | கெதனிய பிரத்தியேக மருத்துவ நிலையம் | 2 | 0.64 |
| 22 | தொடர்பற்றது | 3 | 0.96 |
| | மொத்தம் | 313 | 100 |

மூலாதாரம்:CEP/Stage 3/SIA Data

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலை (கண்டி இணைப்பு) யில் மத்திய அரசினூடாக செயற்படுத்தப்படும் பாரியளவிலான அபிவிருத்தி செயற்பாடொன்று இடம்பெறுவதுடன், இது தொடர்பில் மாகாண சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் (மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகள்) உதவி கிடைக்கும். பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்படும் மூலோபாய நகர அபிவிருத்தி கருத்திட்டமென பெயரிடப்பட்டுள்ளது. கண்டி நகர எல்லையில் தற்போது காணப்படும் வீதிகள், வடிகால் வசதிகள், ஒளி வசதிகள் மற்றும் வீதிளை அழகுபடுத்துதல் போன்றவற்றினை மேம்படுத்துவதற்கு கருத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கு மேலாக, தேசிய மற்றும் மாகாண வீதிகள் திட்டத்தில் சில வீதி அபிவிருத்திச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. A 006(அம்பேபுஸ்ஸ – திருகோணமலை வீதி), B 475(தொம்பேமட – ரம்புக்கன வீதி), B 087(கட்டுபிட்டிய – குருனாகல் வீதி), B 310(ரம்புக்கன – மாவத்தகம வீதி),மற்றும் B 122(கலகெதர-கத்தரலியத்த வீதி) வீதிகள் தேசிய வீதிகள் திட்டத்தில் அடையாளங் காணப்பட்டுள்ளன. மாகாண சபைகளின் வீதிகளுக்கிடையே,060 C (கந்த தெனிய – இலுக்வெல வீதி) வீதி நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. அதற்கு மேலாக, மாகாண வீதியான வதாகட – பொத்துகர வீதியினை மேம்படுத்துவது முடியும் தறுவாயிலுள்ளது.

இம் மேம்படுத்தும் கருத்திட்டத்திற்கு மேலாக ரம்புக்கன நகரினுள் நகர அபிவிருத்திக் கருத்திட்டமொன்று அமுற்படுத்தப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ் நகர பிரதேசத்தினுள் அமையப் பெற்ற வீதிகள், சந்தைகள், பேரூந்துத் தரிப்பிடங்கள், புகையிரத நிலையங்கள், வீதிளை அலங்கரித்தல், நீர் வசதிகள் மற்றும் கால்வாய் திட்டம் மேம்படுத்தப்படுகின்றது.

கலகெதர நகர பிரதேசத்திலும் அதற்கு நிகரான கருத்திட்டமொன்று அமுற்படுத்தப்படுகின்றது. பிரேரிக்கப்பட்ட பரிமாற்று வீதிகளினூடக இவ்விரு நகரங்களும் அதிவேக வீதியுடன் தொடர்புபடுத்தப்படும்.

மேலும், மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டம், இவ் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அனைத்தையும் ஒன்றாக தொடர்புபடுத்தியுள்ளதுடன் அதன் பலாபலன்களை எட்டச் செய்வதற்கு போக்குவரத்து வசதிகள் மிகவும் முக்கியமானதாகும்.

### 4.3கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் சமூக பொருளாதார நிலபரங்கள்– குடும்பத் தலைவர்கள்

குடும்ப அலகின் தலைவர்கள் மற்றும் குடும்ப அங்கத்தவர்களின் மீது கவனத்தினைச் செலுத்தி, கருத்திட்டப் பாதிப்பினை இரண்டு முறைகளில் பகுப்பாய்வு செய்ய முடியும். காணியினைச் சுவீகரித்தல் மற்றும் இழப்பீடுகள் வழங்குவதைக் கவனத்திற்கொள்ளும்போது, ஆரம்பத்தில், குடும்ப அலகின் தலைவர்கள் பல வழிகளில் முக்கியமானவர்களாக உள்ளனர். ஆதலால், இக்கருத்திட்டத்திற்கான காணிகளை சுவீகரிக்கும் காரணங்களினால் பாதிப்புக்குள்ளாகும் குடும்ப அலகின் தலைவர்கள் **1,**747 பேர் அடையாளங் காணப்பட்டுள்ளனர். ஆயினும் 69 குடும்பத் தலைவர்கள் தொடர்பிலான சமூகப் பொருளாதார தகவல்கள் இன்மையினால் அவற்றினைத் தேடுவதற்கு முடியாமலுள்ளது.அதற்கு மேலாக, பிரத்தியேக உரித்தின் கீழ் கணக்கெடுக்கப்பட்ட, ஆயினும் உரிமையாளர்கள் உரிமை கோரப்படாத காணித் துண்டுகள் 45 உள்ளன. ஆதலால், சமூகப் பொருளாதார பகுப்பாய்வு பாதிப்புக்கு உள்ளாகும் குடும்பத் தலைவர்கள் 1,648 பேரினை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்பட்டது. அவர்கள் பல்வேறான இனங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன்,பெரும்பான்மையினார் (98.3%) சிங்கள இனத்தினைச் சேர்ந்தவர்களாவர். ஒப்பீட்டளவில் தமிழ் இனம் மிகச் சொற்பளவாகும். அட்டவணை இலக்கம் 30 இன் ஊடாக மேலதிக விரபங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம் 30:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் குடும்ப அலகுகளின் தலைவர்களின் இனத்தின் தன்மை**

| இனம் | வதிவிடம் | வியாபாரம்/வர்த்தகம் | விவசாயம் சாராத | விவசாயம் | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|
| சிங்களவர் | 405 | 17 | 150 | 1,142 | 1,714 | 98.4 |
| தமிழர் | 1 | 0 | 0 | 1 | 2 | 0.1 |
| இஸ்லாமியர் | 2 | 1 | 3 | 20 | 26 | 1.5 |
| மொத்தம் | 408 | 18 | 153 | 1,163 | 1,742 | 100 |

மூலாதாரம்:CEP/Stage 3/RAP/Census Data

குடும்பத் தலைவர்களுக்கிடையே, 21.6% பெண்கள் (பெண்களினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள்) ஆவதுடன், அவர்கள் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் குடும்ப அலகின் தலைவர்களாவதுடன், வேறான தொகுதியொன்றாக அடையாளங் காணப்படுகின்றனர். தபுதாரர்களை விட விதவைகள் அதிகமாக உள்ளனர். அட்டவணை இலக்கம் 31 இன் ஊடாக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம் 31:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் குடும்ப அலகு தலைவர்களின் திருமண நிலபரம்**

| பால் | திருமணமானவர் | தருமணமாகாதவர் | விவாகரத்து | விதவை | பிரிந்து வாழுதல் | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|---|---|
| ஆண் | 1,305 | 40 | 4 | 16 | 1 | 1,366 | 78.4 |
| பெண் | 200 | 32 | 0 | 142 | 2 | 376 | 21.6 |

| மொத்தம் | 1,505 | 72 | 4 | 158 | 3 | 1,742 | 100 |
|---|---|---|---|---|---|---|---|

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

மீளக் குடியேற்ற முன்னெடுப்பில் அங்கவீனமுற்ற நபர்கள் பாரிய பிரச்சினைக்கு முகங் கொடுப்பர். இந்த எண்ணக்கருவில், பெண்களை விட ஆண்களே அதிகம் பாதிக்கப்படுவர். எவ்வாறாயினும் சிறு மற்றும் பாரிய அங்கவீனத்திற்கு உட்பட்டுள்ள மொத்த குடும்பத் தலைவர்களின் எண்ணிக்கை ஒப்பீட்டளவில் குறைந்த மட்டத்திற் காணப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம்32:கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் குடும்ப தலைவர்களுக்கிடையேயான அங்கவீனத் தன்மை தொடர்பான நிலபரம்**

| பால் | பாரிய அங்கவீனம் | சிறு அங்கவீனம் | அங்கவீனமில்லை | மொத்தம் | % |
|---|---|---|---|---|---|
| ஆண் | 19 | 14 | 1,333 | 1,366 | 78.4 |
| பெண் | 5 | 12 | 359 | 376 | 21.6 |
| மொத்தம் | 24 | 26 | 1,692 | 1,742 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

பல குடும்பத் தலைவர்கள் (48%) சிறந்த கல்வி மட்டத்தினைக் கொண்டுள்ளனர் (க.பொ.த.சாதாரண தரம் மற்றும் அதற்கு மேலான தகைமைகள்). கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கையினைக் கொண்ட குடும்பத் தலைவர்கள் (50.80%) சாதாரணமான கல்வி மட்டத்தினை (1 ஆந் தரம் – க.பொ.த. சா/த வரை) கொண்டிருந்தனர். ஒப்பீட்டளவில் குடும்பத் தலைவர்களுள் சிறு எண்ணிக்கையானோரை கல்விசார் பின்னணியினைக் கொண்டிருக்கவில்லை என்பது புலனாகியுள்ளது (எழுத்தறிவு இல்லை என்பதுடன் கையொப்பமிடுவதற்கு இயலும்). அட்டவணை இலக்கம் **33** இன் ஊடாக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம் 33:கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகும் குடும்பத் தலைவர்களின் கல்விசார் பின்புலம்**

| கல்விசார் மட்டம் | ஆண் | பெண் | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| படிப்பறிவு அற்ற | 5 | 6 | 11 | 0.6 |
| கையொப்பமிட முடியும் | 10 | 6 | 16 | 0.9 |
| தரம் I-V | 155 | 74 | 229 | 13.1 |
| தரம் VI- க.பொ.த (சா/த) | 524 | 132 | 656 | 37.7 |
| க.பொ.த (சா/த) சித்தி | 265 | 64 | 329 | 18.9 |
| க.பொ.த (உ/த) சித்தி | 318 | 72 | 390 | 22.4 |
| பட்டம் எதிர்பார்த்துள்ள/பட்டம் பெற்ற | 86 | 20 | 106 | 6.1 |
| பட்டப்பின் படிப்பு | 1 | 2 | 3 | 0.2 |
| பிற | 2 | 0 | 2 | 0.1 |
| மொத்தம் | 1,366 | 376 | 1,742 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் குடும்பத் தலைவர்களின் தொழில் முறை, அவர்களின் வாழ்வாதார முறையின் மீது செல்வாக்குச் செலுத்தும் பிரதான சமூகக் காரணியொன்றாகும். அட்டவணை இலக்கம் 34 இன் ஊடாக எடுத்துக் காட்டப்பட்டவாறு அவர்களுள்22% வரையானோர் விவசாயச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனர் (தங்களின் நிலங்களிலேயே பயிர் வளர்ப்புச் செயற்பாடுகளில் ஈடுபடுதல்). ஓய்வு பெற்றோர் (14.9%) இரண்டாவதாக அதிக சதவீதத்தினைக் கொண்டுள்ளனர். மூன்றாவதாகவுள்ள அதிக தொகுதியினர் நிறைவேற்றுத் தரமற்ற அரச ஊழியர்களாவர் (9.1%). நான்காவதாக அதிக

தொகையினைக் கொண்டவர்கள் (8.9%) தச்சன், மேசன், மின்வல்லுனர் மற்றும் விவசாயம்சாரா தொழிலாளார்களாவர். மீள்குடியேற்றப் பணிக்கு எடுக்கப்பட்ட ஓய்வூதியர் மிகவும் முக்கியமானவர்களாக உள்ளனர். அட்டவணை 34 இன் ஊடாக மேலதிக விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம் 34: கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான குடும்பத் தலைவர்களின் தொழில் முறைகள்**

| பிரதான தொழில் | ஆண் | பெண் | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| தங்களுக்குரிய நிலத்தில் பயிர் செய்தல் | 322 | 59 | 381 | 21.9 |
| விவசாயம்சார் ஊழியர் | 53 | 8 | 61 | 3.5 |
| விவசாயம்சாரா ஊழியர் (தேர்ச்சி) | 137 | 18 | 155 | 8.9 |
| விவசாயம்சாரா ஊழியர் (தேர்ச்சியற்ற) | 51 | 5 | 56 | 3.2 |
| மீன்பிடி | 1 | 1 | 2 | 0.1 |
| நெசவுத் தொழில் | 1 | 1 | 2 | 0.1 |
| கால்நடை வளர்ப்பு | 3 | 1 | 4 | 0.2 |
| வர்த்தகச் செயற்பாடுகள் | 134 | 7 | 141 | 8.1 |
| அரச சேவைகள்/நிறைவேற்றுத்தரம் | 31 | 6 | 37 | 2.1 |
| அரச சேவைகள்/ஏனைய தரங்கள் | 133 | 25 | 158 | 9.1 |
| பிரத்தியேகத் துறை/நிறைவேற்றுத்தரம் | 11 | 1 | 12 | 0.7 |
| பிரத்தியேகத் துறை/ஏனைய தரங்கள் | 74 | 16 | 90 | 5.2 |
| ஆயுதப் படைகள் | 48 | 1 | 49 | 2.8 |
| பொலிஸ். வீட்டுக்காவலர்/பிரத்தியேகப் பாதுகாப்புச் சேவைகள் | 30 | 0 | 30 | 1.7 |
| இல்லாள் (வீட்டுப் பணிபெண்) | 7 | 89 | 96 | 5.5 |
| ஓய்வு பெற்ற நபர் | 213 | 47 | 260 | 14.9 |
| தொழிலற்றோர் | 42 | 54 | 96 | 5.5 |
| பிற | 75 | 37 | 112 | 6.4 |
| மொத்தம் | 1,366 | 376 | 1,742 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

சில கருத்திட்டங்களின் மூலம் பாதிக்கப்படும் குடும்பங்களின் தலைவர்கள் முறைசார் தொழிலில் ஈடுபட்டுள்ளதுடன், இரண்டாந்தரத் தொழிலாக தமது நிலங்களிலேயே விவசாயத் தொழிலில் ஈடுபடுகின்றனர். இவ்வாறு216 நபர்ககள் விவசாயத் துறையில் ஈடுபட்டுள்ளனர். இந்த வகையில் இரண்டாவதாக அதிகரித்த தொகுதியினராக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளோர் காணப்படுகின்றனர் என்பதுடன் அவர்கள் 30 பேர்களாவர். இதற்கு மேலாக, குடும்பத் தலைவர்களுள் 20 பேர் விவசாயத் தொழிலாளர்களாக தொழில் ஈடுபட்டுள்ளனர்.

**அட்டவணை இலக்கம்35:கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் குடும்பத் தலைவர்களின் இரண்டாந்தரத் தொழில் முறைகள்**

| இரண்டாந்தரத் தொழில் | ஆண் | பெண் | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| தங்களுக்குரிய நிலங்களில் பயிர் செய்தல். | 194 | 22 | 216 | 70.4 |
| விவசாயம்சார் ஊழியர் | 15 | 5 | 20 | 6.5 |
| விவசாயம்சாரா ஊழியர் (தேர்ச்சி) | 5 | 1 | 6 | 2.0 |
| விவசாயம்சாரா ஊழியர் (தேர்ச்சியற்ற) | 5 | 0 | 5 | 1.6 |
| காலநடை வளர்ப்பு | 24 | 6 | 30 | 9.8 |
| வர்த்தகம்சார் செயற்பாடுகள் | 16 | 2 | 18 | 5.9 |
| விற்பனையாளர்கள் | 1 | 0 | 1 | 0.3 |
| பிரத்தியேகத் துறை/ஏனைய தரங்கள் | 3 | 0 | 3 | 1.0 |
| ஓய்வு பெற்றோர் | 0 | 1 | 1 | 0.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| பிற | 4 | 3 | 7 | 2.3 |
| மொத்தம் | 267 | 40 | 307 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

விலங்கு வேளாண்மை அல்லது கால்நடை வளர்ப்பினை முன்னெடுத்துச் செல்லுதல் இலங்கையின் கிராமப்புறங்களின் பொதுவான தொழிலாகும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் குடும்பங்களின் தலைவர்களுக்கிடையே, அடிப்படைத் தொழிலாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள 3 நபர்களும், இரண்டாந்தரத் தொழிலாக அதில் ஈடுபட்டுள்ள 56 நபர்களும் அடையாளங் காணப்பட்டுள்ளனர். அட்டவணை இலக்கம் 36 இன் ஊடாக அவர்களின் பங்களிப்புக் காட்டப்பட்டுள்ளது**.**

**அட்டவணை இலக்கம்36:அடையாளங் காணப்பட்ட குடும்பங்களின் தலைவர்களுக்கிடையே கால்நடை வளர்ப்பில் ஈடுபடும் தன்மை**

| விலங்கு வகை | குடும்பங்களின் எண்ணிக்கை | விலங்குகளின் எண்ணிக்கை | மொத்தப் பெறுமதி ரூபா. |
|---|---|---|---|
| பசுக்கள் | 29 | 89 | 1,975,000 |
| எருமைகள் | 3 | 12 | 100,000 |
| ஆடுகள் | 1 | 4 | 40,000 |
| கோழிகள் | 25 | 1,837 | 461,650 |
| பிற | 1 | 10 | 500 |
| மொத்தம் | 59 | 1,952 | 2,577,150 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படுபவர்களுக்கிடையே, 943 பேர் (54.1%), 51-70 வயதிற்கிடையேயுள்ளனர் என்பதுடன், அவர்களுக்கிடையே அதிகூடிய தொகையினைச் சுவீகரித்துக் கொண்ட தொகுதி இதுவாகும். அதற்கு மேலாக, 70 வயதினைத் தாண்டிய குடும்பத் தலைவர்கள் 216 உள்ளனர் என்பதுடன், அவர்கள் நலிவடைந்த நிலைமையிலுள்ளவர்களாக கருதப்படுகின்றனர்.

**அட்டவணை இலக்கம் 37:கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படுபவர்களின் வயதுக் கட்டமைப்பு**

| வயது | ஆண் | பெண் | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| 19-30 | 19 | 6 | 25 | 1.4 |
| 31-39 | 162 | 21 | 183 | 10.5 |
| 40-49 | 327 | 48 | 375 | 21.5 |
| 51-70 | 722 | 221 | 943 | 54.1 |
| 71-80 | 114 | 70 | 184 | 10.6 |
| 81 மற்றும் அதற்கு மேல் | 22 | 10 | 32 | 1.8 |
| மொத்தம் | 1,366 | 376 | 1,742 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

### 4.4கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்ட நபர்களின் சமூகப் பொருளாதார நிலபரங்கள்: குடும்ப அங்கத்தவர்கள்.

இங்கு முன்வைக்கப்படும் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் குடும்பங்களின் அங்கத்தவர்களின் சமூகப் பொருளாதாரத் தகவல்களுக்கிடையே குடும்பத் தலைவர்களின் தகவல்களும் உள்ளடக்கப்படுகின்றன. குடும்பங்களின் தகல்கள், குடும்ப அலகு மட்டங்களில் திரட்டப்பட்டுள்ளன. அடையாளங் காணப்பட்ட குடும்ப அலகு 1,742 ஐ உள்ளடக்கி 6,432 குடும்ப அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது. இக்குடும்ப எண்ணிக்கைக்கிடையே, சில கூட்டுக்

குடும்பங்களையும் சேர்த்து தயாரிக்கப்பட்ட 25 கூட்டுக் குடும்பங்கள் உள்ளனர். இவ் 25 கூட்டுக் குடும்பங்களுக்கிடையே, தனிக் குடும்பம் மற்றும் கூட்டுக் குடும்பம் மாத்திரம் உருவாக்கியுள்ள விரிவுபடுத்தப்பட்டுள்ள குடும்பங்கள் 19 ஆகும். 06 குடும்பங்களில், 2 விரிவுபடுத்தப்பட்ட குடும்பங்கள் வீதம் உள்ளனர். ஆதலால் மீள்குடியேற்றும் பணியில் EA/PMU அவர்களினால், விரிவுபடுத்தப்பட்ட 25 குடும்பங்களின் மீது அதிக கவனஞ் செலுத்தப்படுதல் வேண்டும்.

**அட்டவணை இலக்கம் 38:விரிவுபடுத்தப்பட்ட குடும்பங்களிலுள்ள கூட்டுக் குடும்பங்கள்**

| விரிவுபடுத்தப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | பாதிக்கப்பட்ட குடியிருப்பு அலகுககளின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 19 |
| 2 | 6 |
| தொடர்பற்றது | 1,717 |
| மொத்தம் | 1,742 |

மூலாதாரம் : CEP/Stage 3/RAP/Census Data

குடும்ப அங்கத்தவர்களின் பெருபாலானோர் சிறந்த கல்விப் பின்புலத்தினைக் கொண்டுள்ளனர் என வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களுள் அநேகமானோர் கிராமப் பிரதேசங்களுக்கு உரித்துடையவர்களாகவிருந்தபோதும் அவர்களின் கல்வி திருப்திகரமான மட்டத்திலுள்ளது. கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் இத் தொகுதிக்கிடையே பட்டதாரிகள் மற்றும் பட்டப்பின் படிப்புப் பட்டதாரிகள் கவனத்திற் கொள்ளப்படக்கூடிய தொகையினைக் கொண்டுள்ளனர். குடும்பத் தலைவர்களின் கல்வி மட்டத்துடன் ஒப்பிடும்போது இளம் சந்ததியினரின் கல்வி மட்டம் உயர் மட்டத்தில் காணப்படுகின்றது.

**அட்டவணை இலக்கம்39: குடும்ப அங்கத்தவர்களின் கல்விசார் பின்புலம்**

| கல்வி மட்டம் | பால் | | மொத்தம் |
|---|---|---|---|
| | ஆண் | பெண் | |
| படிப்பறிவற்றர்கள் | 124 | 108 | 232 |
| கையொப்பமிடத்தெரிந்தவர்கள் | 15 | 20 | 35 |
| பாடசாலை செல்லுவதற்குள்ளோர் | 84 | 70 | 154 |
| தரம் I-V | 472 | 451 | 923 |
| தரம் VI –க.பொ.த. (சா/த) | 1,130 | 962 | 2,092 |
| க.பொ.த. (சா/த) சித்தி | 585 | 584 | 1,169 |
| க.பொ.த. (உ/த) சித்தி | 709 | 665 | 1,374 |
| பட்டத்தினை எதிர்பாத்து நிற்கும்/பட்டதாரிகள் | 190 | 238 | 428 |
| பட்டப்பின் படிப்பு பட்டதாரிகள் | 3 | 12 | 15 |
| பிற | 6 | 4 | 10 |
| மொத்தம் | 3,318 | 3,114 | 6,432 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

இக்குடும்ப அங்கத்தவர்களில் பெரும்பாலானவர்கள் மூன்று வகையான வயதுத் தொகுதிக்கு(19-30, 31-50 மற்றும் 51-70) உரித்தானவர்களாகக் காணப்படுகின்றனர் என்பதுடன், அவர்கள் மொத்தக் குடும்ப அங்கத்தவர்களில் 69% ஆவர். மீளக் குடியேற்றும் செயற்பாடு தொடர்பில் இது நேர்க்கணியமான அம்சமொன்று என்பதுடன், இடம்பெயர்வுச் செயற்பாட்டின்போது இளம் சமுதாயம் பல குடும்பப் பொறுப்புக்களைத் தாங்க முடியும்.தமது குடும்பங்களின் பலவீனமான அங்கத்தவர்கள் மற்றும் குழுக்களுக்கு அதிக சமூகப் பாதுகாப்பொன்றினை வழங்குவதற்கு இந்த இளம் சமுதாயத்திற்கு முடியும். கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் இக்குடும்பங்களுக்கிடையே முக்கிய அம்சமாக விளங்குவது, சிறு பிள்ளைகளின் எண்ணிக்கை மிகவும் குறைந்த மட்டத்திற் காணப்படுவதாகும். இக்குடும்பங்களிலுள்ள மொத்த

முதியோர்களின் எண்ணிக்கை 416 ஆகும் என்பதுடன், இவ்வயதுத் தொகுதிக்கு உரித்தான நபர்களுக்கிடையே ஆண், பெண் விகிதாசாரத்தில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மாற்றம் எதுவுமில்லை. 40 வது அட்டவணையூடாகஅது தொடர்பிலான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம்40:பாதிப்புக்குள்ளான குடும்ப அங்கத்தவர்களின் வயதுக் கட்டமைப்பு**

| வயது | ஆண் | பெண் | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| 0-4 | 159 | 132 | 291 | 4.5 |
| 5-9 | 237 | 198 | 435 | 6.8 |
| 10-16 | 351 | 262 | 613 | 9.5 |
| 17-18 | 81 | 74 | 155 | 2.4 |
| 19-29 | 468 | 426 | 894 | 13.9 |
| 30-39 | 485 | 460 | 945 | 14.7 |
| 40-49 | 461 | 464 | 925 | 14.4 |
| 51-70 | 873 | 870 | 1743 | 27.1 |
| 71-80 | 157 | 183 | 340 | 5.3 |
| 81 மற்றும் அதற்கு மேல் | 46 | 45 | 91 | 1.4 |
| மொத்தம் | 3,318 | 3,114 | 6,432 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

மீள்குடியேற்றத்தினைத் திட்டமிடும்போது இக்குடும்ப அங்கத்தவர்களின்தொழில் முறைமைகள் மிகவும் முக்கியமானதாகும். அந்தந்த தொகுதிக்குக் உரித்தான, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்காக மிகவும் பொருத்தமான செயற்பாடுகளை இனங்காண்பதற்கு அது முக்கியமானதாகும். விசேடமாக வாழ்வாதாரங்கள் மற்றும் வருமானத்தினை மீளமைக்கும் வேலைத்திட்டங்களை அறிமுகஞ் செய்யும்போது, ஆண், பெண். தொழிலற்ற நபர்கள், மாணவர்கள், பாடசாலை செல்லாத பிள்ளைகள் போன்ற தொகுதிகளை அடையாளங்காண்பது அத்தியாவசியமாகும். விபரங்கள் அட்டவணை இலக்கம் 41 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம்41: பாதிப்புக்குள்ளான குடும்ப அங்கத்தவர்களின் தொழில் முறைகள்**

| தொழில் முறை | பால் | | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | | |
| சொந்தநிலத்தில்விவசாயம்செய்தல் | 370 | 69 | 439 | 6.8 |
| விவசாய தொழிலாளர் | 61 | 12 | 73 | 1.1 |
| விவசாயம்சாரா ஊழியர் (தேர்ச்சி) | 235 | 66 | 301 | 4.7 |
| விவசாயம்சார ஊழியர் (தேர்ச்சியற்ற) | 76 | 12 | 88 | 1.4 |
| மீன்பிடி (விற்பனை) | 1 | 2 | 3 | 0.0 |
| நெசவுத்தொழில் | 1 | 5 | 6 | 0.1 |
| கால்நடை வளர்ப்பு | 4 | 5 | 9 | 0.1 |
| வர்த்தகம்சார் செயற்பாடுகள் | 193 | 25 | 218 | 3.4 |
| அரச சேவைகள்/நிறைவேற்றுத்தரம் | 50 | 44 | 94 | 1.5 |
| அரச சேவைகள்/ஏனைய தரங்கள் | 246 | 292 | 538 | 8.4 |
| பிரத்தியேகத் துறை/நிறைவேற்றுத்தரம் | 25 | 4 | 29 | 0.5 |
| பிரத்தியேகத் துறை/ஏனைய தரங்கள் | 214 | 112 | 326 | 5.1 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஆயுதப் படை | 140 | 10 | 150 | 2.3 |
| பொலிஸ், இல்லக்காவலர்/பிரத்தியேகப் பாதுகாப்புச் சேவைகள் | 45 | 4 | 49 | 0.8 |
| வீட்டுப் பணிப்பெண் | 17 | 899 | 916 | 14.2 |
| ஓய்வு பெற்றவர் | 247 | 118 | 365 | 5.7 |
| மாணவர் | 746 | 642 | 1,388 | 21.6 |
| சிறுவர் (0-5 வயது) | 194 | 164 | 358 | 5.6 |
| தொழிலற்றவர் | 289 | 475 | 764 | 11.9 |
| பிற | 164 | 154 | 318 | 4.9 |
| மொத்தம் | 3,318 | 3114 | 6,432 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

அட்டவணை இலக்கம் 42 இன் ஊடாக கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான குடும்ப அலகுகளின் வருமானம் செலவு முறைகள் காட்டப்பட்டுள்ளன. ஒப்பீட்டுப் பார்க்கும்போது வருமானம் மற்றும் செலவுக்கிடையே அவ்வளவு வேறுபாடொன்றும் காணப்படவில்லை. எவ்வாறாயினும் அவர்களுள் பெரும்பாலானோர் சிறந்த வருமான நிலையினைக் கொண்டுள்ளனர். வயது போனமையின் காரணமாக எந்தவொரு வருமானத்தினையும் ஈட்ட முடியாது முழுமையாக தமது பிள்ளைகளில் தங்கி வாழும் குடும்பங்கள் 08 காணப்படுகின்றனர். எவ்வாறாயினும் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான் 181 குடும்பத் தலைவர்கள் ஆய்வுக் குழுவுக்கு ஒத்துழைப்பு வழங்காதிருந்தனர் என்பதுடன் தங்களின் வருமானங்கள் செலவுகளின் விரபங்களை வழங்குவதை நிராகரித்தும் விட்டனர். விபரங்களுக்கு அட்டவணை இலக்கம் 42 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை இலக்கம்42:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் மாதாந்த வருமானம் மற்றும் செலவினம்**

| வகை | வருமானம் | | செலவினம் | |
|---|---|---|---|---|
| | பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் | பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | சதவீதம் |
| < 5001 | 28 | 1.8 | 27 | 1.7 |
| 5001 – 7500 | 29 | 1.9 | 25 | 1.6 |
| 7501 – 10000 | 58 | 3.7 | 49 | 3.1 |
| 10001 – 15000 | 164 | 10.5 | 124 | 7.9 |
| 15001 – 25000 | 383 | 24.5 | 293 | 18.8 |
| 25001– 50000 | 608 | 38.9 | 614 | 39.3 |
| 50001 – 100000 | 239 | 15.3 | 331 | 21.2 |

| | | | | |
|---|---|---|---|---|
| 100001 – 200000 | 41 | 2.6 | 74 | 4.7 |
| > 200000 | 11 | 0.7 | 24 | 1.5 |
| மொத்தம் | 1,561 | 100.0 | 1,561 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் வருமானம் செலவு நிலையினை கவனத்திற் கொள்ளும்போது, இக்குடும்பங்கள் வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்யும் முறை மற்றும் அவர்களின் கடன்பளு நிலைகள் எவ்வாறானது என்பதை இனங்காண்பது முக்கியமான விடயமொன்றாகும். அவர்களுள் பெரும்பாலானோர் வங்கிக் கணக்குகளைக் கொண்டுள்ளனர். இக்குடும்பங்களின் கடன்பளு நிலையினைக் கவனத்திற்கொள்ளும்போது 385 குடும்பங்கள்(22.1%) வங்கிக் கடன்களைப் பெற்றுள்ளனர். இதன் மூலம் புலனாவது என்னவெனில், பெரும்பாலானோர் தமது வாழ்வாதாரம் தொடர்பில் சுய நம்பிக்கையினைக் கொண்டுள்ளனர் என்பதாகும். விபரங்கள் தொடர்பில் அட்டவணை இலக்கம் 43 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை இலக்கம்43:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்கள் கடனினைப் பெற்றுக் கொண்ட நோக்கங்கள்.**

| நோக்கம்/விபரம் | கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களின் எண்ணிக்கை | % |
|---|---|---|
| வாகனம் வாங்குதல் | 55 | 3.1 |
| காணி வங்குதல் | 25 | 1.4 |
| பயிர் வளர்ப்பு நோக்கம் | 28 | 1.6 |
| உயர் கல்விக்காக | 5 | 0.3 |
| திருமணத்திற்காக | 2 | 0.1 |
| வியாபாரத்திற்காக | 50 | 2.9 |
| வீட்டினைத் திருத்துவதற்கு | 113 | 6.5 |
| பிரத்தியேக நோக்கம் | 112 | 6.4 |
| கடன் எடுக்காதோர் | 1,357 | 77.7 |
| மொத்தம் | 1,747 | 100 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களில் பெரும்பாலானோர் பிரதான வீதிக்கு அண்மையில் வாழ்கின்றனர். வீதியினை மிக விரைவில் சென்றடைவதை நோக்கங்களாகக் கொண்டு வீதியின் இருமருங்கிலும் வசித்தல் அவர்களுக்கிடையேயுள்ள பொதுவான அம்சமாகும். அவர்கள் கவனத்தினைச் செலுத்தும் அடுத்த விடயம் பாடசாலையாகும். தமது பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியொன்றினை வழங்குது தொடர்பில் அவர்கள் முன்னுரிமை கொடுத்திருந்தனர். சனசமூக நிலையம் அவர்கள் மூன்றாவதாக கவனஞ் செலுத்தும் பிரதான விடயமாகவிருந்தது. அதன் பிரகாரம் அவர்களை மீளக் குடியேற்றும்போது இப்பரிமாணங்கள் மீது கவனத்தினைச் செலுத்துதல் மிகவும் முக்கியமாகும். அட்டவணை இலக்கம் 44 இன் ஊடாக அவர்களின் அத்தியாவசியமான சேவைகள் மற்றும் பாவிக்கப்படும் இடங்கள் தொடர்பிலான விபரங்கள் காட்டப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம் 44:அத்தியாவசியமான சேவை நிலையங்கள் மற்றும் அமைவிடங்களுக்கு அவர்களின் வீட்டிலிருந்து உள்ள தூரம்**

| இடம் | தூரம் கி.மீ. | | | | |
|---|---|---|---|---|---|
| | < 1.00 | 1.00–1.99 | 2.00–2.99 | 3.00 மற்றும் அதற்கு மேல் | மொத்தம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை | 312 | 40 | 73 | 105 | 530 |
| டிஸ்பென்சரி | 161 | 11 | 62 | 298 | 532 |
| வைத்தியசாலைக்குஅருகாமை | 111 | 14 | 67 | 462 | 654 |
| சந்தை | 140 | 13 | 55 | 433 | 641 |
| புகையிரத நிலையம் | 40 | 3 | 12 | 311 | 366 |
| பிரதான வீதி | 560 | 16 | 35 | 71 | 682 |
| சனசமூக நிலையம் | 181 | 8 | 10 | 30 | 229 |
| பிற | 4 | 0 | 1 | 0 | 0 |
| மொத்தம் | 1,509 | 105 | 315 | 1,710 | 3,634 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

### 4.5.கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய நிலையில் (நலிவடைந்த நிலை) வாழும், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள்

கருத்திட்டத்தின் காரணமாக பாதிப்புக்குள்ளாகும், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையில் (நலிவடைந்த) வாழும் நபர்களை அடையாளங் காணுதல் மிகவும் முக்கியமாகும். பின்வரும் அட்டவணை இலக்கம் 45 இன் ஊடாகக் காட்டப்பட்டவாறு, பல்வேறான தொகுதிகளின் கீழ் தற்போது அடையாளங் காணப்பட்டுள்ள, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டி நிலையில் வாழும் நபர்கள் 942 பேர்களாவர். உத்தியோகபூர்வ ரீதியிலான வெளியீடு 2016 வறுமை மட்டத்தின் பிரகாரம் இனங்கண்டுள்ள வறுமைக் குடும்பங்கள் (314) இதில் இரண்டாவது இடத்தினை சுவீகரித்துள்ளது. சுய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நபர் ஒருவர் மாதமொன்றில் ஈடு செய்ய வேண்டிய ஆகக்குறைந்த செலவு வறுமை மட்டமாகும் (இலங்கை அரசின் குடிசன மற்றும் புள்ளி விபரத் திணைக்களத்தின் வரைவிலக்கணம்). 2016 மே மாதம் முன்வைக்கப்பட்ட அண்மைய மதிப்பீட்டின் பிரகாரம், தற்போதைய வறுமை மட்டம் ரூபா, 4,089.00 ஆகும். 05 அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமொன்றுக்கு இதனை மாற்றும்போது குடும்பத்திற்கான ஒட்டுமொத்த வறுமை மட்டம் ரூபா. 20,445 ஆகும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் இரண்டாவதாக அதிகமாகவுள்ள நபர்கள் தொகுதி முதியோர்களாவர். அவர்கள் 410 பேர் உள்ளனர் என்பதுடன், அது கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய எண்ணிக்கையாகும். வயோதிப வயதினை தீர்மானிப்பதற்கு இலங்கை அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வயது 60 அல்லது அதற்கு மேல் போன்ற வரையறை பயன்படுத்தப்பட்டன. பல்வேறான காரணங்களினால் பிரிந்து வாழும் குடும்பங்கள் மூன்றாவதாக கவனஞ் செலுத்தப்பட வேண்டிய நிலையில் வாழும் தொகுதியினராவர். அட்டவணை இலக்கம் 31 இன் ஊடாக காட்டப்பட்ட, விதவை, விவாகரத்து பெற்ற, பிரிந்து சென்ற நபர்கள் இத்தொதிக்குள் உள்வாங்கப்படுவர் என்பதுடன் இத்தொகுதியிலுள்ளோர் **1**58 பேர்களாவர்.

**அட்டவணை இலக்கம் 45: கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும், கவனஞ் செலுத்தப்பட வேண்டிய நிலையில் வாழும் இனங்காணப்பட்ட தொகுதி**

| வகை | ஆண் | பெண் | மொத்தம் | % |
|---|---|---|---|---|
| விதவை/தபுதாரர் | 16 | 142 | 158 | 16.8 |
| விவாகரத்து மற்றும் பிரிந்து வாழுதல் | 05 | 02 | 07 | 0.7 |
| 60 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதினைக் கொண்ட முதியோர்கள் | 286 | 124 | 410 | 43.5 |
| மாதாந்த வருமானம் ரூபா. 20,045 ஐ விடக் குறைவு | 314 | | 314 | 29.9 |
| பாரிய அங்கவீனம் | 19 | 05 | 24 | 2.5 |
| நிலத்தினைக் கொண்டிராத நபர்கள் | 29 | | 29 | 3.4 |
| மொத்தம் | | | 942 | 100 |

* 2016 நவம்பர் மாதம் வறுமை மட்டம் (ரூபா. 4,089 )05அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பமொன்றுக்கு மாற்றும்போது மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

இந்தப் பிரதான தொகுதிகளுக்கு மேலாக, அங்கவீனர் (24), காணியற்ற/அத்துமீறி வாழ்வோர் (29) போன்ற சில தொகுதிகளும் உள்ளனர். மீள் குடியேற்றச் செயற்பாட்டிற்கு இச்சமூகத் தொகுதிவரையறுக்கப்பட்டு இனங்காணப்பட்டுள்ளனர். ஆதலால் மீள்குடியேற்றச் செயற்பாடுகளில், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையில் வாழுபவர்களை இனங்கண்டு இத்தொகுதியின் மீது முழுமையான கவனஞ் செலுத்துதல் வேண்டும்.எனினும் வெவ்வேறான முறையில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவர்கள் அடையாளங் காணப்பட்டபோதும், கருத்திட்டத்தினால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் பல்வேறான பாதிப்புக்களைக் கொண்டிருந்தனர். அவர்கள் பல்வேறான தொகுதியின் கீழ் அடையாளங் காணப்பட்டுள்ளதால், மீள் பகுப்பாய்வின்போது இந்தத் தொகுதியின் மொத்த எண்ணிக்கை 645 ஆகும். விபரங்களுக்கு 45 வது அட்டவணையினைப் பார்க்கவும். கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையில் வாழும் இத் தொகுதிக்கு மேலாக, சிறு மற்றும் பாரிய அங்கவீனத்தினைக் கொண்ட சில அங்கத்தவர்களும் இக்குடும்பங்களிலுள்ளனர்.

4.6 **பிரேரிக்கப்பட்ட கருத்திட்டப் பாதிப்புத் தொடர்பில் (PAPs) இன்கருத்துக்கள்**

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான அநேகமான நபர்களுக்கு அதிவேக வீதி என்பது ஒரு புதுமையான எண்ணக்கருவாf உள்ளதுடன், இந்நாட்டில் அல்லது வேறு நாட்டில் அதிவேக வீதியொன்றினை பாவித்திருக்காமையினால் அதிவேக வீதி தொடர்பில் தெளிவுபடுத்துதல் தேவையாகவுள்ளது.

**அட்டவணை இலக்கம்** 46:**பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் எதிர்க்கணியத் தாக்கம் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களின் கருத்து.**

| கருத்து | முன்னுரிமை 1 | முன்னுரிமை 2 | முன்னுரிமை 3 |
|---|---|---|---|
| அயலவர்களின் தொடர்புகளை முன்னெடுப்பதில் நிச்சயமற்ற தன்மை. | 276 | 152 | 124 |
| உறவினர்கள் தொடர்பான வலையமைப்பினை முன்னெடுப்பதில் நிச்சயமற்ற தன்மை. | 141 | 341 | 201 |
| தமது கிராமத்திலிருந்து/சுதேச சமுதாயம் தூரமாகவிருத்தல். | 107 | 121 | 257 |
| பிள்ளைகளின் கல்விக்குத் தடை ஏற்படும் | 89 | 51 | 57 |
| தங்களின் உணவுப் பாதுகாப்பு மற்றும் கிடைப்பதில் நிச்சயமற்ற தன்மை. | 118 | 243 | 67 |
| தமது வருமான மார்க்கங்களை முன்னெடுப்பதில் நிச்சயமற்ற தன்மை. | 447 | 162 | 138 |
| கருத்திட்டம் நிர்மாணிக்கப்படும் காலப்பகுதியினுள் சிக்கல்களுக்கு முகங்கொடுத்தல். | 72 | 89 | 132 |
| பிற | 10 | 2 | 4 |
| மொத்தம் | 1,260 | 1,161 | 980 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

எவ்வாறாயினும், ஆய்வு உத்தியோகத்தர்களினால் இடம்பெற்ற ஆரம்ப அறிமுகம் மற்றும் வழங்கப்பட்ட தகவல் பத்திரங்கள் (துண்டுப் பிரசுரங்கள்) இரண்டிலிருந்தும் பெற்றுக் கொண்ட புரிந்துணர்வின் பின்னர், விசேடமாக சமூகம் மற்றும் சூழல்சார் ரீதியில் பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தினூடாக ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் தொடர்பில் அவர்களின் நேர்க்கணிய மற்றும் எதிர்க்கணிய கருத்துக்கள் வெளியிடப்பட்டுள்ளன. அட்டவணை இலக்கம் 46 இன் ஊடாக எடுத்துக்காட்டப்பட்டவாறு, அவர்களுள் அனேகமானோர் தமது வருமான மார்க்கங்களின் பாதுகாப்புத் தொடர்பில் பீதியினை வெளிப்படுத்தினர். மேலே காட்டப்பட்டவாறு, அவர்களின்

பிரதான வருமான மார்க்கமாவது விவசாயமாகும். தமது நிலம் இல்லாமற் போவதனூடாக அல்லது பயிரிடும் இடங்களிலிருந்து தூரத்திலுள்ள பிரதேசங்களில் மீளக் குடியேறுவதற்கு நேரிடுதல் தமது விவசாய வாழ்வாதாரத்தின் மீது எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகள் தொடர்பில் நிச்சயமற்ற தன்னமை அவர்களிடம் காணப்பட்டது. இரண்டாவது கவலை, தமது சமூகத் தொடர்பு வலையமைப்பு உடைந்து போகும் என்ற பீதியாகவிருந்தது. அட்டவணை இலக்கம் 46 இன் ஊடாக அந்தந்த விடயங்கள் தொடர்பில் அவர்கள் காட்டிய முன்னுரிமை ஒழுங்கில் இது தொடர்பிலான மேலதிக விபரங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

அவர்கள் கருத்திட்டத்தின் எதிர்க்கணிய விளைவுகள் தொடர்பில் பிரதிபலிப்பினைக் காட்டியிருந்த வேளையில் ஆய்வுக் குழுவினால், அதன் சிறந்த பலாபலன்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதிவேக வீதி வசதிகள் தொடர்பில் அவர்களிடத்தில் முன்அனுபவமற்றிருப்பினும், கருத்திட்டத்தினூடாக பிரதேசத்தின் வீதித் திட்டம் மற்றும் வீதிகளுக்கு பிரவேசிக்கும் வசதிகள் மேம்படுத்தப்படும் என அவர்கள் நம்புகின்றனர். அவர்கள் இரண்டாவதாக முன்னுரிமை வழங்கியிருந்தமை தேசிய அபிவிருத்தி என்ற பிரிவு என்பதுடன், மூன்றாவது முன்னுரிமையினை பிரதேச அபிவிருத்திக்கு (பிராந்திய அபிவிருத்தி) வழங்கியிருந்தனர். அவர்களின் ஏனைய முன்னுரிமைகளினை உள்ளடக்கிய மேலதிக விபரங்கள் அட்டவணை இலக்கம் 47 இன் ஊடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம்47: பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் நேர்க்கணிய சமூகத் தாக்கம் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் கருத்து.**

| கருத்து | முன்னுரிமை 1 | முன்னுரிமை 2 | முன்னுரிமை 3 |
|---|---|---|---|
| எமக்குப் புதிய வீடொன்று உரித்தாதல். | 48 | 18 | 40 |
| பிரதேசத்திற்குச் சிறந்த வீதித் திட்டம் கிடைத்தல், | 484 | 137 | 112 |
| தேசிய வீதிகள் அபிவிருத்தியடைதல். | 453 | 375 | 163 |
| பிராந்திய அபிவிருத்தி | 116 | 417 | 384 |
| தேசிய அபிவிருத்தி துரிதமடைதல். | 89 | 167 | 248 |
| எமது வாகனப் பராமரிப்புச் செலவு குறைவடைதல். | 31 | 45 | 75 |
| எமது பிரயாண நேரம் மற்றும் செலவு குறைவடைதல். | 36 | 45 | 76 |
| மொத்தம் | 1,257 | 1,204 | 1,098 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தினூடாக இடம்பெறும் சூழல்சார் விளைவு தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் கருத்தினை வினவியபோது, அநேகமானோரின் கருத்தாக, கருத்திட்டத்தின் காரணமாக தாங்கள் ஒலி (சத்தம்) மாசடைவதற்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் என்பதாகும். பிரதேசத்திலுள்ள தரமான நீர் மூலாதாரங்களுக்கு பாதிப்பு ஏற்படுதல் இரண்டாவது அதிகூடிய பாதிப்பாகக் கருதுகின்றனர். மூன்றாவதாக முதல் முன்னுரிமை வழங்கப்பட்டிருப்பது, அவர்களின் சொத்துக்கள் சேதமாகும் என்ற கருத்தாகும். இவ்வாறான அதிக பாதிப்புக்கள் நிர்மாணக் காலப்பகுதியில் இடம்பெறும் என அவர்கள் நம்புகின்றனர். விபரங்கள் 48 வது அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம் 48:பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் மூலம் இடம்பெறும் சூழல்சார் தாக்கம் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் கருத்து**

| கருத்து | முன்னுரிமை 1 | முன்னுரிமை 2 | முன்னுரி மை 3 |
|---|---|---|---|
| அடிக்கடி இடம்பெறும் வெள்ளப்பெருக்கு முகங்கொடுக்க வேண்டி ஏற்படும் | 105 | 27 | 36 |

| | | | |
|---|---|---|---|
| நீரின் தரம் குறைவடையும் (அசுத்த நீர்) | 293 | 141 | 152 |
| ஒலி மாசடைதல் | 365 | 201 | 135 |
| தூசு உருவாகுதல் மற்றும் வழி மாசடைதல் | 142 | 491 | 262 |
| எமக்கு மீதமாகவுள்ள சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்படுதல். | 275 | 182 | 157 |
| எமது பசுமையான சூழலில் மாற்றம் ஏற்படுதல். | 81 | 160 | 379 |
| மொத்தம் | 1,261 | 2 | 7 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

இந்த அதிவேக வீதி, வாகன விபத்துக்களைக் குறைத்துக் கொள்ளுவதற்கு காரணமாக விளங்கும் என்பது அநேகமானோரின் கருத்தாகும். வீதியில் சந்தடி (நெருக்கடி) குறைவடைதல் என்ற விடயத்திற்கு இரண்டாவது அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களில் அநேகமானோர் தற்போது, தமது பிரதான போக்குவரத்துத் தேவைப்பாடுகளுக்கு (குருனால் மற்றும் கண்டிக்குச் செல்லுவதற்கு) A 010 தேசிய வீதியினைப் பாவித்து வருவதுடன், வீதியின் தற்போதைய நிலை மற்றும் வாகனச் சந்தடி தொடர்பில் அவர்களிடம் அனுபவமுள்ளது. விபரங்களுக்கு அட்டவணை இலக்கம் 49 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை இலக்கம்49:பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தினூடாக இடம்பெறும் நேர்க்கணிய சூழல்சார் தாக்கம் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் கருத்து.**

| கருத்து | முன்னுரிமை 1 | முன்னுரிமை 2 | முன்னுரிமை 3 |
|---|---|---|---|
| வீதி விபத்துக்கள் குறைவடைதல் | 398 | 151 | 110 |
| எரிபொருள் நுகர்வு குறைவடைதல் | 261 | 411 | 158 |
| வீதி சந்தடிகள் குறைடைதல் | 329 | 290 | 313 |
| அதிவேக வீதியின் காரணமாக சூழல் மெருகூட்டப்படும். | 73 | 142 | 178 |
| சுற்றுலாத்துறை மேம்படும். | 76 | 90 | 123 |
| வீதிப் பாதுகாப்புத் தொடர்பில் நேர்க்கணிய உளப்பாங்கு உண்டாகும். | 116 | 66 | 171 |
| பிற | 6 | 4 | 2 |
| மொத்தம் | 1,259 | 1,154 | 1,055 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களில் அநேகமானோர் காணிச் சுவீகரிப்புச் சட்டங்கள், சுய விருப்பமில்லாது மீள்குடியேற்றும் தேசியக் கொள்கை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பாவிக்கப்படும் ஏனைய இழப்பீட்டுக் கொடுப்பனவுத் திட்டம் தொடர்பில் சரியான புரிந்துணர்வினைக் கொண்டிருக்கவில்லை, விபரங்கள், **அட்டவணை இலக்கம் 50 இன் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.**

**அட்டவணை இலக்கம்50:மீள் குடியேற்றத்திற்கான முக்கிய நியதி மற்றும் கொள்கைசார் ஆவணங்கள் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் புரிந்துணர்வு.**

| விழிப்புணர்வு | ஆம் | இல்லை |
|---|---|---|
| காணிச் சுவீகரிப்புச் சட்டம் (LAA) | 244 | 1,025 |
| சுயவிருப்புக்கு விரோதமான மீளக் குடியேற்றும் தேசியக் கொள்கை(NIRP) | 57 | 1,213 |


| | | |
|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கருத்திட்டங்களினூடாக பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்காக வழங்கப்படும் பணிக் கொடை. | 46 | 1,220 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

இறுதியாகக் கவனத்திற் கொள்ளும்போது புலனாவது என்னவெனில், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களில் பெரும்பாலானோர் பிரேரிக்கப்பட்ட கருத்திட்டத்தின் மீது சிறந்த எண்ணக்கருவினைக் கொண்டுள்ளனர் என்பதாகும். எவ்வாறாயினும் மீளக் குடியமர்த்துவதற்கும் மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கும் என, கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய இழப்பீடொன்றினை அவர்கள் எதிர்பார்க்கின்றனர். ஆதலால் இவ் அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு சிறந்த மீள் குடியேற்ற திட்டமொன்று வீதி அபிவிருத்தி அதிகார சபையினூடாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.

திரட்டப்பட்டுள்ள தரமான தரவுகளில், (Atlas.ti.)தரவு பகுப்பாய்வு மென்பொருள் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக, வலையமைப்பு உருவுக்கு சாரம்சப்படுத்தி, அதனூடாக கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள், கருத்திட்டம் மீது கொண்டுள்ள ஒட்டுமொத்தக் கருத்தின் cross-sectionமுன் வைக்கப்பட்டுள்ளது.மத்தியஅதிவேகவீதியினைநிர்மாணிக்கும்கருத்திட்டம்மிகமுக்கியமானகளம்என்பதுடன், இதுபலபிறகூறுகளுடன்தொடர்புடையது, மேலும்இந்தக்கூறுகள்களத்துடன்உறுதியாகஇணைந்திருக்கின்றன. இந்தஉறுப்புக்களில்பலஒவ்வொருவருடனும்நெருக்கமானதொடர்பினைக்கொண்டுள்ளது (சமர்சீர்தொடர்பு), மேலதிகவிரபங்களுக்குவரைவு01ஐப் பார்க்கவும்.

**வரைவு இலக்கம்01:மத்தியஅதி வேக வீதி நிர்மாணிப்புக் கருத்திட்டத்திற்கான மீளக்குடியேற்ற முன்னெடுப்பின் வலையமைப்புக் காட்டி**




மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Qualitative Data

அதற்கு மேலாக, மத்திய அதிவேக வீதி கருத்திட்டத்தின் 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட வடிவமைப்புத் திட்டத்தின் பிரகாரம், கருத்திட்டச் செயற்பாட்டிற்கு காணியினைச் சுவீகரிப்பதன் காரணமாக மேலும் சில இடர்கள் தமக்கு ஏற்படக்கூடும் என சில நபர்கள் வெளிப்படுத்தியுள்ளனர். இவ்விடயங்களைச் சுருக்கி அட்டவணை இலக்கம் 51 இன் ஊடாகமுன்வைக்கப்பட்டுள்ளது.அவ்விடயங்களை எடுத்துக்காட்டி நேரடியாக கருத்திட்ட அலுவலகத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன், மீள்குடியேற்ற ஆலோசகரிடம் அதன் பிரதி முன்வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இப்பிரச்சினைகள் தொடர்பில் தீர்வுகள் நிறைவேற்று முகவராண்மையினால் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்டத்தின் தற்போதைய வடிவமைப்புத் திட்டத்தினூடாக செய்யப்பட்டுள்ள மாற்றங்களின் காரணமாக இப்பிரச்சினை அவ்வளவுதூரம் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்த மாட்டாது.

**அட்டவணை இலக்கம்51:சமூகப் பாதுகாப்புத் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள்**

| தொ.இல. | நபர்/குழு | பிரச்சினை | குறிப்பு |
|---|---|---|---|
| **1** | திரு. ஆர்.ஜி. செநெவிரத்ன | கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் ககபத்வல புப்பிலிய கிராமத்தின் இடுகாடுக்கு மாற்றிடம் வழங்குதல். திரு. லக்ஸ்மன் மல்வத்துகொட அவர்களுக்கு உரித்தான காணியினை வழங்குவதற்குத் பிரேரித்திருத்தல். | இடுகாட்டிற்கான நிலத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நிறுவனம்சார் உதவி தேவை. |
| **2** | செல்வி. எம்.டி. சோமாவதி | சகல நிலத்துண்டங்களும் (மேட்டு நிலங்கள் மற்றும் வயல்) கருத்திட்டத்தினால் பாதிக்கப்படும் என்பதால் மாற்று நிலங்கள் எதிர்பார்க்கப்பட்டுள்ளன. | நாட்டிற்காக முன்னெடுக்கப்படும் விசேட சேவையாகக் கவனத்திற் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தினை மீளமைத்துக் கொடுத்தல் மற்றும் நியாயமான இழப்பீட்டு நிதியினை வழங்குவதற்கு நிறுவனம்சார் உதவி தேவையாகவுள்ளது. |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Qualitative Data

## அத்தியாயம்V: கருத்திட்டம் தொடர்பிலான உரித்துத் திட்டம், உதவி மற்றும் பயன்கள்

### 5.1 அறிமுகம்

தற்போதுள்ள நிலச் சட்டங்களின் பிரகாரம் (1950 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க நிலச் சுவீகரிப்புச் சட்டம் மற்றும் பின்னர் அதற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள்) சட்டரீதியான இழப்பீடு பெற்றுக் கொள்ளுவதற்கு அடிப்படைத் தகைமையினைப் பெறும் பயனாளிகள் யாரெனில் சொந்த நிலம் அல்லது அடிமையாக்கிய நிலத்தின் உரிமையாளர்களாவர். "உரிமையாளர்கள், அடமானம் வைத்திருப்போர், வாடகைக்கு இருப்போர் என்றவாறு அல்லது வேறான முறையில் அந்நிலம் அல்லது அதன் பாகம் அல்லது அது தொடர்பில் ஆர்வத்தினைக் காட்டும் வேறு வேண்டிய நபர் ஒருவர் அல்லது, அந்நிலத்திற்காக பெற்றுக் கொள்ளுவதற்குள்ள ஏதேனும் கூலி அல்லது இலாபம்" போன்ற உரித்து தொடர்பில், வேறு வகைகளில் கவனத்திற் கொள்ளுவதற்கு தேவையான ஏற்பாடுகள் நிலச் சுவீகரிப்புச் சட்டத்தின் 08 வது பந்தியினூடாக வழங்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மேற்குறிப்பிட்ட வேறு வகைகளுக்கு உரித்தான உரித்து உறுதிகளைக் கொண்டிராத அநேகமான நபர்களிடம் அந்நிலத்தினைச் சுவீகரித்துக் கொள்ளுவதற்கான சட்டரீதியான செயற்பாடின் தேவைகுக்குப் பொருந்தும் உறுதிப்படுத்தக்கூடிய எந்தவொரு ஆதாரமுமில்லை. ஆதலால் அநேகமான வேளைகளில் இவ்வாறான உரிமையினைக் கோருபவர்கள், இழப்பீட்டுக் கொடுப்பனவு சட்டச் செயற்பாடுகளிலிருந்து அகற்றப்படுகின்றனர்.சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை என்பது உரித்தினை வகிக்காத, ஏதேனும் நிலமொன்றுக்குள்ள தொடர்பினை நிரூபித்துக் கொள்ளுவதற்கு, மிகவும் நிரூபித்துக் கொள்ளக்கூடிய ஆதாரம் ஏதும் இல்லாததால் இவ்வாறு அகற்றப்படும் குழுவினை, பயனாளிகளாக உள்ளடக்குவதற்கு முன்னெடுக்கப்பட்ட ஒரு முயற்சியாகும். உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சினால் முன்னர் அறிமுகஞ் செய்யப்பட்டு, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்ட பணிக்கொடை பொதி, காணி சுவீகரிப்புச் சட்டத்திற்கு நிகராக அமுற்படுத்தப்படும் காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்பினை துரிதப்படுத்தும் சாதனமொன்றாகும். சட்டரீதியிலான இழப்பீடுகள் மற்றும் மீளக் குடியேற்றும் செலவுகளுக்கிடையே வேறுபாட்டினை எளிதாக்குவதற்கு, கருத்திட்டத்தின் காரணமாக பொருளாதார ரீதியிலும் மற்றும் சமூக ரீதியிலும் பாதிப்புக்குள்ளான பரந்த இடத்திற்கு உரித்தான நபர்களுக்கு மேலதிக நிவாரணத்தினை வழங்குவதற்கு இப்பணிக் கொடைப் பொதி பாவிக்கப்படுகின்றது

நிதி என்பது இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பில் பாவிக்கப்பட வேண்டிய ஒரு யதார்த்தமான கருவி அல்ல என்பது தெளிவான விடயமாகும். எவ்வாறாயினும் அரசு மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை தங்கள் நிலங்களிலிருந்து அகற்றும் ஒவ்வொரு நபருக்கும் மாற்று நிலங்களை வழங்கும் இயலுமையினைக் கொண்டிருக்கவில்லை. ஆதலால், அநேகமான வேளைகளில் பின்பற்றக்கூடிய மாற்றீடாவது, அநேகமான உரிமையாளர்கள் உரித்தினை வகிக்கும் பிரத்தியேகச் சொத்துக்களுக்குப் பதில் நிதி இழப்பீடுகள் வழங்குவதாகும் (இவ் உரிமையாளர்கள், சட்டரீதியிலான உறுதியினை வைத்திருப்போர், வாடகைக்கு இருப்போர், குத்தகைக்காரரர், பகிரப்பட்ட உரிமையாளர்கள் போன்றோர்களாக இருக்க முடியும்). ஆதலால் இழப்பீடு வழங்கும் மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை இனங்காணுதல், திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல், இலங்கையின் காணிச் சுவீகரிப்புச் சட்டம், காணிச் சுவீகரப்புச்

சட்டத்தின் **63**(2) (E)பிரிவு (460 வது அத்தியாயம்) கீழ் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரால் வெளியிடப்பட்டு,2014.02.18 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2014.05.30 ஆந் திகதிய 1864/54 என்ற இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் இவ் வர்த்தமானி அறிவித்திலின் கீழ் வடக்கு அதிவேக வீதி உள்ளடக்கப்படும் 14/0833/533/008என்ற இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இடம்பெறுதல் வேண்டும். மீள் குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டமொன்றினை தயாரிப்பதற்கு வழிகாட்டும் மேலும் பிரதானமான கொள்கைகள் நெறியாவது, காணி மற்றும் காணி அமைச்சினால் தயாரிக்கப்பட்ட சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசிய கொள்கையாகும். இந்த அளவில், அபிவிருத்திக் கருத்திட்டம் தொடர்பிலான மீள் குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத் தேவைப்பாடு தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தினூடாகவும் வெளிக் கொணரப்பட்டுள்ளது. இக்கருத்திட்டம், தேசிய சுற்றுச்சூழல் சட்டத்தில் விதிக்கப்பட்டதன் கீழ் கணக்கிலெடுக்கப்படும் கருத்திட்டமொன்றாததால் மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்தல் கட்டாயமானதாகும். அதன் பிரகாரம் இம் மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் மற்றும் உரித்து தொடர்பிலான திட்டம் 2014.05.03 ஆந் திகதிய 1864/54என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம், காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 2 வது பிரிவின் பிரகாரம் இக்கருத்திட்டம் தொடர்பில் குறிப்பிட்ட அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிட்டதன் பின்னர் புதிய கருத்திட்டம் தொடர்பிலான கொடைப் பொதி உரித்தாகும்.

### 5.2கருத்திட்டத்துடன் தொடர்பான உரித்துத் திட்டம்

நில உரித்தின் வகைகளை அடிப்படையாகக் கொண்டும், சொத்துக்கள் மற்றும் வாழ்வாதாரங்களுக்கு இடம்பெறக்கூடிய எதிர்பார்க்கப்பட்ட இழப்புக்கள் மற்றும் பாதிப்புக்களை அடிப்படையகாக் கொண்டும், கருத்திட்டத்தின் கீழ், மீள் குடியேற்றம் மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைக்கும் பயன்கள் தொடர்பில் உள்ள உரித்துக்கள், உரித்து தொடர்பான திட்டம் அட்டவணை இலக்கம் 52 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது.

## அட்டவணை இலக்கம் 52: கருத்திட்டம் தொடர்பான உரித்து

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| **A.விவசாய நிலம் இல்லாது போதல் (தாழ் நிலம் மற்றும் உயர் நிலம்)/விவசாயம்சாரா நிலம்** | | | | | |
| A1 | விவசாய நிலத்தினை இழத்தல் | உறுதியினைக் கொண்ட அல்லது பதிவுச் சான்றிதழினைக் கொண்ட உரிமையாளர் | தமது நிலத்திற்குப் பதிலாக (அமைவிடத்தின் தன்மை மற்றும் உற்பத்தித்திறனுக்குச் சமமாக) நிலமொன்றினை வழங்கும் விருப்பினைத் தெரிவு செய்யும் வேளை கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு வழங்கப்படும். அவ்வாறான நிலமொன்றினை வழங்கும் இயலுமையின் கீழ் இவ்வாய்ப்பு உரித்தாகும்.<br><br>மீள்குடியேற்றும் செலவாக, நில இழப்புக்குப் பதிலாக, பண வடிவில் வழங்கப்படும் இழப்பீடொன்று.<br>நிலத்தின் பாகமொன்றினை மாத்திரம் சுவீகரித்து, மீதிப் பாகம் பொருளாதார ரீதியில் எதிர்வரும் பாவனைக்கு, உபயோகமான நிலையினைக் கொண்டிராதவிடத்து, காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம், உரிய நபரின் விருப்பின் கீழ், மீதமான காணித்துண்டுகளை சுவீகரித்துக் கொள்ளுதல் அல்லதுமீள்குடியேற்றச் செலவாக, அதற்கு இடம்பெற்றுள்ள பாதிப்புக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவினை முன்னெடுத்தல்.<br><br>அது எவ்வாறாக இருப்பினும், F1ஊடாகக் காட்டப்பட்டவாறு, அறுவடை செய்வதற்குப் போதிய காலப்பகுதியினை வழங்குதல் அல்லது சந்தை விலைக்கமைய கொடுப்பனவினை முன்னெடுத்தல் மேற்கொள்ளப்படும். | சொத்துக்கள் இழப்பு மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கு கொடுப்பனவினை முன்னெடுத்தல்.<br>நிலத்தினைச் சுவீகரிக்கும் சட்டத்தின் [46 1 (iii)]பிரகாரம், கிடைக்கப் பெறும் உரித்துக்களை அடிப்படையாகக் கொண்டு அல்லது 2014.03.05 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஒழுங்கு விதிகளுக்கமைய பிரதான விலை மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறு, வருவாய்களற்றுப் போவதற்கான கொடுப்பனவு. | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2) | | |
| A2 | விவசாய நிலம் இழப்பு | மரபுரிமையினூடாக அவர்களின் பெற்றோர்களிடமிருந்து உரிமையாளர்கள் தொடர்பான தகவல்களைச் சேகரித்தல். | தமது நிலத்திற்குப் பதிலாக (அமைவிடத்தின் தன்மை மற்றும் உற்பத்தித்திறனுக்குச் சமமாக) நிலமொன்றினை வழங்கும் விருப்பினைத் தெரிவு செய்யும் வேளை கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு வழங்கப்படும். அவ்வாறான நிலமொன்றினை வழங்கும் இயலுமையின் கீழ் இவ்வாய்ப்பு உரித்தாகும்.<br><br>மீள்குடியேற்றும் செலவாக, நில இழப்புக்குப் பதிலாக, பண வடிவில் வழங்கப்படும் இழப்பீடொன்று.<br>நிலத்தின் பாகமொன்றினை மாத்திரம் சுவீகரித்து, மீதிப் பாகம் பொருளாதார ரீதியில் எதிர்வரும் பாவனைக்கு, உபயோகமான நிலையினைக் கொண்டிராதவிடத்து, காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம், உரிய நபரின்விருப்பின் கீழ், மீதமான காணித்துண்டுகளை சுவீகரித்துக் கொள்ளுதல் அல்லது மீள்குடியேற்றச் செலவாக, அதற்கு இடம்பெற்றுள்ள பாதிப்புக்கு இழப்பீட்டுக் கொடுப்பனவினை முன்னெடுத்தல்.<br>அது எவ்வாறாக இருப்பினும், F1ஊடாகக் காட்டப்பட்டவாறு, அறுவடை செய்வதற்குப் போதிய காலப்பகுதியினை வழங்குதல் அல்லது சந்தை விலைக்கமைய கொடுப்பனவினை முன்னெடுத்தல் மேற்கொள்ளப்படும்.<br>வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2) | சொத்துக்கள் இழப்பு மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கு கொடுப்பனவினை முன்னெடுத்தல்.<br>நிலத்தினைச் சுவீகரிக்கும் சட்டத்தின் [46 1 (iii)]பிரகாரம், கிடைக்கப் பெறும் உரித்துக்களை அடிப்படையாகக் கொண்டு அல்லது 2014.03.05 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானி அறிவித்தலின் ஒழுங்கு விதிகளுக்கமைய பிரதான விலை மதிப்பீட்டாளரினால் தீர்மானிக்கப்பட்டவாறு, வருவாய்களற்றுப் போவதற்கான கொடுப்பனவு.<br>உண்மையான (சட்டரீதியான) உரிமையாளர்களைத் தீர்மானிக்கும்போது உறுதி வகையின் பிரகாரம், அதில் மாற்றஞ் செய்ய முடியும்.<br>(ஜயபூமி மற்றும் சுவர்ணபூமி உறுதிகளுக்கமைய, பெற்றோர்களின் | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | மரணத்திற்குப் பின்னர் மரபுரிமை இளைய மகனுக்கு உரித்தாகும்). கண்டி மரபுரிமையின் கீழ் நிலம் (பெற்றோர்களின் மரணத்திற்குப் பின்னர்) மரபுரிமை மூத்த மகனுக்கு உரித்தாகும்) போன்ற நிலம் வழங்கும் பிரேரணைத் திட்டத்தின் பிரகாரம்உண்மையான உரித்துத் தீர்மானிக்கப்படும்.<br><br>எவ்வாறாயினும், தாய் அல்லது தந்தை தங்களுக்குப் பின்னர் உரித்தினை சகல பிள்ளைகளுக்கும் சமமாகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருப்பின், அனைத்துப் பிள்ளைகளுக்கும் சொத்து சமமாக உரித்தாகும். கலாசார ரீதியில் பிரதேசத்திற்கு பயன்படுத்தப்படும் வேறு நடைமுறைகள் காணப்படுகின்றன. ஆதலால் சுவீகரிக்கும் செயற்பாட்டில் இவ்வாறு காணப்படும் நடைமுறைகளை மீறுதலாகாது. | |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| A3 | விவசாய நிலத்திற்குச் செல்லும் பாதை இழக்கப்படுதல். | வாடகைக்கு நிலத்தினைப் பெற்றவர்கள், குத்தகைக்காரர்கள், இன்றைய விவசாயி | நிலத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.<br><br>வாடகைக்கு நிலத்தினைப் பெற்றோர், குத்தகைக்காரர்கள், இன்றைய விவசாயிகளினால் பயிர்வளர்ப்பு இடம்பெற்றிருப்பின், அந்த நேரத்திலிருந்த பயிர்கள் மற்றும்/அல்லது மரங்களுக்கு F1இல் காட்டப்பட்டவாறு இழப்பீட்டுக் கொடுப்பனவுகள் வழங்கபப்படும்<br><br>அது எவ்வாறாக இருப்பினும், F1ஊடாகக் காட்டப்பட்டவாறு, அறுவடை செய்வதற்குப் போதிய காலப்பகுதியினை வழங்குதல் அல்லது சந்தை விலைக்கமைய கொடுப்பனவினை முன்னெடுத்தல் மேற்கொள்ளப்படும்.<br>பாதிப்புக்குள்ளாகிய நிலத துண்டு தொடர்பில் மீதமாகக் காணப்படும் குத்தகை/ஒப்படைப்புக் காலத்திற்கு தேறிய வருமானம் இழப்புக்கான நிதிக் கொடுப்பனவு.<br><br>வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2) | இழந்த பயிர்கள் மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கென கொடுப்பனவினை மேற்கொள்ளுதல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| A4 | விவசாய நிலத்திற்குச் செல்லும் பாதை இழக்கப்படுதல். | கூட்டாகப் பயிர்வளர்ப்போர்(Share crpoer) | நிலத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.<br><br>அது எவ்வாறாக இருப்பினும், F1ஊடாகக் காட்டப்பட்டவாறு, அறுவடை செய்வதற்குப் போதிய காலப்பகுதியினை வழங்குதல் அல்லது சந்தை விலைக்கமைய கொடுப்பனவினை முன்னெடுத்தல் மேற்கொள்ளப்படும்.<br><br>வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2) | இழந்த பயிர்கள் மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கென கொடுப்பனவினை மேற்கொள்ளுதல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

<table>
<tr><th></th><th>இழப்பின் வகை</th><th>உரித்தான நபர்கள்</th><th>உரித்துக்கள்</th><th>கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல்</th><th>பொறுப்பு</th></tr>
<tr><td>A5</td><td>விவசாய நிலத்திற்குச் செல்லும் பாதை இழக்கப்படுதல்.</td><td>உறுதி இல்லாதோர் அல்லது பிரத்தியேக நிலம் அல்லது அரச நிலத்தினை ஆக்கிரமித்தோர்.</td><td>நிலத்திற்குக் கொடுப்பனவு செய்யப்பட மாட்டாது.<br><br>அது எவ்வாறாக இருப்பினும், F1ஊடாகக் காட்டப்பட்டவாறு, அறுவடை செய்வதற்குப் போதிய காலப்பகுதியினை வழங்குதல் அல்லது சந்தை விலைக்கமைய கொடுப்பனவினை முன்னெடுத்தல் மேற்கொள்ளப்படும்.<br><br>வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2)</td><td>இழந்த பயிர்கள் மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கென கொடுப்பனவினை மேற்கொள்ளுதல்.</td><td>வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர்.</td></tr>
<tr><td>A6</td><td>விவசாய நிலத்திற்குச் செல்லும் பாதை இழக்கப்படுதல்.</td><td>விஹாரை மற்றும் தேவாலயத்தின் காணி உறுதியில்லாது அவற்றினை அனுபவிப்போர்</td><td>பின்வரும் கடப்பாட்டின் கீழ் காணிகளுக்கு இழப்பீடு வழங்குதல் :<br><br>
<table>
<tr><th rowspan="2">அனுபவிக்கும் காலம்</th><th colspan="2">கொடுப்பனவு சதவீதம்</th></tr>
<tr><th>அனுபவிப் போர்</th><th>உரிமையா ளர்</th></tr>
<tr><td>20வருடங்களுக்கு மேல்</td><td>75</td><td>25</td></tr>
<tr><td>10-20 வருடங்கள்</td><td>50</td><td>50</td></tr>
<tr><td>05-10 வருடங்கள்</td><td>25</td><td>75</td></tr>
<tr><td>05வருடங்களுக்கு க் குறைவு</td><td>10</td><td>90</td></tr>
</table>
<br>காணி உரித்தற்றவரினால் பயிர்வளர்ப்பு முன்னெடுக்கப்பட்டிருப்பின், F1ஊடாகக் காட்டப்பட்டவாறு, அறுவடை செய்வதற்குப் போதிய காலப்பகுதியினை வழங்குதல் அல்லது சந்தை விலைக்கமைய கொடுப்பனவினை முன்னெடுத்தல் மேற்கொள்ளப்படும்.</td><td>காணியினை மேம்படுத்துவதற்கு இடம்பெற்ற சகல முதலீடு, இழந்துபோன பயிர்கள் மற்றும் வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கென கொடுப்பனவினை முன்னெடுத்தல்.</td><td>வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். அறங்காவலர் திணைக்களம்.</td></tr>
</table>

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2) | | |
| **B. வதிவிடக் காணி மற்றும் கட்டமைப்புக்கள்** | | | | | |
| B1 | வதிவிடக் காணி மற்றும் கட்டமைப்புக்களை இழத்தல். | உரித்தான உறுதி அல்லது பதிவுச் சான்றிதழ் அல்லது சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய உரித்து ஆவணங்கள். | **காணி மற்றும் கட்டமைப்பினைப் பகுதியளவில் இழத்தல்.**<br>மீதமாகும் நிலத்தில் கட்டிடத்தினை மீள நிர்மாணிப்பதற்கு போதுமானவிடத்து, உரிய கட்டிடத்தினை முன்னர் இருந்த நிலைக்கு அல்லது மீள நிர்மாணிப்பதற்கு பாதுகாத்துக் கொள்ளக்கூடிய பொருட்களுக்கு குறைவு ஏற்படாது, பொருட்கள் மற்றும்/அல்லது நிதியில், காணி மற்றும் கட்டிடத்திற்கான கொடுப்பனவு (காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் ஒதுக்கீடுகள் மற்றும் 2008 ஒழுங்கு விதிகள் 2009.04.07 ஆந் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல்.<br><br>G1.1 இன் கீழ் காட்டப்பட்ட பொருட்கள், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் G2.1, புதிய வசிப்பிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கான உரிய செலவுG2.2இன் கீழ் காட்டப்பட்டவாறு கொடுப்பனவு வழங்கப்படும் கொடுப்பனவு.<br><br>H2.2இன் கீழ் காட்டப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளை வழங்குதல்.<br><br>தற்காலிகமான தங்குமிடமொன்றினைத் தேடுவதற்கு குடும்ப அங்கத்தவர்களுக்கு | இழந்து போன சொத்துக்களுக்கான கொடுப்பனவு, மீதமான நிலத்துண்டில் பாதையினை நிர்மாணிப்பதற்கு அல்லது மாற்றுக் காணியில் மீளக் குடியேற்றுவதற்கு மற்றும் மாறிச் செல்லும் காலப்பகுதியினுள் உதவி. | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். மீள்குடியேற்ற தளங்கள் கட்டியெழுப்பப்படுவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவி அவசியமாகும் |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | நியாயமான காலமொன்று (ஆகக்குறைந்தது இரண்டு மாதங்கள்) வழங்கப்படுதல்.<br><br>**காணி மற்றும் கட்டிடத்தினை முழுமையாக இழத்தல்**<br>மீள நிர்மாணிப்பதற்கு போதுமான நிலப் பரப்பு காணப்படாதவிடத்து கட்டிடம் தொடர்பில் பின்வரும் உரித்துக்கள் உரித்தாகும்.<br>1.மீளமைப்பதற்கு மாற்று காணித் துண்டொன்றினைத் தேடிக் கொள்ளுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவி வழங்குதல் அல்லது கருத்திட்டத்தின் மூலம் கட்டியெழுப்பப்பட்ட மீள் குடியேற்ற காணியொன்றாயின் அங்கு மீளமைப்பதற்கு கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர் தீர்மானம் எடுப்பாராயின் அதில் மீளமைப்பதற்கு தேவையான உதவியினை வழங்குதல் (காணியினை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் பெறுமதி வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பாதிக்கப்பட்ட நபரிடமிருந்து மீட்கப்படும்.<br><br>2. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர் தீர்மானமெடுப்பராயின், தம்மூலம் மீளமைப்பினைச் செய்வதற்கு ரூபா. 500,000/-ஐ விட அதிகரிக்காத கொடுப்பனவொன்று வழங்கப்படுதல்.<br>G1.1 இன் கீழ் காட்டப்பட்ட பொருட்கள், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் G2.1, புதிய வசிப்பிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கான | | |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | உரிய செலவு G2.2இன் கீழ் காட்டப்பட்டவாறு கொடுப்பனவு வழங்கப்படும் கொடுப்பனவு. | | |
| B2 | வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வதிவிடம் இழப்பு | குடியிருப்பாளர், வாடகைக்குப் பெற்றுக் கொண்டோர் அல்லது குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொண்டோர். | ***வாடகை வீடு பகுதியளவில் இழப்பு***<br>வாடகைக்கு இருப்போருக்கு (குடியிருப்பாளர்)பகுதியளவில் பாதிப்பு ஏற்படுமாயின், அதன் உரிமையாளரின் விருப்பின் கீழ் அங்கு தங்கியிருக்கும் விருப்பம் பாதிப்புக்குள்ளாகும் நபரிடமேயுள்ளது என்பதுடன், அல்லது பாதிப்புக்குள்ளான நபர் வெளியேறுவதற்கு தீர்மானித்திருப்பின் 03 மாத வாடகை பின்வருமாறு வழங்கப்படும்.<br><br>• மாநகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 20,000/-<br>• நகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 15,000/-<br>• பிரதேச சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 10,000/-<br>H2.2இன் கீழ்க் காட்டப்பட்ட மேலதிகக் கொடுப்பனவினை வழங்குதல்<br>வாடகை வீட்டினை முழுமையாக இழத்தல்<br>வாடகைக்கு இருப்போருக்கு முழுமையான பாதிப்பு ஏற்படுமாயின், 06 மாத காலப்பகுதிக்கு வாடகைக்குத் தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு பின்வருமாறு நிதியுதவினை வழங்குதல்.<br>• மாநகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 20,000/- | வீட்டு வாடகைக்கான நிதிக் கொடுப்பனவு அல்லது மீதி குத்தகைப் பெறுமதி, மாற்று வீடொன்றினைத் தேடிக் கொள்ளுவதற்கு உதவுதல் மற்றும் குடியிருப்பாளர் மாறிச் செல்லும் காலப்பகுதிக்கான உதவி. | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | • நகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 15,000/-<br>• பிரதேச சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 10,000/-<br><br>ஈடு செய்யக்கூடிய வாடகைக்குப் புதிய வாடகை வீடொன்றினைத் தேடிக் கொள்ளுவதற்கு உதவுதல் மற்றும் H2.2இன் கீழ் காட்டப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளை வழங்குதல்.<br>வாடகை வீடு முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பின், குடியிருப்பாளரினால் அவ்வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவு நிதியினை மீளப் பெற்றுக் கொள்ளுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை உதவி வழங்கும். | | |
| B3 | வதிவிடக் கட்டமைப்புக்களை இழத்தல். | காணி உரித்தற்ற பயனாளர், அனுமதிக்கப்படாத பயனாளர் அல்லது ஆக்கிரமிப்பாளர் | கட்டிடமொன்று பகுதியளவில் அல்லது முழுமையாக அழிவடைதல்<br>காணிக்குக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.<br>அரச காணியில் வசிக்கும் அத்துமீறிய குடியிருப்பாளராயின், பாதிப்புக்குள்ளாகும் நபர், இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குத் தேவையான செலவுப் பெறுமதி உரிய பிரதேச செயலாளரின் உடன்பாட்டின் கீழ் வழங்கப்படும். (2014 ஒழுங்கு விதி -2014.05.30ஆந் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்.)<br><br>கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர், பிரத்தியேக காணியில் வசிக்கும் அத்துமீறிய குடியிருப்பாளராயின், உரிமையாளரினால் | அரச மற்றும் பிரத்தியேகக் காணிகளில் சட்டவிரோதமாகக் குடியிருப்போர் அல்லது உரித்து உறுதியில்லாதவர்களுக்கு இல்லாமற் போயுள்ள சொத்துக்களுக்கு கொடுப்பனவினை மேற்கொள்ளுதல், காணியில் மீளக் குடியேற்றுவதற்கு உதவுதல் அல்லது மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் மாற்றுக் காணியினை வழங்குதல் | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். மீள்குடியேற்ற நிலத்தினை கட்டியெழுப்புவதாயின் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவி அவசியமாகும் |

<table>
<tr><th></th><th>இழப்பின் வகை</th><th>உரித்தான நபர்கள்</th><th>உரித்துக்கள்</th><th>கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல்</th><th>பொறுப்பு</th></tr>
<tr><td></td><td></td><td></td><td>அவருக்கு எதிராக நீதிமன்ற நடைமுறைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லையாயின், அக்காணியின் கீழ் இடம்பெற்ற மேம்பாடுகளுக்கான பெறுமதி, நிலப்பரப்பின் பிரகாரம் உறுதிப்படுத்தியதன் பின்னர், பெற்றுக் கொள்ளுவதற்குத் தகைமையினைக் கொண்டுள்ளவராவர்.<br><br>இவ்வாறு பிரத்தியேகக் காணியில் அத்துமீறி வசித்து, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபரினை அந்தக் காணியிலிருந்து வெளியேற்றுவதற்கு, அவரினால்தெரிவு செய்யப்பட்டவாறு, மாற்றுக் காணியில் வசிப்பதற்கு அல்லது மீள்குடியேற்றக் கருத்திட்டத்தினால் கட்டியெழுப்பப்படும் காணியில் வசிப்பதற்கு அல்லது ஊக்குவிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்கும்.<br><br>G1.1 இன் கீழ் காட்டப்பட்ட பொருட்கள், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் G2.1, புதிய வசிப்பிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கான உரிய செலவு G2.2இன் கீழ் காட்டப்பட்டவாறு கொடுப்பனவு வழங்கப்படும் கொடுப்பனவு.</td><td>மற்றும் மாறிச் செல்லும் காலப்பகுதிக்கான உதவி</td><td></td></tr>
<tr><td>B4</td><td>வதிவிடக் கட்டமைப்புக்களை இழத்தல்</td><td>விஹாரை மற்றும் தேவாலயத்தின் காணி உரித்து உறுதியில்லாது அவற்றினை அனுபவிப்போர்</td><td>பின்வரும் கடப்பாட்டின் கீழ் காணிகளுக்கு இழப்பீடு வழங்குதல் :<br><br><table><tr><th rowspan="2">வசிக்கும் காலப்பகுதி</th><th colspan="2">கொடுப்பனவு சதவீதம்</th></tr><tr><th>குடியிருப்பாளர்</th><th>உரிமையாளர்</th></tr></table></td><td>அரச மற்றும் பிரத்தியேகக் காணிகளில் சட்டவிரோதமாகக் குடியிருப்போர் அல்லது உரித்து உறுதியில்லாதவர்களுக்கு இல்லாமற் போயுள்ள</td><td>வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். அறங்காவலர் திணைக்களம்.</td></tr>
</table>

<table>
<tr><th></th><th>இழப்பின் வகை</th><th>உரித்தான நபர்கள்</th><th>உரித்துக்கள்</th><th>கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல்</th><th>பொறுப்பு</th></tr>
<tr><td></td><td></td><td></td><td><table>
<tr><td>20 வருடங்களுக்கு மேல்</td><td>75</td><td>25</td></tr>
<tr><td>10-20 வருடங்கள்</td><td>50</td><td>50</td></tr>
<tr><td>05-10வருடங்கள்</td><td>25</td><td>75</td></tr>
<tr><td>05 வருடங்களுக்குக் குறைவு</td><td>10</td><td>90</td></tr>
</table>
கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபரினை அந்தக் காணியிலிருந்து வெளியேற்றுவதற்கும், அவரினால் தெரிவு செய்யப்பட்டவாறு, மாற்றுக் காணியில் குடியேற்றுவதற்கும் அல்லது மீள்குடியேற்றக் காணியொன்று கருத்திட்டத்தின் மூலம் கட்டியெழுப்பப்படுமாயின், அங்கு குடியேற்றுவதற்கும் அல்லது ஊக்குவிப்பதற்கும் வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்கும்.<br><br>G1.1 இன் கீழ் காட்டப்பட்ட பொருட்கள், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் G2.1, புதிய வசிப்பிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கான உரிய செலவு G2.2இன் கீழ் காட்டப்பட்டவாறு மேலதிக கொடுப்பனவு.<br>காணி உரித்தினைக் கொண்டிராத உரிமையாளர், F1ஊடாகக் காட்டப்பட்டவாறு, அறுவடை செய்வதற்குப் போதிய காலப்பகுதியினை வழங்குதல் அல்லது சந்தை விலைக்கமைய கொடுப்பனவினை முன்னெடுத்தல் மேற்கொள்ளப்படும்.<br><br>வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2)</td><td>சொத்துக்களுக்கு கொடுப்பனவினை மேற்கொள்ளுதல், காணியில் மீளக் குடியேற்றுவதற்கு உதவுதல் அல்லது மீளமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின் மாற்றுக் காணியினை வழங்குதல் மற்றும் மாறிச் செல்லும் காலப்பகுதிக்கான உதவி</td><td>மீள்குடியேற்ற தளங்கள் கட்டியெழுப்பப்படுவதற்கு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உதவி அவசியமாகும்</td></tr>
</table>

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| **C. வர்த்தகம்சார் காணி மற்றும் கட்டமைப்புக்கள்** | | | | | |
| C1 | வர்த்தகம்சார் கட்டமைப்பினை இழத்தல். | உரிமையாளர்/கள் மற்றும்/அல்லது பதிவு செய்யப்பட்ட வியாபார இயக்குனர்/கள் | காணி மற்றும் கட்டமைப்பினைப் பகுதியளவில் இழத்தல்.<br>மீதமாகும் நிலத்தில் கட்டிடத்தினை மீள நிர்மாணிப்பதற்கு போதுமானவிடத்து, உரிய கட்டிடத்தினை முன்னர் இருந்த நிலைக்கு அல்லது மீள நிர்மாணிப்பதற்கு பாதுகாத்துக் கொள்ளக்கூடிய பொருட்களுக்கு குறைவு ஏற்படாது, பொருட்கள் மற்றும்/அல்லது நிதியில், காணி மற்றும் கட்டிடத்திற்கான கொடுப்பனவு (காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் ஒதுக்கீடுகள் மற்றும் 2008 ஒழுங்கு விதிகள் 2009.04.07 ஆந் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல். ஒரு வர்த்தகம்சார் கட்டிடத்தினை நிர்மாணிக்கும்போது அதனுடன் ஏதேனும் வருமானம் இல்லாமற் போகுமாயின் அது தொடர்பில் கொடுப்பனவு செய்யும் ஒழுங்கு விதி 2008 (2014 ஒழுங்கு விதி - 2014.05.30 ஆந் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல்) இல் உள்ளடக்கப்பட்ட பின்வரும் வழிகாட்டல்களின் அடிப்படையில் இடம்பெறும்.<br><br>(i) முறைசார் வியாபாரம் ஒன்று தொடர்பில் கொடுப்பனவு செய்தல் முன்னைய மூன்று (03) ஆண்டுகளுக்கான கணக்குகள் மற்றும் வருமான வரி tax returnsஎன்பதை அடிப்படையாகக் கொண்டாதல். | தமது கட்டிடத்தினை மீளவும் நிர்மாணிக்கும் காலப்பகுதியினுள் தமது வியாபாரத்தினை மேலும் முன்னெடுதத்துச் செல்லுவதற்கு நியாமான காலமொன்றினை கருத்திட்டத்தினால், வியாபார உரிமையாளர்கள்/இயக்குநர் களுக்கு வழங்கப்படுதல் வேண்டும். கொடுப்பனவுகள் விடுவிக்கப்பட்டவுடனேயே உரிமையாளர்கள் தமது கட்டிடத்தினை நிர்மாணித்து உடன்பட்டுக் கொண்ட காலவரையறையினுள் அந்த இடத்தினை விட்டு வெளியேறுதல் வேண்டும். மாறிச் செல்லுவதற்கும் மற்றும் வருமானத்தினை மீளமைப்பதற்குமான உதவி. | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | (ii) அதிக பராமரிப்புச் செலவுகளுக்கான கொடுப்பனவொன்றுக்குப் பரிந்துரை செய்வதைமுன்னெடுத்தல் பொருத்தமான சூழ்நிலையினைக் கவனத்திற் கொண்டு விலை மதிப்பீட்டாளர்களினால் இடம்பெறும்.<br><br>G1.1 இன் கீழ் காட்டப்பட்ட பொருட்கள், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் G2.1, புதிய வசிப்பிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கான உரிய செலவு G2.2இன் கீழ் காட்டப்பட்டவாறு மேலதிக கொடுப்பனவு.<br>வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2)<br>காணி மற்றும் கட்டமைப்பினை முழுமையாக இழத்தல்.<br><br>மீதமாகவுள்ள நிலப்பரப்பு கட்டிடமொன்றினை மீள நிர்மாணிப்பதற்கு போதாதுள்ளவிடத்து பின்வரும் சலுகைகளுக்கு உரித்தினைப் பெற முடியும்;<br>**1.** உரிய கட்டிடத்தினை முன்னர் இருந்த நிலைக்கு அல்லது அதனை விட சிறந்த தரத்தில் புதுப்பிப்பதற்கு அல்லது<br>மீள நிர்மாணிப்பதற்கு பாதுகாத்துக் கொள்ளக்கூடிய பொருட்களுக்கு குறைவு ஏற்படாது, முழுமையாக மீளமைப்பதற்கு உரிய செலவின் பிரகாரம் பொருட்கள் மற்றும்/அல்லது நிதியில், காணி மற்றும் கட்டிடத்திற்கான கொடுப்பனவு (காணிச் சுவீகரிப்பு சட்டத்தின் ஒதுக்கீடுகள் மற்றும் 2008 ஒழுங்கு விதிகள் | | |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | 2009.04.07 ஆந் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல்.<br>2. உரிமையாளர்/உரிமையாளர்கள் தீர்மானமெடுப்பார்களாயின், மீளமைப்பதற்கு மாற்று நிலத்துண்டினைத் தேடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உதவி வழங்குதல் அல்லது நிலத்தினை மேம்படுத்துவதற்கு முன்னர் மதிப்பினை அறவிடுதை அடிப்படையாகக் கொண்டு மீள்குடியேற்ற முன்னெடுப்பு இடம்பெறும்.<br><br>3. வருமான இழப்புக்காக, காணியினைச் சுவீகரிப்பதற்கு மூன்று பஞ்சாங்க வருடங்களுக்கு முன்னர் கணக்குப் புத்தகங்களில் காட்டப்படும் வருடாந்த தேறிய வருமானம் மூன்று மடங்கு வரையறையினைத் தாண்டாது கொடுப்பனவினைச் செய்தல் அல்லது வாழ்வாதாரத்தினை மீளமைத்தல் போன்ற இரண்டு பிரிவுகளில்,எது அதிகமோ அதனைச் செலுத்துதல்.<br>4. கணக்குப் புத்தகங்கள் முன்னெடுக்கப்படாத வியாபாரம் தொடர்பில் 06 மாத வருமானத்திற்குச் சமமான கொடுப்பனவொன்று அல்லது வாழ்வாதார மீளமைப்பு போன்ற இரண்டு பிரிவுகளில், எது அதிகமோ அதனைச் செலுத்துதல்.<br>5. G1.1 இன் கீழ் காட்டப்பட்ட பொருட்கள், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் G2.1, புதிய வசிப்பிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கான | | |

<table>
<tr><th></th><th>இழப்பின் வகை</th><th>உரித்தான நபர்கள்</th><th>உரித்துக்கள்</th><th>கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல்</th><th>பொறுப்பு</th></tr>
<tr><td></td><td></td><td></td><td>உரிய செலவு G2.2இன் கீழ் காட்டப்பட்டவாறு மேலதிக கொடுப்பனவு.<br>வாழ்வாதார மீளமைப்புக் கொடுப்பனவு (G3.1)மற்றும் விசேட கொடுப்பனவு (H2.2)</td><td></td><td></td></tr>
<tr><td>C2</td><td>வர்த்தகம்சார் கட்டமைப்பினை இழத்தல்.</td><td>குடியிருப்பாளர்/வாடகைக்கிருப்போர், அல்லது வியாபாரப் பதிவினைக் கொண்ட இயக்குனர்.</td><td>வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வியாபாரத் தளம் பகுதியளவில் அழிவடைதல்.<br>மீளமைப்பதற்கு உரிய செலவின் பிரகாரம், பின்வரும் அளவுகோலுக்கமைய இழப்பீட்டுக் கொடுப்பனவு (வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ்)
<table>
<tr><th rowspan="2">குடியிருக்கும் காலப்பகுதி</th><th colspan="2">கொடுப்பனவு சதவீதம்</th></tr>
<tr><th>குடியிருப்பாளர்</th><th>உரிமையாளர்</th></tr>
<tr><td>20 வருடங்களுக்கு மேல்</td><td>75</td><td>25</td></tr>
<tr><td>10-20 வருடங்கள்</td><td>50</td><td>50</td></tr>
<tr><td>05-10 வருடங்கள்</td><td>25</td><td>75</td></tr>
<tr><td>05 வருடங்களுக்குக் குறைவான காலப்பகுதி</td><td>10</td><td>90</td></tr>
</table>
வாடகைக்கிருப்போருக்கு பகுதியளவில் பாதிப்பு ஏற்படுமாயின், அதன் உரிமையாளரின் உடன்பாட்டின் கீழ் அங்கு மேலும் தங்கியிருத்தல் பாதிப்புக்குள்ளான நபரிடமே உள்ளது என்பதுடன், அவ்வாறு இல்லாது பாதிப்புக்குள்ளான நபர் வெளியேறிச் செல்லுவதற்குத் தீர்மானமெடுப்பாராயின் 03 மாதங்களுக்கான வாடகை பின்வருமாறு வழங்கப்படும்.</td><td>வாடகை வீட்டுக்கான நிதிசார் கொடுப்பனவு அல்லு மீதியாகவுள்ள குத்தகை மதிப்பீடு, மாற்று வீடொன்றினைத் தேடிக் கொள்ளுவதற்கு உதவி மற்றும் வருமான இழப்பு மற்றும் குடியிருப்பாளர் மாறிச் செல்லும் காலப்பகுதி வரைக்குமான உதவி.</td><td>வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர்.</td></tr>
</table>

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | • மாநகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 20,000/-<br>• நகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 15,000/-<br>• பிரதேச சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 10,000/-<br>H2.2இன் கீழ்க் காட்டப்பட்ட மேலதிகக் கொடுப்பனவினை வழங்குதல்<br>வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வியாபாரத் தளம் முழுமையாக அழிவடைதல்.<br>மீளமைப்பதற்கு உரிய செலவின் பிரகாரம், பின்வரும் அளவுகோலுக்கமைய இழப்பீட்டுக் கொடுப்பனவு (வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ்) | | |

| குடியிருக்கும் காலப்பகுதி | கொடுப்பனவு சவீதம் | |
|---|---|---|
| | குடியிருப் பாளர் | உரிமையா ளர் |
| 20 வருடங்களுக்கு மேல் | 75 | 25 |
| 10-20 வருடங்கள் | 50 | 50 |
| 05-10 வருடங்கள் | 25 | 75 |
| 05 வருடங்களுக்குக் குறைவு | 10 | 90 |

வாடகை அடிப்படையில் பெற்றுக் கொண்ட வியாபாரத் தளம் முழுமையாக பாதிக்கப்படுமாயின், ஆகக்கூடியது 06 மாதக்காலப்பகுதிக்கு வாடகைக்கு இடமொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்காகப் பின்வருமாறு நிதிசார் உதவிகளை வழங்குதல்.

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | • மாநகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 20,000/-<br>• நகர சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 15,000/-<br>• பிரதேச சபை வரையறையிலுள்ள சொத்துக்கு ஆகக்கூடிய மாதாந்த வாடகை ரூபா. 10,000/-.<br><br>ஈடு செய்யக்கூடிய வாடகைக்குப் புதிய வாடகை வீடொன்றினைத் தேடிக் கொள்ளுவதற்கு உதவுதல் மற்றும் H2.2இன் கீழ் காட்டப்பட்ட மேலதிக கொடுப்பனவுகளை வழங்குதல்.<br><br>வாடகை வீடு முழுமையாக பாதிக்கப்பட்டிருப்பின், குடியிருப்பாளரினால் அவ்வீட்டு உரிமையாளருக்கு வழங்கப்பட்ட முற்பணக் கொடுப்பனவு நிதியினை மீளப் பெற்றுக் கொள்ளுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபை உதவி வழங்கும். | | |
| C3 | வர்த்தகம்சார் கட்டமைப்பினை இழத்தல். | பதிவு செய்யப்படாத வியாபார உரிமையாளர் அல்லது இயக்குநர்/ஆக்கிரமிப் பாளர் அல்லது அனுமதியுடன்/அனுமதியின்றி பெட்டிக்கடை வைத்திருக்கும் விற்பனையாளர்கள். | கட்டமைப்பு பகுதியளவில் அல்லது முழுமையாக அழிவடைதல்.<br>காணிக்குக் கொடுப்பனவு எதுவும் வழங்கப்பட மாட்டாது.<br>அரச காணியில் வசிக்கும் அத்துமீறிய குடியிருப்பாளர் அல்லது விற்பனையாளராயின், பாதிப்புக்குள்ளாகும் நபர், இயல்பு நிலைக்குத் திரும்புவதற்குத் தேவையான செலவு மதிப்பீடு உரிய பிரதேச செயலாளரின் எழுத்து மூலம் உடன்பாட்டின் கீழ் வழங்கப்படும். | பதிவு செய்யப்படாத வியாபார உரிமையாளர் மற்றும் சட்டவிரோத குடியிருப்பாளர்களுக்கு வருமான இழப்புக்காகவும் மற்றும்குடியிருப்பினை மாறிச் செல்லுவதற்கும் மற்றும் வருமானத்தினை மீளமைப்பதற்குமான உதவி | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர், பிரத்தியேக காணியில் வசிக்கும் அத்துமீறிய குடியிருப்பாளர் அல்லது விற்பனையாளராயின், உரிமையாளரினால் அவருக்கு எதிராக நீதிமன்ற நடைமுறைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லையாயின், அக்காணியின் கீழ் இடம்பெற்ற மேம்பாடுகளுக்கான மதிப்பீடு, நிலப்பரப்பின் பிரகாரம் உறுதிப்படுத்தியதன் பின்னர், பெற்றுக் கொள்ளுவதற்குத் தகைமையினைக் கொண்டுள்ளவராவர்.<br>வர்த்தமானி அறிவித்தல்.<br>ஒரு வர்த்தகம்சார் கட்டிடத்தினை நிர்மாணிக்கும்போது அதனுடன் ஏதேனும் வருமானம் இல்லாமற் போகுமாயின் அது தொடர்பில் கொடுப்பனவு செய்யும் ஒழுங்கு விதி 2008 (2014 ஒழுங்கு விதி - 2014.05.30 ஆந் திகதி வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தல்) இல் உள்ளடக்கப்பட்ட பின்வரும் வழிகாட்டல்களின் அடிப்படையில் இடம்பெறும்.<br><br>(i) முறைசார் வியாபாரம் ஒன்று தொடர்பில் கொடுப்பனவு செய்தல் முன்னைய மூன்று (03) ஆண்டுகளுக்கான கணக்குகள் மற்றும் வருமான வரி tax returnsஎன்பதை அடிப்படையாகக் கொண்டாதல்.<br>(ii) அதிக பராமரிப்புச் செலவுகளுக்கான கொடுப்பனவொன்றுக்குப் பரிந்துரை செய்வதை முன்னெடுத்தல் பொருத்தமான சூழ்நிலையினைக் கவனத்திற் கொண்டு விலை மதிப்பீட்டாளர்களினால் இடம்பெறும். | | |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | G1.1 இன் கீழ் காட்டப்பட்ட பொருட்கள், போக்குவரத்துக் கொடுப்பனவுகள் மற்றும் G2.1, புதிய வசிப்பிடத்திற்கு மாறிச் செல்லுவதற்கான உரிய செலவு G2.2இன் கீழ் காட்டப்பட்டவாறு மேலதிக கொடுப்பனவு.<br>தேவை எழுமாயின், வாழ்வாதார மீளமைப்பு மானியம்(G3.1மற்றும்G3.3)<br>(தேவை எழுமாயின்) H2.1இன் கீழான கொடுப்பனவு மற்றும் மேலதிக கொடுப்பனவு (H2.2).<br>இவ்வாறான வியாபார உரிமையாளர்/உரிமையாளர்கள் மாற்று நிலத்தில்குடியேறுவதை ஊக்குவிப்பதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை நடவடிக்கை எடுக்கும்.<br>கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் இவ்வறான நபர்களுக்கு மாற்று நிலங்களைத் தேடுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உதவும். | | |
| **D. ஏனைய பிரத்தியேகச் சொத்துக்கள் மற்றும் இரண்டாந்தரக் கட்டமைப்புக்கள்** | | | | | |
| D1 | ஏனைய சொத்துக்கள் அல்லது இரண்டாந்தர கட்டமைப்புக்கள் (அவை: கிணறு,சுவர், கைப்பிடிச் சுவர், | கட்டமைப்பின் உரிமையாளர்கள் (நில உரித்தினைக் கவனத்திற் கொள்ளாதவர்) | மீளமைப்பதற்குச் செலவின் பிரகாரம், பாதிப்புக்குள்ளான கட்டிடத்திற்கு நிதிக் கொடுப்பனவு அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் கட்டிடம் இருந்த நிலைமைக்கு அல்லது மிகவும் சிறந்த நிலைமைக்கு சரிசெய்து கொடுத்தல். | இழப்புக்கான கொடுப்பனவு மற்றும் தேவையெழின் மீளமைத்தல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | வெ ளியேயுள்ள மலசலகூடம், பண்டகசாலை, சேமிப்பு வைத்திருக்கும் வசதி, குளிர் சேமிப்பு வசதி மற்றும் animal penபோன்றன) | | | | |
| D2 | சிலைகள், கல்லறைகள் இழப்பு | சகல உரிமையாளர்கள் | மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் மீளமைத்தல் (ஏதேனும் சமய நிகழ்வுகளுக்கு அவசியமேற்படின்) தொடர்பில் தேவையான செலவுகளை ஈடு செய்வதற்கு ரூபா. 5000/-தொடக்கம்ரூபா. 15,000/- வரையான நிதி. | இழப்புக்கான கொடுப்பனவு மற்றும் தேவையெழின் மீளமைத்தல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| **E. ஊழியர்கள் அல்லது வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஊழியர்களின் வருமான இழப்பு** | | | | | |
| ***E1.*** **தற்காலிகமாக பாதிக்கப்பட்ட** | | | | | |
| E1.1 | வியாபாரத்தினை மீளக் கட்டியெழுப்பும் வரை (மீதி நிலத் துண்டில் அல்லது அப்பிரதேசத்தில்) | பிரத்தியேக அல்லது அரச வியாபாரத் தளத்தில் கடமையாற்றுகின்ற பாதிப்புக்குள்ளாகும் சகல ஊழியர்கள், அன்றாடத் கூலித் தொழிலாளர்கள். | ரூபா. 15,000/- கொடுப்பனவொன்று அல்லது 03 மாத அடிப்படைச் சம்பளம் போன்ற இரண்டில் எது அதிகமோ அக்கொடுப்பனவினை வழங்குதல்.<br><br>அல்லது புதிய தொழிலொன்றினைத் தேடுவதற்கு உதவுதல் மற்றும் தேவையாயின் திறன் மற்றும் பயிற்சியினை வழங்குதல். | தற்போதுள்ள ஊழியர்களை தக்க வைத்துக் கொள்ளுவதற்கு வியாபாரம் ஊக்குவிக்கப்படும். வியாபாரத்தினை மீளக் கட்டியெழுப்பும் வரை கொடுப்பனவு. | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| ***E2.*** **நிரந்தரமாகப் பாதிக்கப்பட்ட** | | | | | |
| E2.1 | வியாபாரத்தினை வேறு இடத்தில் மீளமைத்தல் காரணமாக | பிரத்தியேக அல்லது அரச வியாபாரத் தளத்தில் கடமையாற்றுகின்ற | ரூபா. 50,000/- கொடுப்பனவொன்று அல்லது 06 மாத அடிப்படைச் சம்பளம் போன்ற இரண்டில் எது அதிகமோ அக்கொடுப்பனவினை வழங்குதல் | வருமான இழப்புக்கான கொடுப்பனவு, வருமானத்தினை | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | அல்லது உரிமையாளர் வியாபாரத்தினை மீளக் கட்டியெழுப்புவதற்கு தீர்மானம் எடுக்காததால் | பாதிப்புக்குள்ளாகும் சகல ஊழியர்கள், அன்றாடத் கூலித் தொழிலாளர்கள். | மற்றும் கட்டுமாண வேலைவாய்ப்புக்களுக்கு முன்னுரிமை வழங்குதல். | மீளமைப்பதற்கு புனர்வாழ்வுப் பொதி | |
| **F. தற்போதுள்ள பயிர்கள் மற்றும் மரப் பெறுமதியினைக் கொண்ட மரங்கள்.** | | | | | |
| F1 | பயிர்கள் மற்றும் மரப் பெறுமதியினைக் கொண்ட மரங்களின் இழப்பு | பயிர்ச் செய்கையில் ஈடுபடும் நபர் மற்றும்/அல்லது மரங்களின் உரிமையாளர்கள் (நில உரிமையினைக் கவனத்திற் கொள்ளாதவர்கள்) | பயிர் வளர்ப்பில் ஈடுபடுபவர்களை அறுவடை செய்வதற்கான முன்னறிவித்தலொன்றினை கிராம உத்தியோகத்தர் அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படும் என்பதுடன், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு கிராமய உத்தியோகத்தர் ஊடாக முன்னறிவித்தல் வழங்கப்படும். எவ்வாறாயினும் அறுவடைக்குத் தயாராகவில்லாதபோது, பயிர்களின் தேறிய பெறுமதிக்கமைய சந்தை விலையினை அடிப்படையாகக் கொண்ட கொடுப்பனவு வழங்கப்படும்.<br>**<u>கொடுப்பனவுக்கான உரித்து வருமாறு.</u>**<br>அவன் அல்லது அவளினால் பயிரிடப்பட்டிருப்பின் (உரித்து மற்றும் பயன்பாடு), பயிர்கள் மற்றும் மரங்களுக்கான மொத்தக் கொடுப்பனவினை உரிமையாளருக்கு வழங்குதல்<br>கூட்டு உரிமையின்போது, நிலத்தினை உண்மையாகப் பயன்படுத்துபவர்களுக்கு பயிர்களுக்கான கொடுப்பனவினை வழங்குதல்.<br>குடியிருப்பாளர், நிலத்தினை வாடகைக்குப் பெற்றோர், அல்லது இன்றைய விவசாயிக்கு சந்தை விலைக்கமைய பயிர்களுக்கான | நிலத்தின் உற்பத்தித் திறன், தன்மை, வயது மற்றும் பாதிப்புக்குள்ளான மரங்களின் உற்பத்தித்திறன் மதிப்பினை அடிப்படையாகக் கொண்டு கணக்கெடுக்கப்பட்டு மரங்களுக்கான கொடுப்பனவு வழங்கப்படும் (பயிர்கள் மற்றும் மரங்கள்) | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர் மற்றும் தேவையாயின் அரச மரக் கூட்டுத்தாபனம். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | கொடுப்பனவினை வழங்குதல். (மரங்களிருப்பின்) மரங்களுக்கான உரிமையாளருக்கு கொடுப்பனவினை வழங்குதல்.<br><br>கூட்டிணைந்து பயிடுவேர் தொடர்பில் (sharecropper)கொடுப்பனவினைச் செய்யும்போது, பயிர்களுக்கான கொடுப்பனவினை, கூட்டிணைந்து பயிரிடுவோரின் உடன்பாட்டுடன் கூட்டிணைந்து பயிரிடுவோர் மற்றும் உரிமையாளருக்கிடையே பகிர்ந்தளிக்கப்படும். | | |
| **G. வாழ்வாதாரத்தினை மீளமைத்தல் மற்றும் புனர்வாழ்வு உதவி** | | | | | |
| ***G1. பொருட்களுக்கான போக்குவரத்துக்கொடுப்பனவு*** | | | | | |
| G1.1 | வீடு மற்றும் வியாபாரத்தினை மீளமைத்தல். | மீளமைக்கப்படவுள்ள குடும்ப அலகுகள் மற்றும் வியாபார உரிமையாளர்கள் (நிலத்தின் உரித்தினைக் கவனத்திற் கொள்ளாத) | பின்வரும் கொடுப்பனவுகளுக்கு அமைய, மீளமைப்பதற்கு முன்னர் வசிப்பிடத்திலிருந்து வீட்டின் நிலப் பரப்பினைக் அடிப்படையாகக் கொண்டு, புதிய அமைவிடத்திற்கு அல்லது இடமொன்றுக்கு போக்குவரத்துக்காக குடும்ப அலகுக்கு நிதி உதவி வழங்கப்படுதல் (மீளமைத்தல் கொடுப்பனவு)<br>• 1000 சதுர அடிக்குக் குறைந்த நிலப் பரப்பினைக் கொண்ட வீடொன்றுக்கு ரூபா. 10,000/-<br>• 1000-2000 சதுர அடிக்கு இடையேயான நிலப் பரப்பினைக் கொண்ட வீடொன்றுக்ககு ரூபா. 15,000/-<br>• 2000சதுர அடிக்குக் கூடிய நிலப்பரப்பினைக் கொண்ட வீடொன்றுக்கு ரூபா. 25,000/- | இடையூறு மற்றும் மீளமைப்பதற்கு உதவுவதற்கு கொடுப்பனவு | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | அங்கே துணைக் குடும்பங்களிருக்குமாயின் மேற்குறிப்பிட்ட கொடுப்பனவு விகிதாசார அடிப்படையில் பகிர்ந்து வழங்கப்படும். ஏனைய சொத்துக்களுக்கு, குடியிருப்பின் இயல்புக்கமைய ரூபா. 25,000/-வரை வழங்கப்படும். | | |
| ***G2.*** **வசிப்பிடத்தினை விட்டுச் செல்வதற்கான கொடுப்பனவு.** | | | | | |
| G2.1 | மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசித் தொடர்புகள் இழக்கப்படுதல். | மீளமைக்கப்படும் வீட்டு அலகுகள் அல்லது வியாபார உரிமையாளர்கள் (நில உரித்தினைக் கவனத்திற் கொள்ளாத) | நீர் வசதிச் செலவுக்கு ரூபா. 20,000/- மின்சார வசதி செலவுக்கு ரூபா. 10,000/- ஆய்வுக்கு உட்படுத்தப்படும் இடத்திலுள்ள வசதிகளை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்யப்படும் மொத்த நிதி தீர்மானிக்கப்படும். | மின்சாரம், நீர் மற்றும் தொலைபேசி வசதிகளை புதிய வதிவிடத்தில் மீளமைப்பதற்கு குடும்ப அலகுகள் அல்லது வியாபார உரிமையாளர்களுக்கு உதவுதல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர் மற்றும் பயன்களை விநியோகிக்கும் நிறுவனங்கள் |
| G2.2 | உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்களை மீளப் பொருத்துவதற்கான செலவு. | நிரந்தரமாக இடம்பெயரும் குடும்ப அலகுகள், வியாபார உரிமையாளர்கள் மற்றும் முன்னெடுத்துச் செல்லும் நிறுவனங்கள். | குடும்ப அலகொன்றுக்கு ரூபா. 10,000/- ஆகக்கூடிய கொடுப்பனவொன்றினை வழங்குதல்.<br><br>வியாபாரம் அல்லது வேறு வேண்டிய விசேட நிர்மாணிப்பு இடம்பெறும் சாதாரண இடமாயின், கொடுப்பனவானது உண்மையான கணக்கீடுகளின அடிப்படையில் வழங்கப்படும்.<br><br>இரட்டைக் கணக்கீட்டினைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குடும்ப அலகு அல்லது வியாபாரத்தினை தாமதமின்றி புதிய இடத்தில் அமைத்துக் கொள்ளுவதற்கும் மற்றும் அவர்களின் செயற்பாடுகளை விரைவில் ஆரம்பிப்பதற்கும் உதவி வழங்குதல். வியாபாரத்தின் வருமானத்தின் மீது பாதகமான பாதிப்பு ஏற்படுவதைத் தடுத்தல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| ***G3.*** **வாழ்வாதாரத்தினை மீளமைத்தல்.** | | | | | |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| G3.1 | வாழ்வாதாரத்தின் மீது ஏற்படும் நிரந்தரமான பாதிப்பு | கடுமையாகப் பாதிப்புக்குள்ளான நிலத் துண்டில் இருக்கும் பாதிப்புக்குள்ளான விவசாயிகள் அல்லது புதிதாகப் பயிர் வளர்ப்புக்களை ஆரம்பிப்போர். | மீதமுள்ள நிலத்தின் உற்பத்தித் திறனை உயர்த்த உதவுதல் (அவை, அறுவடையினை செறிவாக்குதல், அதிக விளைச்சலைத் தரும் விதைகளைப் பாவித்தல், விரிவாக்கம், புதிய விதைகள் மற்றும் பயிர்களை அறிமுகஞ் செய்தல்) மற்றும் தற்போது செயற்படுத்தப்படும் நிவாரண உதவிகளை வழங்குவதற்கு உதவுதல். | தற்போதுள்ள விவசாய விரிவாக்க சேவைகளுக்கு அணுகுதல் மற்றும் பாதிப்புக்குள்ளான நபர்களிடம் விடயங்களை வினவி இனங்காணப்பட்ட தேவைளுக்கமைய சேவைகளைக் கட்டியெழுப்புதல், தற்போது செயற்படுத்தப்படும் நிவராண உதவிகளை வழங்குவதற்கு உதவுதல், விவசாயத் திணைக்களம், சிறு அளவிலான தேயிலை உற்பத்தி அதிகார சபை, விவசாய சேவைகள் திணைக்களம், தெங்கு அபிவிருத்திச் சபை மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டுத் திணைக்களம். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| G3.2 | வாழ்வாதாரம் மீது ஏற்படும் நிரந்தரமான பாதிப்புக்கள். | பாதிப்புக்குள்ளான நிலத்துண்டில் இருக்கும் அல்லது தங்களினால் தேடிக் கொள்ளப்பட்ட நிலத்துண்டு அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட | வாழ்வாதாரத்தினை மீளமைப்பதற்கு உதவியாக, பிரதேச செயலாளரின் எழுத்துமூல உடன்பாட்டின் கீழ் குடும்ப அலகொன்றுக்கு ரூபா. 25,000/-நிதி உதவியொன்றினை வழங்குதல்.<br>வீட்டு அலகினால் கோரப்பட்டின், நிதியினை முதலிடுவதற்கு அல்லது வர்த்தக ரீதியில் வெற்றிகரமான இடமொன்றில் வியாபாரமொன்றினை ஆரம்பிப்பதற்கு அல்லது தேவையான வாழ்க்கைத் தொழில் உதவி மற்றும் | நேரடியாக நிவாரணம் வழங்கப்படாத வருமான இழப்புக்கான மேலதிக கொடுப்பனவு.<br><br>மேலும் வியாபாரம் மீளமைக்கப்பட்டதன் பின்னர் அல்லது அவ்வாறு இல்லாது விடின் பாதிப்புக்குள்ளான | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | மீள்குடியேற்ற நிலத்தில் மீளக்குடியேறியுள்ள மோசமான வகையில் பாதிக்கப்பட்ட குடும்ப அலகுகள். | ஆலோசனைகள் வழங்குவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உதவும்.<br>திறன் பயிற்சியுடன் தொடர்புபடுத்தி (G3.3இன் கீழுள்ள வசதி), உற்பத்தித்திறனான சொத்துக்களை சுவீகரித்துக் கொள்ளுவதற்கு நுண் நிதிக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உதவும். | நபர் வாழ்வாதாரத்தினை மாற்றஞ் செய்வதற்குள்ளாராயின், ஆரம்ப முதலீட்டுக்குப் பதிலாக உதவி வழங்குதல். | |
| G3.3 | வாழ்வாதாரம் மீது ஏற்படும் நிரந்தரமான பாதிப்புக்கள். | சுய தொழிலில் ஈடுபட்டுள்ள அங்கத்தவர்களைக் கொண்ட குடும்ப அலகு | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால், மீள்குடியேற்றஞ் செய்யும் தளங்களுக்கு அண்மையிலுள்ள பிரதேச வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் உதவியுடன், ஆகக்கூடியது 06 மாத காலப்பகுதிக்கு அங்கத்தவர் ஒருவருக்கு தலா ரூபா. 5000/-வீதம் நிதியினைச் செலவு செய்து, பாதிப்புக்குள்ளான குடும்ப அங்கத்தவர்களில் இருவருக்கு வாழ்க்கைத் தொழிற் திறன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு பயிற்சியினை வழங்குவற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br><br>எவ்வாறாயினும், பிரதேச செயலாளரின் எழுத்துமூல இணக்கப்பாட்டுடன், கருத்திட்டத்தினை அமுற்படுத்தும் பிரதேசத்தில் குடிசன மதிப்பீட்டினை முன்னெடுக்கும்போது, இவ்வாறான வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினைத் தமக்குப் பெற்றுத் தருமாறு குடும்ப அலகுகளின் அங்கத்தவர்கள் வேண்டுகோள் விடுப்பின் மாத்திரமே அவ்வாறான பயிற்சிக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | புதிய வியாபாரத்தினை ஆரம்பிக்கும் தேவைப்பாடு, தற்போது அமுற்படுத்தப்படும் அல்லது கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் தேவைப்பாட்டின் பிரகாரம், புதிய பயிற்சியளித்தலினை கட்டியெழுப்பும் தேவைப்பாடு. | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| G3.4 | வாழ்வாதாரம் மீது ஏற்படும் நிரந்தரமான பாதிப்புக்கள். | பாதிப்புக்குள்ளான நிலத் துண்டில் இருக்கும், அல்லது தம் மூலம் தேடிக்கொள்ளப்பட்ட நிலத்துண்டு அல்லது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்ட மீள்குடியேற்றத் தளத்தில் மீள்குடியேறியுள்ள மோசமான வகையில் பாதிக்கப்பட்ட கால்நடைப் பண்ணையினை முன்னெடுத்துச் செல்லும் குடும்ப அலகுகள். | வீதி அபிவிருத்தி அதிகார சபையினால், மீள்குடியேற்றஞ் செய்யும் தளங்களுக்கு அண்மையிலுள்ள பிரதேச வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிலையங்களின் உதவியுடன், ஆகக்கூடியது 06 மாத காலப்பகுதிக்கு அங்கத்தவர் ஒருவருக்கு தலா ரூபா. 5000/-வீதம் நிதியினைச் செலவு செய்து, பாதிப்புக்குள்ளான குடும்ப அங்கத்தவர்களில் இருவருக்கு வாழ்க்கைத் தொழிற் திறன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு பயிற்சியினை வழங்குவற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br><br>எவ்வாறாயினும், பிரதேச செயலாளரின் எழுத்துமூல இணக்கப்பாட்டுடன், கருத்திட்டத்தினை அமுற்படுத்தும் பிரதேசத்தில் குடிசன மதிப்பீட்டினை முன்னெடுக்கும்போது, இவ்வாறான வாழ்க்கைத் தொழிற் பயிற்சியினைத் தமக்குப் பெற்றுத் தருமாறு குடும்ப அலகுகளின் அங்கத்தவர்கள் வேண்டுகோள் விடுப்பின் மாத்திரமே அவ்வாறான பயிற்சிக்குக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும். | புதிய வியாபாரத்தினை ஆரம்பிக்கும் தேவைப்பாடு, தற்போது அமுற்படுத்தப்படும் அல்லது கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் தேவைப்பாட்டின் பிரகாரம், புதிய பயிற்சியளித்தலினை கட்டியெழுப்பும் தேவைப்பாடு. | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| **H. 1 குடும்ப அலகுகள்/கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கான விசேட உதவி** | | | | | |
| H1.1 | கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய | கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய | கவனத்திற் கொள்ளப்படட வேண்டிய நிலைமையின் கீழ் வாழும் பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் குடும்ப | இழந்த சொத்துக்கள் தொடர்பிலான கொடுப்பனவுக்கு மேலாக, | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | நிலைமையின் கீழ் வாழும் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான வர்கள். | நிலைமையின்கீழ் வாழும் குடும்ப அலகுகள் (குறைந்த வருமானப் பயனாளி குடும்பங்கள் – சமுர்த்தி அல்லது வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள், ஏனைய பிரேரணைத் திட்டங்களுடன் தொடர்புபட்ட),<br><br>கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான முதியோர்கள், பெண்களைத் தலைமையாகக் கொண்ட குடும்பங்கள் மற்றும் அங்கவீனர்கள். | அலகுகளின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு ரூபா. 15,000/-விசேட மானியமொன்று.<br>மீளமைப்பதற்குப் பொருத்தமான இடமொன்றினைத் தேடுவதற்கு, புதிய இடமொன்றுக்கு மாறிச் செல்லுவதற்கு உதவுதல் அல்லது கருத்திட்டத்தினூடாக கட்டியெழுப்பப்பட்ட மீள்குடியேற்றத் தளமொன்று இருப்பின், பாதிப்புக்குள்ளான நபர்களின் விருப்பின் பிரகாரம் அவற்றினை வழங்குதல். | கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலைமையின் கீழுள்ள நபர்களை மீளக்குடியேற்றுவதன் காரணமாக ஏற்படும் பாதிப்புக்களின் காரணமாக மேலும் அளவுக்கு அதிகமாக பாதிப்புக்குள்ளாவதைக் குறைப்பதற்கு உதவி வழங்குதல் மற்றும் கருத்திட்டத்தின் கீழ் வெறுமனமே தனியாக சமூகப் பாதிப்புற்ற சூழ்நிலைகள் மற்றும் ஓரங்கட்டப்படும் சூழ்நிலைகளை மீளமைத்தல் மாத்திரம் இடம்பெறுவதைத் தவிர்த்தல். | மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| H1.3 | துணைக் குடும்பங்கள் மீது ஏற்படும் பாதிப்புக்கள். | காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 2 வது அத்தியாயத்தின் பிரகாரம் அறிவித்தலினை வெளியிடுவதற்கு ஆகக்குறைந்த வகையில் 03 வருடங்களுக்கு முன்னரிருந்தே ஒரே வீட்டில், ஒரே அல்லது | குடும்பமொன்றுக்கு ரூபா. 100,000/- வீதம் நிதிசார் உதவி.<br>துணைக் குடும்பமொன்றுக்கு (தனிக் குடும்பம்), மீளமைப்பதற்கு பொருத்தமான இடமொன்றினைத் தேடிக் கொள்ளுவதற்கு, புதிய இடமொன்றுக்கு மாறிச் செல்லுவதற்கு உதவுதல் அல்லது கருத்திட்டத்தினூடாக கட்டியெழுப்பப்பட்டுள்ள மீள்குடியேற்றத் தளமொன்று இருக்குமாயின், பாதிப்புக்குள்ளான நபர்களின் விருப்பின் பிரகாரம் அதனை வழங்குதல். | பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ளுவதற்குத் துணைக் குடும்பங்களுக்கு உதவுதல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | வேறான தேர்தல் பட்டியலின் கீழ் வாழும் துணைக் குடும்பங்கள் (தனிக்குடும்பம்) | உரிய தொகுதியின் பிரதேச செயலாளரினால் கிராம உத்தியோகத்தரிடமிருந்து உரிய தொடர்புடையவிரபங்களைப் பெற்று துணைக் குடும்பத்தின் (தனிக் குடும்பம்) உரிமையினை உறுதிப்படுத்துதல் வேண்டும். | | |
| **H2** மேலதிகக் கொடுப்பனவுகள் | | | | | |
| H2.1 | விளம்பரத்திற்கான செலவுக் கட்டணம் | வியாபார உரிமையாளர்கள் அல்லது இயக்குனர்கள் அல்லது நிறுவனங்கள். | தற்போதைய அமைவிடத்திலிருந்து நிரந்தரமாக இடம்பெயரும் வியாபாரங்கள் அல்லது நிறுவனங்களுக்கு உரித்தாகும்.<br>புதிய இடத்தினை அறிவித்தலினூடாக விளம்பரப்படுவத்துவதற்கு, அறிவித்தல் பத்திரத்தினை அச்சடிப்பதற்கு பின்வருமாறு கொடுப்பனவு இடம்பெறும்.<br>பதிவு செய்யப்பட்ட வியாபாரமொன்று/நிறுவனமொன்றுக்கு ரூபா.20,000/-<br>பதிவு செய்யப்படாத வியாபாமொன்று/நிறுவனமொன்றுக்கு ரூபா. 7,500/- | வியாபாரம் அல்லது நிறுவனம் அமைந்துள்ள புதிய அமைவிடத்தினை விளம்பரப்படுத்துவதற்கு உதவுதல் மற்றும் அதனூடாக தற்போதுள்ள வாடிக்கையாளர்களைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்கு உதவுதல். அதனூடாக வியாபாரத்தின் அல்லது நிறுவனத்தின் வருமானம் அல்லது வாடிக்கையாளர்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய குறிப்பிடத்தக்க பாதிப்பினைத் தடுத்தல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |
| H2.2 | சுவீகரிப்பு முன்னெடுப்பின் போது ஈடுசெய்வதற்கு நேரிடும் செலவுகள். | 9 வது பிரிவின் கீழ் காட்டப்பட்ட விடய விசாரணைகளின் கீழ் தோன்றும் கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகும் சகலரும். | 9 வது பிரிவின் கீழ் காட்டப்பட்ட விடய விசாரணைகளின் கீழ் தோன்றும் கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகும் ஒவ்வொருவருக்கும் தலா ரூபா. 10,000/-ஐத் தாண்டாதவாறான கொடுப்பனவொன்று வழங்கப்படும். | 9 வது பிரிவின் கீழ் காட்டப்பட்ட விடய விசாரணைகளின் கீழ் தோன்றும் ஒவ்வொருவரினதும் வேண்டுகோள்/மதிப்பீட்டு அறிக்கைகள் மற்றும் உரித்து அறிக்கைகள் | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர். |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | | போன்றனவற்றினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் போக்குவரத்துச் செலவுகளுக்கு ஈடு செய்யும் செலவுகளை மீள்நிரப்புவதற்கு உதவுதல். | |
| **I. சமுதாயச் சொத்துக்கள்** | | | | | |
| I1 | சிறியளவிலான சமுதாயக் கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டமைப்புக்களின் இழப்பு. | சமுதாயச் சொத்துக்களிலிருந்து பயன்களைப் பெறும் பிரதேச செயலகப் பிரிவு, நகர சபை, உரிய பிரதேச மக்கள் அல்லது அப்பிரதேசத்தின் சமுதாயச் சொத்துக்களுக்கு உரித்தான அல்லது அதிலிருந்து பயன்களைப் பெறும் பிரதேச நிறுவனம். வணக்கத்துக்குரிய ஸ்தலங்களின் பிரதான மதகுருமார். | பாதிப்புக்குள்ளான சமுதாயக் கட்டிடங்கள், கட்டமைப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுச் சொத்து மூலாதாரங்களை முன்பிருந்த இடத்திலேயே முன்பிருந்த நிலைக்கு அல்லது மிகவும் சிறந்த நிலைக்கு மீளமைத்தல்.<br>அல்லது<br>பாதிப்புக்குள்ளான சமுதாயம் மற்றும் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி இனங்காணப்பட்ட மாற்றிடத்தில் மீளமைத்தல்.<br>அல்லது முழுமையாக மீளமைப்பதற்கான செலவின் பிரகாரம் நிதி மூலம் கொடுப்பனவு செய்தல்மற்றும் சமுதாய வளங்களை அடைவதற்கு மீளமைத்தல். | ஒப்பந்தக்காரர்களினால் சமுதாயக் கட்டிடங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் ஏனைய பொதுச் சொத்து மூலாதாரங்களை முழுமையாக மீளமைத்தல் (செலவு கருத்திட்டத்தினூடாக ஈடு செய்யப்படும்) மற்றும் மீளமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, உடன்பாட்டின் கீழ், உரிய உள்ளூர் அதிகார சபை அல்லது சமுதாயத்திற்கு கொடுப்பனவினைச் செய்தல். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர், உள்ளூர் அதிகார சபை. |
| I2 | உள்ளூர் வீதிகள், மைதானங்கள், நடைபாதைகள், பாலங்கள், நீர்ப்பாசனம், நீர் ஆதாரங்கள் | சமுதாயச் சொத்துக்களிலிருந்து பயன்கள் கிடைக்கப் பெறும் பிரதேச செயலகத் தொகுதி, நகர சபை, அல்லது | பாதிப்புக்குள்ளான சமுதாயக் கட்டிடங்கள், கட்டமைப்புக்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பொதுச் சொத்து மூலாதாரங்களை முன்பிருந்த இடத்திலேயே முன்பிருந்த நிலைக்கு அல்லது மிகவும் சிறந்த நிலைக்கு மீளமைத்தல்.<br>அல்லது | ஒப்பந்தக்காரர்களினால் சமுதாயக் கட்டிடங்கள், கட்டமைப்புக்கள் மற்றும் ஏனைய பொதுச் சொத்து மூலாதாரங்களை முழுமையாக மீளமைத்தல் | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர், உள்ளூர் அதிகார சபை. |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | அல்லது சமுதாய கை நீர்ப்பம்பிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள் இழப்பு. | அப்பிரதேசத்தின் சமுதாயச் சொத்துக்களுக்கு உரித்தான அல்லது அதிலிருந்து பயன்களைப் பெறும் உள்ளூர் நிறுவனம். | பாதிப்புக்குள்ளான சமுதாயம் மற்றும் உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடி இனங்காணப்பட்ட மாற்றிடத்தில் மீளமைத்தல். அல்லது முழுமையாக மீளமைப்பதற்கான செலவின் பிரகாரம் நிதி மூலம் கொடுப்பனவு செய்தல் மற்றும் சமுதாய வளங்களை அடைவதற்கு மீளமைத்தல். | (செலவு கருத்திட்டத்தினூடாக ஈடு செய்யப்படும்) மற்றும் மீளமைப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு, உடன்பாட்டின் கீழ், உரிய உள்ளூர் அதிகார சபை அல்லது சமுதாயத்திற்கு கொடுப்பனவினைச் செய்தல். | |
| **J. எதிர்பாராத மோசமான பாதிப்பு** | | | | | |
| J1 | கருத்திட்டத்தின் மூலம் இடம்பெறும் வேண்டிய எதிர்பார்க்காத மோசமான பாதிப்பு. | கருத்திட்டத்தின் மூலம் இடம்பெறும், வேண்டிய எதிர்பார்க்காத மோசமான பாதிப்பு, கொள்கைகள் வரைவின் கோட்பாட்டின் கீழ் அமைத்து ஆவணப்படுத்துதல் மற்றும் அதன் பாதிப்பினைத் தகர்த்தெறிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | | | |
| **K** தற்காலிகமான பாதிப்பு | | | | | |
| K1 | கருத்திட்டத்துடன் தொடர்பான சிவில் செயற்பாடுகளின் காரணமாக உருவாகும் தற்காலிக மோசமான பாதிப்புக்கள் (பிரவேசிப்பு வழி அழிவடைதல், சொத்துக்கள், காணிகளுக்கு | வீட்டு அலகுகள்/வியாபாரிகள்/வாழ்வாதாரச் செயற்பாடுகள். | மனக் குறைகளைக் களையும் பொறிமுறைக்கு தங்களின் மனக்குறைகளை முன்வைத்து நியாயம் கிடைப்பதை எதிர்பார்ப்பது பாதிப்புக்குள்ளாகும் ஒவ்வொரு நபருக்கும் மற்றும் சமுதாயத்திற்கு இயலும் என்பதுடன், பின்வரும் செயற்பாடுகள் அல்லது தேவையான பாதுகாப்பான நடவடிக்கையினை ஒருங்கிணைப்புச் செய்யும்பேது கருத்திட்ட ஊழியர் குழாம் மற்றும்/அல்லது ஒப்பந்தக்காரர்களினால் இடம்பெற்ற குறைகளின் காரணமாக ஏற்பட்ட இழப்புக்களுக்கு, இழப்பீடுகளைப் பெற்றுக் | எதிர்பாராத நிகழ்வுகள் மற்றும் சம்பவங்ளைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள். | வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதான விலை மதிப்பீட்டாளர், பிரதேச செயலாளர், உள்ளூர் அதிகார சபை. |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | ஏற்படும் பாதிப்புக்கள், பாதுகாப்புத் தொடர்பிலான பிரச்சினைகள், பயணங்களில் சிக்கல்) | | கொள்ளுவதற்கு பாதிப்புக்குள்ளாகும் ஒவ்வொரு நபருக்கும் மற்றும் சமுதாயத்திற்கு முடியும்.<br><br>1.1 கட்டுமாணப் பணிப் பட்டியல், ஏற்படக்கூடிய தற்காலிக பாதிப்பு, அறிவிப்புக் பலகைகள், பாதுகாப்புத் தொடர்பிலான ஆலோசனைகள், தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் மனக்குறைகளைக் களையும் பொறி முறை தொடர்பில் தலைவரின் தொலைபேசி இலக்க விபரங்கள், கட்டுமாணத் தளத் தகவல்களைப் பொதுமக்களுக்கு அறிவிப்பதற்கு அறிவித்தல் பலகைகளினூடாகக் காட்சிப்படுத்தல்.<br>1.2 பயணத்தினை எளிதாக்குவதற்காக வாகனப் போக்குவரத்தினைநிர்வகிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.<br>1.3 தற்போதுள்ள விற்பனை/வியாபார தளங்களுக்குச் செல்லுவதற்குத் தேவையான விசேட நடவடிக்கை எடுத்தல்.<br><br>1.4 ஏதேனும் வியாபாரத் தளத்திற்கெனவுள்ளபாதை வாரமொன்றினை விட அதிகமான காலம் செயலிழந்து காணப்படின், இப் பாதையினை, ஒப்பந்தக்காரரினைக் கொண்டு இருந்த நிலைக்கு சரிசெய்யும் வரும் வரை, கருத்திட்டப் பணிப்பாளரின் அங்கீகாரம் மற்றும் கருத்திட்டப் பொறியியலாளரின் உறுதிப்படுத்தலின் கீழ், இவ்வாறான நாளொன்றுக்கு ரூபா. 1000/- வீதம் நிதிசார் நிவாரணமொன்றினை வழங்குதல். | | |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | 1.5 . நிநிறைவேற்றப்பட்ட ஒப்பந்த ஏற்பாடுகளின் பிரகாரம், நிர்மாணிக்கும் வேளையில் அல்லது நிர்மாணிக்கும் எந்திர உபகரணங்களைப் பொருத்தும்போது அல்லது அசட்டையீனமாக எந்திர உபரகரணங்ளை செயற்படுத்துவதன் காரணமாக கட்டிடம் அல்லது தளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் ஏதேனும் பாதிப்புத் தொடர்பில் இழப்பீட்டுக் கொடுப்பனவுச் செலவு, ஒப்பந்தக்காரரினால் ஈடு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>1.6 தனியார் நிலங்களில் பயணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளை மீறி வேறு இடங்களைத் தற்காலிகமாகப் பாவித்தல், அந்நில உரிமையாளர்கள் மற்றும் ஒப்பந்தக்காரருக்கிடையே எழுத்து மூலம் அங்கீகாரத்துடன் இடம்பெறுதல் வேண்டும். ஒப்பந்தக்காரர்கள் கட்டுமாண முகாம்களைநிர்மாணிக்கும்போது, கருத்திட்டத்தினை அமுற்படுத்தும் பிரதிநிதியுடன் கலந்துரையாடி நிர்மாணித்தல் வேண்டும்.<br><br>1.7 வேலைத்தளம்/கட்டுமாண முகாம்களில் அறிவித்தல் பலகைகள், பாதுகாப்புத் தொடர்பில் பயன்படுத்தப்படும் தடைகள், முதலுதவி வசதிகள் ஆகியவற்றினை தயார்படுத்தி விபத்துக்களைக் குறைத்தல், ஒலி மற்றும் தூசினால் ஏற்படும் மாசடைதலை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் உட்பட, சூழல் முகாமைத்துவத் | | |

| | இழப்பின் வகை | உரித்தான நபர்கள் | உரித்துக்கள் | கொடுப்பனவுகளை நியாயப்படுத்தல் | பொறுப்பு |
|---|---|---|---|---|---|
| | | | திட்டத்தின் பகுதியொன்றாக சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் நடவடிக்கை எடுத்தல்.<br><br>1.8 வாகனங்களின் பாதையினைத் திருப்புதல், முகாமைத்துவம், நிர்மாணிப்புப் பணிகளை படிநிலைகளாக அமுற்படுத்தும் மூலோபாயம், வாகன நெரிசல், அதிக வாய்ப்புக்களைத் தவிர்த்து நிர்மாணிப்பினை முன்னெடுத்தல் போன்றன உட்பட, மனிதர்கள் மற்றும் வாகனப் போக்குவரத்துக்களின் மீது ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கு மற்றும் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.<br><br>1.9 கட்டுமாண வேலைத் தளங்களில் பணிபுரியும் ஆண் மற்றும் பெண் ஊழியர்களுக்கு சமமான சம்பளத்தினை வழங்குவதற்கும் மற்றும் குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கமர்த்துவதைத் தவிர்ப்பதற்கும் தேவையான சட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.<br><br>1.10 சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் கீழ் வரும் வேறு வேண்டிய பாதிப்புத் தொடர்பிலும் நடவடிக்கை எடுப்பதற்குத் தேவையானவாறு நடவடிக்கை எடுத்தல். | | |

**5.3உரித்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான இறுதித் தினம்**

அட்டவணை இலக்கம் 4 மற்றும் 64 இன் ஊடாக காட்டப்பட்டவாறு மத்திய அதிவேகக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலை தொடர்பில் காணிச் சுவீகரிப்பு நடைமுறை காணிச் சுவீகரிப்புச் சட்ட திட்டத்தின் பிரகாரம் இடம்பெறும். ஆதலால், 2 வது பிரிவின் பிரகாரம், உரிய அறிவித்தல் வெளியீடு செய்யப்பட்ட தினமே உரித்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கான இறுதித் தினமாகும். இரண்டாவது பிரிவுக்கான முதலாவது அறிவித்தல் 2014 நவம்பர் 12 ஆந் திகதி ரம்புக்கன உள்ளக மாற்று வீதிக்கு நிலத்தினைச் சுவீகரிப்பதற்காக வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் கருத்திட்டத்தின் 3 வது படிநிலைக்கு உரிய பிரத்தியேக நிலங்களூடாக வீதி பயணிக்கும் கோடு தொடர்பில் நிலங்களைச் சுவீகரிப்பதற்காக, 2015 ஜனவரி 30 ஆந் திகதி ரம்புக்கன பிரதேச செயலாளரினால் 2 வது பிரிவின் பிரகாரம் உரிய அறிவித்தல் வெளியிடப்பட்டு ஆரம்பத் திட்டங்கள் 18 வழங்கப்பட்டன. அதன் பிரகாரம் உரிய ஏனைய பிரதேச செயலாளர்களும் முறையே இந்நிலச் சுவீகரிப்புப் பணிக்கான செயற்பாடுகளை ஆரம்பித்தனர்.

**5.4கருத்திட்ட உதவி மற்றும் பயன்கள்.**

சமுதாயத்தின் அனைத்துப் பிரிவுகளுக்குமான வாய்ப்புக்கள் மற்றும் பயன்களினைக் கிடைக்கச் செய்வதன் காரணமாக வீதி உட்கட்மைப்பு வசதிகள், அபிவிருத்தி முன்னெடுப்பின் அத்தியாவசியமான துறையொன்றாகும். எனவே மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டம், இலங்கையின் ஏழு மாகாணங்களில் வசிக்கும் மக்களுக்கு ஒரு உண்மையான அபிவிருத்தியினை முன்னெடுப்பதற்கான வாய்ப்பாகும் (மேல், சப்பிரகமுவ, மத்திய, வட மேல், வட மத்திய, கிழக்கு மற்றும் வடக்கு மாகாணம்). அத்தியாம் I இல் சுட்டிக்காட்டப்பட்டவாறு, கருத்திட்டத்தின் எதிர்வரும் படிநிலைகளில் இந்த அதிவேக வீதி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.'Lose to Gain: Is Involuntary Resettlement a Development Opportunity?'(இழப்புக்கு இழப்பு : சுயவிருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் அபிவிருத்திப் பயன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஒரு வாய்ப்பாகுமா?)ஊடாக சமமான நிலை கலந்துரையாடப்பபடுள்ளதுடன், இவ்வாறான கருத்திட்டங்களின் தலையீடுகளினூடாக தெளிவான அபிவருத்தி முன்னெடுப்புக்கு நேர்க்கணிமான அழுத்தம் வழங்கப்படும் என்பதைக் காட்டுகின்றது.

சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பில் சமீபத்திய சொற்பொழிவுகளைத் தொடர்ந்து, மீள்குடியேற்றத் திட்டம் இடம்பெயரும் மக்களுக்கு அபிவிருத்திக்கான வாய்பொன்றாக, நிறைவேற்று முகவர்/கருத்திட்ட முகாமைத்துவ அலகு கருதுகின்றது. போதுமான மற்றும் சரியான நேரத்தில் வழங்கப்படும் இழப்பீடுகள், வருமானத்தினை மீளமைத்தல், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையிலுள்ள மக்கள் தொகுதியினை புனர்வாழ்வளித்தல் மற்றும் கட்டுமாணப் பணிகளுடன் தொடர்பான தொழில் வாய்ப்புக்கள் போன்ற கருத்திட்டப் பயன்களை, இணைந்த நிறுவனம்சார் செயற்பாட்டினூடக கருத்திட்டத்தின் மூலம் இடம்பெயர்ந்த மக்களுக்குத் தங்குதடையின்றி சீராக வழங்குதல் வேண்டும். எதிர்வரும் காணிச் சுவீகரிப்புச் செயற்பாட்டுக்கான அடிப்படையான, பாதிப்புக்குள்ளான மக்களுடன் இணைந்து ஒருமித்த மேம்பாட்டுக்காக அவர்களுடன் சொற்பொழிவினைக் கட்டியெழுப்புதல் இத்தருணத்தில் கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் முன்னெடுக்கப்பட வேணடிய முக்கியமான பணியொன்றாகும்.

வருமானத்தினை மீளமைத்தல் தொடர்பில் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு முன்னர், கருத்திட்டத்தினூடாக இடம்பெயரும் மக்களின் தேவைப்பாடுகள், வருமானத்தினை மீளமைப்பது தொடர்பிலுள்ள சாத்தியங்கள் மற்றும் அத் தொகுதியின் விருப்புக்களை மதிப்பீடு செய்வதற்கு, அவர்களின் பங்களிப்புடன் இவ்விடயங்களை மதிப்பீடு செய்வது இடம்பெறுதல் வேண்டும். ஒப்பீட்டளவில் உயர் மட்டத்தில் காணப்படும் எழுத்தறிவு வீதம், கடன் வசதிகளைப் பெற்றுக் கொள்வதற்குள்ள இயலுமை, வணிகங்களின் பன்முகத்தன்மை மற்றும்

பிரதேசத்திலுள்ள நுண் நிதியச் சூழல் போன்றன இடம்பெயரும் மக்கள் அவர்கள் வாழும் சூழலிலுள்ள வலுக்களில் சிலவாகும். இந்த உன்னதமான அம்சங்கள், அதன் பிரதேசத்தின் சமூகப் பொருளாதார சூழலினூடாக வளர்ந்து வரும் அம்சங்கள் என்பதுடன், விற்பனை மற்றும் வியாபாரத் துறையில் ஈடுபட்டுள்ள நபர்கள் ஒவ்வொருவருடனும் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களினூடாக அவ்விடயங்கள் மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

## அத்தியாயம்VI:வீடு மற்றும் குடியிருப்புக்களை இடமாற்றுதல்.

### 6.1அறிமுகம்

பாதிப்புக்குள்ளாகும் ஒட்டுமொத்த நபர்களும் கருத்திட்டத்தின் கீழ் இடமாற்றுவதற்கும் மற்றும் மீளக் குடியேற்றுவதற்கும் உள்வாங்கப்பட்டிருக்கவில்லை. அவர்களில் பெரும்பாலானோர் குடியிருப்பு நிலங்களுக்கு மேலாக அதிகளவிலான விவசாய நிலங்களை இழக்கின்றனர். பாதிப்புக்குள்ளாகும் மொத்த நபர்களின் எண்ணிக்கை 1,747ஆகும். ஆதலால் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் இத் தொகுதியினர், நிறைவேற்று நிறுவனம்/கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் கருத்திட்ட உத்தியோகத்தர் குழாமுடன், விசேடமாக சமூகப் பாதுகாப்புக்கள் மற்றும் மீள்குடியேற்ற விடயங்கள் தொடர்பில், நெருங்கிய தொடர்பொன்றிகை முன்னெடுத்துச் செல்லுதல் வேண்டும். மேலும் உரிய நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப் பெறும் உதவியினை மேம்படுத்துவதற்கு, கருத்திட்ட முகாமைத்துவ அலகு, அந்தந்த பிரதேசங்களின் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களுடன் நெருங்கிச் செயலாற்றுதல் வேண்டும்.போதிய நிலங்கள் காணப்படுமாயின்,

கருத்திட்டம் அமுற்படுத்தப்படும் பிரதேசத்தினுள் பகுதியளவிற் பாதிப்புக்குள்ளான வீடுகள் மற்றும் வியாபார நிறுவனங்களை அச்சுற்றாடலிலேயே மீளவும் அமைக்க முடியும். கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு இது மிகவும் விரும்பத்தக்க மாற்றீடாக அமையும். எவ்வாறாயினும் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களே இது தொடர்பில் தீர்மானம் எடுத்தல் வேண்டும் என்பதுடன், அவர்களின் தீர்மானத்தினைச் செயற்படுத்துதை இலகுவாக்குவதில் கருத்திட்ட முகாமைத்துவ அலகு முக்கிய பங்கினைக் கொண்டுள்ளது. இதற்கு முதல், கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் தமது சொந்தத் தீர்மானத்தினை எடுத்திருப்பது, போதிய தகவல்களினை அடிப்படையாகக் கொண்டா என்பது தொடர்பில் கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் உறுதிப்படுத்தப்படுதல் வேண்டும்.

### 6.2மீள் குடியேற்றம் தொடர்பிலான சமூக மற்றும் கலாசார பரிமாணங்கள்

இக்கருத்திட்ட அறிக்கையினூடாக பல சந்தர்ப்பங்களில் குறிப்பிட்டுள்ளவாறு, கருத்திட்டச் சுழற்சியினூடாக மீளமைத்தல் மற்றும் மீள்குடியேற்ற செயற்பாடுகளைத் திட்டமிடும்போது புலனாய்வு செய்ய வேண்டிய மற்றும் புரிந்து கொள்ள வேண்டிய பல சமூக மற்றும் கலாசார விடயங்கள் உள்ளன. கருத்திட்டத்தின் 3 வது படிநிலையின் கீழ் முன்னெடுக்கப்பட்ட சமூகப் பொருளாதார நிலைகள் மற்றும் சொத்துக்களை உறுதிப்படுத்தும் ஆய்வின் (புள்ளி விபரம்) கீழ் இது தொடர்பில் அதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. விசேடமாக, மையக் குழு கலந்துரையாடல் மற்றும் பிரதான தகவல்களை வழங்குபவர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தியபோது, கருத்திட்டத்தின் மீளக் குடியேற்றும் செயற்பாட்டிற்கான சமூகப் பொருளாதார விடயங்களைக் கலந்துரையாடுவதற்கு ஆய்வு ஆலோசகர் மற்றும் ஆய்வுக் குழுவுக்கு தேவையானவாறு நேரமிருந்தது. அதன் பிரகாரம் அட்டவணை இலக்கம் 53 இன் ஊடாக இவ்வாறான விடயங்கள் தொடர்பிலான பொழிப்பொன்று முன்வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம் 53:கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான சமூக மற்றும் கலாசாரம்சார் பிரச்சினைகள்.**

| தொ.இல. | காரணி/பிரச்சினை | தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|
| 1 | உறவினர்கள், நண்பர்கள் மற்றும் அயலவர்களுடனான சமூகத் தொடர்புகள் இழக்கப்படுதல். | இது தொடர்பில் ஏற்படும் கவலைதவிர்க்க முடியாது. அது பல ஆண்டுகள் நீடிக்கும். மீள்குடியேற்ற முன்னெடுப்பில் ஆர்வம், விருப்பு மற்றும் இனிமையான அனுபவத்தினைக் கொண்டிருப்பார்களாயின், இவ்வாறான துக்கத்திற்குக் காரணமான உள நிலைக்கு அவர்கள் முகங் கொடுத்திருக்க மாட்டார்கள். மீள் குடியேற்றும்போது புதிய குடியிருப்பாளர்களை, ஆதரிக்கும் குடிகளுடன் இணைப்பதற்குப் பொருத்தமான செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் வேண்டும். தற்போதுள்ள இடத்திலேயே மீள் குடியேற்றுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| 2 | சமுதாயத்துடன் காணப்படும் மதப் பற்று மற்றும் மதம்சார் நிறுவனங்களுடன் காணப்படும் பந்தம் இழக்கப்படுதல். | இது தொடர்பில் ஏற்படும் கவலை தவிர்க்க முடியாது. அது பல ஆண்டுகள் நீடிக்கும். மீள்குடியேற்ற முன்னெடுப்பில் ஆர்வம், விருப்பு மற்றும் இனிமையான அனுபவத்தினைக் கொண்டிருப்பார்களாயின், இவ்வாறான துக்கத்திற்குக் காரணமான உள நிலைக்கு அவர்கள் முகங் கொடுத்திருக்க மாட்டார்கள். மீள் குடியேற்றும்போது, மீள்குடியேற்றத் தளங்களுக்கருகாமையிலுள்ள புதிய மத நிலையங்களுடன் ஒருங்கிணைப்பதற்கு இக்கருத்திட்டம் சில செயற்பாடுகளை ஒழுங்கு செய்தல் வேண்டும். தற்போதுள்ள இடத்திலேயே மீள் குடியேற்றுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| 3 | சாதி மற்றும் இனத்தினை அடிப்படையாகக் கொண்ட | சாதி மற்றும் இன ரீதியிலான தனியான மீள்குடியேற்ற செயல்முறைகளை ஊக்குவிக்காது, |

| தொ.இல. | காரணி/பிரச்சினை | தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|
| | ஒருங்கிணைப்பட்ட சமுதாயம் இழக்கப்படுதல். | அத்தகைய ஆர்வமுள்ள குடும்பங்களுக்கு ஒரு குறிப்பிட்ட மீள் குடியேற்றத் தளத்தினை ஒழுங்கு செய்வதன் உண்மைக்காரணியினைக் கவனத்திற் கொள்ளுதல். தற்போதுள்ள இடத்திலேயே மீள் குடியேற்றுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| 4 | அரசியல் சமூகம் மற்றும் தொடர்புகள் முன்னெடுக்கப்படும் குழுக்களுடன் உள்ள தொடர்புகள் அற்றுப்போதல் மற்றும் தேவையான போது அவர்களின் உதவி கிடைக்காது போதல். | தற்போதுள்ள இடத்திலேயே மீள் குடியேற்றுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| 5 | தற்போது காணப்படும் கிராம அலகினை வகுத்தல் மற்றும் ஒவ்வொரு சமுதாயத்திற்கும் அணுகுமுறை வரையறுக்கப்படுதல். | பிரேரிக்கப்பட்ட வீதிக்கு கீழாக மற்றும் மேலாகக் கடந்து செல்லும் வீதிகளை அமைப்பதனூடாக, கிராமத்திற்கும் மற்றும் சமுதாயத்திற்கும் அணுகும் பாதைகளை வழங்குதல். கிராம அலகு வகுக்கப்படுமாயின் மற்றும் தற்போதுள்ள பாதை நீண்டதூரத்தில் இருக்குமாயின் புதிய பிரவேசிப்பு வீதியினை வழங்குதல் வேண்டும். |
| 6 | சந்தை, கல்விசார் நிலையங்கள், போக்குவரத்து வசதிகள் மற்றும் தற்போதுள்ள இடத்திற் காணப்படும் ஏனைய பொது வசதிகளுக்கான பிரவேசிப்பு இழக்கப்படுதல் அல்லது பலவீனமாதல். | தற்போதுள்ள இடத்திலேயே மீள் குடியேற்றுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| 7 | தற்போதுள்ள இடத்திலுள்ள இயற்கை அழகினை அனுபவிப்பதற்கான வாய்ப்பு இழக்கப்படுதல். | தவிர்க்க முடியாது. தற்போதுள்ள இடத்திலேயே மீள் குடியேற்றுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| 8 | மரபு வழி நிலம் மற்றும் காணி உரிமைகள் இழக்கப்படுதல். | தவிர்க்க முடியாது. தற்போதுள்ள இடத்திலேயே மீள் குடியேற்றுவதற்கு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| 9 | மக்களின் தன்நிறைவு மற்றும் உணவுப் பாதுகாப்பு இழக்கப்படுதல். | சகல மீள்குடியேற்றத் தளங்களிலும் சிறந்த முகாமைத்துவத்தினைக் கொண்ட வீட்டுத் தோட்டத் நிகழ்ச்சித் திட்டமொன்றினை அறிமுகஞ் செய்தல் மற்றும் சாடிகளில் அமைக்கப்பட்ட மரக் கன்றுகளைப் பகிர்ந்தளித்தல் (பழங்கள், மரக்கறிகள், தேங்காய், பலா போன்றன) |
| 10 | பெண்கள் மற்றும் சிறார்களுக்கு சமூகப் பாதுகாப்பின்மை. | கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களை விழிப்புணர்வூட்டுதல் மற்றும் மீள்குடியேற்றத் தளங்கள் தொடர்பில் சமுதாயத்தினை ஒன்றுதிரட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள். |
| 11 | முதியோர்களுக்கு சமூகப் பாதுகாப்பின்மை. | |
| 12 | மீள்குடியேற்றத் தளத்திலிருந்து தற்போது காணப்படும் நிலங்களுக்கிடையேயான | தவிர்க்க முடியாது. வருமான மீளமைப்பு நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை அறிமுகஞ் செய்தல். |

| தொ.இல. | காரணி/பிரச்சினை | தீர்வு நடவடிக்கைகள் |
|---|---|---|
| | தூரம் மற்றும் வழமையான வேளாண்மை நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படுத்தப்படுதல். | |
| 13 | புதிய சமூக - பொருளாதார நடத்தை முறைக்கு இணங்குவது கடினமாதல். | சமூகத்தினை ஒன்றுதிரட்டும் நிகழ்ச்சித் திட்டம் மற்றும் வாழ்வாதார மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம். |
| 14 | ஆதரிக்கும் குடிகள் மற்றும் அவர்களின் சமூக – பொருளாதார நடைமுறைகளுக்கு இணங்குவது கடினமாதல். | சமூகத்தினை ஒன்றுதிரட்டும் நிகழ்ச்சித் திட்டம் |
| 15 | ஆண்களினால் சரியான முகாமைத்துவமின்றி நிதி கையாளப்படுவதைக் குறைக்கும் பொருட்டு இழப்பீட்டு நிதி தொடர்பில் குடும்பத்தினுள் சம உரிமைகளை வழங்குதல். கணவன் மற்றும் மனைவி போன்ற இருவருக்கும் இழப்பீட்டு நிதி தொடர்பில் உரித்தினை ஏற்படுத்துதல் வேண்டும் | இழப்பீட்டு நிதி தொடர்பில் கணவன் மற்றும் மனைவிக்கிடையே சட்டப் பிரச்சினை ஏற்படுவதைத் தவிர்ப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல். இந்த இணக்கப்பாட்டினைக் காரணமாகக் கொண்டு, காணியினைச் சுவீகரிக்கும் சாதாரண நடைமுறைகளின் கீழ், இழப்பீட்டு நிதி தொடர்பில் உரித்தினைக் கோருவதற்கு மனைவிக்கு வாய்ப்புக் கிட்டும். |

கருத்திட்டத்தினூடாக இழப்பீடுகளாக கிடைக்கக்கூடிய நிதியினை சரியான முகாமைத்துவமின்றிக் கையாளுவதற்குள்ள இயலுமை தொடர்பில் பல பெண்களினால் வெளிக் கொணரப்பட்டுள்ளது. சட்டரீதியான உரித்து கணவனிடமே காணப்பட்டாலும், குடும்பத்தினைக் கட்டியெழுப்புவது, கணவன் மற்றும் மனைவி ஆகிய இருவரும் இணைந்து கட்டியெழுப்பப்பட்ட சமூகத் தொடர்புகள் வலையமைப்பினூடேயாகும். ஆதலால், முன்மொழியப்பட்ட தீர்வு நடவடிக்கைகளைப் பின்பற்றுதல், மீள்குடியேற்றம் தொடர்பில் குடும்பத்தினுள் ஏற்படக்கூடிய (எதிர்மறை) பிரச்சினைகளைக் குறைப்பதற்குக் காரணமாக அமையும். தேவையேற்படின், குடும்பங்களை மீளக்குடியேற்றும் செயற்பாடுகளின்போது 18 வயதினைப் பூர்த்தி செய்துள்ள பிள்ளைகளின் விருப்பினைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. மீள்குடியேற்றம் தொடர்பில் ஆண் – பெண் பிரச்சினைகள் காணப்படுவதாக பல ஆண்களால் அவர்களுடன் நடாத்தப்பட்ட கலந்துரையாடல்களில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்தத் தரமான தரவுகளினூடாக வெளிக்கொணரப்பட்டிருப்பது, கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள், தமது கிராமங்கள் அல்லது குக்கிராமங்களினுள் நிலவும் சமூக மற்றும் பொருளாதார நிறுவனங்களுடன் பலமான பந்த இணைப்புக்களைக் கொண்டுள்ளனர் என்பதாகும். போதுமான தரவுகளினூடாக, இது போன்ற நிலைமையொன்று காட்டப்பட்டுள்ளதுடன், பிரதேசத்தின் மரணச் சடங்குச் சங்கம் மற்றும் விகாரை மேம்பாட்டுச் சங்கத்துடன் எந்நேரமும் தொடர்பு காணப்படுவதாக ஆய்வின்போது பதில் வழங்கிய பலர் வெளிப்படுத்தியிருந்தனர். அட்டவணை இலக்கம் 54 இன் ஊடாக விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம் 54:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களின் சமூகத் தொடர்பு வலையமைப்பு**

| தொடர்பு காணப்படும் சமூக அமைப்புக்கள் | தொடர்ச்சியாக | தொடர்ச்சியின்றி | தேவை எழும்போது |
|---|---|---|---|
| விகாரை (தேவாலய) மேம்பாட்டுச் சங்கம் | 1,325 | 16 | 33 |

| | | | |
|---|---|---|---|
| சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம் | 271 | 4 | 3 |
| மரண நன்கொடைச் சங்கம் | 1,642 | 11 | 34 |
| கூட்டுறவுச் சங்கம் | 43 | 0 | 2 |
| மகளிர் அபிவிருத்திச் சங்கம் | 193 | 0 | 7 |
| விவசாய அமைப்பு | 574 | 1 | 22 |
| கிராமிய அபிவிருத்திச் சங்கம் | 28 | 0 | 0 |
| இளைஞர் சேவை சங்கம் | 27 | 0 | 0 |
| சணச அபிவிருத்திச் சங்கம் | 291 | 5 | 4 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களின் சமூகத் தொடர்புகளுக்குரிய அமைப்புக்கள், அவை தொடர்பில் அவர்களின் முன்னுரிமையின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இத் தகவல்கள் அட்டவணை இலக்கம் 55 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மரண நன்கொடைச் சங்கம், விகாரை (தேவாலயம்) அபிவிருத்திச் சங்கம் மற்றும் விவசாயச் சங்கம் போன்ற சமுதாய அடிப்படை அமைப்புக்களுக்கு உயர் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. ஆதலால் முழுமையான மீள்குடியேற்றச் செயற்பாடுகளின்போது அவற்றிற்குஇம் முன்னுரிமைகள் தொடர்பில் ஆகக்கூடிய கவனத்தினைச் செலுத்துவது அவசியமாகும்.

**அட்டவணை இலக்கம் 55:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களின் சமூகத் தொடர்பு வலையமைப்பினூடாகக் காட்டப்பட்ட முன்னுரிமைகள்**

| சமூக அமைப்பு | முன்னுரிமை 1 | முன்னுரிமை 2 | முன்னுரிமை 3 | பதில் இல்லை |
|---|---|---|---|---|
| விகாரை (தேவாலய) மேம்பாட்டுச் சங்கம் | 407 | 581 | 355 | 29 |
| சமுர்த்தி அபிவிருத்திச் சங்கம் | 95 | 125 | 50 | 7 |
| மரண நன்கொடைச் சங்கம் | 1,105 | 372 | 157 | 49 |
| கூட்டுறவுச் சங்கம் | 15 | 17 | 9 | 4 |
| மகளிர் அபிவிருத்திச் சங்கம் | 32 | 65 | 93 | 10 |
| விவசாய அமைப்பு | 113 | 232 | 241 | 12 |
| கிராமிய அபிவிருத்திச் சங்கம் | 1 | 8 | 18 | 0 |
| இளைஞர் சேவை சங்கம் | 5 | 8 | 13 | 1 |
| சணச அபிவிருத்திச் சங்கம் | 85 | 90 | 116 | 8 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

## 6.3மீள் குடியேற்றம் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் முக்கிய தேவைகள்

பண்பான தரவுகளைச் சேகரித்தல் மற்றும் தரமான தரவுகளைச் சேகரித்தல் போன்ற இரண்டு முன்னெடுப்பினூடாக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதுடன், அதனூடாக உறுதிப்படுத்தப்பட்டவாறு, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுள் பெரும்பாலானோர் தாம் தற்போதுள்ள இடங்களில் புதிய நிலத் துண்டுகளில் குடியிருப்பதற்கு விருப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். அவர்களுள் எவரும் தமது காணி தொடர்பில் காணியினைக் கோரவில்லை என்பதுடன், அது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதை அவர்கள் நன்கு புரிந்து கொண்டனர்.

அட்டவணை இலக்கம் 56 இன் ஊடாக உறுதிப்படுத்தியவாறு, நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் திட்டமிடுவதற்கு எண்ணியுள்ள வகையில் மீள்குடியேற்றும் தளங்கள் தொடர்பில் அவர்களுள் பெரும்பாலானோர் விருப்பினை வெளிப்படுத்தவில்லை பலருக்கு மீள்குடியேற்ற முன்னெடுப்புத் தொடர்பில் போதுமான அறிவு இல்லை என்பதால் அவர்கள் அவ்வாறு கருத்துக்களை தெரிவித்துள்ளதுடன், கருத்திட்டம்

தொடர்பில் சரியான தவவல்களுக்கு நேரடியாக வந்ததன் பின்னர் அவர்களின் அக்ககருத்துக்கள் வேறுபட முடியும்.

**அட்டவணை இலக்கம்56: PAPs மீள் குடியேற்றம் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் கருத்துக்கள்**

| கருத்து | முன்னுரிமை 1 | முன்னுரிமை 2 | முன்னுரிமை 3 |
|---|---|---|---|
| எனக்கு உரித்தான காணியில் மீதமாகவுள்ள காணித் துண்டில் மீளக்குடியேறுதல். | 54 | 11 | 9 |
| அப்பிரதேசத்திலேயே தனது புதிய நிலத்தில் மீளக்குடியமர்தல். | 361 | 70 | 5 |
| ஏனைய பிரதேசத்திலேயே தனது புதிய நிலத்தில் மீளக்குடியமர்தல். | 12 | 86 | 34 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட புதிய மீள்குடியேற்றத் தளத்தில் குடியேறுதல். | 10 | 50 | 9 |
| மீள்குடியேற்றத் தளத்தில் வீடொன்றினை எதிர்பார்த்தல். | 13 | 9 | 3 |
| பிற | 1,485 | 64 | 13 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

கருத்திட்டப் பாதிப்பு மற்றும் மீள்குடியேற்றம் போன்ற தங்கள் வாழக்கையின் முக்கியமான தீர்மானம் எடுக்கும் தருணம் தொடர்பில், அவர்கள் தமது திர்மானங்களை எடுக்கும் முறைமை இந்த ஒட்டுமொத்தச் செயற்பாடுகளிலும் இடம்பெற்ற ஆய்வுகளினூடாக அவதானிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தின் அனைவருக்கும் தீர்மானம் எடுக்கும் செயற்பாட்டில் கலந்துகொள்ளுவதற்குச் சுதந்திரமுள்ளது எனவும், பெற்றோர்கள் என்ற ரீதியில் தமது பிள்ளைகளின் கருத்துக்களையும் கேட்டறிய விரும்புவதாக பெரும்பாலான தொகுயினர் வெளிப்படுத்தியிருந்தனர். தீர்மானங்களை எடுப்பதற்கு முன்னர் தமது வாழ்க்கைத் துணையுடன் வினவுமாறு தெரிவித்துள்ள தொகுதி இரண்டாவதாக அதிகமாகவுள்ள தொகுதியாகும். மீள்குடியேற்ற முன்னெடுப்பு தொடர்பில் இது சிறந்த உவமையொன்றாகும். விபரங்களுக்கு அட்டவணை இலக்கம் 57 ஐப் பார்க்கவும்.

**அட்டவணை இலக்கம் 57:கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளான நபர்களின் தீர்மானம் எடுக்கும் முன்னெடுப்பபு.**

| கருத்து | முன்னுரிமை 1 | முன்னுரிமை 2 | முன்னுரிமை 3 |
|---|---|---|---|
| நானே தீர்மானம் எடுத்தல் | 496 | 118 | 137 |
| எனது வாழ்க்கைத் துணையுடன் கலந்துரையாடுதல். | 280 | 403 | 16 |
| அனைத்துக் குடும்ப அங்கத்தவர்களுடனும் கலந்துரையாடுதல். | 890 | 147 | 132 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தீர்மானத்தினை ஏற்றுக் கொள்ளுதல். | 5 | 6 | 7 |
| பொருத்தமான நபர் ஒருவரிடமிருந்து ஆலோனையினைப் பெற்றுக் கொள்ளுதல். | 4 | 51 | 84 |
| பிற | 6 | 1 | 4 |
| பதிலளிக்காத தொகுதி | 61 | 1,016 | 1,362 |
| மொத்தம் | 1,681 | 726 | 380 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

### 6.4 சிறுவர் கல்வி தொடர்பிலான பிரச்சினைகள்.

கருத்திட்டப் பாதிப்பின் காரணமாக உருவாகும் மிகவும் தீவிரமான மற்றும் மோசமான பாதிப்புக்கள், பிள்ளைகளையும் மற்றும் அவர்களின் கல்வியின் மீதே தாக்கத்தினை விளைவிக்கின்றது. ஆதலால் சிறுவர் கல்வி தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய இரண்டு அரச நிறுவனங்களுக்கு அருகாமையில் சென்று தொடர்பினை முன்னெடுப்பற்கு பிரேரிக்கப்பட்டுள்ளது. அவை, கல்வி அமைச்சு மற்றும் மாகாணப் பாடசாலைகளைச் செயற்படுத்தி வரும் மாகாண சபையாகும்.

### 6.5சாத்தியமான மீள்குடியேற்றத் தளங்கள்

தங்களின் நிலம், கட்டிடங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை இழக்கும் குடும்ப அலகுகளின் எண்ணிக்கை **1,03**0 ஐ விட அதிகமாகும். எவ்வாறாயினும், வதிவிட இல்லங்கள் மற்றும் வியாபார நிறுவனங்கள் **67**0 மாத்திரமே பாதிப்புக்குள்ளாகும். ஆதலால் கிராமங்களுக்கு அருகாமையில் அமைந்துள்ள மீள்குடியேற்றத்திற்கு பயன்படுத்தப்பட்ட காணி தொடர்பிலான விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இதில் காட்டப்பட்டிருப்பது, பிரதேச செயலகமொன்றுக்கு உரித்தான நிலம் தொடர்பிலான விபரங்கள் மாத்திரமேயாகும். ஏனைய தொகுதிகள் தொடர்பிலான விபரங்களையும் திரட்டுவதற்கு உள்ளோம்.

**அட்டவணை இலக்கம் 58:மீள்குடியேற்றத் தளங்கள் தொடர்பில் பயன்படுத்தக்கூடிய நிலங்கள் மற்றும் அவற்றின் சதுர அடி தொடர்பிலான பொழிப்பு**

| இல. | பிரதேச செயலகம் | கிராம உத்தியோகத்தர் தொகுதியின் குறியீட்டு இல. | நிலப்பரப்பு | உரித்து | நிலத்தின் பெயர் | உரிமையாளர்கள், அவர்களின் தொலைபேசி இலக்கம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | ரம்புக்கன | இதள வல்பொல | 7 ஏக்கர் (3.17 ஹெக்டயர்) | பிரத்தியேகம் | கரக்கலவத்த, (தெங்கு மற்றும் ஏனைய மரங்கள்) | எம். சரத் விஜிதானந்த, 32 ஏ, மிகிந்து மாவத்தை, ரம்புக்கன. |
| 2 | பொல்ககவல | கலபடகம 936 | 6ஏக்கர் | பிரத்தியேகம் | தங்கொலவத்த (தென்னங் காணி) | சஞ்ஜீவ பிரசாத் (0712247750), காமினி விஜேசூரிய - விவசாயி (0778057650) தங்கொலவத்த, அலவ்வ வீதி, கலபடகம, பொல்ககவல. |
| 3 | | தலவத்தேகெதர 896 | 2ஏக்கர் 80பேர்ச் | பிரத்தியேகம் | வாகொட்டுவத்த (தெங்கு மற்றும் வாழை) | எச்.எம். கருணாரத்ன, எச்.எம். சுனில் தர்மசிறி, கலுகெந்திவல, தலவத்தேகெதர 0717763779 0375714431 |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Census Data

மேற்குறிப்பிட்ட அட்டவணை இலககம் 58 இன் ஊடாகக் காட்டப்பட்ட அந்தந்த பிரதேச செயலாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களினால் அடையாளங் காணப்பட்ட காணி தொடர்பிலான மேலதிக விபரங்கள் நிறைவேற்று முகவராண்மையிடமே உள்ளது

### 6.6 ஆதரிக்கும் குடிகள் மற்றும் சமூகத்தினை ஒன்றிணைத்தல்.

கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள் தொடர்பில் நிறைவேற்று முகவாராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் மீள்குடியேற்றத் தளத்தினைத் இனங்காணும்போது, அத்தளத்தினைச் சுற்றி ஒன்று அல்லது பல ஆதரிக்கும் குடிகள் இருக்க முடியும்.குறைந்த வகையில், இம் முன்னெடுப்பில் அருகாமையில் அமைந்துள்ள சிறிய நகர்ப்புற பிரதேசமொன்றினை சமாளிக்க வேண்டியேற்படும். இச்சமூக ஒன்றிணைப்புச் செயற்பாட்டின் பிரதான நோக்கமாவது, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்கள் மற்றும் அவர்களின் தேவைகளாக இருத்தல் வேண்டும்.ஆதலால் பின்பற்றப்பட வேண்டிய பிரதான செயற்பாடுகளின் பட்டியலொன்று கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அவை :

1. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களினை அவர்களின் மதங்களின் அடிப்படையில் உரிய மதம்சார் நிறுவனங்களுடன் தொடர்புபடுத்தல்.
2. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களை உரிய கிராமத்தின் கிராம உத்தியோகத்தர் மற்றும் உரிய ஏனைய அரச உத்தியோகத்தர்களுடன் தொடர்புபடுத்தல். அதன் பிரகாரம் அவர்களின் பெயர்களை அப்புதிய கிராம உத்தியோகத்தர் தொகுதியின் வாக்கு உரித்து இடாப்பில் உள்ளடக்குதல் வேண்டும்.
3. மீள்குடியேற்றத் தளத்திற்கு அருகாமையிலுள்ள பொருத்தமான பாடசாலைக்கு பிள்ளைகளைத் தொடர்புபடுத்துதல். இப்பணியில் நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு, இக்கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களை உரிய புதிய பாடசாலைக்குகு ஒப்படைப்பதற்குத் தேவையான ஆவண ஆதாரங்களை வழங்குதல் வேண்டும் என்பதுடன், பாதிப்புக்குள்ளாகும் இச்சிறார்களுக்கு முன்னுரிமை வழங்குமாறு அப்பாடசாலையினை வேண்டி எழுதப்பட்ட கடிதமொன்றினை பாடசாலைக்கு ஒப்படைப்பதும் அவர்களின் கடமைக்குள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.
4. மீளக்குடியேற்றிய நபர்களை அருகாமையிலுள்ள வங்கியுடன் தொடர்புடுத்துதல் வேண்டும் என்பதுடன், தேவையான ஆவண ஆதாரங்களை வழங்கி, அவர்களின் வங்கிக் கணக்குக்களை அந்தந்த புதிய வங்கிக் கிளைகளுக்கு மாற்றுவதற்கு உதவுதல் வேண்டும்.
5. உரிய நபர்களை புதிய குடியிருப்புக்கு அருகாமையிலுள்ள விவசாய அமைப்புடன் தொடர்புபடுத்துதல் மற்றும் அவர்களுக்கு உரமானியத்தினைப் பெற்றுக் கொடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
6. மீளக் குடியேற்றியுள்ள நபர்களை புதிய கிராம உத்தியோகத்தர் தொகுதியிலுள்ள சமுர்த்தி அபிவிருத்தி சங்கத்திற்குத் தொடர்புபடுத்துதல்.
7. மீளக் குடியேற்றியுள்ள சகல முதியோர்களையும் புதிய கிராம உத்தியோகத்தர் தொகுதியிலுள்ள முதியோர் சங்கத்துடன் தொடர்புபடுத்துதல்.
8. மீளக் குடியேற்றியுள்ள சகல நபர்களின் வீட்டு இலக்கங்கள் மற்றும் முகவரிகளை புதிய பிரதேசத்தில் அருகாமையிலுள்ள உப அஞ்சல்/அஞ்சல் அலுவலகத்திற்கு வழங்கி அவர்களை அதில் தொடர்புபடுத்துதல்.
9. புதிய பிரதேசத்திலுள்ள மரண நன்கொடைச் சங்கத்தில் புதிய குடியிருப்பாளரின் விருப்பின் கீழ் அவர்களை அப்பிரதேசத்தின் மரண நன்கொடைச் சங்கத்துடன் தொடர்புபடுத்துதல். இப்பணியில் நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு தலையிடுவதற்கு முடியும் என்பதுடன், தேவையான ஆவணங்களைப் பூர்த்தி செய்வதற்கு உதவி வழங்குவதனூடாக அவர்களுக்கு புதிய சங்கத்தின் அங்கத்துவத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உதவ முடியும்
10. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களை மீளக் குடியேற்றித் தேவயைான ஆவண ஆதாரங்களை வழங்கி, மின்சாரம், நீர் மற்றும் தொடர்பாடல் வசதிகளை வழங்கும் நிறுவனங்களுக்கு அவர்களை அறிமுகஞ் செய்தல் வேண்டும்.

# அத்தியாயம்VII:வருமான மறுசீரமைப்பு மற்றும் மறுவாழ்வு.

## 7.1கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களின் வருமானம் மற்றும் வாழ்வாதார இழப்பு

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலை, பெரும்பாலான விவசாயம், வதிவிடங்கள் மற்றும் அரச காணிகள் அமையப் பெற்ற பிரதேசமொன்றினூடாக பயணிக்கும் புதிய கருத்திட்டமொன்றாகும். வீதிகளைத் திட்டமிடுவதன் மிக முக்கிய நடவடிக்கையொன்றான, வீதி பிரத்தியேக நிலங்களினூடாக பயணிக்கும் நிலக் கோட்டினை அமைத்துக் கொள்ளுதல் முதலாவதாக இடம்பெறுதல் வேண்டும் என்பதுடன், இதனூடாக அந்தந்த நபர்களிடமிருந்து கருத்திட்டத்திற்குச் சுவீகரித்துக் கொள்ளப்பட வேண்டிய நிலங்களை இனங்காண்பது இலகுவாகும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களை அடையாளங் காணும் இந்த முதல் படிநிலையில், ஆய்வுக்குழு வீதி பயணிக்கும் நிலக் கோட்டினை (சாலையோரம் தீர்மானித்தல் மற்றும் அதன் பிரகாரம் வீதிகளின் மூலம் பாதிப்புக்குள்ளாகக்கூடிய நபர்களை இனங்காண்பது இடம்பெற்றுள்ளது. பாதிப்புக்குள்ளாகும் நிலத் துண்டங்களின் அளவு, அதேபோல பாதிப்புக்குள்ளான வருமானங்கள் மற்றும் வியாபாரங்கள், காணியினைச் சுவீகரித்துக் கொள்ளுவதற்கு இனங்காணப்பட்ட பிரதேசத்தின் சமூகப் பொருளதார நிலையின் கீழ் தங்கியுள்ளது. மேற்காட்டப்பட்டவாறு, முழுமையான பாதிப்புக்கு உட்படக்கூடிய வருமான மூலாதாரங்கள் மற்றும் வாழ்வாதார முறைகள் காணப்படுகின்றன. அதற்கு மேலாக பகுதியளவில் பாதிப்புக்குள்ளான நபர்கள் உள்ளனர் என்பதுடன். அதனூடாக அவர்களின் வருமானங்கள் மற்றும் வாழ்வாதார முறைகளும் பகுதியளவில் பாதிக்கப்படும்.

## 7.2கருத்திட்டத்தின் கீழ் இடம்பெறும் வருமான மறுசீரமைப்பு நிகழச்சித் திட்டத்திற்கான மூலோபாயங்கள்

ஒப்பீட்டளவில், கருத்திட்டத்திற்கான காணியினைச் சுவீகரிக்கும் காரணத்தினால் மீள்குடியேறுவதற்கு நேரிடும் மற்றும் வருமான வழிகள் பாதிப்புக்குள்ளாகும் தொகுதி புள்ளிசார் தரவு அடிப்படையில் உயர்ந்த நிலையிலுள்ளது. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் அனைத்து நபர்களையும் வலுவூட்டுவதற்கு இலக்கிடப்பட்ட வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பின்பற்றப்படும் மூலோபாயங்கள் பல அணுகுமுறைகளை அடிப்படையாகக் கொண்டவை. வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் முன்மொழியப்பட்ட வலுவூட்டும் செயற்பாடுகளை பின்வருமாறு பட்டியற்படுத்த முடியும்.

1. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் விழிப்புணர்வினை அதிகரித்தல்
2. வாழ்க்கைத் தொழில், முகாமைத்துவம் மற்றும் தொழில் முனைவோர் திறன்களை மேம்படுத்துதல்.
3. தலைமைத்துவப் பண்புகளை மேம்படுத்துதல்.
4. பொதுவான பிரச்சினைகளைத் தீரத்துக் கொள்ளுவதற்கு கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் சங்கங்களை அமைத்தல்.
5. மனித வள மேம்பாட்டுப் பயிற்சியினை வழங்குதல்.
6. வாழ்க்கைத் தொழிற் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளை வழங்குதல்.
7. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் இலக்கிடப்பட்ட குடும்ப அலகு தலைவர்கள் வங்கிக் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு முன்வைத்தல் மற்றும் வங்கிப் பயன்பாட்டினை மேம்படுத்துதல்.

### 7.2.1வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துவதற்கான அமைப்புக்கள்

தொழில் முனைவோர் வளர்ச்சிக்கான அரச மற்றும் பிரத்தியேக நிறுவனங்களிலிருந்து பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு பெற்றுக் கொள்ளக்கூடிய ஆலோசனைகள் மற்றும் சேவைகளைப் பெற்றுக் கொள்ளுவற்கு செயலாக்குனோர் மற்றும் ஒருங்கிணைப்பாளராக நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு செயற்பட்டுள்ளது. வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம், அவசியமான சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டமொன்று என்பதால், அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமுதாயத்தினை அடிப்படையாகக் கொண்ட அமைப்புக்கள், இச் செயற்பாட்டின் ஆரம்பப் பணியினை நிறைவேற்றியுள்ளது. நிகழ்ச்சித் திட்டத்தினை அமுற்படுத்துவதற்குத் தேவையான மூலோபாய உதவி மற்றும் ஆரம்ப நிதி, கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் வழங்கப்பட்டுள்ளது. கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு இணைக்கப்பட்டு கடமையாற்றும் சமூகப் பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் மீள் குடியேற்ற உத்தியோகத்தர்கள் வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்பிலான கேந்திர உத்தியோகத்தர்களாக செயற்பட்டுள்ளனர். தேவையான எவ்வேளையிலும் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு உதவுவதற்கு குறிப்பிட்ட பகுதிகளின் நிபுணத்துவ சேவைகள், நிபுணத்துவமிக்க வெளிவாரி நபர்களின் உதவியினைக் கொண்டு பெறப்பட்டுள்ளது. வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் பின்வரும் நிறுனங்களுடன் இணைப்புக்களை முன்னெடுத்து வருகின்றது.

1. வங்கிகள் மற்றும் ஏனைய நிதிசார் நிறுவனங்கள்
2. வாழ்க்கைத் தொழிற் பயிற்சி அதிகார சபை
3. தேசியப் பயிற்சி மற்றும் தொழிற் பயிற்சி அதிகார சபை
4. வர்த்தக சபை போன்ற அரச சார்பற்ற அமைப்புக்களின் உதவி

சகல வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்தும்போது கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான ஒவ்வொரு வீட்டு அலகுகளின் தலைவர்கள் மற்றும் மீள் குடியேற்றம் தொடர்பில் அமைக்கப்பட்டுள்ள தங்கள் அமைப்புக்களுடன் கலந்துரையாடி அவற்றினை அமுற்படுத்தும். மேலும் இந்த வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் பயன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரித்தினைப் பெறும் குடும்பத் தலைவர்களின் தொகுதி பின்வருமாறு பட்டியலற்படுத்தப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. அவை :

1. வேளாண்மை நிலங்களை இழக்கும் விவசாயிகள்
2. கருத்திட்டப் பாதிப்பின் காரணமாக ஒரு ஏக்கருக்குக் குறைவான விவசாய நிலப்பரப்பு மீதத்துடனான விவசாயிகள்
3. வீட்டுப் பயிர் வளர்ப்பு இழப்பின் காரணமாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய வருமானத்தினை இழக்கும் குடும்பத்தலைவர்கள்.
4. வியாபாரங்களை இழக்கும் குடும்பத் தலைவர்கள்
5. தங்கள் வருமானத்தினை மறுசீரமைப்பதற்கு நிறுவனம்சார் உதவி தேவையான வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ள குடும்பத் தலைவர்கள்.
6. கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலைமையில் வாழும் தனிப்பட்ட குழு (முதியோர், பெண்களினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்கள் போன்றன)

### 7.2.2அமுற்படுத்தக்கூடிய வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள்.

கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களை முழுமையாக புனர்வாழ்வளிப்பதை இலக்காகக் கொண்ட அபிவிருத்தித் திட்ட முறைமைக்கு, வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மீள் குடியேற்ற முன்னெடுப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் காணி உறுதியினைக் கொண்ட உரிமையாளர்கள், காணி உறுதியற்ற நபர்கள் என வெவ்வேறாகக் கவனத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும். திட்டமிடப்பட்டவாறு, ஒவ்வொருவருக்கும் தமது வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு வாய்ப்பொன்று

வழங்கப்படும். கருத்திட்டத்தின் காரணமாக வருமானத்தினை இழக்கும் விவசாயிகள், குத்தகை விவசாயிகள், குடியிருப்பாளர்கள், வியாபார அலகுகள் மற்றும் ஏனையோருக்கு உதவுவதற்குத் தேவையான ஏற்பாடுகள் உரித்து முறையில் காணப்படுகின்றது. பின்வருமாறு பயிற்சியளிக்கும் வேண்டுகோளினைக் கோருவதற்கு அல்லது பெற்றுக் கொள்ளுவதற்கு அவர்களுக்கு உரித்துள்ளது.

1) வியாபாரமொன்றினை மீள ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை மூலதனத்திற்குத் உதவியாக வாழ்வாதார மறுசீரமைப்புக் கொடுப்பனவொன்று.
2) வறுமை மற்றும் நிலையற்ற நிலையில் வாழும் குடும்பத்திற்கு கொடுப்பனவொன்று மற்றும் தேவையான தலையீடு.
3) வாழ்க்கைத் தொழில் அல்லது திறன் பயிற்சி.
4) தொழில் முனைப்பு மேம்பாடு
5) முதியோர்கள் மற்றும் பயிற்சியளிக்கப்பட்ட இளைஞர்களுக்கான கருத்திட்டத்துடன் தொடர்பான தொழில்.

**வாழ்க்கைத் தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சி**

முழுமையாக இடம்பெயர்ந்த குடும்ப அலகிலிருந்து ஒரு நபர் வீதம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர். வாழ்க்கைத் தொழிற் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளுக்குத் தெரிவு செய்யும்போது குடும்பங்களில் பாடசாலையினை விட்டு விலகிய இளைஞர்கள், குடியிருப்புக்கள் மற்றும் வர்த்தகக் கட்டிடங்கள் அழிந்து போனவர்குக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**தொழில் முனைப்பு மேம்பாட்டுப் பயிற்சி**

இவ்வாறான பயிற்சியென்றில் பயன்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய நபர்கள் ஆரம்பப் பரீட்சிப்பின் பின்னர் தொழில் முனைப்பு மேம்பாட்டுப் பயிற்சிக்குத் தெரிவு செய்யப்படுவர். இது குறைந்த வருமானப் பயனாளிகளின் வருமானத்தினைப் பெருக்குவதற்கு எடுக்கப்படும் செயற்பாட்டிற்கான ஆரம்பப் படிநிலையொன்றாகும். அதற்குப் பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தேவைப்பாடுளாக, வியாபாரம் அல்லது கைத்தொழிலினை ஆரம்பித்தல் தொடர்பிலுள்ள விருப்பு மற்றும் அடிப்படை மூலதனத்தினைத் திட்டமிடுவதற்குள்ள இயலுமையாகும். இது தொடர்பில் விருப்பினைக் காட்டும் நபர்களுக்கு அடிப்படை மூலதனத்தினைத் திட்டமிடுவதற்கும் மற்றும் வியாபாரத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கும் வசதியாக நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு செயற்படும்.

**கட்டுமாணக் கட்டத்தின்போது தொழில் வாய்ப்புக்கள்.**

கருத்திட்டத்தின் கட்டுமாணக் காலப்பகுதியினுள், பின்வரும் தொழில்களில் ஒப்பந்த அடிப்படையில் ஈடுபடுத்துவதற்குக் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு வாய்ப்புக்கள் உள்ளன என்பது புலனாகின்றன.

- பாரமற்ற வாகனச் சாரதிகள்
- கனரக வாகனச் சாரதிகள்
- தச்சர்கள்
- கார்ப்பென்டர்ஸ்
- உருக்குத் தொழிலாளர்
- பார் பென்டர்ஸ்
- கணனி இயக்குனர்கள்

- எழுதுவினைஞர்கள்
- அலுவலக உதவியாளர்கள்
- தொழிலாளரக்கள்

கட்டுமாணப் பணியுடன் தொடர்பான தொழில்களில் இத் தொழில் வாய்ப்புக்களை வழங்குவதற்கு நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு உரிய ஒப்பந்தக்காரர்களுடன் தேவையான ஒருங்கிணைப்பினை முன்னெடுக்கும். மேலும், ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படும் உடன்படிக்கைக்கு மேலதிக வாசகமொன்றினைச் சேர்ப்பது தொடர்பில், நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்து அலகு திட்டமிடுதல் வேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்ட அம்சங்கள், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களின் வருமானத்தினைப் பெருக்குவதை நோக்காகக் கொண்டு கருத்திட்ட மட்டத்தில் இடம்பெறும் ஆரம்ப நிகழ்ச்சித் திட்டத்திற்கு உரித்தானதாகும். எனினும் அந்நிகழ்ச்சித் திட்டம் இம்மட்டத்திற்கு மாத்திரம் வரையறை செய்யப்பட்டிருக்கவில்லை. கருத்திட்டத்திலிருந்து சுயவருமானத்தினை மறுசீரமைப்பதற்கு உதவியினை எதிர்பார்க்கும் ஒவ்வொரு நபரின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இந்நிகழ்ச்சித் திட்டத்தினை மேற்குறிப்பிட்ட மட்டத்திற்கு அப்பால் சென்று முன்னோக்கிச் செயற்படுத்துதல் வேண்டும். பாதிப்புக்குள்ளான ஒவ்வொரு நபரின் மட்டத்தின் வருமானத்தினை மறுசீரமைப்பதற்கு நுண்ணிய மட்ட திட்டமிடுதல் பயன்படுத்துதல் வேண்டும். வருமானப் பெருக்கச் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஒவ்வொரு நபருக்கும் அது தொடர்பில் உதவுவதற்கு கருத்திட்டத்தின் மூலம் மீள்குடியேற்ற குழாம் ஈடுபடுத்தப்படும். இதில் விசேடமாக நடாத்தப்பட்ட சாத்தியமான மூலாதாரங்களிலிருந்து நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவியினை உரியவாறு பெற்றுக் கொள்ளுவதற்கு தேவையான ஒருங்கிணைப்பினை வழங்குதல் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. சாத்திய வள அறிக்கைகளைத் தயாரித்தல் உட்பட ஏதேனும் பொருத்தமான செயற்பாடொன்றினை அடையாளங் காணும் சந்தர்ப்பத்திலிருந்து விற்பனைக்குத் தயாராகும் வரையும், அவர்கள் நிலைபேறான மட்டத்தினை அடையும் வரை, கருத்திட்ட அலுவலகங்கள் சரியான நேரத்திற்கு அவர்களின் செயற்பாடுகள் தொடர்பில் தலையிட்டு உதவியினை வழங்குவது அவசியமாகும். கருத்திட்ட அலுவலகம் இப் பொறுப்பினை வகிப்பதுடன், விருப்பினைத் தெரிவிக்கும் ஒவ்வொரு நபருக்குமென தனி நபர் மட்டத்தில் பொருத்தமான கருத்திட்டங்களைத் திட்டமிடுவதற்கும் மற்றும் அமுற்படுத்துவதற்கும் மீள்குடியேற்ற உத்தியோகத்தர்களை அனுப்புவதற்கு விரைவு நடவடிக்கை எடுக்கப்படும். கருத்திட்டத்தினூடாக சொத்து சுவீகரிக்கப்பட்டதன் காரணமாக இடம்பெற்ற வருமானங்கள் அல்லது தொழில் இழப்பின் காரணமாக இழப்பீடுகளை வழங்குதல், உரித்துத் திட்டத்தில் காட்டப்பட்டவாறு இடம்பெறும். அட்டவணை இலக்கம் 52.

### 7.3 குடியிருப்புக் குடும்பங்களைப் புனர்வாழ்வளித்தல்

அட்டவணை இலக்கம் 18(3 வது அத்தியாயம்) ஊடாகக் காட்டப்பட்டவாறு, மொத்த குடும்ப அலகு 596 இல், 17 வாடகை வீடுகளாவதுடன், 9குடியிருப்பு மற்றும் வியாபார அலகுளாகும். பாதிப்புக்குள்ளான குடியிருப்பு அலகுகளுக்கிடையே பகுதியளவில் பாதிக்கப்படும் வீட்டு அலகுகள் சிறு எண்ணிக்கையினைக் கொண்டுள்ளது. பகுதியளவில் பாதிக்கப்படும் வீட்டு அலகுகள், கருத்திட்டத்தினூடாக உரித்தாகும் மீள் குடியேற்ற உதவியினூடாக,அந்நபர்களின் சுற்றாடலிலேயே மீளவும் கட்டியெழுப்புவதற்கு நீண்டதூரம் சாத்தியமுள்ளது என்பதுடன், முழுமையாகப் பாதிக்கப்பட்ட வீட்டு அலகுகளை வேறு அமைவிடத்தில் கட்டியெழுப்புவதனூடாக புனர்வாழ்வினை முன்னெடுப்பது இடம்பெறுதல் வேண்டும். பாதிப்புக்குள்ளான நபர்களின் விருப்பிற்குப் பொருத்தமான நிலத்துண்டுகளை வழங்குவதற்கு உதவி வழங்குதல், அவர்களுக்கு தங்களுடைய வீட்டினை நிர்மாணித்துக் கொள்ளுவதற்கு இயலுமானவாறு அடிப்படை வசதிகளைக் கொண்ட மீள்குடியேற்றத் தளங்களை அமைத்தல் மற்றும் வீடுகளை உள்ளடக்கி முழுமையான மீள்குடியேற்றத் தளங்களை நிர்மாணித்தல் போன்ற பல தலையீடுகளூடாக நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ

அலகினால் இந்த மொத்தப் பாதிப்பான வீடுகளுக்கென மேலதிக நடவடிக்கைகளை எடுத்தல் மற்றும் கவனத்திற் கொள்ளுதல் அவசியமாகும். பாதிப்புக்குள்ளான நபர்கள் மற்றும் நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கிடையே உடன்பாட்டிற்கு வந்த செயற்பாட்டொன்றினூடாகபாதிப்புக்குள்ளான நபர்கள் மாற்று நடவடிக்கைகளுக்கு வழங்கும் உடன்பாட்டின் கீழ் இவ்வனைத்தும் காணப்படுகின்றது. காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்பு ஆரம்பிக்கப்பட்டதுடன், தமக்கு உரித்தான இழப்பீட்டு நிதி தொடர்பிலான நம்பிக்கைச் செயற்பாட்டுத் தகவல்கள், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மீள்குடியேற்றம் தொடர்பிலான அவர்களின் தீர்மானத்தின் மீது தீவிரமான தாக்கக் காரணி இதுவாகும். அடிப்படைத் தேவைப்பாடொன்றான, நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்குத் தேவையான தகவல்கள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி அவர்களின் தீர்மானமெடுக்கும் சாத்தியவளத்தினை மேம்படுத்தி பகுத்தறிவு முடிவுகளை எடுப்பதற்கு முன்வைத்தல் வேண்டும். அதனூடாக பங்களிப்புச் செயற்பாட்டினூடாக மீள் குடியேற்றும் செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான அடிப்படையினை பயன்படுத்துதல் வேண்டும். பாதிப்புக்குள்ளான குடும்பங்களினுள் 33.4% குடியிருப்புக் குடும்ப அலகுகள் என்பதால், மீள்குடியேற்றுவதற்கான அரசினால் தயாரிக்கப்பட்டுள்ள கோட்பாடுகளுக்கு (சுய விருப்புக்கு விரோதமான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை) அமைய அவர்களைப் புனர்வாழ்வளித்தல், மீள்குடியேற்றக் கருத்திட்டத்திற்கு முக்கியமாகவுள்ளது.

**7.4விவசாயிகளைப் புனர்வாழ்வளித்தல்**

பாதிப்புக்குள்ளான மொத்தக் காணி உரிமையாளர்களான 1,747 இல்ஏறக்குறைய 21.6%மாத்திரமான அல்லது 356வரையானகாணி உரிமையாளர்கள் பிரதானமாக வேளாண்மையில் ஈடுபடுகின்றனர். இத் தொகுதி தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாக, அவர்கள் தங்களுக்கு உரித்தான காணி மற்றும் சமமான மாற்று நிலமொன்றினை எதிர்பார்கின்றனர். பாதிப்புக்குள்ளான பெரும்பான்மையான நபர்கள் தங்களின் வேளாண்மை நடவடிக்கைகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லுவதற்கு போதுமான நிலத்துண்டுகள் மீதமாகியிருக்கவில்லை என்பதால் அவர்களில் பெரும்பாலானோர் மிகவும் அதிக இழப்பீட்டு தொகையினை எதிர்பார்த்து நிற்கின்றனர்.

மேலும், வேளாண்மைக் குடும்பங்களை மறுசீரமைக்கும் செயற்பாடு, நீண்ட காலம் மற்றும் குறுங்காலம் என்ற அணுகுமுறைகள் இரண்டிலும் இடம்பெறவேண்டிய செயற்பாடொன்றாகும். தங்களிடம் தற்போது காணப்படும் இடப்பரப்பினுள் அல்லது அருகாமையில் வேறு மாற்று நிலத்தினைக் கண்டுபிடித்துக் கொள்ளக்கூடிய குடும்பங்களுக்குத் தேவையான அப்புதிய நிலத்துண்டினை விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையானவாறு மேம்படுத்துவதற்கு உதவி மற்றும் அவர்களின் குறுங்கால வருமான இழப்புக்களை எளிதாக்குவதற்கு உதவுவதாகும். குறுங்காலம் ஏற்படும் வருமான இழப்புக்காக வழங்கப்படும் நிவாரணக் கொடுப்பனவினை, அவர்கள் புதிய அறுவடையினைச் செய்யும் வரை வழங்கப்படுதல் வேண்டும். தமக்கு மாற்று நிலம் இல்லாத கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்கள் தொடர்பில் நீண்டகால வருமான மறுசீரமைப்பு அணுகுமுறையினை பின்பற்றுதல் வேண்டும் என்பதுடன், அவர்களை வேறு பொருத்தமான அமைவிடத்தில் மீளக்குடியமர்த்துவது அவசியமாகும். இதில் நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு, பிரதேசத்தின் விவசாய அதிகாரிகளுடன் ஒருங்கிணைப்பினை முன்னெடுத்து விவசாயத்தில் ஈடுபடுத்துதல் மற்றும் சேவைகள் போன்றவற்றினை வழங்குவதற்கு தேவையான உதவிகளை வழங்குதல் வேண்டும். இற்றை வரையில், தமக்கு பழக்கமற்ற பிரதேசமொன்றில் புதிய வாழ்க்கைத் தொழிலில் ஈடுபடுவதற்கு கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரிட்டுள்ளதால் அவர்களுக்கு விவசாயப் பயிற்சிகள் மற்றும் அதனுடன் தொடர்பான வேறு உதவியினை வழங்குதல் மிகவும் முக்கியமாகும். சிறு நிலப் பரப்பில் அல்லது தமது நிலப்பரப்பில் மீதமான சிறு நிலப் பரப்பில் அதிக விளைச்சலினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு துரித பயிர் வளர்ப்புத் திட்டங்கள் மற்றும் சரியான விவசாயப் பயிர் முகாமைத்துவப் பாவனை தொடர்பிலான அறிவு சில நபர்களுக்குத் தேவைப்படக்கூடும். விவசாயக் குடும்பங்களை மறுசீரமைக்கும்போது விவசாய உத்தியோகத்தர்கள், விவசாய சேவைத் திணைக்களம் மற்றும் சந்தைப்படுத்தல்

அமைப்புக்களுடன் கலந்துரையாடி முறைாசார் திட்டமொன்றினைக் கொண்ட அணுகுமுறையொன்றினைப் பாவித்துக் கொள்ளுதல் வேண்டும்.

கட்டுமாணம்/மீள் குடியேற்றக் காலப்பகுதியினுள் விவசாய விளைச்சல்கள்/வருமான இழப்புக்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு உரித்துத் திட்டத்தின் பிரகாரம் முன்னெடுக்கப்படும் (அட்டவணை 52).

### 7.5 கைத்தொழில் மற்றும் வர்த்தகர்களைப் புனர்வாழ்வளித்தல்

இத்தொகுதி தவிர, தங்களின் காணிகளில் அல்லது வாடகைக்கு எடுக்கப்பட்ட வேறு நிலங்கள் மற்றும் கட்டிடங்கள் அல்லது குத்தகைக்கு எடுக்கப்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக உரிமையாளர்கள் (கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள்) 41 பேர் உள்ளனர். அட்டவணை இலக்கம் 14 இல் (3,3.2.1 வது பிரிவு) கலந்துரையாடப்பட்டவாறு, இந்த வர்த்தக அலகுகள் அநேக குடும்பங்களின் அங்கத்தவர்களினால் முன்னெடுக்கப்பட்டு வரும் சிறியளவிலான தொழிற்சாலைகள் அல்லது சில்லறை விற்பனை நிலையங்களாகும். எவ்வாறாயினும், இச்சிறியளவிலான தொழிற்சாலைகள் (08)மற்றும் பாரியளவிலான தொழிற்சாலைகளில்(02) வெளி நபர்களில் அதிகமான பேர் கடமையாற்றுகின்றனர். இந்த வெளி நபர்களுக்கு தமது வருமானம் இழக்கப்படுதல் தமது வாழ்வாதாரத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு சிக்கலாகும். இக்குடும்பங்களின் வருமான இழப்புக்காக கருத்திட்டத்தினூடாக வருமான மறுசீரமைப்புக்கு உதவியினை வழங்குதல் தற்காலிகமாக பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கையொன்றாகும். கட்டுமாணக் காலப்பகுதியினுள் தற்காலிகமான தடைகள் ஏற்பட்டாலும் சில வியாபாரங்கள் நீண்டகாலப் பாதிப்பு மற்றும் வருமான இழப்பின்றி முன்னெடுத்துச் செல்லுவதற்கு இயலுமையினைக் கொண்டுள்ளது. கருத்திட்டப் பிரதேசத்தின் பல குடியிருப்பாளர்களினால் வெளிப்படுத்தப்பட்டவாறு, கருத்திட்டத்தின் நிர்மாணம் முழுமையாகியதன் பின்னர் கருத்திட்டச் சுற்றாடல் மிகவும் சிறப்பாக விளங்கும் என்பதுடன், உள்ளக பரிமாற்றங்களினூடாக தொடர்புபடும் பிரதான நகரங்கள் மற்றும் அவற்றினைச் சூழ கைத்தொழில் அபிவிருத்தி ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் அபிவிருத்திச் சபை, கைத்தொழில் சேவை பணியகம் மற்றும் தேசிய கைவினைச் சபை போன்ற அரச நிறுவனங்களுடன் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களைத் தொடர்புபடுத்துதல் வேண்டும்.

தமது வியாபாரங்கள் மற்றும் சேவைகளிலிருந்து கிடைக்கும்வருமானத்தினை இழப்பவர்கள் அந்தந்த செயற்பாடுகளினூடாக தாம் முன்பு பெற்ற வருமானத்தினை அடிப்படையாகக் கொண்டு உரித்துத் திட்டத்தின் பிரகாரம் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய கொடுப்பனவொன்றினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உரித்தினைக் கொண்டவர்களாவர்.

## அத்தியாயம்VIII:மீள்குடியேற்றம் தொடர்பில் நிதியினை ஒதுக்கும் மற்றும் நிதியினை வழங்கும் திட்டம்

### 8.1**அறிமுகம்**

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலைக்கான தரவுகளைச் சேகரிக்கும் முன்னெடுப்பில்,பரிட்சிப்புக்கு உட்படுத்தப்பட்ட வீதியோரத்தினை அடிப்படையாகக் கொண்ட மீள்குடியேற்றும் பணிக்கான செலவு மதிப்பீட்டினை முன்னெடுத்தல் இடம்பெற்றுள்ளது. ஆதலால் தொழில்நுட்ப விடயங்களைக் கவனத்திற் கொண்டதன் பின்னர், பிரத்தியேக நிலங்களினூடாக வீதி பயணிக்கும் உண்மையான வீதியோரத்தினை அடையாளமிட்டதன் பின்னர் இச் செலவு மதிப்பீடு இந்த அளவினை விடக் குறைவாக இருக்கும்.

காணிச் சுவீகரிப்புக்கென வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகளை உள்ளடக்கி, சகல மீள்குடியேற்றச் செயற்பாடுகளுக்குமான செலவுகளைக் காட்டும் செலவு மதிப்பீடொன்றினைத் தயாரித்தல் அவசியமாகும். மீள் குடியேற்றத்திற்கான இழப்பீட்டுக் கொடுப்பனவு, இலங்கையின்

காணிச் சுவீகரிப்புச் சட்டம், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 63 (2) (E)பிரிவின் (460 வது அத்தியாயம்) கீழ், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சரினால் வழங்கப்பட்டு, 2014.02.18 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2014.05.30ஆந் திகதிய 1864/54என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி மற்றும் இவ் வர்த்தமானி அறிவித்தலின் கீழ் வடக்கு அதிவேக வீதி உள்ளடக்கப்படும் 14/0833/533/008என்ற இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் பிரகாரம் இடம்பெறும்.

காணி மற்றும் கட்டமைப்புக்களுக்கான இந்த மீள்குடியேற்றத்தினை திட்டமிடும்போது வெவ்வேறான நம்பகரமான மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்ட (பாதிப்புக்குள்ளான காணி உரிமையாளர்கள், பாதிப்புக்குள்ளாகாத காணி உரிமையாளர்கள், தோட்டப்புற விவசாயிகள், பிரதேச செயலாளர்கள் மற்றும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு உரித்தான விலை மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள்) ஆரம்ப மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டே தயாரிக்கப்படும்.

## 8.2 மீள் குடியேற்றம் தொடர்பில் நிதியினை ஒதுக்கும் வேளையில் பயன்படுத்தப்பட்ட விகிதங்கள்.

### 8.2.1காணிகளின் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்காக பாவிக்கப்பட்ட விகிதங்கள்.

மலை (உயர்) நிலங்களின் பெறுமதியினைத் தீர்மானிக்கும்போது, அதிவேக வீதி பயணிக்கும் உயர் (மலை) நிலங்களில் அமையப் பெற்ற குடியிருப்புப் பிரதேசங்கள் கவனத்திற் கொள்ளப்பட்டது. குடியிருப்பு அல்லது வர்த்தகப் பாவனை போன்ற அளவுகோல்கள் கவனத்திற் கொள்ளப்படாது, அந்நிலங்களில் பெறுமதி அட்டவணை இலக்கம் 59 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது. வீதி பயணிக்கும் நிலத் துண்டின் மீது பரிட்சிக்கப்பட்ட அந்தந்த பாவனையாளர்களுக்கு உரித்தான காணி வகைகள் தொடர்பில் பொருத்தமான தீர்மானத்தினை எடுப்பதற்கு இவ்விகிதங்கள் பாவிக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை இலக்கம்e 59:கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான பிரதேசத்தில் அமைந்துள்ள வர்த்தகம்சார் நிலங்களின் (மலை நிலங்கள்) பெறுமதி மதிப்பீடுகள்**.

| முக்கிய துறை | அமைவிடம்/பிரதேச செயலகப் பிரிவு | நிலப் பெறுமதி (ஒரு பேர்ச் ரூபா) | | சராசரிப் பெறுமதி – ஒரு பேர்ச் |
|---|---|---|---|---|
| | | ஆகக்குறைந்தது | ஆகக்கூடியது | |
| நகர்ப்புறம் | பொல்ககவல | 125,000.00 | 250,000.00 | 233,333.00 |
| | கலகெதர | 100,000.00 | 150,000.00 | |
| | ஹரிஸ்பத்துவ | 150,000.00 | 300,000.00 | |
| கிராமப்புறம் | பொல்ககவல | 80,000.00 | 100,000.00 | 115,000.00 |
| | ரம்புக்கன | 35,000.00 | 175,000.00 | |
| | மாவத்தகம | 60,000.00 | 70,000.00 | |
| | கலகெதர | 65,000.00 | 80,000.00 | |
| | ஹரிஸ்பத்துவ | 100,000.00 | 150,000.00 | |

மூலாதாரம்: NEP/Stage 3/RAP/Census Data

பல்வேறான சமூகத் தொகுதிகளுக்கு (நகரம், பகுதி நகரம் மற்றும் கிராமம்) உரித்தான பிரதேசங்களில் அமைந்துள்ள காணிகளின் பெறுமதி கணித ரீதியில் கணக்கிடப்பட்டு அட்டவணை 56 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளது. இப் பெறுமதிகளைக் கணக்கிடும்போது மலைக் குடியிருப்பு மற்றும் விவசாய நிலங்களின் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டு நில அலகின் விலை தீர்மானிக்கப்படும். கருத்திட்டப் பிரதேசத்தின் வர்த்தக நிலங்களின்

அலகுப் பெறுமதியினை மதிப்பீடு செய்யும்போது மேற்குறிப்பிட்ட நிலங்களின் பெறுமதிக்கு 15%சேர்க்கப்பட்டு அப்பெறுமதி தீர்மானிக்கப்படுகின்றது.

பொதுவாக வயல் வெளிகளாகப் பாவிக்கப்பட்ட நிலங்கள் (கீழ் நிலங்கள்) தொடர்பில் குறைவான பெறுதியே உரித்தாகும். இந்நிலங்களின் (வயல் நிலங்கள் மற்றும் பிரத்தியேகப் பிரிவுக்கு உரித்தான சதுப்பு நிலங்கள்) பெறுமதியினைத் தீர்மானிக்கும்போது மேற்குறிப்பிட்ட கோட்பாடு பாவிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு பேர்ச்சின் பெறுமதி ரூபா. 5,750/-ஆகக் கருதப்பட்டுள்ளது.

### 8.2.2 கட்டமைப்புக்களின் பெறுமதியினைத் தீர்மானிப்பதற்கு பாவிக்கப்பட்ட விகிதங்கள்.

கருத்திட்டப் பிரதேசத்தினுள் அவதானிக்கப்பட்ட கட்டமைப்புக்களை விரிவான வகையில் குடியிருப்பு, வர்த்தகம் மற்றும் ஏனைய இரண்டாந்தரக் கட்டிடங்களாக வகைப்படுத்த முடியும். இக்கட்டிடங்களின் ஒரு அலகு பிரதேசத்தினை நிர்மாணிப்பதற்குச் செலவாகும் நிதி, அந்த ஒவ்வொரு கட்டிட நிர்மாணிப்புக்கும் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டுள்ளது. நிர்மாணிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள பொருட்களின் பிரகாரம் அவை ஐந்து (5) வகுப்புக்களுக்குள் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் ஒவ்வொரு தரத்திற்கும் உரித்தான அலகுப் பெறுமதி பின்வரும் அட்டவணையில் முன்வைக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை இலக்கம் 60:ஒவ்வொரு வகுப்பிற்கும் உரித்தான கட்டிடங்களின் அலகுப் பிரதேசத்தின் பெறுமதி.**

| கட்டமைப்பின் வகுப்பு | பயன்படுத்தப்பட்ட பொருட்கள் | அலகு | தொகை (ரூபா) |
|---|---|---|---|
| வகுப்பு 1 | அஸ்பெஸ்ரோஸ், ஒடு அல்லது கொங்கிரிட் கூரை, செங்கல் அல்லது சீமெந்துக்கல், பூச்சுப் பூசப்பட்ட சுவர், ரைல் அல்லது ரெறசோத் தரை, மரக் கதவுகள் மற்றும் யன்னல்கள் | ச.அடி | 3,300 ~ 4,500 |
| வகுப்பு 2 | அஸ்பெஸ்ரோஸ், ஒடு அல்லது கொங்கிரிட் கூரை, செங்கல் அல்லது சீமெந்துக்கல், பூசப்பட்ட சுவர், சீமெந்துத் தரை, மரக் கதவுகள் மற்றும் யன்னல்கள் | ச.அடி | 2,000 ~ 2,750 |
| வகுப்பு 3 | கூரையிடப்பட்ட கூரை, செங்கல் அல்லது சீமெந்துக் கல், பூச்சுச் பூசப்பட்ட சுவர், சீமெந்துத் தரை, கதவுகள் மற்றும் யன்னல்கள் மரம் அல்லது பிளாஸ்டிக் | ச.அடி | 1,250 ~ 2,000 |
| வகுப்பு 4 | கூரையிடப்பட்ட கூரை, செங்கல் அல்லது சீமெந்துக் கல், பூச்சுச் பூசப்படாத சுவர், சீமெந்துத் தரை, கதவுகள் மற்றும் யன்னல்கள் மரம் அல்லது பிளாஸ்டிக் | ச.அடி | 1,200 ~ 1,750 |
| வகுப்பு 5 | கூரையிடப்பட்ட கூரை அல்லது கிடுகினால் வேயப்பட்ட கூரை, மரச் சுவர்கள், சீமெந்து அல்லது கழிமண் தரை, கதவுகள் மற்றும் யன்னல்கள் பிளாஸ்டிக் அல்லது ஏனைய பொருட்கள். | ச.அடி | 850 ~ 1,250 |

மூலாதாரம்: NEP/Stage 3/RAP/Census Data

இந்த ஒவ்வொரு கட்டமைப்பு வகுப்பின் உயர் பெறுமதிக்கமைய அக்கட்டமைப்பு வகுப்புக்கான கட்டமைப்புக்களின் இழப்பீட்டு நிதி, கணக்கிடப்படுகிறது. மீள்குடியேற்றச் செலவு மதிப்பீட்டினைத் தயாரிக்கும்போது ஏனைய கொடுப்பனவுகள் மற்றும் போனஸ்களை கணக்கிடுவதற்கு 5 வது அத்தியாயத்தில் காட்டப்பட்ட உரித்துத் திட்டத்தினை (அட்டவணை இலக்கம் 52) அடிப்படையாகக் கொண்ட கணக்கீடு.

வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்குப் போதிய ஏற்பாடுகளைச் செய்தல், மீள்குடியேற்ற செலவு மதிப்பீட்டினுள் உள்ளடக்கப்பட வேண்டிய மேலும் ஒரு பகுதியாகும். கீழே காட்டப்படும் மீள்குடியேற்றச் செலவு மதிப்பீட்டினுள் வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு மதிப்பீட்டுப் பிரிவொன்று காணப்படுவதுடன், அதனை, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான பெரும்பாலான நபர்களும் ஏற்றுக் கொண்டுள்ளனர். (மையக்குழுக் கலந்துரையாடலில் இது கலந்துரையாடப்பட்டது)

## 8.3மீள் குடியேற்றத் திட்டத்திற்கான மொத்தச் செலவு மதிப்பீடு.

மத்திய அதிவேக கருத்திட்டத்தின் 3 வது படிநிலையான பொத்துகெர (கி.மீ. 00+000) வில் இருந்து கலகெதர (கி.மீ.32.9) வரை நிர்மாணிப்பதற்கான காணிகளைச் சுவீகரித்துக் கொள்ளுதல் மற்றும் மீள்குடியேற்ற மொத்தச் செலவு மதிப்பீடு ரூபா. 12.64 பில்லியன் அல்லது அமெரிக்க டொலர் மில்லியன் 81.5 ஆகும். (01அ.டொ. தொடர்பில் ரூபா. 155 வீதமான நாணய மாற்றுவிகிதத்தின் பிரகாரம்). வருமான மறுசீரமைப்பு, பயிற்சியளித்தல் மற்றும் எதிர்பாராத செலவுகளுக்குத் தேவையான ஏற்பாடுகளையும் உள்ளடக்கி ஒவ்வொரு செலவு மதிப்பீட்டுக்குமான தேவையான ஏற்பாடுகள் இந்நிதியினூடாக ஈடு செய்யப்படும்.

**அட்டவணை இலக்கம்**61: **மத்திய அதிவேகக் கருத்திட்டத்தின் 3 வது படிநிலை தொடர்பில் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற முன்னெடுப்புக்கான செலவு மதிப்பீடு**.

| இல. | வகை | இல. | அலகு | ரூபா/அலகு | மொத்தம் ரூபா | மொத்தம் அ. டொ. |
|---|---|---|---|---|---|---|
| நிலங்களுக்கான இழப்பீடு | விவசாய நிலங்கள் (தாழ் நிலங்கள் – வயல்) | 30,698 | பேர்ச் | 5,750 | 176,513,500 | 1,138,797 |
| | விவசாய நிலங்கள் (உயர் நிலங்கள் – | 45,471 | | 100,000 | 4,547,100,000 | 29,336,129 |
| | வர்த்தகம்சார் நிலங்கள் | 825 | | 233,330 | 192,497,250 | 1,241,918 |
| | குடியிருப்புசார் நிலங்கள் | 21,357 | | 150,000 | 3,203,550,000 | 20,668,065 |
| | தரிசு நிலங்கள் | 7,045 | | 75,000 | 528,375,000 | 3,408,871 |
| கட்டமைப்புக்களுக்கான இழப்பீடு | குடியிருப்பு/வர்த்தகம் – வகுப்பு 1 | 19,322 | சதுர அடி | 4,500 | 86,949,000 | 560,961 |
| | குடியிருப்பு/வர்த்தகம் – வகுப்பு 2 | 72,710 | | 2,750 | 199,952,500 | 1,290,016 |
| | குடியிருப்பு/வர்த்தகம் – வகுப்பு 3 | 680,677 | | 2,000 | 1,361,354,000 | 8,782,929 |
| | குடியிருப்பு/வர்த்தகம் – வகுப்பு 4 | 14,709 | | 1,750 | 25,740,750 | 166,069 |
| | வகுப்பு 5 – இரண்டாந்தரக் கட்டமைப்புக்கள் | 36,789 | | 1,250 | 45,986,250 | 296,685 |
| | கல்லறைகளின் இழப்பு | 165 | எண்ணிககை | 15,000 | 2,475,000 | 15,968 |
| வருமான இழப்பு | வியாபார வருமானம் பாரியளவு | 2 | | 1,000,000 | 2,000,000 | 12,903 |
| | வியாபார வருமானம் சிறியளவு | 25 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 300,000 | 7,500,000 | 48,387 |
| | கூலி/சம்பளம் இழப்பு (தற்காலிகம்) | 75 | பாதிப்புக்குள்ளான நபர்கள் | 15,000x6 | 6,750,000 | 43,548 |
| | கூலி/சம்பளம் இழப்பு (நிரந்தரம்) | 9 | பாதிப்புக்குள்ளான நபர்கள் | 50,000x6 | 2,700,000 | 17,419 |
| மரங்கள் | பழ மரங்கள் | 7,761 | மரங்களின் எண்ணிக்கை | 2,000 | 15,522,000 | 100,142 |
| | வாழை | 9,197 | | 1,000 | 9,197,000 | 59,335 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | கறுவா | 1,108 | | 1,500 | 1,662,000 | 10,723 |
| | பெரும்போகப் பயிர்கள் | 26,474 | | 5,000 | 132,370,000 | 854,000 |
| | மரம் (பிற) | 12,092 | | 5,000 | 60,460,000 | 390,065 |
| | பலா | 2,223 | | 30,000 | 66,690,000 | 430,258 |
| | தேயிலை (புதர்கள்) | 3,008 | | 15,000 | 45,120,000 | 291,097 |
| | இறப்பர் | 6,707 | | 2,000 | 13,414,000 | 86,542 |
| | தெங்கு | 25,351 | | 10,000 | 253,510,000 | 1,635,548 |
| | விறகு | 493 | | 1,500 | 739,500 | 4,771 |
| | வீட்டுத் தோட்டப் புதர்கள் | 3,512 | | 500 | 1,756,000 | 11,329 |
| கொடுப்பனவுகள் | சட்டரீதியான 5% (விவசாயம்) | 5% of sum | மொத்தத் தொகை | 4723613500 | 236,180,675 | 1,523,746 |
| | சட்டரீதியான 25% (கட்டமைப்புக்கள்) | 25% of sum | மொத்தத் தொகை | 1722457500 | 430,614,375 | 2,778,157 |
| | சுய மறுசீரமைப்புக் கொடுப்பனவு | 415 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 500,000 | 207,500,000 | 1,338,710 |
| | பொருள் போக்குவரத்துக் கொடுப்பனவு | 1,031 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 15,000 | 15,465,000 | 99,774 |
| | இடமாற்ற வாழ்வாதாரக் கொடுப்பனவு – பாரியளவு | 2 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 100,000 | 200,000 | 1,290 |
| | இடமாற்ற வாழ்வாதாரக் கொடுப்பனவு – சிறியளவு | 25 | | 10,000 | 250,000 | 1,613 |
| | மின்சார வசதி | 556 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 20,000 | 11,120,000 | 71,742 |
| | நீர் வசதி | 294 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 20,000 | 5,880,000 | 37,935 |
| | தொடர்பாடல் வசதி | 226 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 10,000 | 2,260,000 | 14,581 |
| | வாழ்வாதார மறுசீரமைப்பு மானியம் | 404 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 20,000 | 8,080,000 | 52,129 |
| | வாழ்க்கைத் தொழிற் பயிற்சி மானியம் | 759 | பாதிப்புக்குள்ளான நபர்கள் | 5,000x6 | 22,770,000 | 146,903 |
| | கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய குடும்பங்களுக்கான விசேட மானியங்கள். | 645 | பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் தலைவர்கள் | 20,000 | 12,900,000 | 83,226 |
| | விளம்பரக் கட்டணங்கள் | 27 | DHH | 15,000 | 405,000 | 2,613 |
| | மீளப் பொருத்துதல் | 1,076 | DHH | 5,000 | 5,380,000 | 34,710 |
| | பிரிவு 9 விசாரணை | 3,015 | DHH | 10,000 | 30,150,000 | 194,516 |
| வெளிவாரியானகண்காணிப்பு | | 30 | மாதங்கள் | 150,000 | 4,500,000 | 29,032 |
| **உப மொத்தம்** | | | | | **11,983,538,800** | **77,313,154** |
| வருமான மறுசீரமைப்பு நிகழ்ச்சித் திட்டம் | | உப மொத்தம் 2.5% | | | 299,588,470 | 1,932,829 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நிர்வாகச் செலவுகள் 0.5% | | | | | 59,917,694 | 386,566 |
| எதிர்பாராத செலவுகள் 2.5% | | | | | 299,588,470 | 1,932,829 |
| **மொத்தம்** | | | | | **12,642,633,434** | **81,565,377** |

மூலாதாரம்: NEP/Stage 3/RAP/Census Data

## அத்தியாயம்XI:குறை தீர்க்கும் பொறிமுறை

### 9.1 குறை தீர்க்கும் பொறிமுறையின் தேவைப்பாடு

குறிப்பிட்ட பகுதியினருடன் பரஸ்பர புரிந்துணர்வு மற்றும் ஒருமித்த கருத்துக்கு வருவதனூடாக, உண்மையான முறைப்பாட்டாளர்களுக்கு தங்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவுதல், குறைதீர்க்கும் பொறிமுறையொன்றினை(GRM) அமைப்பதன் நோக்கமாகும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள் தங்களின் அதிருப்தியினை வெளிப்படுத்துதல் தொடர்பில் முன்வைக்கப்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தற்போது காணப்படும் சட்ட நிறுவனங்களுக்கு மேலாக ஒரு கருத்திட்ட மைய அணுகுமுறை என்ற ரீதியில் இந்தப் பொறிமுறை நிறுவப்பட்டுள்ளது.

பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள், மக்களுக்கு பல்வேறான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றத்தின் காரணமாக சமூக, பொருளாதார, கலாசார மற்றும் சுற்றுப்புறச் சூழல் பிரச்சினைகள் உருவாக முடியும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் வாழ்வாதாரம் மீது பாரிய மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதால் இவ்வாறான பிரச்சினைகள் மிகவும் சிக்கலான இயல்பினைக் கொண்டுள்ளது. நிர்மாணிக்கும் தளத்தினை சுத்தமாக்குதல், அகழ்வு, மின்னாற்றல் மற்றும் வெடிப்பு போன்ற நிர்மாணிப்புடன் தொடர்பான செயற்பாடுகளின் காரணமாக இவ்வாறான சில பிரச்சினைகள் உருவாகும். கருத்திட்டத்தின் மூலம் உக்கிரமாக

பாதிப்புக்குள்ளாகும் நபர்கள் இக்காரணங்களினால் மனக்குறைகளுக்கு முகங்கொடுப்பதற்கு நேரிடும். தீர்க்கும் பொறிமுறையொன்றினைப் பின்பற்றுவதற்கு முன்வைப்பதனை விட இவ்வாறான மனக்குறைகள் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பது முக்கியமாகும். 2002 ஆம் ஆண்டில் தெற்கு அதிவேக வீதியின் (STDPஎன அறியப்பட்ட) மாத்தறை – கொழும்புப் பகுதிக்கான நிலங்களைச் சுவீகரித்தல் மற்றும் நிர்மாணப் பணிகள் இடம்பெறும்போது வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் முதற் தடைவை இந்த மனக்குறைகளைக் களையும் பொறிமுறையொன்று அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் பின்னர் நடவடிக்கை எடுக்கப்பட்ட பல வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கும் இத்திட்டம் பின்பற்றப்பட்டுள்ளது. இவ்வாறான மனக்குறைகளைக் களையும் மூலோபாயமொன்றினைப் பின்பற்றுவதற்குக் காரணமான அடிப்படை விடயமான, பொதுமக்களின்பல பிரச்சினைகளைக் கருத்திட்டத் தளத்திலேயே வைத்துத் தீர்வு காண்பதால், பொது விமர்சனங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக உருவாகும் தேவைற்ற கிளர்ச்சிகள் மற்றும் தாமதங்களைத் தவிர்பதற்காகவாகும்.

காணிச் சுவீகரிப்புச் சட்டத்தினூடாக ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருப்பது. மனக்குறைகளைக் களைவதற்கான வரையறுக்கப்பட்ட பொறிமுறையொன்றுக்கு என்பதுடன், பாதிப்புக்குள்ளான நபர்களின் இழப்பீடுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கான சில மனக்குறைகளை அதன் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட மீளாய்வுச் சபைக்கு முன்வைத்தலினை முன்னெடுக்க முடியும். இது வரையறுக்கப்பட்ட தீர்வு பொறிமுறையொன்று என்பதுடன், இழப்பீட்டுக் கொடுப்பனவு மற்றும் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாத்திரமே உருவாக்கப்பட்டதொன்றாகும். மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திடடத்தினை அமுற்படுத்துதல், கண்காணிப்பு மற்றும் மனக்குறைகளைக் களைதல் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு கருத்திட்டங்கள் அமுற்படுத்தப்படும் நிறுவனங்களினூடாக உள்ளகக் கண்காணிப்புப் பொறிமுறையொன்றினை ஸ்தாபித்தல் வேண்டும் என சுயவிருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கை பரிந்துரைத்துள்ளது. மனக்குறைகளைக் களைவதற்காகக் காணப்படும் இலகுவாக அணுகக்கூடிய மற்றும் விரைவில் பலாபலன்கள் கிடைக்கக்கூடிய செயற்பாடுகள் தொடர்பில் பாதிப்புக்குள்ளான நபர்களை விழிப்புணர்வூட்டுதல், இக்கொள்கை வெளியீட்டிலுள்ள அடிப்படை நோக்கொன்றாகும்.

## 9.2கருத்திட்டத்திற்காகப் பிரேரிக்கப்பட்ட குறை தீர்க்கும் பொறிமுறை

மனக்குறைகளைக் களையும் பொறிமுறையொன்றினைப் பின்பற்றுவதை விட மனக்குறைகள் ஏற்படாதிருப்பதற்கு எந்நேரமும் கவனமாக இருக்க வேண்டும்.சமுதாயத்துடன் அடிக்கடி இடையிடுதல், வெளிப்படைத்தன்மை, முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பினூடாக அவர்கள் மற்றும் நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கிடையே தொடர்புகளைக் கட்டியெழுப்பி, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களின் உண்மையான பங்களிப்புடனும் மற்றும் அவர்களிடமிருந்து விடயங்களைக் கேட்டறிந்து கருத்திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்தி மனக்குறைகளை ஏற்படுவதைக் குறைத்துக் கொள்ள முடியும்.


நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்திட்ட அலகினூடாக மனக்குறைகளைக் களையும் பொறிமுறையொன்று அமைக்கப்பட்டுள்ளதுடன், இதனூடாக கருத்திட்டத்தினைத் திட்டமிடும்போதும் மற்றும் அமுற்படுத்தும்போதும், விசேடமாகத் தொழில்நுட்பத் தீர்மானங்கள் மற்றும் பாதிப்புக்குள்ளான சொத்துக்கள் தொடர்பில் அல்லது நிர்மாணப் பணிகளுடன் தொடர்பான பிரச்சினைகள்/பாதிப்புக்கள் ஆகியன தொடர்பிலும் அதேபோல கருத்திட்டத்துடன் தொடர்புபட்ட பொதுப் பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் அல்லது எடுக்கப்படும் ஏதேனும் உடன்பாடற்ற தீர்மானங்களுக்கு எதிராக முறைப்பாடுகளைச் செய்வதற்கு பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும். பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு ஆலோசனைகளை வழங்கும்போது, அவர்களின் உரிமைகள் மற்றும் மனக்குறைகளை வாய்மொழியில் அல்லது எழுத்து மூலம் அறிக்கையிடும் மூலோபாயங்கள் தொடர்பிலும் முழுமையாக விழப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். ஆதலால், துணைக் கருத்திட்டத்திற்கு விசேடமாக மனக்குறைகளைக் களையும் பொறிமுறைக்கு ஐந்து மட்டங்களுடனான பின்வரும் விடயங்கள் உள்ளடக்கப்படும்:

1. நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினூடாக நியமிக்கப்படும் சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ;
2. நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினூடாக மீள்குடியேற்றத் தளங்களில் அமைக்கப்பட்டு வரும் பிரதேச மீள்குடியேற்றக் குழு ;
3. நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினூடாக அமைக்கப்படும் மனக்குறைகளைக் களையும் குழு ;
4. கருத்திட்டப் பணிப்பாளர் மற்றும் உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் மேலதிக செயலாளர்.
5. சுதந்திரமாக மனக்குறைகளைக் களையும் சபை

மத்திய அதிவேகக் கருத்திட்டத்தின் கீழ் இந்த ஐந்து மட்டத்தினைக் கொண்ட பொறிமுறை அமைக்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகுபவர்கள் தங்கள் முறைப்பாடுகளை முன்வைக்கக்கூடிய இரண்டு வெளிவாரியான நிறுவனங்கள் காணப்படுவதுடன், அவை சமத்த மண்டல மற்றும் நீதிமன்றங்களாகும். விசேடமாக கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் யாரேனும் நபர் ஒருவரினை, மனக்குறைகளைக் களையும் பொறிமுறைக்கு அல்லது இந்த வெளிவாரியான இரண்டு நிறுவனங்களுக்கும்தங்கள் மனக்குறைகளை முன்வைக்குமாறு வரையறை செய்யப்பட்டிருக்கவில்லை.எவ்வாறாயினும் இது தொடர்பில் வேறு எந்தவெரு நிறுவனத்திற்கும் மேலாக, நெகிழ்வுத் தன்மையினைக் கொண்ட கருத்திட்டங்கள், விசேடமாக மனக்குறைகளைக் களையும் பொறிமுறையினூடாக தங்கள் தேவைப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களை ஊக்குவிக்கின்றனர்.அமைச்சினால் நியமிக்கப்படும் சமத்த மண்டலய (conflict resolution committees) மற்றும் நீதிமன்றங்களும் கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்கள் மனக்குறைகளைக் களைவதற்காக அமைக்கப்பட்டுள்ளன. இவை தவிர, அவர்களுக்குத் தீர்வுகளை வழங்ககக்கூடிய வேறு தேசிய மட்ட நிறுவனங்கள் சிலவும் காணப்படுகின்றன. விபரங்களுக்கு இவ் அத்தியாயத்தின் 9.5பகுதியினைப் பார்க்கவும்.

கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்படும் நபருக்குத் தேவையான நிவாரணத்தினை வழங்குவதற்காக இந்தப் பொதியினை அல்லது பொறிமுறையினைத் தீர்மானித்துக் கொள்ளுவதற்குத் தேவையுள்ளது. இலக்கம் 01 வரைபடத்தினூடாக மனக்குறைகளைக் களையும் முன்னெடுப்பு அமுற்படுத்தப்படும் முறைமை காட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு முறைப்பாட்டுக்கும் என இடம்பெறும் விசாரணைச் செயற்பாடுகளை முழுமையாக ஆவணப்படுத்துவதற்கும், அறிக்கையிடுவதற்கும் மனக்குறைகளைக் களையும் நிறுவனங்கள் பொறுப்பு வகித்தல் வேண்டும்.

**இலக்கம் 01 வரைபடம் : மனக்குறைகளைக் களையும் பொறிமுறையின் பிரேரிக்கப்பட்ட கட்டமைப்பு**




மனக்குறைகள் மற்றும் முறைப்பாடுகளைக் களைவதற்கு,ஒவ்வொரு நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினூடாக, அதன் நிர்வாகத்தின் கீழ் காணப்படும் சகல உப கருத்திட்டங்கள் (கருத்திட்டப் படிநிலை) அனைத்துக்குமென பொதுவான ஒரு மனக்குறைகளைக் களையும் பொறிமுறையொன்று தயாரிக்கப்படும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களின் குடியிருப்பு அமையப் பெற்ற இடம் அல்லது மனக்குறைகளை வெளியிடுவதற்குக் காணப்படும் இடத்தில் தனித்தன்மைக்கமைய மனக்குறைகளைக் களையும் பொறிமுறையினை மாற்றிக் கொள்ள முடியும். மனக்குறைகளைக் களையும் குழுவினூடாக ஆண் பெண் பாகுபாட்டினை ஏற்படுத்துவது முக்கியமாகும். கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியேற்றியதன் பின்னர் மதகுருமாரின் அங்கத்துவம் மற்றும் கிராம உத்தியோகத்தர் வேறுபடுவர்.

குழுவின் அங்கத்தவர்கள், கருத்திட்டம் தொடர்பில் சிறந்த அறிவினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும் என்பதுடன், மனக்குறைகள் மற்றும் முறைப்பாடுகளை முறைசார் வகையில் முன்வைப்பதற்கான இயலுமையினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். அதேபோல கட்சி பேதமின்றி முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மற்றும்தீர்மானங்களை வழங்குதலும்

வேண்டும். நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகின் மூலம்,மனக்குறைகளைக் களையும் குழுவுக்கு, வேலைத்திட்டங்கள் அமுற்படுத்தப்பட்டு, கருத்திட்டம் தொடர்பிலான அறிவு, மனக்குறைகளைக் களையும் குழுவின் அமைப்புக் கட்டமைப்பு, அதன் நோக்கங்கள், பாதுகாப்புடன் முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் சமநிலையான தீர்மானங்களுக்கு வருவது தொடர்பில் பரந்த புரிந்துணர்வொன்றினை வழங்குதல் வேண்டும்.

### 9.3குறைதீர்க்கும் பொறிமுறை மற்றும் அக்குழு செயற்படும் முறைமை

தெற்குப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான மனக்குறைகளைக் களைவதற்கு ஆரம்பத்தில் ஆரம்பிக்கப்பட்ட மனக்குறைகளைக் களையும் பொறிமுறை மற்றும் அக்குழு தொடர்பிலான எண்ணக்கரு, வீதி அபிவிருத்தி அதிகார சபையிடமே இருந்தது. தற்போது வீதி அபிவிருத்தி அதிகார சபை, இப்பொறிமுறையினைச் செயற்படுத்தி முழுமையன அனுபவங்கள் மற்றும் அதனை வினைத்திறனாக செயற்படுத்துவது தொடர்பில் இயலுமையினைக் கொண்டுள்ளது.வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் அமுற்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டத்தின் மனக்குறைகளைக் களையும் பொறிமுறையினை எவ்வாறு செயற்படுத்துதல் வேண்டும் என்பது தொடர்பில் பெருந்தெருக்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சின் செயலாளரினால் அண்மையில் சுற்றுநிரூபமொன்று வெளியிடப்பட்டது. விபரங்களுக்கு பின்னிணைப்பு XIIஐப் பார்க்கவும்.

மனக்குறைகளைத் தீர்க்கும் குழுவின் வினைத்திறனான செயற்பாட்டிற்கு மனக்குறைகளைத் தீர்க்கும் குழு மற்றும் அப்பொறிமுறை தொடர்பில் கருத்திட்டப் பங்குதாரர்களை விழிப்புணர்வூட்டுதல் அவசியமாகும். பொது மக்கள், அரச ஊழியர்கள், சமூக அமைப்புக்கள், ஒப்பந்தக்காரர்கள் மற்றும் உரிய பிரதேசங்களின் பிரதேச செயலாளர்கள் போன்றோர், மனக்குறைகளைத் தீர்க்கும் குழு மற்றும் அப்பொறிமுறை தொடர்பில் சிறந்த அறிவினைக் கொண்டு விளங்குதல் வெற்றிகரமாக மனக்குறைகளைக் களையும் பொறியினை அமுற்படுத்துவதற்கு உதவும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு, மனக்குறைகளைத் தீர்க்கும் குழு, அப்பொறிமுறையினை அறிமுகஞ் செய்தல் தொடர்பில்,கருத்திட்ட தகவல் நிலையங்களுக்குப் பாரிய கடமைப் பொறுப்பினை மேற்கொள்ள முடியும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கான மனக்குறைகளைத் தீர்க்கும் குழுவுக்கு தகவல்களை பெற்றுக் கொள்ளுவதற்கான திட்டம் அதனூடாக உதயமாகும்.

பாதிப்புக்குள்ளான குழுக்கள், அரச நிறுவனங்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்கள் போன்ற பங்குதாரர்களின் குழுவுக்கிடையே, மனக்குறைகளைத் தீர்க்கும் குழு தொடர்பில் விரிவான விளம்பரமொன்று வழங்கப்படுதல் வேண்டும். மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறைக்கான செயற்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்றினை, பொதுமக்களுக்குக் கிடைக்கும் பிரச்சினைகளின் தன்மைக்கேற்ப தமது மூலம் தெரிவு செய்யப்பட வேண்டிய சரியான மாற்றீடு எவை? என்ற விடயம் தொடர்பில் சிறந்த புரிந்துணர்வொன்று அவருக்குக் கிடைக்கும். எவ்வாறாயினும், பங்குதாரர்களினால் பொய்யான முறைப்பாடுகளை முன்வைப்பததைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். பொருத்தப்பாட்டிற்கான அளவுகோல் எவை? என்பது தொடர்பில் தொடர்பாடல் செய்தல் வேண்டும் என்பதுடன், மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடு தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுற்படுத்துதல் வேண்டும்.

விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளில் பின்ருவம் விடயங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

- கருத்திட்டத்தின் விடயப் பரப்பு, திட்டமிடப்பட்டுள்ள நிர்மாணிப்புக் கட்டங்கள்.
- பயன்படுத்தக்கூடிய மனக்குறைகளைக் களையும் பொறிகளின் வகைகள், அந்தந்தப் பிரச்சினைகளுக்குப் பொருத்தமான மனக்குறைகளைக் களையும் பொறிகள் –

உதாரணமாக : நிர்மாணங்களின் காரணமாக உருவாகும் மனக்குறைகள், பௌதிக மற்றும் பொருளாதார ரீதியின் மாற்றம் காரணமாக உருவாகும் மனக்குறைகள்.

- மனக்குறைகளைக் களையும் பொறிமுறைக்கு முன்வைக்க முடியாத மனக்குறைகள்.
- மனக்குறைகளைக் களையும் பொறிமுறையால் தீர்வுகளைப் பெற்றுக் கொள்ளுவதற்குத் தேவையான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.
- மனக்குறைகளைக் களையும் பொறிமுறைக்கு முறைப்பாடுகளை எவ்வாறு முன்வைப்பது என்பது தொடர்பானது (உதாரணமாக- தொலைபேசியூடாக, தபால் மற்றும் ஈமெய்ல் ஊடாக மற்றும் மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறைக்கான இணையத் தளத்தினூடாக). மற்றும் முறைப்பாட்டில் உள்ளடக்கப்பட வேண்டிய தகவல்கள் தொடர்பானது.
- மனக்குறைகளைத் தீர்க்கும் முன்னெடுப்பினை ஆரம்பிப்பதற்கு மற்றும் நிறைவு செயற்வதற்கு. உரிய திட்டங்கள் மற்றும் காலவரையறைகள், மனக்குறைகளைத் தீர்த்தல் தொடர்பில் அப்பொறிமுறையிலுள்ள வரையறைகள், கருத்திட்டத்தினை அமுற்படுத்தும் நிறுவனம் மற்றும் நிதியினை வழங்கும் நிறுவனம் ஆகியன தொடர்பில் பல நிறுவனங்களின் கடமைப் பொறுப்பு.
- உரிய பங்குதாரர்களுக்குத் தகவல்களை தொடர்பாடல் செய்வதற்கு பல்வேறான மூலோபாயங்களைப் பின்பற்ற முடியும். அம்மூலோபாயங்களுக்கிடையே, அரச அலுவலகங்கள், கருத்திட்ட அலுவலகங்கள், சமுதாய நிலையங்ககள் மற்றும் பிரதேச வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய நிலையங்கள் போன்ற பொதுவிடங்களில் பதாதைகளைக் காட்சிப்படுத்தவதை பயன்படுத்த முடியும்.
- மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையின் தீர்மானங்களுக்கு எதிராக மேன்முறையீடு செய்யக் கூடிய முறை.

இதற்கிடையில், பின்வரும் விடயங்கள் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நேர்க்கணிய நிகழ்ச்கித் திட்டங்களை அமுற்படுத்துதல் வேண்டும்.

- மனக்குறைகளைத் தீர்க்கும் குழுவின் அங்கத்தவர்கள் மற்றும் அது முன்னெடுக்கப்பட்டு வரும் இடம்.
- மனக்குறைகள் தொடர்பில் முறைப்பாடுகள் செய்யும் அல்லது அவற்றினை அறிக்கையிடும் மூலோபாயம்.
- மனக்குறைகளைத் தீர்க்கும் குழுக் கூட்டம் தொடர்பில் கலந்து கொள்ளும் முறை (வாதியின் நண்பர் ஒருவருடன் கலந்து கொள்ள முடியுமா என்பது ஆகியன.)
- தீர்வு முன்னெடுப்பின் படிநிலைகள் மற்றும் பொறிமுறையினூடாக பின்பற்றப்படும் காலவரையறை, முறைப்பாடு தொடர்பில் தேவையான உதவி ஆவணங்கள் மற்றும் ஆதாரங்கள்.

இத்தகவல்களை எளிமையான துண்டுப் பிரசுரமாக தயாரித்து, மனக்குறைகளைத் தீர்க்கும் குழு தொடர்பிலான அடிப்படை உத்தியோகபூர்வ தகவல்கள் ஆவணமாக முன்வைத்தல் வேண்டும். இது நேரடியான பொதுத் துண்டுப்பிரசுரத் தகவல்களினைக் கொண்ட பத்தரமொன்றாவதுடன், மனக்குறைகளைத் தீர்க்கும் குழுவின் விடயப் பரப்பு மற்றும் செயல் முறைகளை உள்ளடக்கி அது தொடர்பிலான உண்மையான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும். மனக்குறைகளைத் தீர்க்கும் குழு மற்றும் அப்பொறிமுறை தொடர்பில் தவறான புரிந்துணர்வு, அதிக எதிர்பார்ப்புக்கள் மற்றும் தவறான குழப்பங்களைக் கைவிடுவதற்கு இது உதவுகின்றது. எவ்வாறாயினும், ஒரு தடைவை மாத்திரம் இடம்பெறும் தலையீட்டுடன், பொது விழிப்புணர்வு, அல்லது வலுவூட்டுவதை எட்ட முடியாது என்பதுடன், நீண்ட கால பரஸ்பர உதவியினை முன்னெடுத்துச் செல்லுதல், தலையீட்டுத் தொடர்களினூடாக முழுமையாக முன்னெடுப்பினூடாக இது இடம்பெறுதல் வேண்டும்.

### 9.4குறை தீர்க்கும் பொறிமுறை மற்றும் குறை தீர்க்கும் குழுவின் முன்னேற்றத்தினைக் கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.

மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தினை, தாக்க மதிப்பீட்டுத் திட்டமொன்றினூடாக மதிப்பீடு செய்யப்படுதல் வேண்டும், இவ்வாறான மதிப்பீடுகளை, வருடந்தோறும் அல்லது ஈராண்டு தோறும் முன்னெடுக்க முடியும் என்பதுடன், அதன் பெறுபேறுகள் மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையின் செயற்திறன் மேம்பாட்டிற்கும் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவத்திற்குத் தேவையான பின்னூட்டலினை முன்னெடுப்பதற்கும் உதவும். இவ்வாறான மதிப்பீடுகளில் பின்வரும் விடங்களைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும் :

1. எத்தனை முறைப்பாடுகள் எழுந்துள்ளன?
2. என்ன வகையான முறைப்பாடுகள் (புகார்கள்) எழுப்பப்பட்டுள்ளன?
3. முறைப்பாடுகளின் நிலை என்ன? (நிராகரிக்கப்பட்டது அல்லது தகுதியற்றது, மதிப்பீட்டின் கீழ் உள்ளது, நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது மற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது அல்லது தீர்வு வழங்கப்பட்டுள்ளது?
4. இப்பிரச்சினையினைத் தீர்ப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும்?
5. பாதிப்புக்குள்ளான நபர்களில் எத்தனை பேர் இந்த குறை தீர்க்கும் நடைமுறையினைப் பயன்படுத்துகின்றனர்?
6. சுவீகரிக்கப்பட்ட விளைவுகள் எவை?
7. வெளியிடப்பட்ட இலக்குகள், நோக்கங்கள் மற்றும் கொள்கைகளை அடைவதில் மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறை விளைத்திறனாக உள்ளதா?
8. அவர்களின் விடயப் பரப்பில் விசேடமாகக் காட்டப்படும் மனக்குறை வரம்புக்கு பதிலினை வழங்குவதற்கு மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறைக்கு இயலுமை உள்ளதா?
9. மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறை போதுமான மற்றும் மாறுபட்ட தீர்வு அணுகுமுறைகளுடன் பொருத்தப்பட்டுள்ளதா?
10. தீர்வுகள் வழங்கும் அணுகுமுறைகளை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையினூடாக பயன்படுத்தப்பட்டுள்ளதா? (உதாரணமாக, இயலுமை விருத்தி, தொழில்நுட்ப நிபுணர்களின் ஆலோகனை)
11. மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறை கருத்திட்டத்தின் ஒட்டு மொத்த முகாமைத்துவச் செயற்பாட்டுடன் விளைத்திறனாக ஒன்றிணைக்கப்பட்டுள்ளதா?

முறைப்பாடுகளின் போக்குகள், அமுற்படுத்தும்போது ஏற்படும் குறைபாடுகளைக் கண்டுபிடித்தல், சரிசெய்யும் நடவடிக்கையினை சரியான நேரத்திற்கு முன்னெடுத்தல் மற்றும் தேவையான வேளைகளில் மூலோபாய மாற்றங்களைச் செய்தல் தொடர்பில் கருத்திட்ட முகாமைத்துவத்திற்கு இத்தகவல்கள் மிகவும் முக்கியமாகும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள் எவ்வளது தூரத்திற்குத் திருப்தியடைகின்றனர் என்பது தொடர்பில் முக்கியமான தகவல்கள் அதனூடாகப் பெறப்படும் என்பதுடன், அது கருத்திட்டத்தினை அமுற்படுத்தும் மற்றும் நிறைவேற்றுச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் நிறுவனங்களுக்கு சிறந்த நற்பெயரினை ஈட்டித் தரும்.

### 9.5 குறை தீர்த்தல் தொடர்பில் உள்ளூர் மற்றும் தேசிய மட்டங்களில் பின்பற்றப்படும் ஏனைய மாற்று வழிகள்

மேற்குறிப்பிடடவாறு (9.2உப பிரிவு), பொதுமக்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இந்நாட்டின் சட்ட நடைமுறையினூடாக உத்தியோகபூர்வ வகையில் நிறுவப்பட்ட நிறுவனங்கள் காணப்படுகின்றன. சட்ட நீதிமன்றங்களை உள்ளடக்கி இவ்வாறான நிறுவனங்கள் தொடர்பிலான விபரங்கள் பின்வருமாறு.

#### காணிச் சுவீகரிப்பு இழப்பீட்டு மீளாய்வுச் சபை (LARB)

மேற்குறிப்பிட்ட சுவீகரிப்பில், இழப்பீடு தொடர்பில் ஏதேனும் முறைப்பாடு காணப்படுமாயின், பாதிக்கப்பட்ட எந்தவொரு கட்சிக்கும், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காணி தொடர்பில் இடம்பெற்ற நியதிப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு, காணிச் சுவீகரிப்பு இழப்பீட்டு மீளாய்வுச் சபைக்கு மேன்முறையீட்டினைச் செய்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகள் காணிச் சுவீகரிப்புச் சட்டத்தில் காணப்படுகின்றது. இவ்வாறான முறைப்பாடுகளை

முன்வைப்பதாயின், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 17வது பிரிவின் கீழ் இழப்பீடு வழங்கப்பட்ட 21 நாட்களுக்குள் அதனை மேற்கொள்ளுதல் வேண்டும்.

**மனித உரிமைகள் ஆணைக்குழு(HRC)**

அரச உத்தியோகத்தர்கள் மற்றும் நிறுவனங்களினால் இடம்பெற்று வரும் மனித உரிமைகளை மீறுதல் தொடர்பில் முறைப்பாடுகளைக் கையளிப்பதற்கும் மற்றும் புலனாய்வு செய்வதற்கும் இலங்கை அரசியலமைப்பின் ஊடாக இது அமைக்கப்பட்டுள்ளது. அரச உத்தியோகத்தர்களினால் இடம்பெறும் தன்னிச்சையான மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக பிரஜைகளின் மனித உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ளுவதற்காக அரச கட்டமைப்பினூடாக அமைக்கப்பட்டுள்ள பொறிமுறையொன்றாகும். பாதிக்கப்பட்ட எந்தவொரு கட்சியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடமிருந்து நிவாரணமொன்றினை எதிர்பார்க்க முடியும். இவ் ஆணைக்குழுவின் தவிசாளர் மற்றும் அங்கத்தவர்கள் ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுவர்.

**பாராளுமன்ற ஒம்புட்ஸ்மன்**

அரசியல் அமைப்பின் கீழ் நியமிக்கப்பட்ட சுதந்திரமான உத்தியோகத்தர் ஒருவர் என்பதுடன், மக்கள் பிரதிநிதியினால் முன்வைக்கப்படும் மனக்குறைகளைப் புலனாய்வு செய்தல் இவரூடாகவே இடம்பெறும்.

**பாராளுமன்ற மனுக்கள் (புகார்) குழு (PPC)**

ஏதேனும் விடயம் தொடர்பில் பாதிக்கப்பட்ட பிரஜை ஒருவருக்கு பாராளுமன்ற அங்கத்தவர் ஒருவரூடாக தனது மனுக்களை பாராளுமன்றத்தின் சாபநாயகருக்கு முன்வைக்க முடியும் என்பதுடன், இவ்விடயம் தொடர்பில் புலனாய்வு செய்வதற்கு சபாநாயகரினால் பாராளுமன்ற மனுக்கள் குழுவுக்கு கட்டளை பிறப்பிக்கப்படும். நிவாரணம் எதிர்பார்க்கும் விடயம் நியாயமானது எனப் புலப்படின், பாதிக்கப்பட்ட தரப்புக்கு நிவாரணத்தினை வழங்குமாறு தவறினை இழைத்துள்ள கட்சிக்கு குழுவினால் கட்டளை இடப்படும்.

**துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் பாராளுமன்ற ஆலோசனைக் குழு**

இது, ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்டு, கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு தமது மனக்குறைகளை முன்வைக்கக்கூடிய மற்றுமொரு இடமாகும். துறைமுகங்கள் மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர், தவிசாளர், பணிப்பாளர் நாயகம் மற்றும் ஏனைய மூத்த உத்தியோகத்தர்கள் இக்குழுவின் அங்கத்தவர்களாவதுடன், பெருந்தெருக்கள் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரே இதன் தவிசாளராகப் பதவி வகிப்பார்.

**சட்ட நடவடிக்கையினை எடுத்தல்.**

அமுற்படுத்தப்படும் முன்னெடுப்பில், யாரேனும் நபர் ஒருவர் அரச உத்தியோகத்தர் ஒருவரின் தீர்மானங்களின் காரணமாக விரக்தியடையுமிடத்து (உளம் காயப்படுமிடத்து) மற்றும் கலந்துரையாடல்களினூடாக இது தொடர்பில் வெற்றிகரமான தீர்வொன்று எட்டப்பட முடியாதவிடத்து, பொருத்தமான நீதிமன்றில் இவ்வாறான தீர்மானங்களை மேன்முறையீடு செய்வதற்கு அத்தகைய விரக்தியினைக் கொண்ட நபருக்கு முடியும்.

**சட்ட உதவி ஆணைக்குழு**

இது, நீதிமன்றில் தீர்வொன்றினை எதிர்பார்க்கும்போது, சட்டச் செயற்பாடுகளுக்குத் தேவையான செலவுகளை ஈடுசெய்வதற்கு சிக்கலினைக் கொண்ட நபர்களுக்கு உதவுவதற்கென்றுஇலங்கை அரசினால் நிறுவப்பட்டுள்ள நிறுவனமொன்றாகும். சட்ட உதவி ஆணைக்குழுவின் செயலாளருக்கு, தமது வருமானம் நிலை தொடர்பில் ஆதாரத்துடன் விண்ணப்பப் படிவமொன்றினை முன்வைத்ததன் பிற்பாடு கட்டணங்கள் எதுவும் அறவிடப்படாது அந்நபர்

சார்பில் நீதிமன்றில் ஆஜராகுதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஆணைக்குழுவினால் முன்னெடுக்கப்படும்.

## அத்தியாயம்X:கருத்துக்களைக் கேட்டறிதல், பங்குகொள்ளல் மற்றும் தகவல்களை வெளியிடுதல்.

### 10.1 பொதுமக்கள் கருத்துக்களை அறியும் முன்னெடுப்பு மற்றும் அதன் மட்டங்கள்.

சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றத்தில் தாக்கத்தினை விளைவிக்கும் கருத்திட்டங்கள் தொடர்பில் அர்த்தமுள்ள வகையில் பொதுமக்கள் கருத்துக்களை வினவுதல் மற்றும் விழிப்புணர்வூட்டுதல் இடம்பெறுவதுடன், இதில் அவ்வாறு பாதிப்புக்குள்ளான சகல நபர்களையும், மீள்குடியேற்ற பிரதேசத்தில் ஆதரிக்கும் குடிகள் இருப்பார்களாயின், அவர்களையும் மற்றும் சிவில் சமுதாயத்தினையும், இப் பொதுமக்கள் கருத்துக்களைக் கேட்டறிவதற்கும் மற்றும் விழிப்புணர்வூட்டுவதற்கும் கலந்து கொள்ளச் செய்விக்க வேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் நிறுவப்பட்டுள்ள கருத்துக்களைக் கேட்டறியும் செயல்முறை தொடர்பில் முறைசார் மற்றும் முறைசாரா வகையில் தகவல்களைக் கேட்டறிவதற்கும் மற்றும் விழிப்புணர்வூட்டுவதற்கும் பரந்த இடப் பரப்புக்கு உரித்தான மூலோபாயங்கள் பயன்படுத்தப்படும்.

தகவல்களைப் பரப்பும் முன்னெடுப்பில், கருத்திட்டத்தின் வெளிப்படைத்தன்மை முன்னெடுக்கப்படுதல் வேண்டும்.எதிர்வரும் காலங்களில் ஏற்படக்கூடியமுரண்பாடுகளை இதனூடாக குறைக்க முடியும் என்பதுடன், கருத்திட்டம் தாமதமாதல் தொடர்பிலும் உள்ள வாய்ப்புக்களைக் குறைத்துக் கொள்ள முடியும். மேலும் கருத்திட்டத்தின் மூலம் இன்னல்களுக்கு முகங்கொடுப்பவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு உகந்த வகையில், சிறந்தவாறு ஒருங்கிணைப்புச் செய்யப்பட்ட சகல பங்குதாரர்களின் ஒன்றிணைந்த பிரயத்தனம், அதே போல ஜனநாயகம் மற்றும் பங்கேற்பு முறையின் மூலம் உருவாகிய யதார்த்தம், நிறைவேற்றக்கூடிய மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வுத் திட்டமொன்றினைத் தயாரிப்பதற்கு கருத்திட்டத்திற்கு அவகாசம் கிடைத்துள்ளது.

மீள்குடியேற்றத் திட்டத்தினைத் தயாரிக்கும் பல்வேறான மட்டங்கள் தொடர்பில் ஒன்றிணைந்த பங்கேற்பினை உறுதிப்படுத்துவதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் :

- மீள்குடியேற்றத் திட்டத்தினைத் தயாரிக்கும்போது பங்குகொள்ள வேண்டிய பங்குதாரர்களை இனங்காணுதல் (கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்கள், பிரதேச உத்தியோகத்தர்கள், மீள்குடியேற்றத் தளங்களிலுள்ள ஆதரிக்கும் குடிகள், கருத்திட்ட அதிகாரிகள், உதவி நிறுவனங்களின் பிரதிநிதிகள், தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள், அங்கீகரிக்கும் மற்றும் அமுறப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள்).
- தகவல்களைப் பரப்புதல் (கருத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் உரித்துக்கள் உட்பட), பதில்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கும், தகவல்களைக் கேட்டறிவதற்கும் மற்றும் விழிப்புணர்வூட்டும் செயற்பாட்டிற்கும் பொருத்தமான பொறிமுறையினை அடையாளங் காணுதல்.
- மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறையொன்று (மனக்குறைகளைத் தீர்க்கும் குழு) மற்றும் நடைமுறைத் திட்டத்தினை அடையாளங் காணுதல் (மேலதிக விபரங்களுக்குXIவது பிரிவினைப் பார்க்கவும்.)

நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், அதனை, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் இணையத் தளம், அந்தந்த மாவட்டச் செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கருத்திட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள தகவல் நிலையங்கள் ஆகியவற்றிற்கு வழங்கப்படுதல்

வேண்டும். மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் ஏனைய இரு மொழிகளிலும் (சிங்களம், தமிழ்) பொழிபெயர்ப்புச் செய்யப்படுதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட 1 வது அத்தியாயத்தில் காட்டப்பட்டவாறு (1.5உப பிரிவு), சமுதாயத்தினை விழிப்புணர்வூட்டும் கூட்டங்கள் (07), மையக்குழுக் கலந்துரையாடல்கள் (44) மற்றும் பிரதான தகவல்களை வழங்குபவர்களுடன் கலந்துரையாடுதல் (20)களில் 1,450பேரிடமிருந்து விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டன (ஆரம்ப மற்றும் இரண்டாந்தர பங்குதாரர்கள்). விடயங்களைக் கேட்டறிவதற்கு தொடர்புபடுத்தப்பட்ட கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவர்கள் தொடர்பிலான பொழிப்பு அறிக்கைXIIIமற்றும் XIVபோன்ற பின்னிணைப்புக்களினூடாகக் காட்டப்பட்டுள்ளன. மேலும், பொதுமக்கள் கருத்துக்களை கேட்டறியும் செயற்பாட்டிற்கான புகைப்படங்கள் XVபின்னிணைப்பினூடாகக் காட்டப்பட்டுள்ளது.

இந்தக் கருத்துக்களை கேட்டறிதல் மற்றும் விழிப்புணர்வூட்டும் பங்களிப்புச் செயற்பாட்டிற்கு மேலாக, நேரடியாக மற்றும் மறைமுகமாகக் கருத்திட்டத்தினால் பாதிப்புக்குள்ளான நபர்களுக்குத் தேவையான தகவல்களைப் பரப்பும் இரண்டு பொறிமுறைகள் அமுற்படுத்தப்பட்டுள்ளன. இதில் முதலாவதாக, வீதி பயணிக்கும் சாலையோரத்தில், மையக்குழு மற்றும் பிரதான தகவல்களை வழங்குபவர்களிடம், சூழல்சார் மதிப்பீட்டுக் குழுவினால் கருத்துக்கள் கேட்டறியப்பட்டதுடன், இரண்டாவதாக, கருத்திட்டத்துடன் தொடர்பான சகல பிரதேச செயலகப் பிரிவுகள், கிராம உத்தியோகத்தர் தொகுதிகளை உள்ளடக்குமாறு நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் சில இடங்களில் நடாத்தப்பட்ட விழிப்புணர்வூட்டும் கூட்டம், கருத்திட்டப் பணிப்பாளர்/பிரதிப் பணிப்பாளர் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் உத்தியோகத்தர் குழாமின் மூலம் பிரதானமாக பொதுமக்களை விசாரிப்பது இடம்பெற்று, இவ்விழிப்புணர்வூட்டும் கூட்டங்கள் கட்டமைப்புச் செய்யப்பட்ட வகையில் நடாத்தப்பட்டன. அதற்கு மேலாக, மாவட்ட மற்றும் பிரதேச மட்ட அரசியல்வாதிகளும் இக்கூட்டங்களில் கலந்து கொண்டனர். கருத்திட்டம் தொடர்பில் பிரேரிக்கப்பட்ட வீதி, சாலையோரத்தினைத் தெரிவு செய்யும் அளவுகோல், கருத்திட்டத்தினூடாக இடம்பெறக்கூடிய சூழல்சார் மற்றும் சமூகத் தாக்கங்கள், எதிர்மறைச் சூழல் மற்றும் சமூகத் தாக்கங்களை எளிதாக்கும் நடவடிக்கைகள், தற்போது காணப்படும் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை உள்ளடக்கி பல்வேறான ஊடகமுன்வைத்தல்கள்,(multimedia presentations)இந்தக் கூட்டங்களுக்குப் பிறகு, கருத்திட்ட முகாமைத்துவ அலகின் உத்தியோகத்தர்களினால் நடாத்தப்பட்டன.

விசேடமாக, இக்கூட்டங்களினூடாக இதில் கலந்துகொள்ளுபவர்களுக்கு தமது பிரச்சினைகள், சிக்கல்களை முன்வைப்பதற்கும், அவர்களின் கருத்துக்களை முன்வைப்பதற்குமான வாய்ப்புக் கிட்டுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் ஏனைய உள்ளூராட்சி நிறுவனப் பிரதிநிதிகளினால் தங்கள் வாக்காளர்களின் கருத்துக்கள் மற்றும் பிரச்சினைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி இவ்வாய்ப்புக்கள் ஆக்கபூர்வமான முறையில் பாவிக்கப்பட்டுள்ளது. இது, நாட்டின் முக்கியமான அபிவிருத்திக் கருத்திட்டமொன்று என, இதில் கதைத்துள்ள சகலரின் பொதுவான அபிப்பிராயம் என்பதுடன், அதனை அமுற்படுத்தும்போது சூழல்சார் மற்றும் சமூகத் தாக்கங்களை எளிதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் எதிர்பார்க்கின்றனர். சுவீகரிக்கப்படும் சொத்துக்கள் தொடர்பில் சுவீகரித்தல் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு தொடர்பில் அடிப்படைச் செயற்பாடுகளைப் பூர்த்தி செய்தல் உட்பட கருத்திட்டத்திற்கான அடிப்படைச் செயற்பாடுகளை விரைவில் பூர்த்தி செய்தல் வேண்டும் எனவும் அதனூடாக கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளைக் குறைத்துக் கொள்ள முடியும் எனவும் அவர்களினால் வெளிக் கொணரப்பட்டுள்ளது. கலந்துகொண்டவர்களின் கருத்தின் பிரகாரம், வீதி பயணிக்கும் சாலையோரம் மற்றும் சுவீகரிக்கப்படும் பிரதேச எல்லைகள் தொடர்பில் வேறுபாட்டினை உருவாக்குதல் மக்களுக்கிடையே குழப்பம் மற்றும் அவ நம்பிக்கையினை உருவாக்குவதற்கு ஏதுவாகும். அத்தகைய மாற்றத்தினைச் செய்வதன் மூலம், கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு கருத்திட்டத்தின் பாதகமான தாக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு

நிரந்தரமாக சரியான நேரத்திற்குத் தீர்மானமெடுப்பதற்கு சிக்கலாக இருப்பதால் நீண்ட தொந்தரவுகளுக்கு முகங்கொடுப்பதற்கு நேரிடும்.

கருத்திட்டத்தின் இந்தக் கட்டத்தில், பொதுமக்கள் பிரதிநிதிகளின் பங்களிப்பு கருத்திட்டத்திற்கு பல வகைகளில் நன்மை பயக்கின்றது. சமுதாய மட்டங்களில் மக்கள் பிரதிநிதிகளினூடாக சமுதாயத்தினை அடைவதற்கு அவர்கள் சிறந்த அணுகுமுறையினை வழங்குவதுடன், மக்கள் கருத்துக்களைக் கட்டியெழுப்புவதில் அவர்கள் ஆர்வமாகவுள்ளனர். தமக்குச் சமூகப் பிரச்சினையொன்று உருவாகும்போது மக்கள் முதலாவதாக செல்லுவது இம்மக்கள் பிரதிநிதிகளிடமேயாகும். இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள், தமது வாக்காளர்களுக்கு பொருத்தமான பயன்மிக்க பதில்களை வழங்க முடியும். அதே போல அவர்கள் கருத்திட்டம் தொடர்பில் விழிப்புணர்வூட்டப்பட்டிருப்பின் மாத்திரமே அதனை அமுற்படுத்தும் வேளையில் கருத்திட்டத்திற்கு உதவியினை வழங்க முடியும். மேலும், பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு ஒருங்கிணைப்புத் தொடர்பில் ஏதேனும் பொறுப்பொன்று காணப்படுவதுடன், அவர்களுள் பலர், தேசிய மற்றும் மாகாண சபை மட்டத்தின் அமைச்சர்கள் என்பதால், கருத்திட்டத்திற்கு உதவி வழங்குவதற்கு யாதேனும் இயலுமையொன்று அவர்களிடம் காணப்படுகின்றது.

இப் பொதுமக்கள் பிரதிநிதிகளுக்கு மேலாக, உயர் மட்ட அரச உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற அமைப்புக்களின் பிரதிநிதிகள், மாவட்ட மதத் தலைவர்கள், பொதுச் செயற்பாடுகள் தொடர்பில் ஆர்வத்தினைக் கொண்டவர்களும், மாவட்ட மற்றும் பிரதேச மட்ட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களிற் கலந்து கொண்டதுடன், தகவல்களைக் கேட்டறியும் செயற்பாட்டிலும் உதவியினை வழங்குகின்றனர். உரிய சகல பங்குதாரர்களுடன் கலந்துரையாடி, கருத்திட்டத்தின் மூலம் உருவாகக்கூடிய சூழல்சார் மற்றும் சமூகப் பிரச்சினைகளுக்கு சரியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என விடயம் மீது மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் வலியுறுத்தியிருந்தனர். மேலும், நிர்மாணிப்புப் பணிகள்இடம்பெறும்போது, ஒப்பந்த உடன்படிக்கைகளில் காட்டப்பட்டவாறு. கழிவகற்றல் மற்றம் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுவதன் தேவைப்பாடுகள் தொடர்பிலும் அவர்கள் வலியுறுத்தி உள்ளனர். கருத்திட்ட அமுலாக்கலின்போது, இது தொடர்பில் அடிக்கடி மாவட்ட மற்றும் பிரதேச மட்டங்களில் பின்னூட்டல் மற்றும் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்தப்படுதல் வேண்டும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 10.2**தகவல்களை வெளியிடுதல் மற்றும் பரப்புதல்**

மக்களுக்குத் தகவல்களை வெளியிடுதல், நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினால், பங்குதாரர்களுடன் இணைந்து, விசேடமாக இடம்பெயர்ந்த மக்களுடன் வெளிப்படைத்தன்மையுடன் நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கையில் காட்டப்பட்ட அடிப்படை கொள்கைசார் தேவைப்பாடாகும். நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட அலகினால் பின்பற்றப்படும் அணுகுமுறைகள் வெளிப்படைத் தன்மை மற்றும் திறந்த மனதுடையதாக இருக்கும்போது, கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவர்களுக்கிடையே பரஸ்பர நம்பிக்கை உயர் மட்டத்தில் கட்டியெழுப்பப்படுகின்றது. உண்மைகளை மூடி மறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமாயின், சந்தேகங்கள் மற்றும் அவநம்பிக்கை உருவாகி அதனூடாக கருத்திட்ட அமுலாக்கம் மீது பாதகமான எதிர்மறைத் தாக்கங்கள் உருவாகக்கூடும் என்பதுடன் திறந்த மனதுடன் நடவடிக்கை எடுத்தல் கருத்திட்டப் பணியின் வெற்றிக்கு காரணமாக அமையும். பலநோக்கு ஊடகங்களை முன்வைப்பதற்கு மேலாக, கருத்திட்டம் தொடர்பிலான விபரங்கள் மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு விரபங்களை உள்ளடக்கி சிறந்தவாறு தயாரிக்கப்பட்டவிபரத்தாளும் (துண்டுப்பிரசுரம்), இக்கூட்டங்களில் கலந்துகொண்டவர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்டது. பிரேரிக்கப்பட்ட அதிவேகவீதி அபிவிருத்திப் பணியின் மூலம், பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கான உரித்துக்கள், மேலதிக விபரங்களை தெளிவுபடுத்துவதற்காக தொடர்பு கொள்ளப்பட வேண்டிய நபர்களின் முகவரிகள் மற்றும் தொலைபேசி இலக்கங்கள் இத்

துண்டுப் பிரசுரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. (இத் துண்டுப் பிரசுரத்தின் பிரதி பின்னிணைப்பு இலக்கம் IVஎன்றவாறு, இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது).

மேலும், காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்ற முன்னெடுப்புத் தொடர்பில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் அநேகமானோருக்கு இன்னமும் சிறந்த விழப்புணர்வு கிடைக்காமையினால், பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்கும் முன்னெடுப்பினை மேலும் அமுலாக்கஞ் செய்தல் வேண்டும். ஆதலால், பின்வருமாறு பொதுமக்களை விழிப்புணர்வூட்டும் முன்னெடுப்பு, கருத்திட்டத்தினூடாகத் தொடர்ந்து இடம்பெறுதல் வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. விபரங்களுக்கு அட்டவணை இலக்கம் 62ஐப் பார்க்கவும்.

**அட்டவணை இலக்கம் 62:பிரேரிக்கப்பட்ட எதிர்கால பொதுமக்களை விழிப்புணர்வூட்டும்திட்டம்**

| செயற்பாடுகள் | நோக்கம் | காலவரையறை | பொறுப்பு வகிக்கும் அலகு |
|---|---|---|---|
| கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களின் வீடுகளுக்குச் செல்லுதல். | இலக்கம். 2 இன் கீழ் காட்டப்பட்ட அறிவித்தலினைப் பகிர்ந்தளித்தல். | SECசட்டத்தின் 03 வது அத்தியாயத்தில் அறிவித்தல்கள் வெளியிடப்பட்டதுடன் | பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலகு. |
| கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு உரித்துக்கள் தொடர்பான திட்டத்தின் சிங்கள மொழிப் பிரதியினைப் பகிர்ந்தளித்தல். | கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு அவர்களுக்கான உரித்துக்கள் தொடர்பில் புரிந்து கொள்ளுவதற்கு உதவுதல். | மீள்குடியேற்ற இறுதித் திட்டம் பகிர்ந்தளிக்கப்பட்டதுடன் | கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் சூழல்சார் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம் |
| Consultation with PAPs கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுடன் கலந்தாலோசித்தல். | காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்பினைத் தெளிவுபடுத்தல். | SEC சட்டத்தின் 03 வது அத்தியாயத்தின் (அ) அறிவித்தலினை பிரசுரிப்பதற்கு முன்னர் | பிரதேச செயலாளர், சூழல்சார் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம், கருத்திட்ட முகாமைத்துவ அலகு. |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டங்களில் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களை, குழுவாக சந்தித்தல். | உறுதி உரித்துக்களைத் தீர்மானித்துக் கொள்ளுவதற்கு SEC சட்டத்தின் 09 வது அத்தியாயத்தின் (1) விடயங்களை விசாரணை செய்வதற்கு ஆஜராகுவதற்கு பழகுதல் மற்றும் அதில் முன்வைக்கப்பட வேண்டிய ஆவணங்களை தெளிவுபடுத்துதல். | 9 (1) வது பிரிவின் விசாரணைகளுக்குப் பின்னர். | கிராம உத்தியோகத்தர்கள், மீள்குடியேற்ற உதவியாளர்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலகு |

| | | | |
|---|---|---|---|
| கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் கட்டியெழுப்பக்கூடிய மீள்குடியேற்றத் தளங்களைத் தெரிவு செய்வதற்கு கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிரதேசத்தின் ஆதரிக்கும் குடிகளுடனான கூட்டங்கள். | மீள்குடியேற்றத்திற்கு பயன்படுத்தக்கூடிய மாற்றிடங்களைக் கலந்துரையாடுதல். | மீள்குடியேற்றத்திற்கு முன்னர் | பிரதேச செயலாளர்,கிராம உத்தியோகத்தர்கள், மீள்குடியேற்ற உதவியாளர்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சூழல்சார் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம். |
| கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டம் | மீள்குடியேற்றத்தின் பின் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கான ஒரு சமுதாயத்தினை நிறுவுதல். | மீள்குடியேற்றத்தின் பின் | பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள், மீள்குடியேற்ற உதவியாளர்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலக, சூழல்சார் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம். |
| கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் கட்டியெழுப்பக்கூடிய மீள்குடியேற்றத் தளங்களைத் தெரிவு செய்வதற்கு கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் பிரதேசத்தின் ஆதரிக்கும் குடிகளுடனான (பழங்குடியினர்) கூட்டங்கள். | மீள்குடியேற்றத்திற்கு பயன்படுத்தக்கூடிய மாற்றிடங்களைக் கலந்துரையாடுதல் | மீள்குடியேற்றத்திற்கு முன்னர் | பிரதேச செயலாளர்,கிராம உத்தியோகத்தர்கள், மீள்குடியேற்ற உதவியாளர்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சூழல்சார் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம். |
| கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுடன் கூட்டம் | மீள்குடியேற்றத்தின் பின் ஏற்படும் பிரச்சினைகள் மற்றும் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கான ஒரு சமுதாயத்தினை நிறுவுதல். | மீள்குடியேற்றத்திற்குப் பின்னர். | பிரதேச செயலாளர், கிராம உத்தியோகத்தர்கள், மீள்குடியேற்ற உதவியாளர்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலக, சூழல்சார் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம். |

குறிப்பு : கலந்தாலோசித்தல் தொடர்ந்து இடம்பெறும் முன்னெடுப்பு என்பதுடன், கருத்திட்ட உத்தியோகத்தர் குழாம் மற்றும் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களுக்கிடையே கலந்துரையாடல்களைத் தொடர்ந்து நடாத்துதல்.

மூலாதாரம் : CEP/Stage 3/RAP/Data

## 10.3 பொது தகவல் நிலையங்கள்

கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டவர்களுள் அதிகமானவர்கள் இடம்பெயரும் இடங்களிலும் மற்றும் அந்த இடங்களில் மீதமாகியுள்ள சமுதாயங்கள் நிர்மாணிப்பின் காரணமாக பாதிப்புக்குள்ளாகும் பிரதான இடங்களிலும், பிரேரிக்கப்பட்ட பொது தகவல் நிலையங்கள் அமைக்கப்படும். கருத்திட்ட நோக்கங்கள், திட்டங்கள், காணிச் சுவீகரிப்பு, மீள்குடியேற்றம், மனக்குறைகளைத் தீர்க்கும் பொறிமுறை, மனக்குறைகளைத் தீர்க்கும் குழு மற்றும் நிர்மாணிப்பு முன்னெடுப்பு போன்ற விடயங்கள் தொடர்பில் சிறந்த அறிவினைப் பெற்றுள்ள தொடர்பாடல்

உதவியாளர் ஒருவர் இந்தப் பொதுத் தகவல் நிலையத்தில் சேவைக்கு அமர்த்தப்படுதல் வேண்டும். நிறைவேற்று முகவராண்மை/கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தினை உள்ளடக்கி தேவையான தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும்.

### 10.4எச்.ஐ.வீ/ஏ.ஐ.டி.எஸ் மற்றும் ஏனைய சமூகப் பாதுகாப்புக் கொள்கைகள் தொடர்பிலான விழிப்புணர்வு.

இக் கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும் ஒவ்வொரு வீதியினையும் நிர்மாணிப்பதற்குத் தொடர்புபடும் சகல பகுதியினரும் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தினை உறுதிப்படுத்துதல் மிகவும் முக்கியமாகும். இக்கருத்திட்டத்திற்கென பிரதான குழுக்கள் இரண்டு காணப்படுவதுடன், ஒன்று, நகரப்புறத்தில் வசிக்கின்ற தொகுதி மற்றையது கருத்திட்ட உத்தியோகத்தர் குழாம் (தொழிலாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள்).விசேடமாக வீதியினை நிர்மாணிப்பதற்கு பிரேரரிக்கப்பட்ட கட்டம், வடமேல் மாகாணம் மற்றும் மத்திய மாகாணத்தின் கிராம பிரதேசங்களினை ஊடறுத்துச் செல்லுகின்றது. வெளிக்கள ஆய்வுகளில் இனங்காணப்பட்டவாறு, கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய ஆபத்து நடத்தை பற்றிய அறிவு கிராம வாசிகள் மற்றும் தொழிலாளர்களுக்கிடையே ஒப்பீட்டு ரீதியியல் குறைந்த மட்டத்திலுள்ளது. HIV/AIDSதொடர்பில் கவனத்திற் கொண்ட இலங்கை குறைந்த இன்னலினைக் கொண்ட நாடாக இருந்தாலும், வீதியின் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுவதற்கு நகரப் பிரதேசங்களுக்கு வெளி நபர்கள் வருவதனூடாக சில தீவிரமான அபாயங்கள் எழக்கூடும். இந்த அபாயம் உரிய இரு பகுதியினரிடமும் காணப்படுவதால் கருத்திட்டத்தின் இம் மையக்குழு (குடியிருப்பாளர்கள், தொழிலாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் உத்தியோக்தர்கள்) தொடர்பில் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு பரிந்துரை செய்யப்படுகிறது. அட்டவணை இலக்கம் 63 இல் காட்டப்பட்டவாறு இந்த விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களினூடாக பல முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**அட்டவணை இலக்கம் *63:* விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களில் வலியுறுத்த வேண்டிய விடயங்கள்**

| இலக்கிடப்பட்ட குழு | நடாத்தப்பட வேண்டிய இடம் | வலியுறுத்த வேண்டிய விடயங்கள் | விசேட விடயங்கள் |
|---|---|---|---|
| நகரக் குடியேறிகள்/குடியிருப்பாளர்கள் | வீதி நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்க முன்னர் வீதி பயணிக்கும் சாலையோரத்தில் அமைந்துள்ள பிரதான குடியிருப்புப் பிரதேசத்தில் நடாத்தப்படுதல் வேண்டும். | 1. சிறந்த உடல் ஆரோக்கியத்தினை முன்னெடுத்துச் செல்லுவதில் நடத்தை முறையின் முக்கியத்தும்.<br>2. இது தொடர்பிலுள்ள தேசியக் கொள்கைகள்<br>3. ஒவ்வொரு குழுவுக்குமான சாத்தியமான அச்சுறுத்தல்கள்.<br>4. பாதுகாப்பு நடவடிக்கைகள் | இது அவர்களின் சமூகம் மற்றும் கலாசார அடையாளத்திங்கு பங்கம் ஏற்படாதவாறு இடம்பெறுதல் வேண்டும். இந்நிகழ்ச்சித் திட்டத்தில் பங்குபற்றுதல் குடியிருப்பாளர்களுக்கு கட்டாயமாக இருக்கக்கூடாது. |

| | | | |
|---|---|---|---|
| தொழிலாளர்கள் | ஒவ்வொரு ஒப்பந்தக்காரரின் கீழ் கடமையாற்றும் தொழிலாளர் குழுக்களை உள்ளடக்குமாறு, வீதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்க முன்னர் நடாத்தப்படுதல் வேண்டும். | 1. சிறந்த உடல் ஆரோக்கியத்தினை முன்னெடுத்துச் செல்லுவதில் நடத்தை முறையின் முக்கியத்தும்.<br>2. இது தொடர்பிலுள்ள தேசியக் கொள்கைகள்<br>3. ஒவ்வொரு குழுவுக்குமான சாத்தியமான அச்சுறுத்தல்கள்.<br>4. பாதுகாப்பு நடவடிக்கைகள்<br>5. சிறுவர் உரிமைகள் மற்றும் துஸ்பிரயோகங்கள்<br>6. நிர்மாணப் பணியின் காரணமாக கிராமவாசிகளின் வாழ்வாதாரம் மீது ஏற்படக்கூடிய தடைகளைக் குறைத்தல். | இந் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்ளுவது தொழிலாளர்களுக்குக் கட்டாயமாக இருத்தல் வேண்டும். |
| தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள். | ஒவ்வொரு ஒப்பந்தக்காரரின் கீழ் கடமையாற்றும் தொழிலாளர் குழுக்களை உள்ளடக்குமாறு, வீதியின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்க முன்னர் நடாத்தப்படுதல் வேண்டும். | 1. சிறந்த உடல் ஆரோக்கியத்தினை முன்னெடுத்துச் செல்லுவதில் நடத்தை முறையின் முக்கியத்தும்.<br>2. இது தொடர்பிலுள்ள தேசியக் கொள்கைகள்<br>3. ஒவ்வொரு குழுவுக்குமான சாத்தியமான அச்சுறுத்தல்கள்.<br>4. பாதுகாப்பு நடவடிக்கைகள்<br>5. சிறுவர் உரிமைகள் மற்றும் துஸ்பிரயோகங்கள்<br>6. நிர்மாணப் பணியின் காரணமாக கிராமவாசிகளின் வாழ்வாதாரம் மீது ஏற்படக்கூடிய தடைகளைக் குறைத்தல்.<br>7. ஊழியர் சட்டங்கள் மற்றும் உரிமைகள். | இந் நிகழ்ச்சித் திட்டங்களில் கலந்து கொள்ளுவது சகல தொழில்நுட்ப வல்லுனர்களுக்கும் மற்றும் உத்தியோகத்தர்களுக்கும் கட்டாயமாக இருத்தல் வேண்டும். |

மூலாதாரம்: CEP/Stage 3/RAP/Data

HIV/AIDS உட்பட, கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய மனித நடத்தை தொடர்பிலும், கருத்திட்டம், தொடர்பான ஏனைய செயற்பாடுகளுக்குமான சகல தேசியக் கொள்கைகள் மற்றும் ஒழுங்கு விதிகள் தொடர்பிலும் தொழிலாளர்கள் மற்றும் சகல அலுவலகக் குழாமினையும் விழிப்புணர்வூட்டுதல் வேண்டும். இவ்வாறான ஒவ்வொரு கொள்கை மற்றும் கருத்திட்டத் தேவைப்பாடுகள் தொடர்பிலும் ஒவ்வொரு ஒப்பந்தக்காரரையும் விழிப்புணர்வூட்டுதல் கருத்திட்டப் பணிப்பாளரின் பொறுப்பாகும்.

# அத்தியாயாம்XI:நிறுவனம்சார் ஏற்பாடுகள்

**11.1 வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கருத்திட்ட முகாமைத்துவ அலகு**

வீதி அபிவிருத்தி அதிகார சபை, பகுதியளவிலான அரச நிறுவனமொன்றாவதுடன், அது உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் கீழ் அமுற்படுத்தப்படுகின்றது. அது கருத்திட்டத்தின் நிறைவேற்று முகவர் நிறுவனமாக செயற்படுவதுடன், கருத்திட்டம் நிறைவடையும் வரை, அதற்கான பணிகளை முகாமை செய்வதற்கு ஒரு விசேட நிறுவனமொன்று நிறுவப்பட்டு வருகின்றது. அந்த நிறுவனம் கருத்திட்ட முகாமைத்துவ அலகு எனப் பெயரிடப்பட்டுள்ளது என்பதுடன், கருத்திட்டம் தொடர்பில் சகல நடவடிக்கைகளையும் திட்டமிடுதல் மற்றும் அமுற்படுத்துதல் அதனூடாக இடம்பெறுகின்றது.

சுய விருப்புக்கு விரோதமான குடியேற்றத்தினைத் திட்டமிடுதல், அமுற்படுத்துதல் மற்றும் கண்காணிப்பு போன்ற பணிகள் பல்வேறான அமைச்சுக்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புபட்டு முன்னெடுக்கப்பட்டுவருகின்றது. கருத்திட்ட அமுலாக்கலின் சகல பொறுப்பும் இலங்கை அரசு மற்றும் பெருந்தெருக்கள் விடயத்திற்குப் பொறுப்பான நேரொத்த அமைச்சான உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக்கும் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் கண்காணிப்பின் கீழ், இக் கருத்திட்டத்தின் அமுலாக்கத்தின் நிர்வாகப் பொறுப்பு, தேசிய வீதிகள் வலையமைப்பினை நிர்வகித்து வரும் பிரதான நிறுவனமான வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நிறைவேற்றப்படுகின்றது.

காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம், காணிச் சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு பணிகள் இடம்பெற்றுவரும் பிரதான பிரிவாக விளங்குவது, பணிப்பாளர் ஒருவரின் கீழ் அமுற்படுத்தப்படும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் காணிப் பிரிவாகும். எவ்வாறாயினும், ஏதேனும் ஒரு நிலையின் கீழ், விசேடமான கருத்திட்டத்தின் பொறுப்பினை வகிப்பதற்காக கருத்திட்ட முகாமைத்துவ அலகு, உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினால் நிறுவப்பட்டு வருகின்றது. காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்பினை விரைவுபடுத்துவதற்கென, தமது கருத்திட்டத்திற்கான காணியினைச் சுவீகரிக்கும் பொறுப்பு இக் கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு ஒப்படைக்கப்படுகின்றது. கருத்திட்ட முகாமைத்துவ அலகு, வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கண்காணிப்பின் கீழ் அமுற்படுத்தப்படுவதுடன். அதன் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கென உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுடன் நேரடித் தொடர்புகளினைக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. உரிய அதிகாரிகளின் உடன்பாட்டுடன், திட்டமிடப்பட்ட செயல் நெறித் தொடரினூடாக, குறிப்பிடட காலவரையறையுடனான நிகழ்ச்சித் திட்டமொன்று, கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம், அமுற்படுத்தும் மட்டத்தில் மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்துதல் தொடர்பில் கேந்திர நிலையமாக விளங்குவது

கருத்திட்ட முகாமைத்துவ அலகாகும். உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சின் வழிகாட்டல், கண்காணிப்பு மற்றும் பொதுத் திறைசேரியின் ஏற்பாடுகளின் கீழ், குறிப்பிட்டதொரு நிதி இறைமை மற்றும் நிர்வாக நெகிழ்வுத் தன்மையுடன் கருத்திட்ட முகாமைத்துவ அலகு பலப்படுத்தப்பட்டுள்ளது.

### 11.1.1. கருத்திட்ட முகாமைத்துவ அலகு/வீதி அபிவிருத்தி அதிகார சபை

மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்தும் பொறுப்பு, வீதி அபிவிருத்தி அதிகார சபையுடையது என்பதுடன், கருத்திட்டத்தினை அமுற்படுத்துவதற்கென அமைக்கப்பட்டுள்ள கருத்திட்ட முகாமைத்துவ அலகு அதன் நேரடிப் பொறுப்பினை வகிக்கின்றது.ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்கமைய, செயற்படும் நிறுவனமொன்றான கருத்திட்ட முகாமைத்துவ அலகு, கருத்திட்டப் பணிப்பாளர் ஒருவரின் தலைமையிலும், பொறியியல், மீள்குடியேற்றம், காணிச் சுவீகரிப்பு மற்றும் சுற்றுச் சூழல் செயற்பாடுகளுக்கான அலுவலகக் குழாம் மற்றும் ஏனைய உதவித் தரங்களுக்குரித்தான அலுவலகக் குழாமினைக் கொண்டுள்ளது. மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினைத் திட்டமிடுதல் மற்றும் அமுற்படுத்துதல் தொடர்பில் கருத்திட்ட முகாமைத்துவ அலகு பின்வரும் பணிகளை நிறைவேற்றுகின்றது :

#### A. மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல்

வீதி பயணிக்கும் நிலக் கோட்டினை அடையாளமிடுவதற்கு தேவையான வசதிகளை வழங்குதல் மற்றும் கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களை அடையாளங் காண்பதனூடாக மீள்குடியேற்ற ஆலோசகருக்கு/குழுவுக்கு உதவுதல், ஆய்வுகள், ஏனைய ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகளினூடாக உரிய பிரதேசத்தில் சமூக மற்றும் சூழல்சார் மதிப்பீட்டினை முன்னெடுப்பதற்கு உதவுதல், பிரதேச செயலகப் பிரிவு மட்டங்களில் நடாத்தப்படும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களுக்கு உதவுதல், கலந்துகொள்ளுதல், கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவர்களுடன் நடாத்தப்படும் கூட்டங்கள் மற்றும் மையக் குழுவுடன் நடாத்தப்படும் கலந்துரையாடல்களுக்கு உதவுதல் மற்றும் வரைவு செய்யப்பட்ட மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்ட முன்னெடுப்பினை மீளாய்வு செய்தல்.

#### B. காணிச் சுவீகரிப்பு

காணிச் சுவீகரிப்புக்கான விண்ணப்பப் படிவத்தினைத் தயாரித்தல், மீள்குடியேற்றத் திட்டத்துடன், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுக்கு அனுப்புவதற்கு அதனை உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சுக்கு வழங்குதல். காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் உரிய விண்ணபப் படிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர், காணிச் சுவீகரிப்பு உத்தியோகத்தராக பிரதேச செயலாளர் நியமிக்கப்பட்டதன் பின்னர் காணிச் சுவீகரிப்புச் செயற்பாட்டினை அமுற்படுத்துவதற்கு உதவுதல், காணிச் சுவீகரிப்புச் செய்றபாட்டின் பல்வேறான படிநிலைகளுக்குத் தேவையான ஆவணங்களைத் தயாரித்தல். அவ் ஆவணங்களை மும்மொழியிலும் மொழிபெயர்த்தல், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் உரித்தின் கீழ் காணி வழங்கப்படும் வரை காணிச் சுவீகரிப்புப் பணிக்கு நெருங்கிய உதவியினை வழங்குதல்.

தேவையான ஆவணங்கள், உரித்தினை நிரூபிக்கும் ஆதாரங்களுடன், காணி தொடர்பிலான உரித்து தொடர்பில் விடயங்களை விசாரணை செய்யும்வேளையில் முன்வைப்பதற்கு உதவுவதனூடாக கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்களுக்கு தமது காணி, கட்டிடங்கள் மற்றும் பயிர் வளர்ப்புக்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதற்கு உதவுதல் மற்றும் தேவையேற்படின், விசேடமாக, கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையிலுள்ள நபர்களுக்கு (நலிவடைந்த நபர்கள்) அவ்விசாரணைகள் தொடர்பில் கலந்துகொள்ளச் செல்லுவதற்குப் போக்குவரத்து வசதிகளை வழங்குதல்.

உரியவாறு தாமதமின்றி, இழப்பீட்டுக் கொடுப்பனவினை வழங்குவதற்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகு/பிரதேச செயலாளர்/வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு போதுமானவாறு நிதியுள்ளது என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

### C. மீள்குடியேற்றப் பயன்கள்

மீள்குடியேற்ற முன்னெடுப்புத் தொடர்பில் பின்வரும் செயற்பாடுகளுக்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகு தனது கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும். அவை :

1. மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் உத்தியோகபூர்வ ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதுடன் தவகல்களை வெளியிடுவதை ஆரம்பித்தல்.
2. உரித்துத் திட்டத்தின் பிரகாரம் மீள்குடியேற்றத்தின் நிதிசார் பயன்களை வழங்குதல்.
3. கவனத்திற் கொள்ளப்பட்ட வேண்டிய நிலையிலுள்ள நபர்கள், பெண்கள் மற்றும் நோயாளி நபர்களுக்கு நிதிசார் கொடுப்பனவுகளை வழங்கும்போது அவர்களுக்கு உரித்தான சரியான நிதி கிடைத்துள்ளதா மற்றும் அந்நிதி சரியானவாறு பாவிக்கப்பட்டுகின்றதா என்பது தொடர்பில் விசேட கவனத்தினைச் செலுத்துதல்.
4. நிதிக் கொடுப்பனவினை முன்னெடுக்கும்போது அதிக வெளிப்படைத்தன்மையுடன் அப்பணியினை முன்னெடுத்தல்.
5. மீள்குடியேற்றப் பயன்களை வழங்குவதற்குப் போதுமான ஏற்பாடுகள் கருத்திட்ட முகாமைத்துவ அலகு/வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் உள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல். மீள்குடியேற்றப் பயன்கள் பிரதேச செயலகங்களினூடாக வழங்கப்பட மாட்டாது.
6. கருத்திட்டத்தினூடாக பாதிக்கப்பட்ட சமுதாயச் சொத்துக்கள் மற்றும் மதம்சார் சொத்துக்களுக்கான புதிய சொத்துக்களை விரைவில் வழங்குதல்.
7. தெரிவு செய்யப்பட்ட பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு வருமான மறுசீரமைப்புக் கருத்திட்டங்களை அமுற்படுத்துதல்.
8. தம் மூலம் வழங்கப்பட்ட தளங்களில் மீள்குடியேறியுள்ள கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்குத் தேவையான உதவியினை வழங்குதல்.
9. பிரேரணைக்கு உள்ளடக்கப்பட்டுள்ள கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களுக்கு, மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டதுடன், அவர்களுக்கான மீள்குடியேற்றத் தளம் தொடர்பில் விழிப்புணர்வூட்டுதல் இடம்பெறுதல் வேண்டும் என்பதுடன், பொருத்தமான காணயினை சுவீகரித்தல்/கொள்வனவு செய்தல், பயனாளிகளின் பங்களிப்பு, ஆதரிக்கும் குடிகளின் உடன்பாடு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, வீடமைப்பு போன்றன அதற்குள் உள்ளடக்கப்படும்.
10. மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்துதல் தொடர்பில் உள்ளக மற்றும் வெளியகக் கண்காணிப்புச் செயற்பாட்டினை முன்னெடுத்தல்

## 11.1.2 சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு (ESDD)

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அமுற்படுத்தப்படும் பல்வேறான கருத்திட்டங்கள் தொடர்பில் காணிச் சுவீகரிப்பு, மீள்குடியேற்றச் செயற்பாட்டினைத் திட்டமிடுதல் மற்றும் உரிய பாதுகாப்புத் தேவைகளுக்கு ஏற்ப செயற்பாடு போன்றன தொடர்பில் மேற்பார்வை, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைப் பொறுப்பாகும். மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு செயல் வரையறைகளை (TORs) ஒழுங்குபடுத்துவதற்கு உதவுதல், மீள்குடியேற்றத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு உரிய செயற்பாடு தொடர்பில் பின்பற்றுதல், மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை மீளாய்வு

செய்தல், மீள்குடியேற்றம் தொடர்பிலான உள்ளகக் கண்காணிப்புத் தொடர்பில் காலாண்டு அறிகைககளைத் தயாரித்தல், வெளிவாரி கண்காணிப்பு நிறுவனங்களுக்கு செயல் வரையறைகளை (TORs) ஒழுங்குபடுத்துவதற்கு உதவுதல் மற்றும் மீள்குடியேற்றத் திட்டத்தினை அமுற்படுத்தும் பல்வேறான படிநிலைகளின்போது தளப் பரிட்சிப்பினை முன்னெடுத்தல். பல கருத்திட்ட முகாமைத்துவ அலகுகளில் தேவையான திறன்கள் மற்றும் நிபுணத்துவம் இல்லாதபோது, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு, அக்கருத்திடட முகாமைத்துவ அலகுகளுக்கும் மற்றும் உரிய பிரிவுகளுக்கும் தேவையான நிபுணத்துவத்தினை வழங்கும். சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்கள் தொடர்பில் கொடுப்பனவு வழங்குதல் மற்றும் புனர்வாழ்வு தொடர்பிலான முன்னேற்றம் தொடர்பில் தரவுத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லுவதும் இடம்பெறுகின்றது.

## 11.2 கருத்திட்டம் தொடர்பிலான ஏனைய பங்குதாரர்கள் மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடு தொடர்பில் அவர்களின் பங்களிப்பு.

### 11.2.1 பிரதேச செயலகப் பிரிவுகள்

மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டத்தின் 3 வது கட்டம், 4 பிரதேச செயலகப் பிரிவுகள் பூராவும் விரிவுபடுத்தப்படுகின்றது. கருத்திட்ட அமுற்படுத்துகை தொடர்பில் பிரதேச செயலாளர்கள் மற்றும் அவர்களின் அலுவலகக் குழாமுக்கு முக்கியமான கடமைப் பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. முதலில் காணிச் சுவீகரிப்புத் தேவைப்பாடுகளைத் தயாரித்தல் மற்றும் அமுற்படுத்துவதற்கு அவர்களைத் தொடர்புபடுத்துதல்.

கருத்திட்டம் தொடர்பில் பிரதேச செயலாளர்களை விழிப்புணர்வூட்டுதல் கருத்திட்ட முகாமைத்துவ அலகு/வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறுப்பாவதுடன், அதன் பின்னர் கிராம உத்தியோகத்தர்கள், வறுமை ஒழிப்பு உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள். காணிக் கந்தோர் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலகத்தில் அமுற்படுத்தப்படும் உரிய அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற அமைப்புக்கள், மதத் தலைவர்கள், சமுதாயத் தலைவர்கள், உள்ளூராட்சி மாகாண சபை அங்கத்தவர்கள போன்ற பங்குதாரர்களுக்கு முறைசார் விழிப்புணர்வூட்டும் கூட்டம் நடாத்தப்படுதல் வேண்டும். இந்த விழிப்புணர்வூட்டும் கூட்டங்களில் விடய விசேட நிறுவனங்களிலிருந்து அழைக்கப்பட்ட வளதாரர்களினைக் கொண்டு கருத்திட்டத்தினை அறிமுகப்படுத்துதல், மீள்குடியேற்றத்தினைத் திட்டமிடுதல், காணிச் சுவீகரிப்பு நடைமுறை மற்றும் சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் முன்வைத்தல்கள் (**presentations**)இடம்பெறும். பங்குகொள்பவர்களுக்கு முக்கிய தலைப்புக்களைக் கலந்துரையாடுவதற்கு அதற்கான சகல பங்குதாரர்களின் பங்களிப்புடன் அமர்வுகள், கருத்திட்ட முகாமைத்துவ அலகு/வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் நடாத்தப்படும். இவ் அணுகுமுறைக்கமைய, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான வீட்டு அலகுகள் தொடர்பில் சமூக – பொருளாதார ஆய்வினை முன்னெடுப்பதற்கு முன்னர், கருத்திட்டத்துடன் தொடர்பான மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் கூட்டங்கள் நடாத்தப்படும்.

பிரேரிக்கப்பட்ட காணியினைச் சுவீகரித்தல், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர், உரிய பிரதேச செயலகப் பிரிவுகளின் காணிச் சுவீகரிப்பு உத்தியோகத்தராக பிரதேச செயலாளர்கள் நியமிக்கப்படுவர். அதன் பிரகாரம், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம் காணிச் சுவீகரிப்புப் பணி அவன்/அவளினால் ஆரம்பிக்கப்படும் என்பதுடன் உரிய காணிகளின் உரித்தினைப் பெற்றுக் கொள்ளும் வரை அதன் செயற்பாடு இடம்பெறும். ஆரம்பத்தில் விழிப்புணர்வூட்டுதல் இடம்பெறும், நில அளவைத் திணைக்களத்தினால் இடம்பெறும் முறைசார் அளவீடுகள், சுவீகரிப்பு உத்தியோகத்தர்ளினால் இடம்பெறும் உரிமையினை உறுதிப்படுத்தும் விசாரணைகள், விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினல் இடம்பெறும் மதிப்பீடு செய்தல், குறிப்பிட்ட மீளாய்வுச் சபையினால்

இடம்பெறும் மேன்முறையீடுகளைப் பரிசோதித்தல் ஆகிய செயற்பாடுகள் இதற்குள் உள்ளடக்கப்படும்.

காணிச் சுவீகரிப்பு, பிரதேச செயலகங்களின் வழமையான கடமையொன்றாவதுடன், காணிச் சுவீகரிப்புக்குத் தேவையான சட்டங்கள், திட்டங்கள், மூலோபாயங்கள் மற்றும் வளங்கள் மற்றும் தேவையான மனித வலு என்பன அந்நிறுவனங்களுக்கு உரித்தானவையாகும். எவ்வாறாயினும், சில வேளைகளில். நிதி வளங்களின் வரையறையினைக் காரணமாகக் கொண்டு, சட்ட ஆவணங்கள் குறிப்பிட்ட மும்மொழிகளில் தயாரிப்பதற்கும் மற்றும் அலுவலகக் குழாமினை ஈடுபடுத்துவதற்கும் உரிய வளங்களில் பற்றாக்குறை நிலவக்கூடும். முன்னர் குறிப்பிட்டவாறு, இவ்வாறான வேளைகளில், பிரதேச செயலகங்களின் உரிய வளப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்துகொள்ளுவதற்கு உதவுவதன் மூலம் அதன் செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகு/வீதி அபிவிருத்தி அதிகார சபையினைத் தொடர்புபடுத்தி செயற்படுதல் மிகவும் முக்கியமாகும்.

தமது பிரிவில் இடம்பெறும் சகல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஒருங்கிணைப்பாளராக செயற்படுவதால், மீள்குடியேற்றச்செயற்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்தும்போது பிரதேச செயலாளருக்கு முக்கிய இடமொன்று உரித்தாகின்றது. மீள் குடியேற்றத்திற்கான ஆய்வு மற்றும் சமூக – பொருளாதார ஆய்வினூடாக பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும். காணிச் சுவீகரிப்பு பூர்த்தியானதுடன். மீள்குடியேற்றத் திட்டம் தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்கள் உறுதிப்படுத்தப்படும் என்பதுடன் அதன் பின்னர் மீள்குடியேற்ற திட்டத்தினை மீளாய்வு செய்வதற்கு இத்தகவல்கள் பயன்படுத்தப்படும். கருத்திட்டத்தின்மூலம் பாதிப்புக்குள்ளாகும் நபர்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்ட ஒவ்வொரு சுய விபரத்திலும் உள்ளடங்கும் அத்துமீறிய குடியிருப்பாளர், வாடகை அல்லது குத்தகை வீடாகவிருத்தல், கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய நிலையிலுள்ள நபராகவிருத்தல், வருமான நிலபரம், தொழில் போன்ற விடயங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காக பிரதேச செயலகத்தில் காணப்படும் தகவல்களைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தில் பிரேரிக்கப்பட்ட நிதி மற்றும் ஏனைய உதவிகளை வழங்கும்போது இது உதவியாக அமையும்.

வறுமையினை ஒழித்தல் மற்றும் ஆண்- பெண் பாகுபாடு பாலின வளர்ச்சி போன்ற துறைகள் தொடர்பில் செயற்படும்போது, கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு, பிரதேச செயலாளரின் மற்றும் அவரின் விசேட அலுவலகக் குழாமின் உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியும். பொதுவாக மீள்குடியேற்றத் திட்டத்தினை அமுலாக்கஞ் செய்யும்போது, வருமான மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்கள், மீள்குடியேற்றத் தளங்கள்/கிராமத்திற்கு அருகாமையில் அமுற்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றில் விசேடமாக கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு, பிரதேச செயலக அலுவலகத்திற்கு உரித்தான இளைய உத்தியோகத்தர்கள் மற்றும் 40–60 வரையான அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியினைப் பெற்றுக் கொள்ள முடியும். மீள்குடியேற்றத் தளத்தின் செயற்பாடுகளை உரிய பங்குதாரர் நிறுவனங்களுடன் வலுவுடன் ஒருங்கிணைப்புச் செய்தல் வேண்டும் என்பதுடன், பொதுப் பயன்பாட்டுச் சேவைகளை நிறுவுதல், மற்றும் எதிர்காலப் பராமரிப்புச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு இது அவசியமாகும். உரிய பிரதேசங்களில் அமைந்துள்ள பிரதேச செயலகங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுதல், மீள்குடியேற்றத் தளங்கள் தொடர்பில் செயற்பாடுகளை ஒருங்கிணைப்புச் செய்தல் மற்றும் அமுற்படுத்துதல் தொடர்பில் கருத்திட்ட முகாமைத்துவ அலகின் செயற்பாடுகளை மிகவும் சிறப்பாக முன்னெடுக்க முடியும். தமது அதிகாரப் பிரதேசத்தினுள் அமுற்படுத்தப்படும் அரசின் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைக்கும் பொறுப்பு பிரதேச செயலாளருக்கே உரித்தானதாகும்.

கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களுக்குப் பொருத்தமான காணிகளை கண்டுபிடிப்பதற்கு (தம்மினால் மீள்குடியேற்ற செயற்பாடு இடம்பெறுபவர்களை உள்ளடக்கி) உதவுதல், இடம்பெயர்ந்த சிறார்களை சுற்றியுள்ள பாடசாலைகளில் சேர்ப்பதற்கு உதவுதல், வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான அங்கீகாரத்தினை உரிய மாகாண சபை

நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ளுவதற்கு உதவுதல், கருத்திட்ட முகாமைத்துவ அலகின் பொறுப்பாகும். இவ்வுதவியினை வழங்குவற்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகு, பிரதேச செயலகத்திற்கு அருகாமையிலிருந்து செயற்படுதல் வேண்டும். அதற்கு மேலாக, விசேட நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படாத, தமது அதிகாரப் பிரதேசத்தில் காணப்படும் அரச காணிகளின் பொறுப்பாளர் பிரதேச செயலாளர் என்பதால், மீள்குடியேற்றப் பணிக்கு காணி தேவைப்படுமிடத்து அக்காணிகளை வழங்குவதற்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு தேவையான உதவியினை சிறந்தவாறு வழங்குவதற்குப் பிரதேச செயலாளருக்கு முடியும்.

### 11.2.2 நில அளவைத் திணைக்களம்

காணிச் சுவீகரிப்புச் செயற்பாட்டில், காணியினை அளப்பதற்கும் மற்றும் அளவுத் திட்டங்களைத் தயாரிப்பதற்கும், காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம், நில அளவைத் திணைக்களத்தினால் சட்டரீதியான செயற்பாடு நிறைவேற்றப்படுதல் வேண்டும். சுவீகரிப்பு உத்தியோகத்தர் (பிரதேச செயலாளர்) அவர்களினால் நில அளவை நாயகத்திற்கு முன்வைக்கப்படும் உத்தியோகபூர் வேண்டுகோளின் கீழ், அவரினால் தனது திணைக்களத்திற்கு உரித்தான அனுமதிப் பத்திரங்களை அளவைக்குப் பயன்படுத்தி உரிய நிலங்களை அளத்தல் மற்றும் அந்நிலம் தொடர்பில் உரித்துக் கோருபவர்களின் பெயர்களுடன் நில அளவை விபரங்களை முன்வைத்தல் இடம்பெறும். நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டு வரும் இறுதி அளவைத் திட்டங்களினூடாக (ஆரம்பத் திட்டங்கள்) காணி/கட்டிடம் தொடர்பில் உரிமை கோருபவரின் பட்டியலுடன், சுவீகரிப்பதற்குகத் தேவையான சகல நிலங்களின் தரமான அளவை நுட்பங்கள் மற்றும் நடைமுறைகளுக்கமைய, சுவீகரிப்பு உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படும். உரித்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு விசாரணைகளை முன்னெடுக்கும்போது, சுவீகரிக்கும் உத்தியோத்தருக்கு இந்த அளவைத் திட்டங்கள் மற்றும் பெயர்ப் பட்டியல்கள் மிகவும் முக்கியமான தகவல்களாக அமையும்.
குறிப்பிட்ட சூழ்நிலைகளில், விசேடமாக முன்னர் திட்டமிட்ட செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குள்ளபோது, அனுமதிப்பத்திரதாரி, அளவையாளரின் மற்றும் தேவையான வளங்களின் பற்றாக்குறை நிலவுமிடத்து மிக விரைவில் அவர்களை ஈடுபடுத்துவதற்கு முடியாமற்போகும். இவ்வாறான வேளைகளில், அனுமதிப்பத்திரதாரி, அளவையாளர்களின் சேவையினை வாடகை அடிப்படையின் கீழ் பெற்றுக் கொள்ளுவவதற்கு, கருத்திட்ட முகாமைத்துவ அலகு, நில அளவைத் திணைக்களத்திற்கு உதவுவதுடன், தேவையான வளங்கள் மற்றும் களத்துறை மட்டங்களின் உதவியுடன் நில அளவை நாயகத்தின் செயற்பாட்டின் கீழ், உரிய பணியில் ஈடுபடுவதற்கு அவர்கள் பயன்படுத்தப்படுவர்.

### 11.2.3 விலை மதிப்பீட்டுத் திணைக்களம்

விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் பிரதான உத்தியோகபூர்வ பதவி "பிரதான விலை மதிப்பீட்டாளர்" **"Chief Valuer"** ஆகும். ஏனைய அரச நிறுவனங்களின் பணிப்பாளர் நாயகம் அல்லது ஆணையாளர் நாயகம் ஆகிய பதவிகளுக்கு இது சமமானதாகும். காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம், சுவீகரித்துக் கொள்ளுவதற்கு எதிர்பார்த்த சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்யும் செயற்பாடு, பிரதான விலை மதிப்பீட்டாளர் அல்லது அவன்/அவளினால் அதிகாரம் ஒப்படைக்கப்பட்ட வேறு ஒரு உத்தியோகத்தரின் மூலம் மாத்திரமே இடம்பெறும்.

காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் பிரகாரம், வழக்கமான அணுகுமுறையின் பிரகாரம், சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்தல் சந்தை விலைப் பெறுமதியினை அடிப்படையாகக் கொண்டேயாகும். சந்தையில் நிலவும் உண்மையான விலை மட்டங்களுக்கு அருகாமையிலுள்ள சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு காணிச் சுவீகரிப்புச் சட்டத்தின் 2008 ஒழுங்கு விதியினூடாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு உதவி

கிடைக்கிறது. சுவீகரித்துக் கொள்ளுவதற்கு உத்தேசிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்வதற்கு சுவீகரிக்கும் உத்தியோகத்தரின் வேண்டுகோளின் கீழ், மதிப்பீட்டுத் திணைக்களம், தமது உத்தியோகத்தர்களை இதற்குப் பயன்படுத்தும் என்பதுடன், உரிய மதிப்பீடு, பிரதான மதிப்பீட்டாளரூடாக சுவீகரிக்கும் உத்தியோகத்தருக்கு முன்வைக்கப்படும். இம்மதிப்பீட்டுக்காக பிரதான மதிப்பீட்டாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் என்பது தமது மதிப்பீடு தொடர்பில் அத்திணைக்களத்தின் சட்டபூர்வ பிணைப்பாவதுடன், அது தொடர்பில் வேண்டிய மீளாய்வு சபைக்கு அல்லது நீதிமன்றிற்கு முன்வைப்பதற்குள்ள ஆயத்தமாகும்.

சொத்துக்களை மதிப்பீடு செய்யும் செயற்பாட்டில், அத்திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டு வரும் உத்தியோகத்தர்கள் உரிய சொத்துக்கள் தொடர்பில் சமுகமளித்து பின்வரும் விடயங்களினை அடிப்படையாகக் கொண்டு தனியாகவோ அல்லது கூட்டாகவோ இணைந்து தங்களின் மதிப்பீட்டினை முன்னெடுப்பர்.

- சொத்துத் தொடர்பான கோப்பின் தன்மை மற்றும் சுற்றியுள்ள சூழல்
- உரிய சொத்து பாவிக்கப்படும் செயற்பாடு (குடியிருப்பு,வர்த்தகம் அல்லது விவசாயம் போன்ற செயற்பாடுகள்)
- சொத்தின் பெறுமதி தொடர்பிலுள்ள ஆவணம்சார் ஆதாரங்கள் : உறுதிகள், பெறுமதிச் சான்றிதழ், கடன்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கான ஆவணங்கள், வருமானத்தினைப் பெருக்கும் ஆவணங்கள் ஆகியன (இருப்பின்)
- மக்களுடன் கலந்தாலோசித்தல்.
- பிரதேச செயலகங்கள், மாகாண மற்றும் மத்திய வரி அலுவலகங்களிலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய இரண்டாந்தரத் தரவுகள்.

இச் சொத்துப் பெறுமதியினை மதிப்பீடு செய்தல், உரிய குறிப்பிட்ட சொத்துக்கு, அமைந்துள்ள தளத்திற்கு மற்றும் பயன்பாட்டாளரின் பிரகாரம் இடம்பெறுவதுடன், ஒவ்வொரு குறிப்பிட்ட சொத்துக்கும் அதற்கான பெறுமதி மதிப்பீடு செய்யப்படும்.

மதிப்பீட்டு உத்தியோகத்தர்களுக்கு உரிய சொத்தினைப் பார்வையிடுவதற்குத் தேவையான உதவியினை வழங்கி, ஏதேனும் காலஅட்டவணையின் பிரகாரம் கருத்திட்டப் பணியினைச் செய்வதற்கு விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு உதவி வழங்குவதற்கு கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு இயலும்.

## 11.3 மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை அங்கீகரிக்கும் முன்னெடுப்பு

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பில் தயாரிக்கப்பட்டு வரும் மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை அங்கீகரிக்கும் பொறுப்பு உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக்குரியதாகும், சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பில்,தேசியக் கொள்கை வெளியீட்டின் நிறுவனம்சார் பொறுப்புக்கள் என்ற பெயரிலுள்ள பிரிவினூடாக மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை அங்கீகரிக்கும் பொறுப்பு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தும், நடைமுறை ரீதியில் அது வெறும் கொள்கையளவிலான அறிக்கையாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. உத்தியோகபூர்வ அங்கீகாரத்திற்கு மேலாக இது மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் எச்சரிக்கையாக முன்னெடுக்கப்படும் அங்கீகாரமொன்றாக கவனத்திற் கொள்ளப்பட வேண்டும். தற்போதைய திட்டத்தின் பிரகாரம், சுற்றுச்சூழல் இணக்கத்திற்கான விண்ணப்பப் படிவத்துடன் மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டதன் பின்னர் அது கையேற்கப்படுவதுடன். இக்கையேற்கும் சகல நடைமுறைச் செயற்பாடுகள் தொடர்பில் மத்திய சூழல் அதிகார சபை அங்கீகாரத்தினை வழங்குதாகக் கருதப்படுகின்றது.

சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கையினை அமுற்படுத்தும் பொறுப்பு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், அக்கொள்கைக்கமைய, மீள்குடியேற்றச் செயற்பாட்டினைத்

திட்டமிடுதல் மற்றும் அமுற்படுத்துவதற்கான சகல தேவைப்பாடுகளுக்குமிணங்க அதன் செயற்பாட்டினை நிறைவேற்றும் பொறுப்பு கருத்திட்டத்தினை அமுற்படுத்தும் நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பில் தேசியக் கொள்கையினூடாக வலுயுறுத்தப்படும் விடயப் பரப்பின் பிரகாரம், மீள்குடியேற்றத் திட்டத்தினை நாட்டினுள் அமுற்படுத்தும் சகல பொறுப்பினையும் வகிக்கும் அடிப்படை நிறுவனமாக விளங்குவது காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சாகும். மத்திய அதிகார சபையினால் இடம்பெறக்கூடியவாறு, மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்திற்கு உத்தியோகபூர்வமான அங்கீகாரமொன்றினை வழங்குதல், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் இடம்பெறாது என்பதுடன், காணிச் சுவீகரிப்புச் செயற்பாட்டினை ஆரம்பிப்பதற்காக அதனைக் கையளிப்பதனூடாக வெளிப்படையாக அதற்கு அங்கீகாரத்தினை வழங்குகின்றது. காணிச் சுவீகரிப்புத் தொடர்பில் கையளிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துடன் சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கையின் பிரகாரம், தயாரிக்கப்பட்ட மீள்குடியேற்றத் திட்டத்தின் பிரதியொன்றினை இணைத்து முன்வைத்தல் வேண்டும். கருத்திட்டம் அங்கீகரிக்கப்படும் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட மீள்குடியேற்றத் திட்டமின்றி முன்வைக்கப்படும் காணிச் சுவீகரிப்பு விண்ணப்பப் படிவங்கள் காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சினால் கையேற்கப்பட மாட்டாது என்பதுடன், வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு உரித்தான கருத்திட்டங்களை அங்கீகரிக்கும் நிறுவனமாக விளங்குவது, உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சாகும்.

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை, மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் தொடர்பில் நிர்வாக மட்டத்தில் அங்கீகாரத்தினை வழங்காதிருப்பதற்கான காரணம் புரிந்து கொள்ளக்கூடிய விடயமொன்றாகும். சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பிலான தேசியக் கொள்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள், இலங்கை அரசின் ஏனைய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளைப் பின்பற்றி மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படுவது, கருத்திட்ட முகாமைத்துவ அலகு/கருத்திட்டத்தினை அமுற்படுத்தும் நிறுவனங்களினாலாகும். அதற்கு மேலாக கருத்திட்டம் தொடர்பில் வெளிவாரி நிறுவனங்களினால் நிதி வழங்கப்படும் வேளைகளில், மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிக்கும்போது அந்நிதியினை வழங்கும் நிறுவனத்தினால் முன்வைக்கப்படும் தேவைப்பாடுகளின் பிரகாரம் அவற்றினைத் தயாரித்தல், கருத்திட்ட முகாமைத்துவ அலகு/கருத்திடடங்களை அமுற்படித்தும் நிறுவனங்ளின் மூலம் இடம்பெறுகின்றது. அங்கீகாரத்திற்காக உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுக்கு முன்வைப்பதற்கு முன்னர் சுற்றுச்சூழல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு மட்டங்களில், மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் உரிய உதவி நிறுவனங்களிடமிருந்து உடன்பாட்டினை (உத்தியோகபூர்வமற்றவாறு) பெற்றுக் கொள்ளுவதற்கு முன்வைக்கப்படுதல் வேண்டும் என மேற்குறிப்பிட்ட வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கைநூலில் ஆலோசனை வழங்கப்படுகின்றது. உத்தியோகபூர்வ ரீதியில் அங்கீகாரத்தினை வழங்கும்போது, பரிட்சித்தல், கண்காணித்தல் மற்றும் வழிகாட்டலினூடாக கருத்திட்ட முகாமைத்துவ அலகின் உள்ளகத் திட்டத்தில் தலையிடுவது அவசியமாகும். மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்துவதற்குத் தேவையான அறிவு மற்றும் வளங்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலகிடம் இருக்க வேண்டும் என்பதால், அத்திட்டத்திற்கு செயற்பாட்டு அங்கீகாரத்தினை வழங்கும் பொறுப்பினை ஏற்றுக்கொண்டு, மீள்குடியேற்றத் திட்டங்களின் அமுற்படுத்தும் பரப்பினை சுருக்குவதற்கு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை எதிர்பார்க்கவில்லை. உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு போன்ற விடய விசேட நிறுவனங்களிடமிருந்து இப் பொறுப்பு நீக்கப்படின், கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சினூடாக இறுதியில் அமுற்படுத்தப்படும் முழுமையாக மற்றும் முற்றிலுமாக உரிய நோக்கங்களை தயாரித்து திட்டங்களை உருவாக்குவதற்குப் பதிலாக, உத்தியோகபூர்வ நிறுவனங்களின் அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொள்ளுவதற்குகுறைந்த பட்ச தேவையானளவுக்கு ஏற்ப மீள்குடியேற்றச் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படும்.காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை கொள்கைசார் மட்டங்களில் செயற்பட்டு, பரந்தளவிலான பொறுப்பினை வகிப்பதற்கும், அதனூடாக மீள்குடியேற்ற கோட்பாடுகளை நேர்மறையான வகையில் நாட்டினுள் அமுற்படுத்துவதற்குத் தேவையான தாக்கத்தினை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கின்றது. மீள்குடியேற்றத் திடடம் அங்கீகரிக்கப்பட்ட கொள்கையிலிருந்து விலகிச் செல்லுமாயின், அதற்கு தமது கண்காணிப்பு முன்னெடுப்பினூடாக அவற்றினை சரி செய்வதற்குத் தேவையான அதிகாரம், காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபையிடமே உள்ளது.

# அத்தியாயம்XII:அமுற்படுத்தும் காலவரையறை

கருத்திட்டத்திற்கான நிறைவேற்று நிறுவனமாக விளங்குவது, உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு/வீதி அபிவிருத்தி அதிகார சபையாவதுடன், கருத்திட்டத்தின் ஒட்டுமொத்த ஒருங்கிணைப்புத் தொடர்பிலான பொறுப்பும் அந்நிறுவனங்களுக்கே உரித்தாகின்றன. கருத்திட்டத்தினை அமுலாக்கும் பணி, முகாமைத்துவ மற்றும் ஒருங்கிணைப்பு நிறைவேற்று நிறுவனத்தின் கீழ் அமுற்படுத்தப்படும் கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் இடம்பெறும். உயர்கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு/வீதி அபிவிருத்தி அதிகார சபை, காணிச் சுவீகரிப்புப் பணி (மீள்குடியேற்ற முன்னெடுப்பினை உள்ளடக்கி) தொடர்பில் தேவையான வழிகாட்டல்களை கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு வழங்கும். தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் கருத்திட்ட ஆலோசகர்களை வழங்கி, கருத்திட்டம் தொடர்பில் இடம்பெற வேண்டிய சமூக மதிப்பீடுகள், மீள்குடியேற்றத்தனைத் திட்டமிடுதல் மற்றும் அமுற்படுத்துதல் போன்ற பணிகள் கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் இடம்பெறுகின்றது.

## 12.1 **கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களை அடையாளங் காணுதல், காணிச் சுவீகரிப்பு மற்றும் இழப்பீட்டுக் கொடுப்பனவு.**

பாரிய முக்கியத்துவத்தினைக் கொண்ட தேசிய கருத்திட்டமொன்று என்ற ரீதியில், அதற்கான காணிகளைச் சுவீகரித்தல் மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாடுகளை முடியுமான குறைந்த காலப்பகுதியினுள் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. காணிச் சுவீகரிப்பு நடவடிக்கைகளை, 2015 ஆம் ஆண்டின் ஆரம்பக் காலாண்டினுள் அமுற்படுத்துவதற்கும் மற்றும் 2018 ஆம் ஆண்டின் ஆரம்பக் காலாண்டு நிறைவு செய்வதற்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

06 மாத காலப்பகுதி முழுவதும் முழுநேரத்திற்குமான ஒரு காலகட்ட அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. சிவில் செயற்பாடுகள் தொடர்பிலான குறிப்பிட்ட காலவரையறையின் பிரகாரம், காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்பு பூர்த்தி செய்யப்படும்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களத்துடன் இணைந்து கருத்திட்ட முகாமைத்துவ அலகு, காணி சுவீகரிக்கும்

செயற்பாட்டினைக் கையாளுதல் வேண்டும். கருத்திட்ட முகாமைத்துவ அலகு, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்களுக்கு போதுமான காலப்பகுதியனை வழங்கி முன் அறிவிப்பு செய்கிறது என்பதுடன், மீள்குடியேற்ற உரித்து சரியானவாறு கிடைக்கும் வரை, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான எந்தவொரு நபரினையும் வெளியேறுமாறு அறிவிப்புச் செய்யப்பட மாட்டாது. சகல இழப்பீட்டுக் கொடுப்பனவுகள், மீள்குடியேற்றம் திருப்தியுடன் நிறைவடைதல் மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னரே சிவில் பணிகளுக்கான ஒப்பந்தம் வழங்கப்படுகின்றது.

### 12.2 **மீள் குடியேற்றம் : சுயமாக இடம்பெயர்தல் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் வழங்கப்பட்டு வரும் மீள்குடியேற்றத் தளங்கள்.**

கவனத்திற் கொள்ளப்பட வேண்டியவர்களுக்கு, மீள்குடியேற்ற முன்னெடுப்பு என்பது சிக்கலான செயற்பாடொன்றாகும். கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் சில நபர்களுக்கு மீள்குடியேற்றத் தளங்களை தம்மூலம் வழங்குவதற்கு அவசியம் என்பதுடன், மீதிப் பேர், வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலையீட்டினூடாக மீள்குடியேறுவதற்குத் தேவையான இடத்தினை வழங்குவதற்கு எதிர்பார்க்கின்றனர். இதன் பிரகாரம், கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளானவர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் மற்றும் எதிர்பாராத பிரச்சினைகளுக்கு முகங்கொடுப்பதற்கும் பல்வேறான மூலோபாயங்கள், திட்டங்களை இனங்காண்பதற்கு நிறைவேற்று நிறுவனம்/கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு நேரிடுகின்றது. ஆதலால் காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றப்படுதல் தொடர்பில் இனங்காணப்பட்டுள்ள பிரதான செயற்பாடுகள் அட்டவணை இலக்கம் 64 இன் ஊடாகக் காட்டப்பட்டுள்ளதுடன், அதில் அடையாளங் காணப்பட்ட செயற்பாடுகள், மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினை அமுற்படுத்தும்போது, கருத்திட்ட முகாமைத்துவ அலகுக்கு முக்கியமானதாகும்.

**அட்டவணை இலக்கம்64: காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள்குடியேற்றம் தொடர்பிலான பிரதான செயற்பாடுகள்**

| அடையாளங் காணப்பட்ட செயற்பாடு | பொறுப்பு | தேவையான ஆகக்குறைந்த காலம் | முன்னேற்றம் |
|---|---|---|---|
| மீள்குடியேற்ற அலுவலகக் குழாமினை ஆட்சேர்ப்புச் செய்தல் மற்றும் ஆரம்பப் பயிற்சி | உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,கருத்திட்ட முகாமைத்துவ அலகு/வீதி அபிவிருத்தி அதிகார சபை, சூழல் மற்றும் சமூக அபிவிருத்திப் பிரிவு, | ஒரு மாதம் | பூர்த்தி |
| குடிசன மதிப்பீடு மற்றும் சமூக மற்றும் சூழல் ஆய்வினை நடாத்துதல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சூழல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம்/வீதி அபிவிருத்தி அதிகார சபை. | 2 – 3மாதங்கள் | பூர்த்தி |
| மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரித்தல் மற்றும் அங்கீகாரத்திற்காக உயர் கல்வி மற்றும பெருந்தெருக்கள் அமைச்சுக்குக் கையளித்தல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சூழல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம்/வீதி அபிவிருத்தி அதிகார சபை. | ஒரு மாதம் | பூர்த்தி |
| கருத்திட்ட தகவல் நிலையங்களை அமைத்தல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சூழல் மற்றும் சமூக | ஒரு மாதம் | பூர்த்தி |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தித் திணைக்களம்/வீதி அபிவிருத்தி அதிகார சபை. | | |
| காணிச் சுவீகரிப்பு முன்னெடுப்பு | பிரதேச செயலாளர், SD, மதிப்பீட்டுத் திணைக்களம், DOGP,வீதி அபிவிருத்தி அதிகார சபை, (LARD, கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சூழல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம்/வீதி அபிவிருத்தி அதிகார சபை, உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு,காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு. | 6 மாதங்கள் | நடைபெறுதல் |
| மீள்குடியேற்றத் தளங்களை அடையாளங் காணுதல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, LARD/வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச செயலாளர், SD, மதிப்பீட்டுத் திணைக்களம், சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம். | 6 மாதங்கள் | நடைபெறுதல் |
| இழப்பீட்டினை வழங்குதல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, LARD/வீதி அபிவிருத்தி அதிகார சபை, பிரதேச செயலாளர், SD, திணைக்களம், சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம். | 6 மாதங்கள் | நடைபெறுதல் |
| வீடுகள், கடைகள், வியாபாரங்களை மறுசீரமைத்தல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, LARD, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம்/வீதி அபிவிருத்தி அதிகார சபை. | 6 மாதங்கள் | நடைபெறுதல் |
| பிரத்தியேக நிலங்களினூடாகப் பயணிக்கும் நிலத்துண்டுகளை அடையாங் காணுதல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, LARD/வீதி அபிவிருத்தி அதிகார | 6 மாதங்கள் | நடைபெறுதல் |

| | | | |
|---|---|---|---|
| | சபை, பிரதேச செயலாளர். | | |
| சிவில் பணிகளை ஆரம்பிப்பதற்கு அறிவித்தல்களை வழங்குதல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு/வீதி அபிவிருத்தி அதிகார சபை, உயர்கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சு. | காணிச் சுவீகரிப்புப் பூர்த்தி செய்யப்பட்டதன் பின்னர் | ஆரம்பிப்ப தற்கு உத்தேசிக் கப்பட்டுள் ளது. |
| வருமானத்தினை மீளமைத்தல். | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம், LARD/, வீதி அபிவிருத்தி அதிகார சபை, உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சு. | 12 மாதங்கள் | ஆரம்பிப்ப தற்கு உத்தேசிக் கப்பட்டுள் ளது. |
| முகாமைத்துவ தகவல் திட்டம் | கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம், LARD/வீதி அபிவிருத்தி அதிகார சபை, உயர் கல்வி மற்றும் பெருந் தெருக்கள் அமைச்சு. | காணிச் சுவீகரிப்பு மற்றும் மீள் குடியேற்றம் பூர்த்தி செய்யப்படும் வரை. | ஆரம்பிப்ப தற்கு உத்தேசிக் கப்பட்டுள் ளது. |
| மனக்குறைகைளத் தீர்த்தல் | மனக்குறைகளைத் தீர்க்கும் குழு மற்றும் ஏனைய அரச நிறுவனங்கள். | காணிச் சுவீகரிப்பு நிலையிலிருந்து நிர்மாணிப்பு பூர்த்தியாகும் வரை. | ஆரம்பிப்ப தற்கு உத்தேசிக் கப்பட்டுள் ளது. |
| உள்வாரியான கண்காணிப்பு | கருத்திட்ட முகாமைத்துவ அலகு,சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம்,LA RD/வீதி அபிவிருத்தி அதிகார சபை, OPH | காணிச் சுவீகரிப்பு நிலையிலிருந்து நிர்மாணிப்பு பூர்த்தியாகும் வரை. | ஆரம்பிப்ப தற்கு உத்தேசிக் கப்பட்டுள் ளது. |
| வெளிவாரியானகண்கா ணிப்பு | வெளிவாரியான கண்காணிப்பாள ர்,கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம்/வீ திஅபிவிருத்தி அதிகார சபை. | காணிச் சுவீகரிப்பு நிலையிலிருந்து நிர்மாணிப்பு பூர்த்தியாகும் வரை. | ஆரம்பிப்ப தற்கு உத்தேசிக் கப்பட்டுள் ளது. |

மூலாதாரம்: CEP/Stage 1 and 2/RAP/Data

## 12.3 **கருத்திட்டம் மூலம் பாதிக்கப்பட்டுள்ள நபர்கள் தொடர்பிலான தகவல் நிலையம்**

இந்நாட்டின் பாரிய அதிவேக வீதிக் கருத்திட்டமான மத்திய அதிவேக வீதிக் கருத்திட்டம் போன்றதொடர் கருத்திட்டமொன்றினை முகாமை செய்யும்போது, கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளாகும் பாரிய தொகையினர் மற்றும் மீள்குடியேற்றச் செயற்பாட்டுடன் தொடர்பான பிரமாண்டமான தகவல்களை முகாமை செய்வதற்கு நேரிடும். ஆதலால், கருத்திட்ட முகாமைத்துவ அலகினூடாக தகவல் முகாமைத்துவ அலகொன்றினை அமைத்தல் முக்கிய தேவைப்பாடொன்றாகும்.

## அத்தியாயம்XIII:கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடுதல்

### 13.1அறிமுகம்

கண்காணிப்பின் முக்கிய நோக்கங்களாக : 1. கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டுள்ள நபர்ககளின் வாழ்க்கைத் தரத்தினை மறுசீரமைத்தல் அல்லது மேம்படுத்துவதை உறுதிப்படுத்துதல், 2.உரிய காலவரையறையின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்தல், 3.இழப்பீட்டுக் கொடுப்பனவு, புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் போதுமானதாக உள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல், 4.காணப்படுகின்ற பிரச்சினைகள் மற்றும் ஏற்படக்கூடிய பிரச்சினைகளை இனங்காணுதல், 5.கஸ்டங்களைக் குறைப்பதற்கு விரைவில் பதிலினை வழங்கும் திட்டங்களை அடையாளங் காணுதல்.

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை நடாத்துவதன் நோக்கங்கள் : (அ) கருத்திட்டத்தில் ஈடுபட்டு கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டு உதவி வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையினை அறிக்கையிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல், (ஆ) முன்னாள் வாழ்வாதார நிலைகள் மற்றும் வாழ்க்கைத் தரங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல். ஆதலால் செயற்பாடுகள், பிரச்சினைகளின் பரப்பு வீச்சினை அறிக்கையிடுதல் மற்றும் பரீட்சிப்பு இடம்பெறுதல் வேண்டும். அதன் பிரகாரம், கருத்திட்டம் தொடர்பில் பின்வருமாறு மிகவும் விசேடமான செயற்பாட்டுக் குறிகாட்டிகளைத் தயாரிப்பது மிகவும் முக்கியமாகும்.

**அட்டவணை 65: செயற்பாட்டுக் குறிகாட்டிளின் பட்டியல்**

| தொ.இல. | குறிகாட்டி | உறுதிப்படுத்தும் முறைமைகள் | உறுதிப்படுத்தும் காலவரையறை |
|---|---|---|---|
| 1. | பாதிக்கப்பட்ட குடும்ப அலகுகளின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழுக் கலந்துரையாடலினூடாக சேகரிக்கப்படும் ஆரம்பத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 2. | பாதிக்கப்பட்ட சொத்துக்களின் (காணிகள் மற்றும் கட்டமைப்புக்கள்) அளவு மற்றும் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 3. | பாதிக்கப்பட்ட சகல உடைமைகள் மற்றும் சொத்துக்கள் தொடர்பில் இழப்பீட்டுக் கொடுப்பனவு மற்றும் மறுசீரமைப்புத் திட்டம். | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 4. | பாதிக்கப்பட்ட உடைமைகளின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 5. | மீள்குடியேற்றத் தளங்களில் மறுசீரமைக்கப்பட்ட, கருத்திட்டத்தின்மூலம் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை. | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 6. | மீள்குடியேற்றத் தளத்தினை தம்மூலமே வழங்கி வசிக்கின்ற, கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 7. | ஆதரிக்கும் குடிகளுக்காக (பழங்குடியினர்) நடாத்தப்பட்ட | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | முன்னரும் மற்றும் பின்னரும். |
| 8. | கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட நபர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தல். | செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழுக் கலந்துரையாடலினூடாக சேகரிக்கப்படும் ஆரம்ப மற்றும் இரண்டாந்த தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணிப்புக்கள் இடம்பெற்றதன் பின்னர் |
| 9. | கட்டுமாணத்துடன் தொடர்புடைய சம்பவங்களின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழுக் கலந்துரையாடலினூடாக சேகரிக்கப்படும் ஆரம்பத் தரவுகள். | நிர்மாணிப்புக்கள் இடம்பெற்றதன் பின்னர் |
| 10. | கருத்திட்டப் பணியாளர்கள் மற்றும் கிராமவாசிகளுக்கிடையே இடம்பெற்ற மோதல்களின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழுக் கலந்துரையாடலினூடாக சேகரிக்கப்படும் ஆரம்பத் தரவுகள். | நிர்மாணிப்புக்கள் இடம்பெற்றதன் பின்னர் |
| 11. | வறுமைக்கு உட்பட்டு, கவனத்திற்குக் கொள்ளப்பட வேண்டிய நிலையில் வாழும் நபர்கள்/வீட்டு அலகுகளின் எண்ணிக்கை | செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழுக் கலந்துரையாடலினூடாக திரட்டப்படும் ஆரம்பத் தரவுகள்.உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 12. | மனக்குறைகளைத் தீர்க்கும் குழுவுக்கு அறிக்கையிடப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணிப்புக்கள் இடம்பெற்றதன் பின்னர் |
| 13. | அறிக்கையிடப்பட்ட சம்பவங்களுக்கிடையே தீர்வு காணப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழு கலந்துரையாடல் மற்றும் பிரதான தகவல்களை வழங்குபவர்களினூடாக சேகரிக்கப்படும் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப | நிர்மாணிப்புக்கள் இடம்பெற்றதன் பின்னர் |

| | | | |
|---|---|---|---|
| | | அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | |
| 14. | கருத்திட்டத்துடன் தொடர்பான செயற்பாடுகளில் பங்குபற்றிய பெண்களின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழுக் கலந்துரையாடலினூடாக சேகரிக்கப்படும் ஆரம்பத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணிப்புக்கள் இடம்பெற்றதன் பின்னர் |
| 15. | கருத்திட்டத்துடன் தொடர்பான செயற்பாடுகளில் தொடர்புபட்டு செயற்படும் சமுதாய மட்ட அமைப்புக்கள்/அரச சார்பற்ற அமைப்புக்களின் எண்ணிக்கை. | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் இரண்டாந்தரத் தரவுகள் மற்றும் செயற்பாட்டு உத்தியோகத்தர்களினால் மையக்குழுக் கலந்துரையாடலினூடாக சேகரிக்கப்படும் ஆரம்பத் தரவுகள். | நிர்மாணிப்புக்கள் இடம்பெற்றதன் பின்னர் |
| 16. | நடாத்தப்பட்ட, வருமான மறுசீரமைப்பு கருத்திட்டங்கள் மற்றும் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நிகழ்ச்சித் திட்டங்களின் எண்ணிக்கை | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகள். உரிமையாளர்களின்/குடும்ப அலகுகளின் தலைவர்களின் ஆண் – பெண் பாகுபாட்டின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்ட தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |
| 17. | நிறுவப்பட்டுள்ள கருத்திட்ட தகவல் நிலையங்களின் எண்ணிக்கை மற்றும் தகவல்களினைப் பரப்புவதில் அதன் பங்கு | கருத்திட்ட முகாமைத்துவ அலகின் ஆரம்ப மற்றும் இரண்டாந்தரத் தரவுகள். | நிர்மாணப் பணிகள் இடம்பெறுவதற்கு முன்னரும் மற்றும் பின்னரும். |

மூலாதாரம்: CEP/Stage 1 and 2/RAP/Data

## 13. 2 கண்காணிப்பு முன்னெடுப்பு : உள்வாரி மற்றும் வெளிவாரி

கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு நிகழ்ச்சித் திட்டம் நடாத்தப்படுவதன் நோக்கமாவது : (அ) கருத்திட்டத்தில் ஈடுபட்டு கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்டு உதவி வழங்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கையினை அறிக்கையிடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல், (ஆ) முன்னாள் வாழ்வாதார நிலைகள் மற்றும் வாழ்க்கைத் தரங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துதல். ஆதலால் செயற்பாடுகள், பிரச்சினைகளின் பரப்பு வீச்சினை அறிக்கையிடுதல் மற்றும் பரீட்சிப்பு இடம்பெறுதல் வேண்டும். அது தொடர்பில் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு போன்ற இரண்டு முன்னெடுப்புக்களையும் வைத்திருப்பது அவசியமாகும். அவை, அ. உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சு/வீதி அபிவிருத்தி அதிகார சபை/கருத்திட்ட முகாமைத்துவ அலகு போன்ற ஒவ்வொரு நிறுவனங்களின் உத்தியோகத்தர் குழாமினால் இடம்பெற்று வரும் உள்வாரியான கண்காணிப்பு, ஆ. நிபுணர்களைக் கொண்ட சுயாதீனமான வெளிவாரியான கண்காணிப்புச் சபையொன்றினூடாக நடாத்தப்படும் வெளிவாரியான கண்காணிப்பு.

உள்வாரி மற்றும் வெளிவாரி போன்ற இரண்டு கண்காணிப்பும், ஆகக்குறைந்த வகையில் கருத்திட்டத்தின் மூன்று படிநிலைகளில் இடம்பெறுதல் வேண்டும் : (அ) கட்டுமாணம்

ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர், (ஆ) வீதியினை நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்ட சாரையோரத்திற்கு அடையாளமிட்டதன் பின்னர், (இ) கட்டுமாணம் பூர்த்தியடைந்ததன் பின்னர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் உள்ளகக் கண்காணிப்பு முன்னெடுக்கப்படும். உள்ளகக் கணக்காணிப்பினூடாக எழும் பிரச்சினைகள் தொடர்பில் கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களத்தின் உதவியினை பெற்றுக் கொள்ள முடியும். மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட செயற்பாடுகள், உரித்துக்கள், கால வரையறை மற்றும் மதிப்பீட்டின் பிரகாரம் உள்ளகக் கண்காணிப்பு இடம்பெறுதல் வேண்டும்.

கருத்திட்டத்தின் மூலம் பாதிக்கப்பட்ட வீட்டு அலகுக்கு உரித்தாக வேண்டிய மற்றும் அவர்களுக்கு உரித்தாகிய உரித்துக்கள் தொடர்பிலான விபரங்களை அறிக்கையிடும் அட்டை முறைமையொன்றினை கண்காணிப்பு அலுவலகத்தினுள் முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உரிமையாளருக்கும் கிடைக்க வேண்டிய மற்றும் கிடைத்துள்ள உரித்துக்கள் தொடர்பிலான குறிப்புக்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ள இவ் அட்டையின் ("மீள்குடியேற்ற அட்டை") பிரதியொன்றினை உரிய உரிமையாளரின் பிரத்தியே அறிக்கைகளுக்கென, அவன்/அவளுக்கு வழங்கப்படுதல் வேண்டும்.

இழப்பீட்டுக் கொடுப்பனவு மற்றும் மீள்குடியேற்றத்திற்கான ஏனைய செயற்பாடுகளுக்கு உரிய முன்னேற்ற அறிக்கைகளை அறிக்கையிடுவதற்கு மேலாக, மீள்குடியேற்ற செயற்பாட்டுத் திட்டத்தினூடாக எதிர்பார்த்த பயன்கள் கிடைக்கப் பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்காக கருத்திட்ட முகாமைத்துவ அலகினால் கண்காணிப்பு அறிக்கையொன்று தயாரிக்கப்படும். கண்காணிப்பு முன்னெடுப்பினூடாக திரட்டப்படும் தகவல்கள், அமைச்சு மட்ட கருத்திட்ட ஒருங்கிணைப்புப் குழு மற்றும் ஏனைய பங்குதாரர்களின் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் என்பதுடன், பிரச்சினைகளைத் தணிப்பதற்கு அல்லது தீர்வு காண்பதற்கு நிறுவனம்சார் தலையீடு இத்தால் எதிர்பாக்கப்படுகின்றது.

வெளிவாரிக் கண்காணிப்புச் செயற்பாட்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டிய விசேட செயற்பாடுகள் மற்றும் மூலோபாயங்கள்:

1. கருத்திட்டத்தின் மூலம் பாதிப்புக்குள்ளான நபர்கள் தொடர்பில் கருத்திட்டத்திற்கு முன்னர் (இடம்பெயர்வுக்கு முன்னர்) அடிப்படையாகக் கொள்ளப்பட்ட தரவு மீளாய்வு.
2. வெளிக்கள அலுவலகங்கள், கருத்திட்ட முகாமைத்துவ அலகு மற்றும் ஒவ்வொரு வீட்டு அலகுக்கு உள்ள அறிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு மீள்குடியேற்றத் திட்டத்தினை அமுற்படுத்துதல் தொடர்பில் முன்னேற்றத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.
3. சுய விருப்புக்கு மாறான மீள்குடியேற்றம் தொடர்பில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பிரச்சினைகள் காணப்படுவதை அடையாளங் காணக்கூடியதாகவிருந்தால், பாதுகாப்பு மூலோபாயங்களுக்கு இணங்க ஆலோசனைகளை வழங்குதல் மற்றும் இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் வழங்குவதற்கு தேவையான மற்றும் சரியான நடவடிக்கைகளை உள்ளடக்கி செயற்பாட்டுத் திட்டமொன்றினைத் தயாரித்தல்.
4. மீள்குடியேற்ற பாதிப்புத் தொடர்பில் தகவல்களை திரட்டுதல் மற்றும் மீளாய்வு தொடர்பில் பொருத்தமான குறிகாட்டிகளைக் கண்டறிதல்.
5. பாதிப்பினைப் பகுப்பாய்வதற்கு பல்வேறான முறைசார் மற்றும் முறைசாரா மூலோபாயங்களைப் பாவித்தல்.
6. மீள்குடியேற்றத்தின் வினைத்திறன், விளைத்திறன், தாக்கம் மற்றும் நிலைபேற்றினை மதிப்பீடு செய்தல்.
7. கிடைக்கப் பெற்ற அனுபவங்களுடன், மீள்குடியேற்றம் தொடர்பிலான எதிர்காலக் கொள்கைகள் மற்றும் திட்டங்களை வகுப்பதற்கு வழிகாட்டல்களை வழங்குதல்.

மீள்குடியேற்ற நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வெளிவாரியான கண்காணிப்பு ஆரம்பிக்கப்படும். மீள்குடியேற்றச் செயற்பாடுகளை அமுற்படுத்துதல் தொடர்பில் முன்னேற்றம், இணக்கமற்ற அம்சங்களைக் கொண்ட பிரச்சினைகள் மற்றும் சரியான செயலைக் காட்டும் பகுதியளவிலான ஆண்டு கண்காணிப்பு அறிக்கைகள் வெளிவாரியான மேற்பார்வையாளர்களினால் தயாரிக்கப்படுதல் வேண்டும். இப்பகுதியளவிலான ஆண்டு கண்காணிப்பு அறிக்கைகள், கருத்திட்ட முகாமைத்துவ அலகு, சுற்றாடல் மற்றும் சமூக அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.